# வரலாறு

வரலாறு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு.

தொகுதி - I



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# வரலாறு

## தொகுதி I

## மேல் நிலை — இரண்டாம் ஆண்டு

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
திருத்திய பதிப்பு—1980
மறுபதிப்பு—1983

பதிப்பாசிரியர் குழுத் தலைவர்
(& ஆசிரியர்):

டாக்டர் சி. ஜே. நிர்மல்,
பேராசிரியர் & வரலாற்றுத்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை—600 059.

ஆசிரியர்கள் :

டாக்டர் கே. ராஜய்யன்,
பேராசிரியர் & நவீன கால வரலாற்றுத்துறைத் தலைவர்,
மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

டாக்டர் கே. ஆர். அனுமந்தன்,
பழங்கால வரலாற்றுத்துறைத் தலைவர்,
மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரா. எம். வி. சுப்பிரமணியம்,
''கோமதி விலாஸ்'', ஸ்ரீபுரம் விரிவாக்கம்,
திருநெல்வேலி சந்திப்பு.

மொழிபெயர்ப்பாளர்கள் :

திரு. மாணிக்கவேலு,
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி, சென்னை—600 035,

திரு. வி. ராஜாராம்,
வரலாற்றுத்துறைத் துணைப் பேராசிரியர்,
தேர்வு முன்னிலைப் பயிற்சி நிலையம், சென்னை-600 035

மதிப்புரையாளர்கள் :

பேரா. டி. பாலசுப்பிரமணியம்,
வரலாற்றுத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

பேரா. சி. கே. பங்கஜாட்சி,
முதல்வர், டி. கே. எம். மகளிர் கல்லூரி, வேலூர்.

விலை : ரூ. 5-10

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் : பிரின்ட் ஹவுஸ் (மக்கள் குரல்) சென்னை-24.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மறுமலர்ச்சி இயக்கம் | ... | 1 |
| 2. | நிலவியல் கண்டுபிடிப்புகள் | ... | 14 |
| 3. | சமயச் சீர்திருத்த இயக்கம் | ... | 22 |
| 4. | தேசிய அரசுகளின் எழுச்சி | ... | 34 |
| 5. | அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எழுச்சியும் வளர்ச்சியும் | ... | 41 |
| 6. | பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனும் | ... | 54 |
| 7. | லத்தீன் அமெரிக்காவில் விடுதலைப் போராட்டங்கள் | ... | 76 |
| 8. | ஐரோப்பாவில் தேசிய இயக்கம் நிறைவுறுதல் | ... | 85 |
| 9. | அமெரிக்க உள்நாட்டுப் போரும் புனரமைப்புப் பணிகளும் | ... | 95 |
| 10. | மேஜியின் முன்னிலை மீட்சி — 1868 ருஷ்ய - ஜப்பானியப் போர் | ... | 108 |
| 11. | சீனப் புரட்சி — 1911 | ... | 125 |
| 12. | முதல் உலகப் போரும் பன்னாட்டுக் கழகமும் | ... | 133 |
| 13. | 1917ஆம் வருடத்திய ருஷ்யப் புரட்சி — லெனின் | ... | 158 |
| 14. | சர்வாதிகார ஆட்சிகளின் எழுச்சி — இத்தாலி, ஜெர்மனி, துருக்கி | ... | 166 |
| 15. | இரண்டாம் உலகப் போர் | ... | 180 |
| 16. | ஐக்கிய நாடுகள் அவை | ... | 196 |


[இந்நூலின் தொடர்ச்சி இரண்டாம் தொகுதியாக வெளியிடப்படுகிறது.]

# தோற்றுவாய்

உலக வரலாற்றை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை **பண்டைக்காலம்**, **இடைக்காலம்**, **நவீனகாலம்** என்பன வாம். வரலாற்றின் தெளிவற்ற தொடக்க நாளிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு அழிந்தது வரையிலான காலத்தைப் **பண்டைக்காலம்** என அழைப்பது மரபு. பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையில் உள்ள காலக்கட்டத்தை **இடைக்காலம் (Mediaeval Times)** எனக் கொள்வது வழக்கு. இவையிரண்டிற்கும் இடையே **இருண்ட காலம் (Dark Ages)** என்ற ஒன்று (5 முதல் 11 நூற்றாண்டு வரை) குறிப்பிடப்படுகின்றது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கமுதல் ஐரோப்பாவின் **நவீனகாலம்** தொடங்குகின்றது. மறுமலர்ச்சி, நிலவியல் கண்டுபிடிப்புகள், சமயச் சீர்திருத்த இயக்கம், தேசிய அரசுகளின் எழுச்சி ஆகிய கூறுகள் இடைக்காலத்தை வழியனுப்பிவிட்டு நவீனகாலம் நடை போடுவதற்கு உறுதுணையாய் நின்றன. நாகரிக வளர்ச்சியில் புதிய கட்டம் உருவெடுத்ததை இத்தகைய இயக்கங்களும் கருத்துகளும் உலகிற்கு எடுத்துக்காட்டின.

## அத்தியாயம் 1

# மறுமலர்ச்சி இயக்கம்

## (Renaissance Movement)

### (அ) மறுமலர்ச்சி என்றால் என்ன?

மறுமலர்ச்சி என்றால் மறுபிறவி என்றும் பொருள்படும். இடைக்காலத்தின் இறுதியில், இத்தாலிய நாட்டில் பழம்பெரும் இலக்கியங்களிலும் கலைகளிலும் எழுந்த புத்தார்வத்தை, பதினாறாம் நூற்றாண்டில் புதிய பண்பாட்டினை வளர்த்த இலக்கியக் கலையார்வத்தை, மறுமலர்ச்சி எனக் கூறலாம். ஆயின் இது அவ்வியக்கத்தின் முழுப்பொருளை உணர்த்தமுடியாத குறுகிய பொருளேயாகும். பரந்த பொருளில் பார்க்கும்போது, பண்டைக் காலக் கிரேக்க நாட்டிலும் ரோமானியப் பேரரசிலும் விளங்கிய வாழ்க்கை முறையிலும் எண்ண எழுச்சியிலும் விஞ்சி நிற்கின்ற சமயச் சார்பற்றதும் பகுத்தாயும் பாங்கானதும் தற்சார்புடையதுமான உணர்வை மீண்டும் பெறுவதே மறுமலர்ச்சி எனப்படும். எனவே, உலகத்தையும் வாழ்க்கையையும் புதிய வழியில் காண்பதே மறுமலர்ச்சியாகும். இடைக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞரெல்லாம் இவ்வுலகத்தை மறுஉலக வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் களமாகவே கருதியுள்ளனர். அந்த மறுஉலக வாழ்க்கையின் சிறப்பிற்காகப் போராடுவதையும் கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்வதையும் இவ்வுலக வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அதாவது, ''தன்னல மறுப்பே (புலனடக்கம்—self repression) இடைக்கால உலகத்தின் மிகச் சிறந்த குறிக்கோளாக இருந்தது.'' ஆனால், ''சுய வெளிப்பாடே (self expression) மறுமலர்ச்சியின் இலக்காக இருந்தது.'' மனிதனுடைய தலையாய கடமை தன்னை வளர்த்துக்கொண்டு, தனது வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்துகொள்ள வேண்டுமென்று மறுலர்ச்சி இயக்கம் அவனுக்கு அறிவுறுத்தியது. மேலும், இவ்வுலகத்திலுள்ள அழகையெல்லாம் அனுபவிக்கவும் உண்மையை உணரவும் உதவும் வகையில் தனது சிந்தனைச் சக்தியையும் உடலின் சக்தியையும் ஒருங்கிணைந்த முறையில் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தியது. எனவே, மறுமலர்ச்சி என்பது ஏதோ பண்டைக்கால இலக்கியங்

களிலும் கலைகளிலும் காட்டுகின்ற புத்தார்வம் மட்டும் அன்று. அது மனிதன் முழுவளர்ச்சி பெற்று, வாழ்வாங்கு வாழும் வகை யறிந்து வாழ்வதைக் குறிப்பதாகவும் அமையும். மறுமலர்ச்சியால் வெளிப்பட்ட பகுத்தாயும் உணர்வு இலக்கியத்தோடு, கலையோடு நின்றுவிடவில்லை. அது அறிவியல்மீதும் சமயத்தின்மீதும் செல்வாக்குச் செலுத்தும் திறங்கொண்டதாக இருந்தது.

**(ஆ) மறுமலர்ச்சிக்கான காரணங்கள்**

(1) மறுமலர்ச்சி என்பது ஐரோப்பிய வரலாற்றில் நாம் காணும் திடீர் நிகழ்ச்சியன்று. பல்வேறு காரணகாரியங்களின் மொத்த விளைவே மறுமலர்ச்சியாகும். இடைக்காலத்தில் நடைபெற்ற சிலுவைப் போர்கள் (Crusades) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் புதிய வாழ்க்கையொன்றின் உணர்வை ஊட்டிச் சென்றன. இப்புதிய உணர்வு வட்டாரமொழி இலக்கியங்களில் நன்கு வெளிப்படத் தொடங்கியது. ஸ்பெயினில் காஸ்டிலியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும், **கிட்** (Cid) என்னும் வீரகாவியம் படைக்கப்பட்டது. பிரான்சில் பேரரசர் **சார்லமேனும்** (Charlemagne) அவரது இணையற்ற வீரமும் நிகழ்த்திய உணர்வைத் தூண்டும் சாகசங்கள் பிரெஞ்சு மொழியிலக்கியங்களாக வெளிவந்தன. இத்தாலியில் **தாந்தே** (Dante) என்னும் அறிஞர் **டஸ்கன்** (Tuscan) என்னும் வட்டார மொழியில் **புனித இன்பியல் (டிவைன் காமடி**—Divine Comedy) என்னும் நூலை இயற்றினார். இங்கிலாந்தில் ஆங்கிலோ சாக்சானிய (Anglo-Saxon) மொழியிலேயே **சாசர்** (Chaucer) **கான்டர்பரிக் கதைகளை** (Canterbury Tales) எழுதினார். இப்படி எழுதப்பெற்ற நூல்களில் சுதந்திர உணர்வும் இடைக்காலத்துத் துறவு மனப்பான்மைக்கு எதிர்ப்பும் காணப்படுகின்றன. அதனால் இவ்வட்டாரமொழி இலக்கியங்கள் மறுமலர்ச்சிக்குக் கட்டியம் கூறின என்று கூறலாம். இடைக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் மடாலயத் துறவிகளால் இயற்றப்பட்டவை. அவை இலத்தீன் மொழியில் எழுதப்பட்டதுடன், சிறுவகுப்பாருக்காகவே எழுதப்பட்டவை. அதுபோன்று இல்லாமல் வட்டார மொழியில் வந்த இலக்கியங்கள் பாமர மக்களின் உள்ளங்களைத் தொடுகின்ற தன்மைகொண்டவையாக இருந்தன. மேலும், அவை ஐரோப்பா முழுவதிலும் மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் பெற்று விளங்கின.

இடைக்காலத்திலேயே சுதந்திரமாக விளங்கிய நகரங்களின் கட்டற்ற சூழ்நிலையில், மக்களிடையே தோன்றிய புத்துணர்ச்சி வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, இத்தாலிய நகரங்களில் இடைக்காலப் போதனைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் எதிரான புதிய

உணர்ச்சி வளரத்தொடங்கியது. எடுத்துக்காட்டாக, மறுமலர்ச்சிக் கால இயல்புகளான திறனாய்வு செய்யும் உணர்வு மற்றும் சிந்தனைச் சுதந்திரம் ஆகியவைகளை 1265 முதல் 1321 வரையில் பிளாரன்ஸ் நகரத்தில் வாழ்ந்த தாந்தேயின் நூலான 'புனித இன்பியல்' (Divine Comedy) என்னும் இலக்கியத்தில் காணமுடிகிறது. மேலும் கிரேக்க மொழியைச் சிறிதும் அறியாத தாந்தே, கிரேக்க இலக்கியத்தின் முக்கியத்துவத்தை முழுதுமாக உணர்ந்திருந்தார். 'அறிவொளி பரப்பும் அணையா விளக்கு' என ஏதென்ஸ் நகரத்தை வியந்து பாராட்டினார். ஹோமரை (Homer), 'ஒப்பற்ற கவிஞர்' என்றும் அரிஸ்டாட்டிலை (Aristotle) 'அறிவறிந்த மாந்தரின் ஆசான்' என்றும் புகழ்ந்து பேசினார். இங்ஙனம் அவர் பண்டைய இலக்கிய மறுமலர்ச்சியின் முன்னோடியாக விளங்கினார்.

தாந்தேயை அடுத்து **பெட்ரார்க்** (Petrarch) மறுமலர்ச்சிக்கான வித்திட்டார். 1304 முதல் 1374 வரையில் வாழ்ந்த அவர் கிரேக்க மொழியில் படிக்கமுடியாதவராக இருந்தபோதிலும் கிரேக்க மற்றும் இலத்தீன் இலக்கியக் கையெழுத்து ஏடுகளைச் சேகரிப்பதில் முனைந்துநின்றார். பிளேட்டோவின் (Plato) படைப்புகளும், சிசிரோவின் கடிதங்களும், (Letters of Cicero) ஹோமரின் காப்பியங்களும் அவர் திரட்டிய இலக்கியச் செல்வங்களில் முக்கியமானவையாகும். பண்டைக்கால இலக்கிய மேதைகளிடம் அவர் காட்டிய ஆர்வம் மற்றவரையும் பற்றிக்கொண்டது. அதன் விளைவாகப் பல இளைஞர்கள் பண்டைப் பெரு இலக்கியங்களை ஆர்வமுடன் படிக்கத் தொடங்கினர். கிரேக்க மொழியையும் இலத்தீன் மொழியையும் கற்பது இத்தாலியில் ஒரு தீவிரப் பற்றாகவும் ஒரு நாகரிகமாகவும் கருதப்படும் அளவிற்கு நிலைமை மாறியது.

பெட்ரார்க்கிற்கு முன்னால் ரோம் நகரத்து நினைவுச் சின்னங்களில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. பாழடைந்த பழம் பெரும் கட்டடங்களின் இடிபாடுகளெல்லாம் செங்கல் வழங்கும் சூளைகளாகப் பயன்படுத்தப்பட்டன. முடிந்தவரை மக்கள் அவற்றிலிருந்து கற்களைப் பெயர்த்தெடுத்து தங்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டனர். சீசர்களின் காலத்து நினைவுச் சின்னங்களை மதிக்கும் பழக்கத்தை மக்களிடையே பெட்ரார்க் வளர்த்து வந்தார். பழங்கால நாகரிகத்தின் சின்னங்களாக விளங்கிய கலைப் பொருளின்மீது அறிவார்ந்த ஆர்வம் கொள்ளுமாறு செய்வதிலும் அவர் வெற்றிகண்டார்.

பெட்ரார்க்கின் சீடரான **பொக்காஷியோ** (1313—1373) தம்து ஆசானைப்போலவே பழம்பொருள்களின்மீதான

ஆர்வத்தைப் பரவலாகச் செய்யவும், பெட்ரார்க் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியை வளர்க்கவும் அரும்பாடுபட்டார். பண்டைக் கால இலக்கிய ஏடுகளைச் சேகரித்ததுடன் அவற்றின் பிரதிகளை யும் (copies) எடுத்தார். இவற்றின் மூலமாக இத்தாலியில் கிரேக்க மற்றும் இலத்தீன் இலக்கிய அறிவை வளர்த்துவந்தார். மேலும் அவர் **டெகமரான்** (Decameran) என்னும் காதல் கதைகளின் தொகுப்பை இத்தாலிய மொழியில் எழுதிச் சிறப்புற்றார். இக் கதைகள் தற்காலத்தில் அச்சிட்டு வெளியிடத் தயங்கும் நிலையில் உள்ளவையென்றாலும் இத்தாலிய மொழிவளர்ச்சிக்கும் சமயம் சாரா இலக்கிய வளர்ச்சிக்கும் பேருதவியாக வந்தன.

அக்காலத்தில் வாழ்ந்த வணிகச் சீமான்களும், வல்லாட்சி யாளரும், போப்புகளும் (Popes) பண்டைக்கால இலக்கிய ஏடு களைச் சேகரிப்பதில் முக்கியப் பங்கேற்றனர். இவ்விதம் புதிய கல்வியை வளர்த்தவர்களில் பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த **காஸிமோவும்** (Casimo) **லாரன்சோ டி மெடிசியும்** (Lorenzo de Medici) முதன்மையானவர்கள். அதனால்தான் பிளாரன்ஸ் நகரம் இரண்டாம் ஏதன்ஸாக விளங்கியது. புதிய இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமூட்டிய போப்புகளில் ஐந்தாம் நிக்கலஸ் (Pope Nicholas V, 1447—1455) குறிப்பிடத்தகுந்தவர். அவர் ஏறக்குறைய 5000 கையெழுத்து ஏடுகளை வாடிகன் நூலகத்தில் (Vatican Library) சேர்த்து அதனை வளப்படுத்தி னார். இங்ஙனம் போப்பாண்டவர்களும் திருச்சபையும் புதிய இலக்கிய வளர்ச்சியைத் தடுக்காமல் ஆதரவுதந்து வளர்த்து வந்தது தெரியவரும். தங்களது அதிகாரத்தின் அடிப்படை யாக விளங்கும் கருத்துகளையும் நம்பிக்கைகளையும் வலு விழக்கச் செய்யக்கூடிய புதிய இலக்கிய எழுச்சியை எதிர்ப்பதற்கு மாறாகப் பழைய ஏடுகளைக் கண்டுபிடித்துக் காப்பதில் போப்பு களும் பெருந்தொண்டு புரிந்தனர். இங்ஙனம் இடைக்காலத்தின் இறுதியில் பண்டைக்காலக் கிரேக்க, ரோம இலக்கியங்களுக்குப் படிகள் பல எடுக்கப் பேராதரவு கிடைத்தது.

(2) கான்ஸ்டான்டிநோபிள் நகரம் பல நூற்றாண்டு களுக்குக் கிரேக்க, ரோமானிய அறிஞர்களின் நிலைக்களனாகத் திகழ்ந்து வந்தது. 1453-ல் ஆட்டொமான் துருக்கியர் அந்நகரைக் கைப்பற்றினர். அதன் விளைவாக ஏராளமான அறிஞர்கள் கான்ஸ்டான்டிநோபிளைவிட்டு நீங்கி மேற்கு ஐரோப்பாவிற்குச் சென்றனர். பண்டைக்கால இலக்கியங்களி லும் கலையிலும் இத்தாலியர் அக்கறை காட்டிவந்தனர் என்பதை ஏற்கெனவே கண்டோம். அந்நிலையில் கிரேக்க, ரோமானிய

அறிஞர் பலர் இத்தாலியிலும் மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வந்து குடியேறி வாழ முற்பட்டதால் பண்டைக்காலக் கிரேக்க, ரோமானிய இலக்கியத்திற்கும் கலைக்கும் வளரும் வாய்ப்பு பெருமளவில் கிடைத்தது.

(3) அச்சு இயந்திரம் புகுத்தப்பட்டதால் அறிவுப்பெருக்க இயக்கம் துரிதமாக முன்னேறியது. 1450ஆம் ஆண்டு ஜெர்மனியில் **ஜான் கூட்டன்பர்க் (John Gutenberg)** இடம்பெயரக்கூடிய எழுத்துகளைக் (types or letters) கண்டுபிடித்தார். இதனால் பக்கமொன்றை அச்சடித்தபிறகு எழுத்துகளைப் பிரித்தெடுத்து வேறு பக்கத்தை அச்சடிக்கப் பயன்படுத்த முடிந்தது. வளர்ச்சியடைந்த இந்த அச்சு முறையை 1477-ல் **வில்லியம் காக்ஸ்டன் (William Caxton)** இங்கிலாந்திற்குக் கொண்டுவந்தார். அச்சு இயந்திரத்தின் உதவியால் ஏராளமான நூல்களை அச்சிட்டு வெளியிட முடிந்தது. இது மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. பண்டைக்காலக் கிரேக்க இலக்கியங்களும் இலத்தீன் இலக்கியங்களும் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பெற்றுக் கற்றறிந்த பொதுமக்கள் கைகளில் உலவத் தொடங்கின.

### (இ) இத்தாலியில் மறுமலர்ச்சி

**(1) அதன் செல்வாக்கு :** சமயச் சீர்திருத்த இயக்கம் ஜெர்மனியில் மலர்ந்து பிற நாடுகளில் மணம் பரப்பியது. அரசியல் புரட்சி பிரான்சில் வெடித்து மற்ற நாடுகளில் பரவியது. அதுபோல மறுமலர்ச்சி இயக்கமானது இத்தாலியில் பிறந்து, ஐரோப்பா முழுவதும் வியாபித்தது. அது இத்தாலியில்தான் முழு வளர்ச்சி பெற்று மிக உன்னத நிலையை அடைந்தது. இவ்வாறு இத்தாலி மறுமலர்ச்சியின் தாயகமாகத் திகழப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, இடைக்காலத்திலேயே இத்தாலியில் பழம்பெரும் கிரேக்க, ரோமானிய இலக்கியங்களிலும் கலைகளிலும் மக்களின் ஆர்வத்தைப் பெருக்குவதில் தாந்தே, பெட்ரார்க், பொக்காஷியோ போன்றவர்கள் அக்கறை காட்டியதுடன் தமது குறிக்கோளில் வெற்றியும் பெற்றனர். இரண்டாவதாக, நகரங்களை மையமாகக்கொண்டு எழுந்த மறுமலர்ச்சி இயக்கத்தை வட இத்தாலி நகரங்களான வெனிஸும் பிளாரன்ஸும் பேணி வளர்த்தன. முக்கியமாகப் பெரும் செல்வந்தர்கள் வாழ்ந்ததும் அக்காலத்தில் ஐரோப்பாவின் பொருளாதாரக் கேந்திரமாக விளங்கியதுமான பிளாரன்ஸ் நகரம், மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பேராதரவு தந்து வளர்த்தது. புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கும், கலைப் பொருள்களைப் படைப்பதற்கும் தேவையான பெரும்பொருளைத் தாராளமாகத் தந்து உதவியதன்மூலம் இந்த வட இத்தாலிய

நகரங்கள் மறுமலர்ச்சிக் கலைக்கு மாறாத தொண்டாற்றியுள்ளன. மூன்றாவதாக, புகழ்மிக்க ரோமானியப் பேரரசு வாழ்ந்த காலத்தின் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் இத்தாலியில் நிறைந்திருந்தன. அதனால் பண்டைக்காலக் கிரேக்க, ரோமானியக் கலைகளில் அந்நாட்டு மக்கள் மீண்டும் அக்கறை காட்டியது இயற்கையே. நினைவுச் சின்னங்களை நேரடியாகக் காணவும் அவற்றின் பெருமையை உணரவும் இத்தாலியருக்கு வாய்ப்புகள் அதிகமாக இருந்தன. இறுதியாக, இலத்தீன் மொழியைப் பேணிக் காத்துவந்த ரோமானிய திருச்சபையானது நானிலம் போற்ற வாழ்ந்த பண்டைய ரோமாபுரியின் நினைவை நீங்கா வண்ணம் நிலைபெறச் செய்துவந்தது. இவ்வாறு இலக்கிய, கலை மறுமலர்ச்சி தோன்றி வளர்வதற்கு வாய்ப்பான சூழ்நிலை இத்தாலியில் இருந்ததால் மறுமலர்ச்சி இயக்கம் அந்நாட்டில் தலைத்தோங்க முடிந்தது.

**(2) இத்தாலி மறுமலர்ச்சி இயக்கத்தின் மனிதாபிமானக் கோட்பாட்டுக் கட்டம் (Humanistic Phase) :** ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சியில் இரண்டு முக்கியக் கட்டங்களைக் காணமுடியும். முதலாவது, **மனிதாபிமானத் தன்மைக் கட்டம்** என வழங்கப்படுகின்றது. அது பண்டைய இலக்கியங்களின்பால் ஏற்பட்ட, புத்தார்வத்தின் விளைவாக மனிதனை மையமாக வைத்த, மனிதத்தன்மையை வளர்க்கவல்ல இலக்கியங்கள் படைக்கப்பெற்ற காலமாகும். ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கான்ஸ்டாண்டிநோபிள் துருக்கியர் கையில் வீழ்ந்து, அங்கிருந்த கிரேக்க அறிஞர்கள் மேற்கு நாடுகளுக்குச் சென்று குடியேறுவதற்குமுன்பே இத்தாலியில் இந்த மனிதாபிமானத் தன்மைக் கட்டம் தோன்றிவிட்டது. தாந்தேயும், பெட்ரார்க்கும், பொக்காஷியோவும் மனிதாபிமானத் தன்மைக் கட்டத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களாக விளங்கினர்.

ஆனால், மறுமலர்ச்சி இயக்கம் முழுவளர்ச்சி அடைந்த நிலையில் இத்தாலியின் தலைசிறந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தவர் **மாக்கியவல்லியாவர்** (Machiavelli, 1469 — 1527). பிளாரன்ஸ் நகரைச் சேர்ந்த அவர் ஓர் அரசியல் தந்திரியாக, சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அவர் எழுதிய **இளவரசன் (Prince)** என்னும் சிறப்புவாய்ந்த நூலில் அக்கால அரசியல் நிலைகளை நன்கு ஆய்ந்துள்ளார். அதுமட்டுமல்லாமல் மக்களை ஆள்வது எப்படி என்பதற்கான விதிமுறைகளை வகுத்தளிக்கவும் முயன்றுள்ளார். வலிமைமிக்கதொரு புதிய இத்தாலிய அரசை அமைக்க வரும் அரசர் வல்லாட்சியாளராக விளங்கவேண்டுமென்றும், அவர்

ஒழுக்க நெறிகளுக்குக் கட்டுப்படத் தேவையில்லையென்றும் வற்புறுத்தி எழுதினார்.

**(3) இத்தாலியின் கலைத்துறை வளர்ச்சிக் கட்டம் (Artistic Phase):** மறுமலர்ச்சியென்பது மனிதாபிமானக் கோட்பாட்டு இயக்கம் மட்டுமன்று. அது ஒரு **கலைத்துறை வளர்ச்சி** இயக்கமுமாகும். மறுமலர்ச்சியின் விளைவாக இத்தாலியில் ஒப்பற்றக் கட்டடங்களும், தலைசிறந்த ஓவியங்களும், சிற்பங்களும் உருவாக்கப்பட்டன. கட்டடங்கள் பல வனப்புமிக்க பண்டைக்காலக் கட்டடங்களின் மாதிரியில் கட்டப்பட்டன. இயற்கை இன்பத்தையும் மனித உருவங்களையும் கலைவடிவில் வடித்தெடுக்க அக்காலக் கலைஞர்கள் முற்பட்டனர். மறுமலர்ச்சி இயக்கத்தின் பொற்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கலைஞர்களில் நால்வரை முக்கியமாகக் குறிப்பிடலாம். பிளாரன்ஸ் நகரம் ஈந்த **லியனார்டோ டா வின்ஸி** (Leonardo-da-Vinci), **ரபேல்** (Raphael), **மைக்கேல் ஏஞ்சலோ** (Michael Angelo) ஆகியோரும், வெனீஸ் நகரம் தந்த **டிஷியனும்** (Titian) அந்த இறவாப் புகழ்கொண்ட நால்வராவர்.

1452 முதல் 1519 வரை வாழ்ந்த லியனார்டோ டா வின்ஸியின் ஓவியங்கள் உலகப் புகழ்பெற்றவை. அவற்றில் **மோனோ லிசாவும்** (Mona Lisa), **இறுதி இரவுச் சாப்பாடு** (Last Supper) என்ற ஓவியமும் மிக முக்கியமானவை. அவரது ஒப்புயர்வற்ற ஓவியமான 'இறுதி இரவுச் சாப்பாடு' மிலான் நகரத்துக் கல்விக் கூடத்தின் சுவரை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. லியனார்டோ டா வின்ஸி ஓர் ஓவியராகவும் சிற்பியாகவும் மட்டுமில்லை; அவர் ஒரு சிறந்த சிந்தனையாளராகவும் அறிவியல் மேதையாகவும் திகழ்ந்தார். வானில் பறப்பதற்கான முயற்சிகளிலும் அவர் முற்பட்டார். அவை தோல்வியுற்ற போதிலும் பிற்காலத்தில் வந்தவர்களுக்கு ஊக்க மூட்டுவதாக அமைந்தன.

ரபேல் (1483—1520) தீட்டிய **மாடன்னா** (Madonnas) உருவப் படங்கள் தலைசிறந்த உலகக் கலைச் செல்வங்களில் ஒருசிலவாகும். மைக்கேல் ஏஞ்சலோவின் (1475—1554) சிறந்த படைப்பான **இறுதித் தீர்ப்பு** (Last Judgement) இன்றளவும் ரோம் நகரத்திலுள்ள 'சிஸ்டைன் கோவிலை' அணிசெய்து கொண்டிருக்கின்றது. 'ஓவியம் கைகளால் தீட்டப்படுவதில்லை; மனத்தினால் உருவாக்கப்படுகின்றது,' எனக் கூறிய மைக்கேல் ஏஞ்சலோ ஓர் ஓவியர் மட்டுமல்லாமல் சிறந்த கட்டடக் கலைஞராகவும் விளங்கினார். ரோமிலுள்ள **புனித பீட்டர் தேவாலயத்தை** (St. Peter's Cathedral) வடிவமைப்பதில் அவருக்குப் பெரும்பங்கு உண்டு.

1477 முதல் 1556 வரை வாழ்ந்த திதியன் உலகப்புகழ் பெற்ற விவிலியக் காட்சிகளையும் அக்காலத்தில் வாழ்ந்த சில பெரிய மனிதர்களின் உருவப் படங்களையும் தீட்டினார்.

மறுமலர்ச்சியின் மூலமாக இத்தாலி ஐரோப்பாவின் இலக்கியச் செல்வத்தைப் பெருக்கியது. மனித இனமே அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது. பலதிறப்பட்ட இலக்கியங்களும், பெருங்கலைஞர்களின் ஓவியங்களும், உருவப்படங்களும், ரோம் நகரில் கம்பீரமாக எழுந்துநிற்கும் புனித பீட்டரின் தேவாலயமும் மறுமலர்ச்சியின் நன்கொடைகளாக உலகிற்குக் கிடைத்துள்ளன. பிரெஞ்சு உரைநடை இலக்கியமும், இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியர், மில்டன் முதலானோரின் நயமிக்க நாடகங்களும், சிந்தையள்ளும் கவிதைகளும், ஜெர்மனியின் இசையும், இலக்கிய, கலையும் உலகிலேயே உயர்ந்த இடத்தைப் பெறச்செய்தது மறுமலர்ச்சி என்பது கவனிக்கத்தக்கது.

**(ஈ) இங்கிலாந்தில் மறுமலர்ச்சி**

இத்தாலியில் முகிழ்த்த மறுமலர்ச்சி இயக்கம் இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து (Netherlands) ஆகிய நாடுகளில் தன் நறுமணத்தைப் பரப்பியது. இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் எழுந்த அறிவார்ந்த புத்துயிர்ப்பு நடைமுறை சார்ந்ததாகவும் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றியதாகவும் அமைந்தது. 1481-ல் கிரேக்க இலக்கியத்தில் பேரார்வத்துடன் இத்தாலியிலிருந்து திரும்பிவந்த **தாமஸ் லினாக்கர்** (Thomas Linacre) அந்த ஆர்வத்தின் அடிப்படையில் மருத்துவத்தை அறிவியல் முறையில் கற்க முற்பட்டார். 1491-ல் இத்தாலியிலிருந்து திரும்பிய ஆக்ஸ்போர்டு அறிஞரான **வில்லியம் குரோசின்** (William Grocyn) என்பார் ஆக்ஸ்போர்டில் கிரேக்க மொழியையும் கிரேக்க இலக்கியங்களையும் முறையாகக் கற்க முனைந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு ஆர்வமும் ஆற்றலும் மிகுந்த பாதிரியார் **ஜான் கோலட்** (John Colet) விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிற்கு (New Testament) விளக்கம் தருவதற்குத் தமது கிரேக்க இலக்கிய அறிவைப் பயன்படுத்தினார். **ஆக்ஸ்போர்டு சீர்திருத்தக்காரர்கள்** என்று பெயர்பெற்ற அறிஞர்களில் **எராஸ்மஸும்** (Erasmus) ஒருவர். டச்சுக்காரரான எராஸ்மஸ் பல்லாண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்து அங்கு நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தார். சமயத்தைப்பற்றி மக்கள் கொண்டிருந்த எண்ணங்களைத் தமது கல்வியறிவால் மாற்றியமைத்து, திருச்சபையில் புத்துயிர்ப்பைக் கொண்டுவரவேண்டுமென்று முயற்சிசெய்தார். துறவிகளின் பழைய பாணியிலான மடாலயக் கல்வியைத் தாம் எழுதிய

**மடமையின் புகழ்ச்சி** (The Praise of Folly) என்னும் நூலில் கேலி செய்தார். 1516-ல் **சமய ஏற்பாட்டின்** (Testament) கிரேக்க மொழிப் பதிப்பை வெளியிட்டதும் அதனை இலத்தீனிலும் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

ஆக்ஸ்போர்டு எழுத்தாளர்களில் தலைசிறந்தவராக எண்ணக்கூடியவர் **சர் தாமஸ் மூர்** (Sir Thomas More) அவர் **உட்டோப்பியா** (Utopia) என்னும் உயர்ந்த கற்பனைக் காவியத்தை எழுதி வெளியிட்டார். திருச்சபையிலும் அரசியலிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்பது அவரது பேரவா. ''ஒப்புயர்வற்ற அவரது நூல், மறுமலர்ச்சி இங்கிலாந்தின் ஏற்றமிகு படைப்பு எனப் போற்றப்படுகின்றது. அது சமுதாயச் சீர்கேடுகளையும் அரசியலில் புரையோடியிருக்கும் புண்களையும் சுட்டிக் காட்டும் உண்மையான திறனாய்வு நூலாகும். வறுமையும், வஞ்சகமும், குற்றமும், குறையும் நீங்கிய ஒளிமயமான கற்பனை உலகைப் படம்பிடித்துக் காட்டும் வண்ண ஓவியம். சுருங்கச் சொன்னால், அது தற்காலத்தின் திறனாய்வு, எதிர்காலக் கனவு.''

ஆக்ஸ்போர்டு எழுத்தாளர்களின் நூல்களும் பிரசாரங்களும் இளந்தலைமுறையினரின் மனப்பான்மையை மாற்றியமைத்தன. இங்ஙனம் மறுமலர்ச்சிக்கால மக்கள் திறனாயும் மனத்தினராய், தற்சார்புடையவராய், விவிலிய நூலில் அனுமதிக்கப்படாத சமயக் கருத்தையும் சடங்குகளையும் எதிர்க்கும் பண்புடையவராய் விளங்கினர். ஆக்ஸ்போர்டு எழுத்தாளர்கள் சமயச் சீர்திருத்தம் கொண்டுவருவதில் எவ்வித வெற்றியும் பெறவில்லையென்றாலும் சமயச் சீர்திருத்தத்திற்காக மக்களின் மனங்களைத் தயார் செய்தனர். இவ்விதமாக மறுமலர்ச்சி இயக்கம் சமயச் சீர்திருத்த இயக்கத்திற்கு அடிகோலியது.

மறுமலர்ச்சியின் விளைவாகப் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரைநடை, செய்யுள், நாடக இலக்கியங்கள் நன்கு வளர்ச்சியுற்றன. எலிசபெத் இராணியார் காலத்தில் **தேவதை அரசி** (Faerie Queen) என்னும் அழகொழுகும் உருவகக் கதையை **ஸ்பென்ஸர்** எழுதினார். **வில்லியம் ஷேக்ஸ்பியரை** எலிசபெத் இராணியார் காலத்துத் தலைசிறந்த எழுத்தாளர் எனலாம். மறுமலர்ச்சி உணர்வு அவர்மீதும் செல்வாக்கு செலுத்தியபோதிலும் அவர் பண்டைக்கால இலக்கிய மரபுக்கு அடிமையாகிவிடவில்லை. ஆங்கில இலக்கியத்தை வளமுறச் செய்த அவரது நாடகங்களில் இயல்பான, கட்டுப்பாடற்ற இலக்கிய வடிவத்தைக் காணமுடிகின்றது. பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த **மில்டன்** (Milton) என்னும் மாபெரும் கவிஞர் மறுமலர்ச்சியின் செல்வாக்

கிற்கிணங்க அழியா இலக்கியங்களைப் படைத்தளித்தார். அவர் இத்தாலிக்குச் சென்று, அங்கே மறுமலர்ச்சி ஓவியத்தின் மாண்பினைக் கண்டுவந்தார். **இழந்த சொர்க்கம்** (Paradise Lost), **மீண்ட சொர்க்கம்** (Paradise Regained) என்னும் இரு பெருங் காவியங்களில் ரபேல், மைக்கேல் ஏஞ்சலோ ஆகியோரின் ஓவியங்களின் அழகைக் கவினுறும் ஆங்கிலக் கவிதை வடிவில் வடித்துக் காட்டினார்.

**(உ) ஜெர்மனியிலும் நெதர்லாந்திலும் மறுமலர்ச்சி**

இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம் எழுவதற்கு முன்பே ஜெர்மனியில் **பொதுவாழ்வுச் சகோதரர்கள்** என்னும் கழகம் இயங்கிவந்தது. அக்கழகம் பல பள்ளிகளை நிறுவி ஒழுக்கமாகவும் நடைமுறைக்குரிய வகையிலும் (practical) வாழ்வது எப்படி என்பதை இளைஞர்களுக்குப் போதித்து வந்தது. ஜெர்மனியில் தோன்றிய இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கத்துடன் தொடர்புகொண்டு கூட்டன்பர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்திப் பல நூல்களை வெளியிட்டனர். புதிய பல்கலைக்கழகங்களும் நிறுவப்பட்டன. அவை மறுமலர்ச்சி இயக்கத்தின் மையங்களாக விளங்கின. பழைய கல்வியை ஆதரித்த மடாலயக் குருமார்களுக்கும் புதிய கல்வி ஆதரவாளர்களுக்குமிடையே இந்தப் பல்கலைக்கழகங்களில் காரசாரமான விவாதம் நடைபெறலாயிற்று. இத்தகைய விவாதங்களில் முக்கியப் பங்குகொண்ட ஜெர்மானிய அறிஞர் **ஜான் ரியூச்லின்** (John Reuchlin) என்பவராவார். இத்தாலிக்குச் சென்று கிரேக்க மொழியைக் கற்றுவந்த அவர், பழைய குருமார் கட்சியின் கருத்துகள் சிலவற்றை வன்மையாகக் கண்டித்து வந்தார். **மார்ட்டின் லூதரும்** (Martin Luther) கண்டனக் குரல் எழுப்பினார். இங்ஙனம் சமயக் குருமார்மீது மறுமலர்ச்சி அறிஞர்கள் நடத்திய தாக்குதல்தான் ஜெர்மனியில் சமயச் சீர்திருத்தத்திற்கு வழிகோலியது.

இடைக்காலத்தில் கம்பள வாணிபத்தாலும், பிற்காலத்தில் நறுமணப் பொருள்கள் வாணிபத்தாலும், நெதர்லாந்தில் செல்வ வளம் கொழிக்கும் நகரங்கள் நிறைந்திருந்தன. இந்நகரங்களில் வாழ்ந்த சில வணிகச் செல்வர்கள் ஓவியக்கலைக்குப் பேராதரவு தந்தனர். தங்களது உருவப் படங்களையும், தங்கள் குடும்பத்தாரின் உருவப் படங்களையும், தீட்டித் தருமாறு ஓவியர்களைத் தூண்டினர். இதன் விளைவாகச் சமயம் சாரா ஓவியக்கலை நெதர்லாந்தில் நன்கு வளர்ந்தது. இத்தகைய ஓவியக் கலைஞர்களில் **வான்ஐய்க்ஸ்** சகோதரர்கள் ஒப்பற்று விளங்கினர்.

போரும் சமயப் பூசலும் ஜெர்மனியில் கலை வளர்ச்சிக்குத் தடையாக இருந்தபோதிலும், பிளிமியக் (Flemish) கலையார்வம் பிரான்சைப் பற்றிக் கொண்டது. அங்கே ரூபன்சும் (Rubens) ரெம்பிராட்ன்டும் (Rembrandt) அழகிய ஓவியங்களைத் தீட்டினர்.

**(ஊ) மறுமலர்ச்சியும் அறிவியல் கண்டுபிடிப்புகளும்**

மறுமலர்ச்சியால் தோற்றுவிக்கப்பட்ட விசாரணை உணர்ச்சியின் (Spirit of enquiry) விளைவாகப் பல அறிவியல் கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இயலுலகின் (Universe) மையமாக விளங்குவது சூரியனே என்பதும், பூமியானது சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதும் மறுமலர்ச்சியின் தொடக்க காலக் கண்டுபிடிப்புகளாகும். போலந்து நாட்டைச் சேர்ந்த **கோப்பர்நிக்கஸ்** (Copernicus, *1473—1548*) தான் பூமி உருண்டையானது என்றும், அது சூரியனைச் சுற்றி வருகின்றது என்றும் அறிவித்தார். இங்ஙனம் இயலுலகம் பற்றிய தற்காலக் கருத்திற்கு வித்திட்டவர் கோப்பர்நிக்கஸ் எனக் கூறலாம். **ஜியார்டனோ புருனோ** (Giordano Bruno) என்னும் இத்தாலிய அறிஞர் கோப்பர்நிக்கஸின் கொள்கையை ஆதரித்தார். ஆனால் அவர் *1600*-ல் திருச்சபையின் கட்டளைக்கிணங்க ரோம் நகரில் கொளுத்தப்பட்டார். அவரது காலத்தில் வாழ்ந்தவரான **கலிலியோ** (Galileo)வும் பூமி சூரியனைச் சுற்றுகின்றது எனக் கூறிப் போந்தார். அவரும் திருச்சபையால் துன்புறுத்தப்பட்டார். எனவே, அவர் கோப்பர்நிக்கஸின் கோட்பாட்டை மறுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆயினும் கோளங்களையும் விண்மீன்களையும் பார்ப்பதற்குரிய தொலைநோக்கும் கருவியைக் (Telescope) கண்டுபிடித்து அழியாப் புகழ்பெற்றார், கலிலியோ.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியல் மேதைகளில் **ஹார்வி** (Harvey) முன்னணியில் நிற்பவர். இரத்த ஓட்டம் பற்றிய அவரது கோட்பாடு சிறப்புமிக்கது. மறுமலர்ச்சி உணர்வு தான் பதினேழாம் நூற்றாண்டில் புவி ஈர்ப்பு விதியைக் கண்டுபிடிக்க (Law of Gravitation) **சர் ஐசக் நியூட்டனைத்** (Sir Isaac Newton) தூண்டியது.

**(எ) மறுமலர்ச்சியின் விளைவுகள்**

முதலாவதாக, உலகத்தைப்பற்றியும் வாழ்வைப்பற்றியும் புதிய கருத்துகள் உருவாவதற்கு மறுமலர்ச்சி காரணமாக அமைந்தது. பண்டைய உலகில் கிறிஸ்தவ சமயம் பெரும் மாறுதல்களைக் கொண்டுவந்ததைப்போல மேற்கே கிறிஸ்தவ உலகில்

அறிவுத் திறம் சார்ந்ததும், ஒழுக்கநெறி சார்ந்ததுமான புரட்சியைத் தோற்றுவித்தது எனலாம். மறுமலர்ச்சியானது புதிய திருவருள் வெளிப்பாடுபோல் வந்தது. சிந்திக்கவும், உண்மையை ஆராயவும் மக்களைத் தூண்டியது. ஆன்மாவிற்கு எவ்வித ஆபத்தும் இல்லாமல் வாழ்க்கையையும் அதன் இன்பங்களையும் அனுபவிக்கலாம் என அறிவுறுத்தியது. சுருங்கச் சொன்னால், மறுமலர்ச்சி உணர்வானது இலக்கியம், அறிவியல், சமயம், அரசியல் ஆகிய பல்வேறு துறைகளில் பெரும் மாறுதல்களைக் கொண்டுவந்தது. பூகோளக் கண்டுபிடிப்புகள் மறுமலர்ச்சியின் விளைவாகும்.

இரண்டாவதாக, தொடர்பறுந்த வரலாற்றில் இணைப்பை ஏற்படுத்தி, ஐக்கியத்தைக் கொண்டுவந்தது மறுமலர்ச்சி. ரோமானியப் பேரரசிலே கிறிஸ்தவ சமயம் அரசாங்கச் சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது கிரேக்க நாகரிகம் **(Hellenism)** அல்லது பண்டைய நாகரிகம் புறச்சமயப் பண்பாடு எனப் புறக்கணிக்கப்பட்டது. இதனால் வரலாற்றின் சீரான வளர்ச்சித் தடைபட்டுவிட்டது. இந்நிலையில் பண்டைய நாகரிகத்திற்கும் கிறிஸ்தவ நாகரிகத்திற்கும் ஒரு பாலமாக வந்தது மறுமலர்ச்சி. இவ்வாறாகத் தொடர்பறுந்த வரலாற்றிற்கு அது ஐக்கியத்தைக் கொண்டுவந்தது.

மூன்றாவதாக, மறுமலர்ச்சியினால் கல்வியில் சீர்திருத்தம் ஏற்பட்டது. மறுமலர்ச்சியின் விளைவாகத் தூய இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகள் புத்துயிர்பெற்றன. **சாக்ரட்டீஸ் (Socrates), பிளேட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle)** ஆகியோருடைய தத்துவங்கள் பரவலாக வரவேற்கப்பட்டன. ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பண்டைக்காலக் கல்விமுறை இடம்பெறலாயிற்று. பழைய மடாலயக் கல்விமுறை இருந்த இடத்தில் அதைவிடச் சிறந்த முறையான பண்டைக்காலக் கல்விமுறை புகுத்தப்பட்டது.

நான்காவதாக, வட்டாரமொழி இலக்கியங்களின் வளர்ச்சிக்கு மறுமலர்ச்சி உதவியது. கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களின் மீட்சி, வட்டார மொழி இலக்கியத்தை அழித்துவிடும் என்று எண்ணத்தோன்றும். இத்தாலியில் தாந்தே, பெட்ரார்க், பொக்காஷியோ போன்றோர் வெற்றிகரமாகத் தொடங்கிய வட்டார மொழி இலக்கியப்பணி, ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குப் புறக்கணிக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால் மற்ற நாடுகளில், நிலைமை வேறாக இருந்தது. கிரேக்க, ரோமானிய இலக்கியங்கள் தந்துதவிய இலக்கிய முன்மாதிரிகளையும் **(models)**

கருத்துகளையும் இந் நாடுகளின் இலக்கிய மேதைகள் பயன் படுத்தி அரிய இலக்கியங்களைப் படைத்துத் தங்கள் மொழியை நன்கு வளர்த்தனர். இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியரும், மில்ட்டனும், பிரான்சின் டெஸ்கார்ட்டசும் (Descartes), மாலியரும் (Moliere), ஸ்பெயினின் செர்வாண்டீஸும் (Cervantes) [டான் குவிக்ஸாட் (Don Quixote) என்னும் நூலை எழுதியவர்] தங்களது மொழிகளை வளமுற்றதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் செய்த அறிஞர்களில் சிலராவர்.

ஐந்தாவதாக, தொல்பொருள் ஆராய்ச்சி இயலும் வரலாற்றுத் திறனாய்வும் வளர்வதற்கு மறுமலர்ச்சி உதவியது. பண்டைக்காலக் கிரேக்க, ரோமானிய இடிபாடுகளையும் நினைவுச் சின்னங்களையும் ஆராயவேண்டுமென்ற ஆசையை அறிஞரிடையே வளர்த்தது. இவ்வாறாகத்தான் தொல்பொருள் ஆராய்ச்சி இயல் தலையெடுத்தது. மேலும், ஆராயும் உணர்ச்சியை ஊட்டிய மறுமலர்ச்சி, வரலாற்றுத் திறனாய்வுக்கும் வழிவகுத்தது. மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து வரலாற்று ஆதாரங்களை அலசி ஆராய்ந்து, அவற்றின் உண்மைப் பயனை மதிப்பிட்டு வந்ததன் விளைவாகக் கீழைநாடுகளின் வரலாற்றையும், பண்டைக்கால, இடைக்கால வரலாறுகளையும் அறிஞர் பலர் திருத்தி அமைக்க முடிந்தது.

ஆறாவதாக, ஐரோப்பாவில் தேசிய உணர்வு வளர்வதற்கு மறுமலர்ச்சி ஊக்கமளித்தது. கிரேக்க வரலாற்றையும், ரோமானிய வரலாற்றையும் கற்றதன்மூலமாகவும் கிரேக்கர்கள் தங்களது உரிமையைக் காத்துக்கொள்வதற்காகப் பாரசீகப் படையெடுப்பாளர்களுக்கெதிராக எப்படியெல்லாம் தீரத்துடன் போராடி வந்தனர் என்பதையும் ஹனிபாலின் (Hannibal's) படையெடுப்பை ரோமானியர் எவ்வாறு முறியடித்தனர் என்பதையும் அறிந்ததன் விளைவாகவும் ஐரோப்பாவில் பல நாடுகளில் சுதந்திர உணர்வும் உரிமை வேட்கையும் பெருகலாயின.

இறுதியாக, சமயச் சீர்திருத்த இயக்கம் எழுவதற்கு மறுமலர்ச்சிக் காரணமாக இருந்தது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தேசிய மொழிகளில் உருவாக்கப்பட்ட விவிலிய நூல், பாமர மக்களுக்குக் கிடைக்க வழிபிறந்தது. அவர்களும் விவிலியத்தை ஆர்வமுடன் படிக்கத் தொடங்கினர். அதில் அனுமதிக்கப்படாத சமயக் கருத்தையோ அல்லது சடங்கையோ அவர்கள் எதிர்க்கத் தொடங்கினர். எனவே, பதினாறாம் நூற்றாண்டில் வரவிருந்த சமயச் சீர்திருத்த இயக்கத்திற்காக மக்களின் மனத்தைத் தயார்செய்தது மறுமலர்ச்சி என்பது தெளிவு.

# அத்தியாயம் 2

# நிலவியல் கண்டுபிடிப்புகள்

இடைக்காலத்தில் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே இடையறாத வாணிபத் தொடர்பு இருந்துவந்தது. சீனத்துப் பட்டும், கிழக்கிந்தியத் தீவுகளின் வாசனைப் பொருள்களும் ஐரோப்பியச் சந்தைகளை நிரப்பிவந்தன. இந்தியா, சீனா, கதே (Cathey) எனப் பொதுவாக வழங்கப்பெற்ற பிற கிழக்கு நாடுகள் ஆகியவற்றிலிருந்து வரும் அவசியப் பொருள்களையும், நாகரிகப் பொருள்களையும் ஐரோப்பிய மக்கள் ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தனர். இந்நிலையில், பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **மார்க்கோபோலோ** என்னும் வெனீஸ் நகர வணிகர் வெளிநாடுகளைப் பற்றிய சுவையான கதைகளைக் கேட்டு அந்நாடுகளைச் சென்று காணும் ஆர்வம் மேலிட்டவராய், 1270-ல் கிழக்கு நாடுகளுக்குப் பயணமானார். மத்தியதரைக் கடல், பாரசீகம், பாமீர் பீடபூமி, கோபி பாலைவனம் ஆகிய பகுதிகளின் வழியாகச் சீனாவைச் சென்றடைந்த அவர், சீனப் பேரரசர் **குப்ளாய் கானின்** (Kublai Khan) வரவேற்பைப் பெற்று அவரது அரசவையில் தங்கியிருந்தார். சீனாவிலும், திபேத், வடக்கு பர்மா, பாண்டிய நாடு முதலானவற்றிலும் சுற்றுப் பயணம் செய்துவிட்டுப் பதினேழு ஆண்டுகள் கழித்துத் தமது தாயகம் திரும்பினார். அவர் தமது பயண அனுபவங்களைத் தொகுத்து **மார்க்கோபோலோவின் பயணங்கள்** என்னும் நூலை வெளியிட்டார். இந்த நூல் **கொலம்பஸ்** (Columbus) போன்ற பிற்கால நிலவியல் கண்டுபிடிப்பாளர்களிடையே ஆர்வத்தை வளர்த்ததுடன், புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க ஒரு தூண்டு கோலாகவும் அமைந்தது.

இடைக்காலத்தில் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்குமிடையே யான வாணிபம் முக்கியமாக நான்கு வழித்தடங்கள் மூலமாக நடைபெற்றுவந்தது. அவற்றில் ஒன்று லண்டனிலிருந்து அலக் சாண்டிரியா, சூயஸ் நில இணைப்பு (Suez Isthmus) மற்றும் செங்கடல் வழியாக இந்தியாவிற்கு வந்தது. மற்றொன்று மார் சேல்சிலிருந்து (Marseilles) அதே வழியாக இந்தியாவை

அடைந்தது. பிறிதொன்று, மார்சேல்சிலிருந்து புறப்பட்டு ஆன்டியாக் (Antioch), அலெப்போ (Aleppo), பாக்தாத், பாரசீக வளைகுடா வழியாக இந்தியாவைத் தொட்டது. நான்காவது, மார்சேல்சிலிருந்து ஆன்டியாக் (Antioch), அலெப்போ (Aleppo), பாக்தாத் ஆகிய நகரங்களைத் தொட்டு மெர்வ் (Merv) வழியாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் சென்றது. இவ்வாறு இடைக்காலத்தில் முக்கிய வழித்தடங்களெல்லாம் மத்தியதரைக்கடல் மற்றும் சூயஸ் வழியாகச் சென்றது குறிப்பிடத்தக்கது.

**(அ) நிலவியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள்**

(1) பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த மறுமலர்ச்சியென்னும் அறிவு சார்ந்த இயக்கம் ஐரோப்பிய மக்களிடையே ஆராய்ச்சி உணர்வை வளர்த்ததால் உலகைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமும், புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதற்கான பயணங்களில் நாட்டமும் அவர்களிடம் மேலோங்கி நின்றது.

(2) மறுமலர்ச்சியின் விளைவாக ஐரோப்பாவில் புத்துணர்வும் புதுவேகமும் நிலவிய நேரத்தில், சீனா, இந்தியா முதலான நாடுகளுக்குச் சென்றுவந்த மார்க்கோபோலோ போன்ற பயணிகள் கிழக்கு நாடுகளின் வற்றாத வளங்களைப் பற்றி எழுதிய குறிப்புகள் ஐரோப்பிய மக்களிடையே ஆர்வத்தை வளர்த்து ஆசைக் கனவுகளைத் தூண்டின.

(3) ஆட்டோமான் துருக்கியர் 1453-ல் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றியது நிலவியல் கண்டுபிடிப்புகளுக்கு ஒரு முக்கியக் காரணமாயிற்று. மத்தியதரைக்கடல் சூயஸ் வழியாகச் சென்று ஐரோப்பாவையும், ஆசியாவையும் இணைத்த பழம்பெரும் வழித்தடங்கள் எல்லாம் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிய துருக்கியரின் வசமாயின. துருக்கியர் வாணிபப் பொருள்கள்மீது அதிகவரி விதித்ததுடன் வணிகர்களைத் துன்புறுத்தவும் தொடங்கினர். இதனால் பழைய வழித்தடங்கள் அடைபட்டுப்போயின. அதன் விளைவாகக் கிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்குப் பொருள்கள் தாராளமாக வருவது தடைப்பட்டது. துன்புற்ற மக்கள் கூக்குரலிட்டனர். பழைய வழித்தடங்கள் அடைபட்டுப்போனதால் பொன் கொழிக்கும் கிழக்கு நாடுகளை (Golden East) அடைவதற்குப் புது மார்க்கங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பலர் இறங்கினர்.

(4) மாலுமிகளுக்குப் பயன்படும் திசைகாட்டும் கருவி (Mariner's Compass) கண்டுபிடிக்கப்பட்டது மற்றுமொரு காரண

மாக அமைந்தது. திசைகாட்டும் கருவியின் உதவியால் மாலுமிகள் உலகின் எப்பாகத்திற்கும், எந்த நேரத்திலும் திசை அறிந்து தங்களுடைய கப்பல்களைக் கொண்டு செல்ல முடிந்ததால் நெடுந் தொலைவுப் பயணங்களை மேற்கொள்வது சாத்தியமாயிற்று.

(5) ஐரோப்பியப் பெருவாணிகரும் ஹென்றி, இசபெல்லா போன்ற ஆட்சியாளர்களும் மாலுமிகளுக்கு அளித்த உதவியும் ஊக்கமும் நிலவியல் கண்டுபிடிப்புகளுக்குப் பெருமளவில் பொறுப்பாயின.

(6) உலகம் தட்டையானது என்ற தப்பெண்ணம் இடைக் காலத்து மக்களிடையே உலவியது. ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் உருண்டை வடிவமானது என்று அவர்கள் நினைக்கலாயினர். இந்த நினைப்பு அவர்களைச் செயல்படத் தூண்டியது. உலகம் உருண்டையானது என்றால் மேற்குத் திசையில் பயணம் செய்து சீனாவையும் இந்தியாவையும் அடைய முடியுமென்ற நம்பிக்கை வளர்ந்தது.

**(ஆ) முக்கிய நிலவியல் கண்டுபிடிப்புகள்**

புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் போர்ச்சுகலும் ஸ்பெயினும் முன்னோடிகளாக விளங்கின. **நாவாய் அரசர் ஹென்றி** எனப் பெயர்பெற்ற (Henry the Navigator, 1394—1460) மன்னரின் தலைமையில் போர்ச்சுகல் துணிகரக் கடல் பிரயாணங்களில் தலைமையிடத்தைப் பெற்றுத் திகழ்ந்தது. பொன்னும் பொருளும் கொடுத்துப் பல ஆய்வுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்தார் மன்னர் ஹென்றி. அதன் பயனாக மேற்கு ஆப்பிரிக்கக் கரையோரம் அமைந்த மெடிரா (Madeira), அஸோரஸ் (Azores) போன்ற தீவுகளும் 'வெர்டி முனையும்' (Cape Verdie) வேறு பல இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆப்பிரிக்காவின் மேற்கு முனையான வெர்டி முனை கண்டுபிடிக்கப்பட்டதால் ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு இந்தியாவை அடையமுடியும் என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் வளர்ந்தது.

நாவாய் அரசர் ஹென்றி 1460ஆம் ஆண்டில் காலமானார். எனினும் அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஆர்வமும் உணர்ச்சியும் கடற்பயணிகளிடையே நீங்காது நிலைத்திருந்தன. அன்னாரது வாரிசான **இரண்டாம் ஜான் மன்னர்** (John II) காலத்தில் **பர்த்தலோமியோ டயஸ்** (Bartholomew Diaz) என்னும் போர்ச்சுகீசிய மாலுமி ஆப்பிரிக்கக் கரையோரமாகப் பயணம் செய்து 1488-ல் அக்கண்டத்தின் தென்கோடியை அடைந்தார். அங்கே அவர் கடுமையான புயல் காற்றுகளால் தாக்கப்பட்


தால் அவ்விடத்திற்குப் **புயல் முனை** (Cape of Storms) என்று பெயரிட்டார். ஆனால், கிழக்கே போவதற்கான புதிய வழித் தடம் கண்டுபிடிப்பதற்கான நல்ல நம்பிக்கையை அது வளர்த்த தால் ஜான் மன்னர் அதனை, **நன்னம்பிக்கை முனை** (Cape of Good Hope) என்றே வழங்கலானார்.

இதற்கிடையில், மார்க்கோபோலோவின் சுவைமிக்க பயண நூலில் மனத்தைப் பறிகொடுத்த ஜெனிவா நகரத்து மாலுமி யான **கிறிஸ்தபர் கொலம்பஸ்** (Christopher Columbus) துணி கரத் திட்டமொன்றை உருவாக்கினார். மேற்கு நோக்கிப் பயணம் செய்து கிழக்கு நாடுகளை அடைவதே அத்திட்டமாகும். இதனை நிறைவேற்றும் வகையில் கடற் பயணத்திற்குப் பொருள் கொடுத்து உதவக்கூடிய ஆதரவாளரைத் தேடி அலைந்த கொலம் பஸ், பல இன்னல்களுக்கிடையே இறுதியாக ஸ்பெயின் நாட்டு மன்னர் **பர்டினாண்டு, அரசி இசபெல்லா** ஆகியோரின் நல்லாதர வைப் பெற்றார். அவர்கள் அளித்த ஆதரவைக்கொண்டு 1492-ல் மேற்கு நோக்கிப் பயணமானார். அட்லாண்டிக் பெருங் கடலில் மூன்று மாதப் பயணத்திற்குப் பின்னர் அவர் புதிய நிலம் ஒன்றைக் கண்டார். அது இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று எண்ணியதால் வடஅமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையேயான தீவுகளுக்கு மேற்கிந்தியத் தீவு கள் (West Indies) எனப் பெயர் சூட்டினார். சிறிது காலத் திற்குப் பிறகுதான் பிளாரன்ஸ் நகர மாலுமியான (Florentine Navigator) **அமெரிக்கோ வெஸ்பூஸி** (Amerigo Vespucci) என் பார் கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தியா அன்று என்றும் அது ஒரு புதிய கண்டமே என்றும் அறிவித்தார். அதனால் புதிய கண்டம் **அமெரிக்கா** எனப் பெயர்பெற்றது. இவ்வாறு கொலம் பஸ் தம்மை அறியாமலே 'புதிய உலக'த்தைக் கண்டுபிடித்தார். புதிய உலகத்தைக் கண்டுபிடித்தோம் என்பது அவருக்கே தெரி யாது என்றாலும் அவரது அரிய கண்டுபிடிப்பு உலகப்புகழ் பெற்ற தாகும்.

போர்ச்சுகீசிய மாலுமியான பர்த்தலோமியோ **டயஸ்** 1488-ல் ஆப்பிரிக்காவின் தென்கோடியைக் கண்டுபிடித்தார் என்பதை ஏற்கெனவே அறிந்தோம். 1498-ல் போர்ச்சுகீசிய தள பதியான **வாஸ்கோட காமா** (Vasco-da-Gama) நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு, இந்துமாக்கடலைக் கடந்து, இந்தி யாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள **கோழிக்கோட்டை** (Kozhi-code) அடைந்தார். இந்த நிகழ்ச்சியும் ஓர் அரிய சாதனையாகும். இங்ஙனம், கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தார்

என்றால் வாஸ்கோடகாமா பழைய உலகத்திற்குப் புதிய வழி யைக் கண்டுபிடித்தார்.

இத்தகைய கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து 1494-ல் **போப்பாண்டவர் ஆறாம் அலெக்சாந்தர் (Pope Alexander VI)** ஓர் ஆணையை (Papal Bull) வெளியிட்டார். அதில் இப்பூவுலகை இரு செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்து, மேற்கு மண்டலத்தில் வாணிபம் செய்யவும் நாடுகளைப் பிடிக்கவும் ஸ்பெயினுக்கே உரிமை உண்டு எனவும், கிழக்கு மண்டலத்தில் அந்த உரிமை போர்ச்சுகலுக்கே உரியது என்றும் அறிவித்தார். செல்வாக்கு மண்டலங்களில் வாணிபம் செய்யவோ, குடியேற்றங்களை அமைக்கவோ, முற்படும் மற்ற நாட்டினரைக் 'கள்ள வாணிபக் காரர்' (Interlopers) என்றும் தகாத முறையில் தலையிடு வோர் என்றும் கண்டித்தார். கிழக்கு மண்டலம் போர்ச்சுகலிடம் இருந்ததால் நன்னம்பிக்கை முனை வழித்தடத்தைப் பயன்படுத்தி இந்தியாவிற்கு வரமுடியாமல் ஸ்பெயின் தவித்தது. அதனால் தன்வசமிருந்த மேற்கு மண்டலத்தின் வழியாகக் கிழக்கு நாடு களுக்குச் செல்லும் வழியைக் கண்டுபிடிக்க ஸ்பெயின் முயன்று வந்தது. இத்தருணத்தில் போர்ச்சீசிய மாலுமியான **மெகல்லன் (Magellan)** என்பவர் இந்தியாவிற்கு மேற்குமுக வழித்தடத் தைக் கண்டுபிடிப்பதற்காக ஸ்பானிய அரசர் **ஐந்தாம் சார்ல ஸிடம் (Charles V)** அனுமதி கோரினார். இவ்வாறு மெகல்லன் 1519-ல் ஐந்து கப்பல்களுடன் தென்மேற்குத் திசையில் பயண மானார். அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து தென் அமெரிக் காவின் தென்கோடியைச் சுற்றிக்கொண்டு புதிய பெருங்கடலில் புகுந்தார். அவர் முதன் முறையாகச் சுற்றிச் சென்ற தென் அமெரிக்காவின் தென்கோடி முனை அவரது பெயரால், இன்றளவும் **மெகல்லன் நீர்ச்சந்திப்பு (Straits of Magellan)** என்றே வழங்கப்படுகின்றது. சூறாவளிக் காற்றுகள் நிறைந்த அட்லாண்டிக் பெருங்கடலைப்போல் இல்லாமல் புதிய கடல் அமைதியாக இருந்ததால் அதற்கு மெகல்லன் **பஸிபிக் பெருங் கடல் (Pacific Ocean)** எனப் பெயரிட்டார். அதன்பிறகு பஸிபிக் பெருங்கடலில் பயணம் செய்து **பிலிப்பைன் (Philippines)** என்றழைக்கப்படும் தீவுக் கூட்டத்தைக் கண்டுபிடித்தார். ஸ்பானிய மன்னர் ஐந்தாம் சார்லஸின் புதல்வரான இரண்டாம் பிலிப்பின் நினைவாக அத்தீவுக் கூட்டம் 'பிலிப்பைன் தீவுகள்' என்று பெயர்பெற்றன. செயற்கரிய செயலைச் செய்த மெகல்லன் பிலிப்பைனில் கொல்லப்பட்டார். அவர் கொண்டுவந்த ஐந்து கப்பல்களில் **விக்டோரியா (Victoria)** என்னும் கப்பல் மட்டும் உலகைச் சுற்றிக்கொண்டு ஸ்பெயினுக்குத் திரும்பி




படம் 2.1 நிலவியல் கண்டுபிடிப்புகள்

வந்தது. தமது உலகப் பயணத்தை மெகல்லன் முடிக்க முடியவில்லை யென்றாலும், அவரது கப்பல்களில் ஒன்று உலகைச் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்திற்கே வந்துசேர்ந்ததால் அவர் 'உலகம் சுற்றிய மாலுமி' எனப் புகழ்ந்து பாராட்டப்படுகின்றார்.

கொலம்பஸ், வாஸ்கோ ட காமா, மெகல்லன் ஆகியோரின் நிலவியல் கண்டுபிடிப்புகள் முக்கியமானவை யென்றாலும் வேறு சில கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்துள்ளன. **ஜான் காபெட்** (John Cabot) என்பவர் 1497-லும் அவரது மகன் **செபாஸ்டியன் காபெட்** (Sebastian Cabot) 1509-லும் இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் (Bristol) துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வடஅமெரிக்காவின் வட பகுதிகளான நியூபவுண்ட்லாந்தையும் (New Foundland) லாப்ரடாரையும் (Labrador) கண்டுபிடிப்பதில் வெற்றிபெற்றனர். போர்ச்சுகீசிய மாலுமியான **கப்ரால்** (Cabral) என்பவர் சூறாவளிக் காற்றால் அலைக்கழிக்கப்பட்டு 1500-ல் தென் அமெரிக்காவின் வட பகுதியைச் சென்றடைந்தார். அதுவே பிரேசில் எனப் பெயர்பெற்றது. பிரஞ்சு மாலுமியான **ஜேக் கார்ட்டர்** 1534-ல் அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்து செயின்ட் லாரன்ஸ் வளைகுடாவைக் (Gulf of St. Lawrence) கண்டுபிடித்தார்.

**(இ) நிலவியல் கண்டுபிடிப்புகளால் ஏற்பட்ட பயன்கள்**

முதலாவதாக, பூமியின் வடிவம் பற்றிய இடைக்காலக் கருத்துகளை இக்கண்டுபிடிப்புகள் அடியோடு மாற்றிவிட்டன. உலகைச் சுற்றிவந்த மெகல்லனின் சாதனையால் பூமி உருண்டையானது என்பது ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டதால், பூமி தட்டை வடிவமானது என்ற இடைக்காலத்தவரின் நம்பிக்கை தவிடுபொடியாகியது.

இரண்டாவதாக, இப்புதிய கண்டுபிடிப்புகளின் விளைவாக, ஐரோப்பாவின் வாணிபம் கடற்கரையோர வாணிபமாக (Thalassic), இருந்தது பெருங்கடல் கடந்த வாணிபமாக (Oceanic) மாறியது. அதுவரையில் வாணிபத்தின் நெடுவழியாக மத்தியதரைக்கடல் இருந்த நிலை மாறி, அட்லாண்டிக் போன்ற பெருங்கடல்கள் வாணிபப் பொருள்கள் செல்லும் பெருவழிகளாக விளங்கத் தொடங்கின. நிலவியல் கண்டுபிடிப்புகளுக்கு முன்னால், இடைக்காலத்தில் வாணிப வழித்தடங்கள் வெனிசு, ஜினோவா, அலெக்சாண்டிரியா போன்ற மத்தியதரைக்கடல் நகரங்களின் மூலமாகச் சென்ற காரணத்தால் அந்நகரங்கள் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தன. ஆனால், நிலவியல் கண்டுபிடிப்புகளுக்குப்

பிறகு அவையெல்லாம் வளங்குன்றிப் பொலிவிழந்தன. அவற்றின் இடத்தை அட்லாண்டிக் பெருங்கடல் நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து ஆகியவை பிடித்துக்கொண்டன. இலண்டனும் ஆன்ட்வெர்ப்பும் (Antwerp) வளங்கொழிக்கும் வாணிபக் கேந்திரங்களாயின.

இறுதியாக, நிலவியல் கண்டுபிடிப்புகளால் உலகிலுள்ள பெருங்கடல்களும் புதிய கண்டங்களும் மாலுமிகளுக்கும் வணிகர்களுக்கும் திறந்துவிடப்பட்டன. பல்வேறு நாட்டினரும் இதில் பங்குகொள்ள வாய்ப்பிருந்தது என்றாலும், உண்மையில், அட்லாண்டிக் கடற் கரையில் அமைந்த இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து ஆகிய ஐந்து நாடுகள் மட்டுமே அமெரிக்காவிலும் கிழக்கிலும் தங்களது பேரரசுகளை அமைப்பதில் வெற்றிகண்டன. குடியேற்றங்களைத் தோற்றுவித்து அவற்றின் மூலமாகத் தங்கள் பேரரசினை வளர்த்துக்கொண்டன. புதிய கண்டுபிடிப்புகளால் வாணிபம் புதிய மெருகுடன் வளர்ந்தபோதிலும் ஐரோப்பாவிற்கும் ஏனைய நாடுகளுக்குமிடையே நிலவிய தனிமை முடிவுற்றபோதிலும், ஐரோப்பிய நாகரிகம் வளர்வதற்கும் அது புதிய நிலங்களில் பரவுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டபோதிலும், பேரரசுப் பெருக்க ஆசையால் போட்டிகளும் பொறாமைகளும் பெருகி, தற்காலத்தில் நிகழ்ந்த பெரும் போர்களுக்கு இக்கண்டுபிடிப்புகள் வழிவகுத்தன என்பதை மறக்கமுடியாது.

# அத்தியாயம் 3

# சமயச் சீர்திருத்த இயக்கம்

**முன்னுரை**

பதினாறாம் நூற்றாண்டில் சமய இயக்கமொன்று தலையெடுத்தது. அதன் பெயர் சமயச் சீர்திருத்த இயக்கமாகும். அது ஓர் இரட்டை இயக்கமாகும். போப்பினுடைய (Pope) அதிகாரத்திற்கெதிரான புரட்சியென்பதால் புராட்டஸ்டென்ட் புரட்சி இயக்கமாகவும் (Protestant Revolution) திருச்சபையில் இருந்த சில குறைகளையும் ஊழல்களையும் நீக்கியதால் சீர் திருத்த இயக்கமாகவும் கொள்ளப்படுகின்றது.

**(அ) சமயச் சீர்திருத்த இயக்கத்திற்கான காரணங்கள்**

**(1) தேசிய உணர்வின் எழுச்சி:** இடைக்காலத்தில் கிறிஸ்தவ உலகம் (Christendom) (ஐரோப்பிய கிறிஸ்தவர்கள்) போப்பாண்டவரை (Pope) சமயத் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தது. ஐரோப்பாவில் பல்வேறு நாடுகளின் திருச்சபைகளில் எழுந்த காலியிடங்களைப் போப்பாண்டவரே தமது ஆள்களைக் கொண்டு நிரப்பிவந்தார். ஆனால், பதினாறாம் நூற்றாண்டில் தேசிய அரசுகள் தோன்றியதால் நிலைமை மாறத் தொடங்கியது. பல்வேறு நாடுகளின் திருச்சபைகளில் ஆள்களை நியமனம் செய்யும் உரிமை போப்பாண்டவரிடம் இருப்பது அந்நாடுகளின் உரிமையில் தலையிடுவதாகும் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. மேலும் அந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் ரோமானியத் திருச்சபைக்கு ஆண்டுத் தொகையும் (Annuities) மற்ற உதவித் தொகைகளும் அளிக்க விரும்பவில்லை. இங்ஙனம் பதினாறாம் நூற்றாண்டில் பல நாடுகளில் போப்பாண்டவருக்கு எதிரான உணர்வு, பரவலாக எழுந்தது. அதன் விளைவாக ரோமுடன் மோதல் ஏற்பட்டது.

**(2) திருச்சபையில் இருந்த ஊழல்கள்:** ரோமானியத் திருச்சபையில் ஊழல்கள் மலிந்துவிட்டதால் சீர்திருத்தம் வேண்டுமென்ற குரல் கேட்கத் தொடங்கியது. பதினான்காம்

நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் **ஜான் விக்ளிப்** என்பவர் ரோமானியத் திருச்சபையின் கொள்கைகள் சிலவற்றையும், அதில் ஊடுருவி நின்ற ஊழல்கள் சிலவற்றையும் கண்டித்துப் பேசினார். **லோலார்டு இயக்கத்தையும்** (Lollard Movement) தொடங்கினார். ஆனால், ஆங்கிலப் பாராளுமன்றமும் திருச்சபையும் அவ்வியக்கத்தை நசுக்கிவிட்டன. இருப்பினும் போப்பாண்டவரின் அதிகாரத்தை எதிர்க்க முதல் முதலாக இயக்கமொன்றைக் கண்ட விக்ளிப்பை 'சமயச் சீர்திருத்தத்தின் விடிவெள்ளி' (Morning Star of the Reformation) என அக்கால எழுத்தாளர்கள் அழைக்கலானார்கள். ஜான் விக்ளிப்பை அடுத்து பொஹீமியாவில் (Bohemia) **ஜான் ஹஸ்** போப்பாண்டவருக்கு எதிரான கண்டனக் குரல் எழுப்பினார். அவரும் போப்பாண்டவரின் அதிகாரத்தையும் திருச்சபைக்குள் இருந்த குறைகளையும் கடுமையாகத் தாக்கினார். ஆனால், ஹஸ்ஸினுடைய இயக்கமும் லோலார்டு இயக்கத்தைப் போலவே திருச்சபையினால் ஒடுக்கப்பட்டுவிட்டது.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சில போப்பாண்டவர்கள் கிறிஸ்தவ சமய உன்னதக் கொள்கைகளுக்கு ஏற்ப வாழாததால் விக்ளிப், ஹஸ் போன்றவர்கள் உருவாக்கிய எதிர்ப்பியக்கம் அந்த நூற்றாண்டில் ஆக்கம்பெற்று வளர்ந்தது.

மடாலயங்களின் நிலையும் தாழ்ந்திருந்தது. ஆரம்ப காலத்தில் மடங்களெல்லாம் சமயத்தின், பண்பாட்டின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. மடத்துத் துறவிகளெல்லாம் தூய துறவற வாழ்க்கை நடத்தினர். தங்கள் ஈகைத் திறத்தால் ஏழை எளியவரைக் காத்துவந்தனர். கல்வியைப் பரப்பினர். ஆனால் காலப்போக்கில் அவர்களிற் பலர் துறவற நெறிமுறைகளைக் கைவிட்டு, சிறுமைப் பகட்டார்வமான வாழ்க்கை நடத்தலாயினர்.

மடாலயங்களைப்போலவே சமய துறவுப் பணி நிலையங்களின் நிலையும் தாழ்ந்திருந்தது. ஆரம்ப காலத்தில் சமயத்திற்காகக் கடுமையாக உழைக்கத் தயாராக இருந்த உண்மையான துறவிகள் பல்வேறு சமயப் பணி நிலையங்களில் சேர்ந்தனர். ஆனால், பதினாறாம் நூற்றாண்டில் அற்பப் பொழுதுபோக்கு வாழ்க்கை நடத்துபவர்களும், அறியாமையும் சோம்பலும் மிகுந்தவர்களும் இந்நிலையங்களில் நிறைந்திருந்தனர்.

இங்ஙனம் சமயத் தலைவர்களிடையேயும் சமய நிறுவனங்களிலும் ஊழல்கள் மலிந்திருந்ததுடன் சில சமயக் கருத்துகளும் சீர்கேடுற்றிருந்தன. முதலில் பாவமன்னிப்புக் கோட்பாட்டைக்

(Indulgences Theory) கவனிக்கலாம். நற்செயலுக்காகத் திருச்சபைக்குக் கொடையோ அல்லது நிதியோ வழங்கினால் தண்டனையிலிருந்து ஆன்மாவிற்கு விடுதலை கிடைக்குமென்று திருச்சபை கூறிவந்தது. ஆனால் அதேசமயத்தில், செய்த பாவத்தை ஒப்புக்கொண்டு அதற்காக மனப்பூர்வமாக வருந்தினால்தான் அத்தகைய விடுதலை கிடைக்கும். ரோம் நகரில் புனித பீட்டர் தேவாலயத்தைக் கட்டுவதற்காக நிதி திரட்டும் பொருட்டு **ஜான் டெட்சல்** (John Tetzel) என்னும் டொமினிகத் துறவி (Dominican Friar) **போப் பத்தாம் லியோ** (Pope Leo X, 1513—1521) காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றார். அப்படிச் சென்றவர் நிறைய நிதி திரட்டும் ஆர்வத்தில் நிதி வழங்குபவர் தங்களது பாவச் செயல்களை ஒப்புக்கொண்டு அவைகளுக்காக மனப்பூர்வமாக வருந்தவேண்டுமென்று வற்புறுத்தவில்லை. பணம் பெறுவதுதான் அவருக்கு முக்கியமாக இருந்தது. அதன் விளைவாக மக்கள் மனத்தில் தவறான எண்ணம் தோன்றத் தொடங்கியது. அதாவது, புனித பீட்டர் தேவாலயம் கட்டுவதற்கு நிதி வழங்கிவிட்டால் செய்த பாவங்களுக்குத் தண்டனையிலிருந்து விடுதலை கிடைத்துவிடும் என்ற எண்ணம் மேலோங்கியது. எனவே, டெட்சல் பாவமன்னிப்புச் சீட்டு விற்பதைப் பல சீரிய உள்ளம் படைத்தவர்கள் கண்டிக்கத் தொடங்கினர். அத்தகையோரது முணுமுணுப்புகளும் கண்டனங்களும் சமயச் சீர்த்திருத்த இயக்கம் தோன்றக் காரணங்களாய் இருந்தன.

இதைப்போலவே, ஆரம்பகாலத்தில் திருத்தொண்டர்களின் (Saints) நினைவுச் சின்னங்களையும் சமயத் தியாகிகளின் (Martyrs) நினைவுச் சின்னங்களையும் கிறிஸ்தவ சமயத்தவர் அனைவரும் மதித்துப் போற்றினர். அத்தகையோரது நினைவுச் சின்னங்கள் தெய்வீகச் சக்திவாய்ந்தவை என மக்கள் நம்பியதால் அவ்வாறு செய்துவந்தனர். ஆனால், காலப்போக்கில் புனித நினைவுச் சின்னம்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு குருமார்கள் பலர் போலியான நினைவுச் சின்னங்களைப் பெருக்கிவிட்டனர். இறுதியாக, திருச்சபையினர் கிறிஸ்தவ சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதைவிடச் சமயச் சடங்குகளிலே அதிகக் கவனம் செலுத்திவந்ததால் மக்களிடையே மதிப்பிழந்து நின்றனர்.

பல நூற்றாண்டுகளாகத் திருச்சபையினர் சட்டத்திலும் நீதிமன்றங்களிலும் சில சலுகைகளை அனுபவித்து வந்தனர். எடுத்துக்காட்டாகக் **குருமார் நலன்** (Benefit of Clergy) என்னும்

சலுகை பன்னெடுங்காலமாய் குருமார்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. அதன்படி கொலைக் குற்றம் செய்த சமயக்குரு திருச்சபை நீதிமன்றத்திற்கே கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார். இதற்கு மாறாகத் திருச்சபையைச் சேராத ஒருவர் செய்த கொலைக் குற்றத்திற்கு மன்னரது நீதிமன்றம் மரண தண்டனை அளித்தது. சட்டத்திற்குமுன் இருந்த இந்த ஏற்றத்தாழ்வைக் கண்டு மக்கள் மனம் புழுங்கினர். அதனால் அவர்கள் திருச்சபையைக் குறை கூறவும் துணிந்தனர்.

**(3) மறுமலர்ச்சி:** திருச்சபை மீதான அதிருப்தி வளர்ந்து வந்த நிலையில், மறுமலர்ச்சி இயக்கம் வந்தது. அது, மக்களின் பகுத்தாய்வு உணர்வைத் தூண்டியதுடன், பழைய அமைப்புகள், விதிமுறைகள், சடங்குகள் ஆகியவற்றிற்குக் கட்டுப்படுவதை மறுத்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் மறை நூலான விவிலியம் தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றதால் மக்கள் அவற்றைத் தாமாகவே படித்துத் தனியாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திறமை கொண்டனர். மேலும், இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சீர்திருத்தக்காரர்களும் ஜெர்மனியில் மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் திருச்சபையில் காணப்பட்ட குறைபாடுகளை அம்பலப்படுத்தினர். இவ்வாறாக, போப்பாண்டவரின் அதிகாரமும் பழைய மரபுகளும் வீழ்ச்சியுற மறுமலர்ச்சி வழிவகுத்தது.

## (ஆ) ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் போக்கு

திருச்சபைக்கு எதிரான உணர்ச்சி வளர்ந்துவந்த நிலையில் சாக்சனில் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் சமயத் தத்துவத் துறைப் பேராசிரியரான (Professor of Theology) மார்ட்டின் லூதர் முன்னணியில் நின்றார். விவிலிய நூலைப் படித்து ஆராய்ந்து வந்தபோது திருச்சபையில் மலிந்துவிட்ட ஊழல்களைக் களையவேண்டுமென்ற உறுதி அவரிடம் நாளுக்கு நாள் வளர்ந்துவந்தது. எனவே 1517-ல் டெட்சல், சாக்சனிக்கு வந்து, பாவமன்னிப்புப் பற்றித் தவறான பிரசாரம் செய்தபோது மார்ட்டின் அவரை எதிர்க்க முற்பட்டார். ரோமில் புனித பீட்டர் தேவாலயத்தைக் கட்டுவதற்குப் பொருள் கொடுத்தால் பாவங்களெல்லாம் பறந்தோடிவிடும் என்று டெட்சல் பிரசாரம் செய்ததைக் கேட்டு மனம் வெதும்பிய மார்ட்டின் லூதர், செய்த பாவத்தை உணர்ந்து மனம் வருந்தினாலன்றி நிதி கொடுப்பதன் மூலமாகப் பாவத்திற்குக் கழிவு ஏற்படாது என்று அறிவித்தார். அதனுடன் தமது கருத்துகளை விளக்கிப்

பல கட்டுரைகளை எழுதி விட்டன்பர்க்கிலுள்ள திருச்சபைக் கதவில் ஒட்டி வைத்தார்.

அச்சு இயந்திரத்தின் உதவியால் லூதரின் கருத்துகள் ஐரோப்பா முழுவதும் பரவின. அதைக் கண்டு போப்பாண்டவர் அச்சங்கொண்டார். சமய எதிர்ப்புக் கொள்கைகளைப் பரப்ப வேண்டாமென்று மார்ட்டின் லூதருக்கு ஆணையிடவும் துணிந்தார். ஆனால், லூதரோ தாம் கொண்ட கருத்துகளை விடாப்பிடியாகப் பற்றி நின்றார். மேலும், அவர் போப்பின் அதிகாரத்தை மறுத்ததுடன் திருச்சபையில் சில அடிப்படை கருத்துகளையும் கண்டிக்கத் தொடங்கினார். அதனால் போப்பாண்டவர் அவரைச் சமயத்திலிருந்து விலக்கி வைத்தார் **(excommunication)**. ஆனால், போப்பாண்டவர் அனுப்பிய சமய விலக்க ஆணையை லூதர் தீயிட்டுக் கொளுத்தினார். லூதரின் இத்துணிகரச் செயலால் 'வானளாவிய, பார்தழுவிய' போராட்டப் புயல் கிளம்பியது.

ஜெர்மனி முழுவதும் கிளர்ந்தெழுந்ததைக் கண்ட போப்பாண்டவர் பத்தாம் லியோ, பேரரசர் **ஐந்தாம் சார்லஸின்** உதவியை நாடினார். ஜெர்மனியில் எழுந்த சமய எதிர்ப்பை அடியோடு அழிக்குமாறும், லூதரைத் தண்டிக்குமாறும் அவரைக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க, மன்னர்களும் பிரபுக்களும், திருச்சபை குருமாரும் நிறைந்த **வோர்ம்ஸ் கூட்டத்திற்கு** **(Diet of Worms)** வருமாறு லூதருக்கு அழைப்பு விடப்பட்டது. 1521-ல் அங்குச் சென்ற லூதர் தமது கொள்கையினின்று பின் வாங்க மறுத்துவிட்டார். எனவே, பேரரசை விட்டு வெளியேறும்படி அவருக்கு ஆணையிடப்பட்டது. ஆனால், சாக்சனி நாட்டின் தேர்வாளரான **(Elector of Saxony)** பிரடரிக்கும் **(Frederick)** வேறு பல ஜெர்மானிய அரசர்களும் லூதருக்கு ஆதரவளிக்க முன்வந்ததால் அவர் தொடங்கிய இயக்கம் வலிமையடைந்தது. திருமறையை மக்கள் நன்கு அறிய வேண்டுமென்பதற்காக அதனை மார்டின் ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அதனாலும் அவரது இயக்கம் விரைவாக வளரத் தொடங்கியது.

1546-ல் லூதர் இறந்தபோது, அவர் உருவாக்கிய புராட்டஸ்டெண்ட் சமயம் ஜெர்மனி மட்டுமன்றி இங்கிலாந்து, டென்மார்க், நார்வே, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும், பிரான்ஸின் சில பகுதிகளிலும் பரவியிருந்தது. இருப்பினும், சில காரணங்களால் அது மேலும் வளர்வது தடைபட்டது. புராட்டஸ்டெண்டுகளிடையே எழுந்த பிரிவினைகளாலும், கத்

தோலிக்கத் திருச்சபை (Catholic Church) டிரண்ட் கவுன்சில் சபை புகுத்திய சீர்திருத்தங்களாலும், சமயத் தீர்ப்பு மன்றங்களின் தீவிர நடவடிக்கைகளாலும், இயேசு சபையின் எழுச்சியாலும் கத்தோலிக்கச் சமயத்திற்கு ஸ்பெயினின் பேராதரவு கிடைத்ததாலும் புராட்டஸ்டென்ட் சமயம் தடையின்றி வளர்ச்சியடைய முடியவில்லை.

அக்காலத்தில் புராட்டஸ்டென்டுகள் மூன்று பெரும் பிரிவினராகப் பிரிந்து நின்றனர். **லூதரின்** பிரிவினர் (Lutherens), **சுவிங்லி பிரிவினர்** (Zwinglians), **கால்வினிஸ்டுகள்** (Calvinists) எனப் பெயர் பெற்ற அப்பிரிவினர்கள் ஒருவரோடொருவர் மோதியவண்ணமிருந்தனர்.

வடக்கு ஜெர்மனி, டென்மார்க், நார்வே, சுவீடன் போன்ற பகுதிகளில் லூதரின் சமயம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து அதிகம் மாறுபடாதது லூதரின் சமயப் பிரிவு என்பது கவனிக்கத்தக்கது.

சுவிங்லி பிரிவை அமைத்தவர் **ஹுல்ட்ரிச் சுவிங்லி** (Huldrich Zwingli, *1484—1531*) என்பவராவார். இயேசுநாதரின் இறுதி விருந்துக் கோட்பாட்டிலும் திருச்சபை அமைப்பு முறையிலும் சுவிங்லி பிரிவினர் லூதரின் பிரிவினரிடமிருந்து மாறுபட்டிருந்தனர். அவர்களது கோட்பாடுகளைத் தெற்கு ஜெர்மனியிலும் சுவிட்சர்லாந்திலும் மக்கள் பெரிதும் வரவேற்றனர்.

**ஜான் கால்வின்** என்பவரைப் பின்பற்றியவர்களே கால்வினிஸ்டுகள் என அழைக்கப்பட்டனர். பிரான்சில் சமயக் கொடுமையிலிருந்து தப்புவதற்காக ஜெனீவாவிற்கு ஓடிய கால்வின், திருச்சபை ஆட்சிமுறையில் ஜனநாயகத்தை ஆதரித்தார். அவரது தொண்டர்கள் அரசியல் உரிமைகளைக் காக்கப் போராடியதன் மூலம் வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றனர். பிரான்சில் வாழ்ந்த **யூக்னோக்கள்** (Huguenots), ஸ்காட்லாந்தில் வாழ்ந்த **ஒப்பந்தக்காரர்கள்** (Scotch Covenanters), இங்கிலாந்தைச் சேர்ந்த **பியூரிட்டன்கள்** (Puritans), **யாத்திரிகர் தந்தையர்** (Pilgrim Fathers) ஆகியோரும் டச்சுக்காரர்களும் கால்வினிஸ்டுகளேயாவர். இத்தகைய பிரிவுகள் இருந்ததால், ஒருங்கிணைந்திருந்த கத்தோலிக்கத் திருச்சபைக்கு முன்னால் புராட்டஸ்டென்ட் திருச்சபை வலுக்குன்றியிருந்ததில் வியப்பில்லை.

### (இ) சமயச் சீர்திருத்த மறுப்பியக்கம் (Counter Reformation) அல்லது கத்தோலிக்கச் சீர்திருத்த இயக்கம்

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது, லூதரின் காலத்தில் வாழ்ந்த போப்பாண்டவர்கள் சமயப் பணிகளைவிட இத்தாலிய நாட்டு அரசியலிலும் மறுமலர்ச்சியிலும் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்தனர். ஆனால், புராட்டஸ்டென்ட் சமயம் வேகமாக வளர்ந்து வந்ததால் போப்பாண்டவர்கள் சமயப் பணிகளைத் தொடர்ந்து புறக்கணிக்க முடியாத சூழ்நிலை உருவாகியது. எனவே, பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த போப்பாண்டவர்கள் மாறுபட்ட குண நலன்களைக் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். கத்தோலிக்கச் சமயத்தைப் பலப்படுத்தவும், புராட்டஸ்டென்ட் நாடுகளை மீண்டும் கத்தோலிக்கச் சமயத்திற்குக் கொண்டுவரவும் வேண்டுமானால் திருச்சபையில் புகுந்துவிட்ட ஊழல்களைக் களைவது இன்றியமையாதது என்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, திருச்சபையிலுள்ள குறைகளை நீக்கி, கத்தோலிக்கச் சமயம் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழச் செய்வதற்கான இயக்கம் ஒன்றைக் கண்டனர். அதுவே **சமயச் சீர்திருத்த மறுப்பியக்கம்** அல்லது **கத்தோலிக்கச் சீர்திருத்த இயக்கம்** அல்லது **கத்தோலிக்கப் புத்துயிர்ப்பு இயக்கம்** என்றழைக்கப்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்ட சீர்திருத்தங்களாவன:

**(1) டிரண்ட் கவுன்சில் சபை (Council of Trent):** கத்தோலிக்கத் திருச்சபையைச் சீர்திருத்தும் பொறுப்பு டிரண்ட் கவுன்சில் என்ற ஒரு சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1542 முதல் 1566வரையில் கால் நூற்றாண்டுக் காலத்தில் பலமுறை கூடிய அச்சபை பல முடிவுகளை எடுத்தது. விவிலியத்தைப் போலவே திருச்சபை மரபுகளும் அதிகாரபூர்வமானவை என அச்சபை அறிவித்ததுடன், போப்பாண்டவரின் தெய்வீகத் தன்மையையும் வலியுறுத்தியது. சமய நம்பிக்கையே எல்லாம் என்ற லூதரின் கோட்பாட்டைக் கண்டித்தது. ஆனால், அதே சமயத்தில் பாதிரிமார்களும், பிஷப்புகளும் கிறிஸ்தவத் தூய்மையையும் ஒழுக்கத்தையும் விளக்கிக் காட்டும் வகையில் வாழ்ந்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ வேண்டுமென்பதை வலியுறுத்தியது.

● **கார்லோ பொரோமியோ (Carlo Borromeo)** என்னும் இத்தாலிய சீர்திருத்தக்காரரின் வாழ்க்கை டிரண்ட் சபையின் சீர்திருத்த உணர்ச்சியை விளக்குவதாக அமைந்திருந்தது. மிலானின் ஆர்ச் பிஷப்பான (Arch Bishop) இவருடைய ஒப்பற்ற வாழ்க்

கையால் உருவாகிய சூழ்நிலையில் புராட்டஸ்டென்ட் சமய வளர்ச்சிக் குன்றத் தொடங்கியது. பல புராட்டஸ்டென்ட் நாடுகள் கத்தோலிக்கச் சமயத்தைத் தழுவலாயின.

**(2) இயேசு சங்கம் (Society of Jesus) :** கத்தோலிக்கச் சமய மீட்புப் பணியில் சிறந்த தொண்டாற்றிய மற்றோர் அமைப்பு இயேசு சங்கமாகும். இக்னேஷியஸ் லயோலா (Ignatius Loyola) என்னும் ஸ்பானிய செல்வந்தர் அச்சபையை நிறுவினார். ஆரம்ப காலத்தில் போர்வீரராகஇருந்த அவர் போர்க்களத்தில் முடமாகிய பின்னர், சமயத்தில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினார். உண்மையான சமயப்பற்று மிக்கவராகத் திகழ்ந்த அவர் இயேசு சங்கத்தை நிறுவினார். அச்சங்கத்தின் அங்கத்தினர்கள் எளிமையான தூய வாழ்க்கை வாழ்வதாகவும், விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதாகவும், போப்பாண்டவரிடம் தனிப்பற்றுறுதி கொள்வதாகவும் வாக்குறுதி எடுத்துக்கொண்டனர். ஜெசூட்டுகள் (Jesuits) எனப் பெயர்பெற்ற அவர்கள் போதனை மூலமாகவும் பிரசாரத்தின் மூலமாகவும் கத்தோலிக்கச் சமயத்தை நிலைநாட்ட முற்பட்டனர். சிறந்த கல்வியாளர்களாகச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றனர் இயேசு சங்கத்தினர். கத்தோலிக்கச் சமயத்திற்கு ஆதரவான எதிர்விளைவு தோன்றுவதற்கு அவர்கள் தலைசிறந்த முறையில் பணியாற்றியதை மனத்தில் கொண்டுதான் மெக்காலே (Macaulay) என்னும் பேரறிஞர் 'ஜெசூட்டுகளின் வரலாறு, கத்தோலிக்கச் சமய மீட்சியின் வரலாறு ஆகும்' எனக் கூறியுள்ளார். புராட்டஸ்டென்ட் வழியில் சென்ற தெற்கு ஜெர்மனி, போலந்து, பொஹீமியா, ஹங்கேரி போன்ற நாடுகளில் ஜெசூட்டுகளின் அரும்பணி காரணமாகக் கத்தோலிக்கச் சமயம் மீண்டும் தழைத்தோங்கியது.

**(3) புனித சமயத் தீர்ப்பு மன்றம் (Holy Inquisition) :** சமய எதிரிகளை அதாவது, கத்தோலிக்கச் சமயத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களை, தண்டிப்பதற்கெனச் சமயத் தீர்ப்பு மன்றம் நிறுவப்பட்டது. கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிரான நடவடிக்கைகளை அம்மன்றம் கொடுமையான தண்டனைகள் அளித்து ஒடுக்க முயன்றது. மரண தண்டனை, உயிரோடு வைத்துக் கொளுத்துதல், சொத்துகளைப் பறிமுதல் செய்தல் ஆகிய தண்டனைகளைச் சமய விரோதிகளுக்கு வழக்கமாக அளித்தது. இத்தண்டனைகளை நிறைவேற்றுவதற்கு அந்தந்த கத்தோலிக்க நாடுகளில் இருந்த அரசாங்கங்கள் உதவி செய்தன. இங்ஙனம் தெற்கு ஐரோப்பாவில் புராட்டஸ்டென்ட் சீர்திருத்த இயக்கம் பரவுவதைத் தடுக்கவல்ல ஒரு பெரும் சக்தியாக சீர்

திருத்த மறுப்பியக்கத்தின் தூணாக விளங்கியது அச் சமயத் தீர்ப்பு மன்றம்.

**(ஈ) இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம்**

**(1) எட்டாம் ஹென்றியின் காலத்தில் :** மத சீர்திருத்த இயக்கம் ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் தலைமையில் தோன்றியபோது, ஆங்கில மன்னரான எட்டாம் ஹென்றி அதை ஆதரிக்கவில்லை. 1521-ல் அவர் போப் பாண்டவரை ஆதரித்து நூல் ஒன்றை எழுதி **சமயத்தின் காவலர் (Defender of the Faith)** என்ற பட்டப் பெயரைப் போப்பாண்டவரிடமிருந்து பெற்றார். 1521-ல் 'சமயக் காவலர்' என்ற பட்டம் பெற்ற ஒருவர் 1534-ல் 'ரோமுடன் தொடர்பைத் துண்டித்த மாட்சிமை மிகுந்த மன்னரானது' வியப்பிற்குரிய தாகத் தோன்றும். ஆனால், எட்டாம் ஹென்றியின் மணமுறிவுப் பிரச்சினையே இந்த மாற்றத்திற்குக் காரணமாகும்.

இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கத்திற்கு மணமுறிவு பிரச்சினையே உடனடி காரணமாகும். அது தலையாய காரணமாகாது. ஏனெனில், சமயச் சீர்திருத்தங்களை ஏற்க மக்களின் மனம் ஆயத்த நிலையில் இல்லை என்றால், போப்பிற் கெதிராக ஹென்றியின் நடவடிக்கைகள் வெற்றி பெற்றிருக்க முடியாது. மணமுறிவுப் பிரச்சினையின் விளைவாக, நாட்டு மன்னரே சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கி, அதை நெறிப்படுத்தியதால், அவ்வியக்கம் விரைந்து வெற்றி நடை போட முடிந்தது.

அரகான் நாட்டைச் சேர்ந்த **காதரைனை (Catherine of Aragon)** எட்டாம் ஹென்றி மணந்துகொண்டார். 18 ஆண்டுகள் மண வாழ்க்கையில் அவர்களுக்குப் பெண் குழந்தையான மேரி மட்டுமே பிறந்தார். தமக்குப்பின் பட்டத்திற்கு பிள்ளை வரவேண்டுமென்று பெரிதும் விரும்பினார் ஹென்றி. இதற்கிடையில் **ஆன் போலின் (Anne Boleyn)** என்னும் அரசவை மாதை அவர் காதலித்தார். காதரைன் தமது தமையனின் விதவை என்பது அன்னாருடன் 18 ஆண்டுகள் மண வாழ்க்கை வாழ்ந்த பிறகு ஹென்றியின் மனத்தை உறுத்தியது விந்தையே! அக்காரணத்தைக் காட்டித்தான் தமது முதல் மனைவி காதரைனை மண முறிவு செய்ய போப்பாண்டவர் **கிளமெண்டிடம் (Pope Clement)** ஹென்றி அனுமதி கோரினார். போப் அனுமதி மறுத்தார். அதனால் கோபங்கொண்ட ஹென்றி பாராளுமன்றத்தைக் கூட்டி 1534-ல் **முதன்மைச் சட்டத்தை (Act of**

Supremacy) நிறைவேற்றினார். அதன்படி ஹென்றி இங்கிலாந்தின் திருச்சபையின் தலைவரானார். போப்பாண்டவரின் சமயத் தொடர்பு நீக்கப்பட்டது.


திருச்சபையின் தலைவராகிவிட்ட ஹென்றி மடாலயங்களை அழித்து, அவற்றின் சொத்துகளை தம்முடைய நண்பர்களுக்கு விற்றும், நாட்டின் கப்பற்படையைப் பெருக்குவதற்கும் உபயோகப்படுத்தினார். போப்பாண்டவரின் அதிகாரத்தை அவர் நீக்கியபோதிலும், கத்தோலிக்கக் கோட்பாடுகளை மாற்ற ஹென்றி விரும்பவில்லை. அவர் **ஆறு விதிகள் சட்டத்தை** (Statute of Six Articles) நிறைவேற்றி கத்தோலிக்கக் கொள்கைகளை வலியுறுத்தினார். எனவே, "போப்பாண்டவர் இல்லாத கத்தோலிக்கச் சமயமே" அவரது கொள்கையாக இருந்தது என்பர்.

**(2) ஹென்றிக்குப்பின் வந்தவர்கள் காலத்தில்:** எட்டாம் ஹென்றிக்குபின் ஆட்சி செய்த அவரது மைந்தர் **ஆறாம் எட்வர்ட்** *(1547—1553)* காலத்தில் சமயச் சீர்திருத்தக் கோட்பாடுகளின் பக்கம் திரும்பியது. புராட்டஸ்டென்ட் கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் காதரைன் மகளான **மேரி டியூடர்** *(1533—1558)* காலத்தில் கத்தோலிக்கச் சமயம் மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவருக்குப்பின், எட்டாம் ஹென்றி, ஆன் போலின் ஆகியோரின் திருமகளான **எலிசபெத்** அரசியானார். இவர் காலத்தில் *(1558—1603)* அமைக்கப்பட்ட திருச்சபைத் திட்டம் தற்கால ஆங்கில அமைப்பிலும், மக்களின் உணர்ச்சியிலும், நிரந்தரமான செல்வாக்குப் பெற்று திகழ்கின்றது.

எலிசபெத் அரசியின் திருச்சபைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: (1) நாட்டின் அரசரோ, அரசியோ தான் திருச்சபையின் தலைவர். (2) மத குருமார்கள் விவாகம் செய்துகொள்ளலாம். (3) வழிபாடுகளும் பிரசாரங்களும் ஆங்கில மொழியிலேயே நடத்தவேண்டும். (4) திருச்சபை ஆட்சி முறை காண்டர்பரி, யார்க் ஆர்ச் பிஷப்புகளாலும், மற்றும் பிஷப்புகளும் கொண்ட நிர்வாக முறையாக இருக்கவேண்டும். எனவே, **ஆங்கிலிகன் திருச்சபை** அமைப்பு **எபிஸ்கோபஸி** (Episcopacy) என்றழைக்கப்படுகிறது.

**(உ) ஸ்காட்லாந்தில் சமயச் சீர்திருத்தம்**

இங்கிலாந்தில் மன்னர் எடுத்த முயற்சியால் சமயச் சீர்திருத்தம் ஏற்பட்டது. ஆனால், ஸ்காட்லாந்தில் மன்னருக்கு எதிராக மக்கள் எடுத்த முயற்சியின் விளைவே சமயச் சீர்திருத்த




படம் 3.1 சமயச் சீர்திருத்தத்தின்பின்னர் ஐரோப்பா (கி.பி. 1610)

மாகும். ஸ்காட்லாந்து மக்கள் **கால்வினிய புராட்டஸ்டென்ட்** சமயத்தை ஏற்றுக் கொண்டனர். ஸ்காட்லாந்து சமயச் சீர் திருத்தத்திற்குக் காரணமாக இருந்த **ஜான்நாக்ஸூம், ஆண்ட்ரூ மெல் வில்லும் பிரஸ்பிடீரிய முன் மாதிரியில்** (Presbyterian model) திருச்சபையை அமைத்தார். அது ஜனநாயக முறையில் உரு வாக்கப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரஸ்பீடர் என வழங்கப்பட்ட பெரியவர்களும் குருமார்களும், திருச்சபை யின் நிர்வாகத்தினை ஏற்று நடத்தினர். ஸ்காட்லாந்து சமயச் சீர்திருத்தம் அமைத்த திருச்சபை அரசின் கட்டுப்பாட்டி லிருந்தும், போப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை பெற்றத் திருச்சபையாகத் திகழ்ந்தது.

**(ஊ) சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்**

(1) இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வட ஜெர்மனி, டென் மார்க், நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளும் ஸ்விட்சர்லாந்து; நெதர்லாந்து ஆகியவற்றின் சில பகுதிகளும் ரோமானிய திருச் சபையிலிருந்து வெளியேறின. மேலே குறிப்பிட்ட நாடுகளில் தேசியத் திருச்சபைகள் அமைந்ததால் கிறிஸ்தவ உலகின் ஒற்றுமை குலைந்தது. புராட்ட்ஸ்டென்ட் நாடுகளில் வாழ்ந்த மக்கள், சமயத்துறையில் தன்னாட்சி பெற்று வாழ வழிபிறந்தது.

(2) சமயச் சீர்திருத்தத்தின் விளைவாக விவிலிய நூலைக் கற்பது முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதனால் பெருவாரி யான மக்கள் போப்பாண்டவரின் ஆணைகளும் திருச்சபை கவுன் சில்களின் முடிவுகளும் தெய்வீக சக்தி வாய்ந்தவை என நம்ப மறுத்தனர்.

(3) ஆரம்ப காலத்தில் சமயச் சீர்திருத்தத்தின் விளை வாகச் சமய ஒறுப்பும் கொடுமைகளும் நடந்தபோதிலும் காலப் போக்கில் சமயப் பொறையை (toleration) அது நிலைநாட்டி யுள்ளது. சமயச் செய்திகளில் திருச்சபைக்கு வெளியே முடி வெடுக்கும் உரிமையைச் சமயச் சீர்திருத்த இயக்கம் கற்றுக் கொடுத்ததை ஏற்கெனவே கண்டோம். அத்தகைய உண்மையும் அறிவியல் வளர்ச்சி, பொதுவான சிந்தனைத் திறத்தின் வளர்ச்சி ஆகியவற்றுடன் சேர்ந்து சமயப் பொறை வளரப் பெரிதும் உதவியது.

அத்தியாயம் 4

# தேசிய அரசுகளின் எழுச்சி

## இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின்

வலிமை வாய்ந்த ஒருமுகப்படுத்தப்பெற்ற அரசாங்கங்களுடன் கூடிய தேசிய அரசுகளின் எழுச்சி, இடைக்காலத்தின் பிற்பகுதியில் காணக்கூடிய மிக முக்கியமான அரசியல் நிகழ்ச்சியாகும். மாறுபட்ட, தனியியல்புடைய பண்பாடுகளைக் கொண்ட பல நாடுகள் உரிமைகொண்ட அரசுகளாக மாறவேண்டுமென்று விரும்பின. பொதுமொழி, பொதுச் சமயம், பொதுவான பொருளாதார வேட்கை ஆகியவைகளின் அடிப்படையில் வளர்ந்த ஒரு வகையான ஒற்றுமை உணர்வு தேசிய அரசுகள் எழக் காரணமாக அமைந்தது எனலாம். ஆரம்ப கட்டத்தில் தேசிய அரசுகள் முடி மன்னர்களை மையமாக வைத்து எழுந்தன. பிற்காலத்தில்தான் அவை பெருமளவில் மக்களைச் சார்ந்தவையாயின. நிலமானிய முறை அடிப்படையில் அமைந்த அரசாங்கத் திட்டம் சீர்குலைந்ததும், இடைக்காலத்துப் பெருநகரங்கள் உரிமை இழந்து நின்றதும், மன்னர்களின் வலிமை பெருகியதும், தேசிய அரசுகளின் எழுச்சி இயக்கம் வளர்ந்ததும் சமகால நடப்புகளாகும்.

பல நாடுகளில் வலிமை வாய்ந்த அரசுகள் தோன்றுவதற்குப் பல சூழ்நிலைகள் துணைபுரிந்தன. ஜெர்மனி, இத்தாலி போன்ற சில நாடுகளில் பொதுவான உணர்வுகளும் வேட்கைகளும் வளர்ந்தபோதிலும், தேசிய மொழிகளும் இலக்கியங்களும் வளர்ந்து வந்தபோதிலும் தேசிய ஒற்றுமைக்கு எதிரான சக்திகள், வலிமைமிக்கு விளங்கியதால் இந்நாடுகளில் நவீனகாலம் தொடங்கிய பிறகு நெடுங்காலத்திற்குத் தேசிய அரசுகளைக் காணமுடியவில்லை. ஆனால் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளில் தேசிய ஒற்றுமைக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகியிருந்ததன் விளைவாக அந்நாடுகளில் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலேயே வலிமை மிக்க தேசிய முடியரசுகள் நிலைநாட்டப்பட்டன.

சக்திவாய்ந்த தேசிய முடியரசுகள் எழுந்ததன் விளைவாக மக்களுடைய அரசியல் உரிமைகள் நசுக்கப்பட்டன; தேசிய ஒற்றுமை நனவாகியது; ஆனால் மக்களின் உரிமைகள் கானல் நீராயின; மன்னரின் அதிகாரம் வளர்ந்தது; ஆனால் பிரபுக்களும் பொதுமக்களும் அதிகாரம் இழந்தனர். ஆயினும், காலப் போக்கில் இந்நாடுகளில் மக்கள் உரிமைக் குரலெழுப்பிப் போராட்டம் நடத்தி மன்னர்களைவிட வலிமை மிக்கவர்களாக விளங்க முற்பட்டனர். இங்ஙனம் சர்வாதிகார முடியாட்சியிலிருந்து அரசியல் சட்ட அடிப்படையிலான, பிரதிநிதித்துவ அரசாங்கம் தலையெடுத்தது.

**(அ) இங்கிலாந்து**

ஏற்கெனவே மக்கள் நிறைந்த இங்கிலாந்தில் ரோமர்கள், சாக்சானியர் (Saxons), டேனர் (Danes), நார்மானியர் ஆகிய பல்வேறு இனத்தவர் ஒருவர்பின் ஒருவராகப் படையெடுத்து வந்தனர். இவ்வாறு படையெடுத்து வந்து பல்வேறு இன மக்கள் இங்கிலாந்தில் தங்கி வாழ முற்பட்டதால் அந்நாடு பெரும் பலனடைந்தது. ஆங்கிலப் பண்பு உருவாவதற்கு இந்தப் பல் வேறு இன மக்களின் பலதிறப்பட்ட குணநலன்கள் அடிப்படையாய் அமைந்தன.

நார்மானியர் இங்கிலாந்தை வென்று தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியதைத் தொடர்ந்து அங்கே நிலமானிய முறையின் அடிப்படையில் சமுதாயமும் அரசாங்கமும் உருவாக்கப்பட்டன. ஆனால் இடைக்காலத்தில் எழுந்த குழப்பங்களுக்கும் கொந்தளிப்பிற்கும் நிலமானிய முறையே காரணமாக அமைந்துவிட்டதை நாம் அறிகின்றோம். இருப்பினும், இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் நார்மானிய மன்னர்களும் ஆரம்பகால ஆஞ்சுவிய (Anjivin) அரசர்களும் உறுதியான கொள்கையைக் கடைப் பிடித்துப் பிரபுக்களின் அதிகாரத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி ஆட்சி புரிந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் நார்மண்டியை இழந்துவிட்டதால் இங்கிலாந்தில் தங்கி வாழ்ந்த நார்மானியப் பிரபுக்கள் தேசியப் பற்றுக்கொண்டு செல்வர்களாக வாழ்ந்திருந் தனர்; ஜான் மன்னரின் (King John) அத்துமீறிய அதிகாரத்தை எதிர்த்துப் போராட ஆங்கிலப் பிரபுக்களுடன் அவர்களும் இணைந்து செயலாற்றினர். இவ்விதமாகவே 1215-ல் பேருரிமைப் பத்திரம் (Magna Carta) வழங்க ஆங்கில நாட்டு மன்னர் வற்புறுத்தப்பட்டார். அதன் பின்னர் மூன்று எட்வர்டு மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைப் பிரபுக்களும் மக்களின் பிரதிநிதிகளும் பாராளு


மன்றங்களில் கூடி விவாதித்துவந்தனர். ஆங்கில மக்கள் ஒரு தேசிய இனமாயினர் என்பது தெளிவாகியது. மூன்றாம் எட்வர்டு காலப் பாராளுமன்றங்கள் நிறைவேற்றிய போப்பிற் கெதிரான சட்டங்களும், **ஜான் விக்ளிப்** (John Wycliffe) தலைமையிலான **லோலார்டு இயக்கமும்** (Lollard Movement), ஆங்கில மொழியின் வளர்ச்சியும், ஆங்கில இலக்கியத்தின் முன்னேற்றமும் இதனைப் பறை சாற்றின. அது வரையில் இங்கிலாந்தில் இலக்கியங்கள் இலத்தீன் மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் பெருமளவில் இயற்றப்பட்டன. பதினான்காம் நூற்றாண்டில் ஆங்கிலக் கவிதையின் தந்தை என வருணிக்கப்படும் **ஜியாப்ரே சாசர்** (Geoffrey Chaucer, *1340—1400*) **காண்டர்பரி கதைகள்** (Canterbury Tales) என்னும் நூலை ஆங்கில மொழியில் எழுதினார். இதே காலத்தைச் சேர்ந்த **வில்லியம் லாங்லேண்ட்** (William Langland) என்பார், **பியர்ஸ் பிளவ்மான்** என்னும் நூலில் கருங் கொள்ளை நோயைத் (Black Death) தொடர்ந்து மக்கள் அனுபவித்த சமுதாயப் பொருளாதார இன்னல்களைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பதினான்காம் நூற்றாண்டில் தான் ஜான் விக்ளிப் விவிலிய நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்நூல் ஆங்கில உரைநடை இலக்கியத்தின் முன்னோடியாக அமைந்தது. கவிதை இலக்கியத்திற்கு சாசரின் 'காண்டர்பரிக் கதைகள்' ஆற்றிய பணியை உரைநடை இலக்கியத்திற்கு விக்ளிப்பின் ஆங்கில விவிலிய நூல் செய்யவந்தது எனக் கூறுவர்.

இங்கிலாந்தில் வலிமைவாய்ந்த தேசிய அரசு தோன்றுவதற்கு **ரோஜாப்பூப் போர்கள்** (Wars of Roses) எனப் பெயர் பெற்ற அரசகுலப் போட்டிப் போர் பேருதவியாக வந்தது. இந்த உள்நாட்டுப் போரில் பல பிரபுக்கள் உயிரிழந்தனர்; உயிர் தப்பிய சிலரும் மன்னரின் அதிகாரத்தை எதிர்த்து நிற்கும் சக்தியற்றிருந்தனர். நிலமானிய முறை அடிப்படையிலான அரசியல் திட்டம் ஆட்டங்கண்டு விட்டது. உள்நாட்டுப் போரில் அதிகம் பங்குகொள்ளாத பாமர மக்கள் அந்தப் பயங்கரப் போரின் விளைவாகப் பெருந்துன்பமடைந்தனர். மேலும் நாட்டில் அமைதியும், ஒழுங்கும், அரசியல் உறுதிப்பாடும் நிலவ வேண்டுமானால் வலிமை வாய்ந்த அரசாங்கம் தேவை என்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, பிரபுக்களை நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அடங்கியவர்களாகச் செய்ய மன்னர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை ஆதரிக்க முன்வந்தனர். அவ்வாறு செய்வதால் தங்களுடைய சுதந்திரமும் உரிமைகளிற் சிலவும் பாதிக்கப்படும் என்று உணர்ந்தபோதிலும் பாமரமக்கள் அரசரின் அதிகாரத்தை வளர்க்க உதவினர்.

இங்ஙனம், டியூடர்களின் (Tudors) ஆட்சியில் இங்கிலாந்து வலிமைமிக்க தேசிய அரசாக உருவெடுத்தது. இடைக் காலத்தில் நீண்ட காலம் நடைபெற்ற அன்னியப் போர் ஒன்றினாலும் (நூற்றாண்டுப் போர்), பயங்கரமான உள்நாட்டுப் போர் ஒன்றினாலும் (ரோஜாப்பூப் போர்கள்) சீரழிந்த இங்கிலாந்தில் டியூடர் குலத்து முதல் மன்னர் **ஏழாம் ஹென்றி** (Henry VII) அமைதியை மீட்டார். அதன் பின்னர் சமயச் சீர்திருத்த வடிவில் சமயத் துறையிலும் தேசிய உணர்வு வெளிப்பட்டது. அதன் விளைவாக **எட்டாம் ஹென்றி** (Henry VIII) அரசின் தலைவராகவும் திருச்சபையின் தலைவராகவும் விளங்க முடிந்தது. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் தீவுகளின்மீது தனது செல்வாக்கை நிலை நாட்டுவதிலும், வாணிபத்தையும் தொழில்களையும் வளர்ப்பதிலும், கடல் கடந்த குடியேற்றங்களை அமைப்பதிலும் இங்கிலாந்து வெற்றி கண்டது. டியூடர் மன்னர்களின் ஆட்சியில் ஆங்கில மொழியும் ஆங்கில நாகரிகமும் மலர்ந்து மணம் பரப்பின. இவற்றினாலெல்லாம் டியூடர் மன்னர்கள் பிரிட்டிஷ் தேசிய உணர்வின் உருவம் எனப் புகழ்ந்து பேசப்படுகின்றனர்.

**(ஆ) பிரான்சு**

இவ்விதமாக இங்கிலாந்து ஒற்றுமையுற்று வளர்ந்த நிலையில் ஐரோப்பாவில் மற்ற நாடுகளும் அதே பாதையில் சென்றுகொண்டிருந்தன. நிலமானிய முறையால் இங்கிலாந்தை விடப் பெருந்துன்பத்திற்குள்ளாகி இருந்தது பிரான்சு நாடு. பிரெஞ்சு மன்னரின் உட்குடியான (Vassal) **பர்கண்டி கோமகன்** (Duke of Burgandy) தனது வலிமையைப் பெருக்கிக்கொண்டு பிரெஞ்சு தேசிய ஒற்றுமைக்கு உலைவைக்கும் வகையில் நடந்துகொண்டார். 1420-ல் அவர் ஆங்கில மன்னருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். **டிராய்ஸ் உடன்படிக்கையின்** மூலமாக (Treaty of Troyes) ஆங்கில மன்னர் பிரான்சின் மன்னராவதற்கு பர்கண்டி கோமகன் வழிவகுத்தார். ரோஜாப்பூப் போர்கள்மூலமாக இங்கிலாந்து வலுவுள்ள தேசிய அரசாக வளர்ந்ததைப்போல, நூற்றாண்டுப் போரின் விளைவாக பிரான்சு ஒற்றுமை கொண்டது. **கிரேசி** (Crecy), **பாய்டியர்ஸ்** (Poietiers), **அகின் கோர்ட்** (Agin Court) ஆகிய போர்க்களங்களில் வீரத்திலும் தீரத்திலும் சிறந்த பலர் மாண்டனர். மேலும் இக்களங்களில் பிரெஞ்சு நிலமானியப் பிரபுக்களின் அதிகாரம் அழிக்கப்பட்டது. அதேசமயத்தில் **ஜோன் ஆப் ஆர்க்** (Joan of Arc) எனும் வீர மங்கை பிரெஞ்சு மக்களிடையே தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் தூண்டி அவர்களை விழிப்படையச்




படம் 4.1 16ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பிய தேசிய நாடுகள்

செய்தார். இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டு **பதினோறாம் லூயி** (Louis XI, *1461—1483*) வலிமை வாய்ந்த பிரெஞ்சு முடியாட்சிக்கு அடிகோலினார். பெரும் அரசியல் வித்தகரான பதினோறாம் லூயி மன்னர், தந்திரத்திலும் ஏமாற்று வேலையிலும் **யுலிசசை** (Ulysses) மிஞ்சினார். ''ஏமாற்றுக் கலையை அறியாதவன் ஆட்சிக் கலையை அறியாதவனாவான்'' என்பதை அடிப்படை வாதமாகக் கொண்ட அவரது காலத்தில் தான் பர்கண்டியின் கோமகன் **சார்லசு த போல்டு** (Charles the Bold) என்பார் பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையே உள்ள பகுதியில் அரசு ஒன்றை உருவாக்க முயன்று வந்தார். சார்லஸின் முயற்சிகள் நிறைவேறாவண்ணம் லூயி மன்னர் தடுத்துவிட்டார். பர்கண்டியின் கோமகனுடன் போர் புரிந்ததுடன் அவருக்கு எதிராகச் சூழ்ச்சிகளும் செய்தார். அக்கோமகன் இறந்ததும் அவரது நாட்டின் பெரும் பகுதியைப் பிரெஞ்சு அரசுடன் இணைத்துக் கொண்டார். மேலும் **புரோவென்சு** (Provence), **ரூசில்லன்** (Roussillon), **செர்டக்னே** (Cerdagne) முதலான முக்கியமான தெற்குப் பகுதிகளையும் லூயி தமது அரசுடன் இணைத்து **பிரன்னீஸ் மலையை** (Pyrenees) பிரான்சின் தெற்கு எல்லையாகக் கொண்டார்.

பதினோறாம் லூயியின் புதல்வரும், அவரது வாரிசுமான எட்டாம் சார்லஸ் *(1483—1498)* பிரிட்டனின் கோமகள் **ஆன்** (Anne) என்னும் நல்லாளை மணந்ததன்மூலம் பெரும் நிலப் பரப்பைத் தமது நேரடி ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். இவ்வாறு, பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பிரான்ஸ் தனது தற்கால எல்லையைக் கொண்டதுடன் பெரும் நிலப்பரப்பை ஆளுதற்கு வலிமை வாய்ந்த தேசிய அரசாங்கத்தையும் பெற்றுத் திகழ்ந்தது.

## (இ) ஸ்பெயின்

*1479*ஆம் ஆண்டு வரையில் ஸ்பெயின் என்ற நாடு ஒன்று இல்லை. ஐபீரியத் தீபகற்பத்தில் **போர்ச்சுகல், காஸ்டைல், அரகான், கிரானடா** என்ற நான்கு அரசுகளே இருந்துவந்தன. இறுதியாகக் குறிப்பிடப்பெற்ற கிரானடா **மூர்களின்** (Moors) வசம் இருந்தது. முதல் மூன்று நாடுகளின் மன்னர்கள் கிரானடாவில் இருந்த முஸ்லீம்களுடன் தொடர்ந்து போரிட்டு வந்தனர் ஆயினும் தங்களுக்குள்ளே இருந்த ஒற்றுமையின்மையால் அவர்களால் மூர்களை ஸ்பெயினிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. ஆனால், *1449*ஆம் ஆண்டில் அரகானின் மன்னர் **பர்டினாண்டுக்கும்** காஸ்டைலின் இளவரசி **இசபெல்லா** (Isabella)

விற்குமிடையே திருமணம் நடைபெற்றதால் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இணைந்தன. அப்போது இவ்விரு நாடுகளின் ஒருங்கிணைந்த சக்தியால் தெற்கிலிருந்த மூர்களின் அரசை அழிக்கும் முயற்சி எழுந்தது. மூர்களும் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் ஒவ்வோர் அங்குல நிலத்திற்கும் இறுதிவரை போராடினர். இறுதியில் கிரானடா சரணடைய வேண்டியதாயிற்று. அங்கே எண்ணூறு ஆண்டுகளாக இருந்த முஸ்லீம்களின் ஆட்சி மறைந்தது. இந்த வெற்றியால் ஸ்பெயினில் ஒரு தேசிய அரசு ஏற்பட்டது மட்டுமல்லாமல் ஐரோப்பாவிலே அந்நாடு முதன்மை இடத்தைப் பெறமுடிந்தது.

**மற்ற ஐரோப்பிய நாடுகள்**

இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் நிகழ்ந்ததைப்போல ஜெர்மனியிலும் இத்தாலியிலும் மக்கள் ஒன்றுபட்டு வலிமையான தேசிய இனத்தை உருவாக்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் ஜெர்மனியும் இத்தாலியும் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருந்து பல்வேறு பகுதிகளாகச் சிதறிக்கிடந்தன.

ஐரோப்பாவின் கிழக்கில் 1453ஆம் ஆண்டில் கான்ஸ்டான்டிநோபிளைக் (Constantinople) கைப்பற்றிய **ஆட்டோமேன் துருக்கியர்** (Ottoman Turks) பால்கன் தீபகற்பத்தில் (Balkan Peninsula) தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள். ஆனால், ஹங்கேரி நாட்டுப் போர்வீரர்களும், ஸ்பெயின் மற்றும் வெனிஸ் நகரத்துக் கடற்படை வீரர்களும் துருக்கியருக்கெதிராகப் போரிட்டு வந்தபோதிலும், தென் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அவர்களை வெளியேற்ற முடியவில்லை.


ரஷ்யா தொடர்ந்து நெடுந்துயிலில் ஆழ்ந்திருந்தது. ஆனால், ரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்குமிடையே இருந்த போலந்து (Poland) நாட்டு மன்னர்கள் துருக்கியரின் முன்னேற்றத்தைத் தடை செய்வதில் முக்கியப் பங்கேற்றனர். இங்ஙனம், இங்கிலாந்து, ஸ்பெயின் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் தேசிய இன உணர்வும் உரிமை வேட்கையும் நிரம்பி வழியும் நாடுகளாயின. இடைக்காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த 'பொது ஐரோப்பிய நலன்' என்னும் கருத்து மறையலாயிற்று. அதற்கு மாறாக ஐரோப்பாக் கண்டத்தில் விளங்கிய வலிமைமிக்க முடியரசுகளிடையே தீவிரமான வெல்திறப் போட்டி எழுந்தது. **சக்தி சமநிலைக் கொள்கை** (Balance of Power) அந்நாடுகளை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

அத்தியாயம் 5

# அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எழுச்சியும் வளர்ச்சியும்

## (அ) முன்னுரை

ஆதிகாலத்தில் அமெரிக்கக் கண்டங்களில் வாழ்ந்த மக்கள் செந்நிறம் கொண்டவர்களாகவும், உடல் வலிமையும் வீரமும் கொண்டவர்களாகவும் இருந்தனர். அத்தகைய ஆதிமனிதர்களை ஐரோப்பிய நாட்டினர் 'இந்தியர்கள்' என அழைத்தனர். மனித இனத்தின் வளம்மிகுந்த மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்காகவே ஆண்டவன் இப்பூவுலகைப் படைத்திருப்பதாக அவர்கள் நம்பினார்கள் விருந்தோம்புதலைத் தலையாய கடமையெனச் செவ்விந்தியர்கள் கருதி வந்தனர். அத்தகு குணம் மிகவும் கொண்டிருந்த அவர்கள், ஐரோப்பியர்கள் தங்களது நாட்டில் முதன்முதலாக நுழைந்தபோது, அவர்களை இருகரம் நீட்டி வரவேற்று, விருந்தளித்து, தங்க இடமும் அளித்து மகிழ்ந்தனர். ஆனால், ஐரோப்பிய வெள்ளையரின் எண்ணிக்கை பெருகப் பெருக, அவர்கள் அமெரிக்கச் செவ்விந்தியர்களின் விளை நிலங்களை வலிந்து எடுத்துக் கொண்டனர். வெள்ளையர்கள் தங்களது குடியேற்றங்களையும் நிறுவ ஆரம்பித்தனர். ஸ்பானியரும் போர்ச்சுக்கீசியரும் மத்திய, தென் அமெரிக்கப் பகுதிகளில் தங்களது குடியேற்றங்களை நிறுவி, தங்களது பேரரசினை அமெரிக்காவிலும் பரப்பினர். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் வட அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவினர். ஆங்கிலேயர் பதின்மூன்று குடியேற்றங்களை நிறுவினர். அந்தப் பதின்மூன்று குடியேற்றங்களும் அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்தன. மாபெரும் மிசிசிபி-மிசோரி நதிகள் பாய்ந்து வளங் கொழிக்கச் செய்யும் சமவெளிப் பகுதியிலும் பிரெஞ்சுக்காரர் குடியேற்றத்தினை அமைத்தனர். அப்பகுதி 'லூசியானா' எனப்பட்டது. கானடாவும் பிரெஞ்சுக்காரர்களின் குடியேற்றமானது.




**படம் 5.1. அமெரிக்க சுதந்திரப் போரும் ஐக்கிய நாடுகள் விரிவாதலும்**

**(ஆ) அமெரிக்கச் சுதந்திரப் போர் (1776 — 1783)**

**(1) காரணங்கள்:** ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரிடையே ஏற்பட்ட வர்த்தகப் போட்டி போருக்குக் காரணமாக அமைந்து விட்டது. ஐரோப்பாவில் ஏற்பட்ட **ஏழாண்டுப் போரின் (1756—1763)** விளைவாக அமெரிக்காவில் இங்கிலாந்தின் ஆதிக்கம் பெருகியது. இங்கிலாந்து பிரெஞ்சுக்காரரிடமிருந்த கானடாவையும் வென்று, தனது மாபெரும் பேரரசுடன் இணைத்துக் கொண்டுவிட்டது. அதனால் பிரெஞ்சுக்காரரின் படையெடுப்பு பயம் நீங்கப்பெற்ற ஆங்கிலேயர், தங்களது குடியேற்றப் பகுதிகளில் மிகுதியான கட்டுப்பாட்டினையும் புதிய வரிகளையும் விதித்தனர். அத்தகைய புதிய கட்டுப்பாடுகளை அமெரிக்கக் குடியேற்றங்கள் மீறியபோது கடுமையான அடக்குமுறையினை ஆங்கிலேயர் கையாண்டனர். அவ்வித அடக்கு முறைகளை எதிர்த்து, விடுதலைபெறக் குடியேற்றங்கள் முயன்றன. அதன் விளைவாகத் தோன்றியதே அமெரிக்கச் சுதந்திரப் போராகும்.

1776ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தாங்கள் சுதந்திரம் அடைந்து விட்டதாக அறிவிப்புச் செய்தன. அமெரிக்கப் புரட்சி வெடித்தது. அத்தகைய புரட்சிப் புயல் எழுவதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் தோன்றியிருந்த தேசிய உணர்வு, நாட்டுப்பற்று ஆகியவைகள் அட்லாண்டிக் மாகடலைக் கடந்து அமெரிக்கக் குடியேற்றங்களில் நுழைந்து, அம்மக்களிடையே தேசிய உணர்வினைத் தட்டியெழுப்பியது. அத்தகைய தேசிய உணர்வு அமெரிக்கர்களிடையே தோன்றுவதற்கு இங்கிலாந்தின் அளவிற்கு மீறிய ஆதிக்கக் கொள்கையும் ஒரு காரணமாகும். ஐரோப்பிய அரசுகளின் கட்டுப்பாடுகளையும், உரிமை மறுப்புச் சட்டங்களையும் வெறுத்து, தங்களது உரிமைகளையும், சுதந்திர உணர்வினையும் காத்துக்கொள்ள, தாய் நாட்டை விட்டே கடல் கடந்து ஓடிவந்து, குடியேற்றங்களை நிறுவியவர்களே, அமெரிக்கர்களின் ஐரோப்பிய மூதாதையர்களாவர். அத்தகைய வீரம் செறிந்த, உரிமை வேட்கை மிகுந்த ஐரோப்பியர்கள் கடல் கடந்து சென்று, குடியேற்றங்களை உருவாக்கி, செல்வம் கொழிக்க வாழ்ந்தனர். அத்தகைய குடியேற்றங்களின் மக்கள் தொகை பெருகியது; வளமும் உயர்ந்தது. அதுகாறும் அவர்களை அச்சுறுத்தி வந்த 'பிரெஞ்சுப் பயமும்' நீங்கியது. என்வே, தங்களது பாதுகாப்பிற்காக, ஆங்கிலேயர்களின் படை வலிமையை நாடிநிற்கும் இழிந்த தன்மையும் மறைந்தது. அச்சம் நீங்கிய, செல்வவளம் கொழிக்கும் நாட்டினராக, அமெரிக்கக் குடியேற்றங்களின் மக்கள்

தங்களது நிலையை உணர்ந்தனர். ஆங்கிலப் பாராளுமன்றம் தனது உரிமைகளுக்காக அரசனுடன் நடத்திய நீண்ட போராட்டத்தின் வரலாற்றினைப் படித்த குடியேற்றத்தினர், உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தும் எண்ணம் கொண்டனர். அரசியல் தத்துவ வித்தகர்களான **லாக், சிட்னி, ஹாரிங்டன், வால்டேர்** (Locke, Sydney, Harrington, Voltaire) போன்றோரின் அரசியல் தத்துவங்களைப் படிக்கும் பேறுபெற்ற குடியேற்றத்தினர் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றனர். ஐரோப்பியச் சிந்தனையாளர்கள், அமெரிக்கர்களின் உரிமை வேட்கையினைத் தட்டியெழுப்பினர். அத்தகைய எழுச்சிபெற்ற மக்களைப் புரட்சியில் இறங்கச் செய்ய, உடனடியான காரணம் தேவைப்பட்டது. அக்காரணத்தையும் ஆங்கில அரசே அவர்களுக்கு அளித்துவிட்டது. இங்கிலாந்தின் புதிய வரிவிதிப்புக் கொள்கையே அமெரிக்கப் புரட்சி வெடிப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்டது. அமெரிக்கக் குடியேற்றங்களின் பாதுகாப்பிற்காக இங்கிலாந்து செலவிட்ட தொகையை ஈடு செய்யும் வகையிலும், தங்கள் நாட்டின் பொருளாதார வளப்பத்தினைப் பெருக்கும் வகையிலும், மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் ஆங்கில அரசு, புதிய வர்த்தகக் கட்டுப்பாடுகளையும், கூடுதல் வரிகளையும் அமெரிக்க மக்கள் மீது திணித்தது. குடியேற்றங்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளில் மிகவும் முக்கியமானது 1765-ல் செய்தித்தாள்கள், இதர ஆவணங்கள்மீது விதிக்கப்பட்ட பத்திர முத்திரைச் சட்ட (Stamp Act) மாகும். இதை மக்கள் பெரிதும் வெறுத்தனர். குடியேற்றங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிராத ஆங்கிலப் பாராளுமன்றம் அவைகளின் மீது புதிய வரிகளை விதிக்கக்கூடாது என அமெரிக்கர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதன் விளைவாக எழுந்ததுதான் **பிரதிநிதித்துவம் இல்லையேல் வரிவிதியேல்** என்ற முழக்கமாகும். அம்முழக்கம் பதின்மூன்று குடியேற்றங்களிலும் விண்ணதிர ஒலித்தது. ஆங்கிலேயரின் ஆட்சிக்கு ஆபத்து நெருங்கியது.

அத்தகு எழுச்சியின் விளைவாக ஏற்பட்ட முதல் நிகழ்ச்சிதான் **பாஸ்டன் தேநீர் விருந்து** (Boston Tea Party). இந்நிகழ்ச்சி அமெரிக்க வரலாற்றில் ஏற்றமிகு இடத்தினைப் பெறுகின்றது. கிழக்கிந்திய வர்த்தகக் குழுவின் கப்பல், தேயிலைப் பெட்டிகளைச் சுமந்துகொண்டு, பாஸ்டன் துறைமுகத்தில் நின்றது. புரட்சியில் இறங்கிய அமெரிக்கர்கள் அக்கப்பலில் நுழைந்து தேயிலைப் பெட்டிகளைக் கடலில் தூக்கியெறிந்தனர். அதுவே 'பாஸ்டன் தேநீர் விருந்து' எனக் குறிப்பிடப்படுகின்ற நிகழ்ச்சியாகும். அத்தகு புரட்சிச் செயல்களைக் கடுமையாகத் தடை

செய்ய எண்ணிய ஆங்கிலக் குடியேற்ற அரசு, பாஸ்டன் துறை முகத்தை மூடிவிட்டது. குடியேற்றங்களுக்கெதிரான கடுமையான அடக்கு முறைகளை அவிழ்த்துவிட்டது.

**(2) நிகழ்ச்சிகள்:** 1774, 1775ஆம் ஆண்டுகளில் குடியேற்றங்கள் ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெப்பர்சன் ஆகியவர்களின் தலைமையில் பிலடெல்பியா நகரில் கூடி, குடியேற்றங்களை அச்சுறுத்தும் பிரச்சினைகளை விவாதித்து, முடிவில் எதிர்ப்பு இயக்கங்களைத் தொடங்குவது என முடிவு செய்தன. தாமஸ் ஜெப்பர்சன் தீட்டிய சிறப்புவாய்ந்த 'சுதந்திரப் பிரகடன சாசனத்தை'க் குடியேற்றங்கள் விரும்பி ஏற்று, 1776ஆம் ஆண்டில் தங்களது சுதந்திரத்தினை உலகிற்கு அறிவித்துவிட்டு, 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்' என்ற புதிய நாட்டினை உருவாக்கின. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திர அறிவிப்பு ஒரு பெரும் போரினைத் தோற்றுவித்தது. அமெரிக்காவின் தீவிரவாதிகள் சுதந்திரப்போரில் முக்கியமான பங்கினை ஏற்றனர். ஸ்பெயினும் பிரான்சும் இங்கிலாந்துமீது தமக்கிருந்த பகைமையினால் பழி தீர்த்துக்கொள்ளும்வண்ணம் அமெரிக்கப் புரட்சியாளர்களுக்கு ஆதரவளித்தது. அமெரிக்காவில் ஆங்கிலேயருக்கும் ஆதரவு சிறிது இருந்தது. போரின் ஆரம்ப நிலையில் அமெரிக்கப் படைகள் தோல்வியையே கண்டன. ஆனால், விரைவில் போரின் போக்கு திசை மாறியது. சாரடோகா என்ற இடத்திலும், யார்க் டவுனிலும் நடந்த மாபெரும் போர்களில் ஆங்கிலப் படை சரணடைந்தது. அமெரிக்கப் புரட்சியாளர்கள் வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கினர். 1783ஆம் ஆண்டு போர் முடிவுற்று, பாரிஸ் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானது. அவ்வொப்பந்தத்தின்படி அமெரிக்கக் குடியேற்றங்களின் சுதந்திரத்தினை இங்கிலாந்து அங்கீகரித்தது. அமெரிக்கக் குடியரசு உருவானது. நெடுந்தூரத்திலிருந்துகொண்டு, அமெரிக்காவில் இங்கிலாந்து போரிட்டது. அதனால் ஏற்பட்ட எல்லையற்ற தொல்லைகள், ஐரோப்பிய நாடுகள், சிறப்பாக பிரான்சு அமெரிக்கர்களுக்கு அளித்த மாபெரும் உதவி, அவையனைத்திற்கும் மேலாகத் தங்களது நாட்டின் இயற்கையமைப்பினை நன்குணர்ந்த அமெரிக்கர்களின் தன்மை, தங்களது நாட்டின் விடுதலைக்காகப் போராடுகின்ற எழுச்சிமிக்க வீர உணர்வு ஆகியவைகளே அமெரிக்கக் குடியேற்றங்களின் வெற்றிக்கான அடிப்படைக் காரணங்களாகும்.

**(3) விளைவுகள்:** சுதந்திரம் பெற்றுவிட்டதன் விளைவாக மிகப் பெரிய அரசியல் பொருளாதார மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1781ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நேசக்

கூட்டாட்சி அரசியல் அமைப்பு எதிர்பார்த்த அளவு வெற்றியுடன் இயங்கவில்லை. எனவே, 1787ஆம் ஆண்டு கூட்டாட்சி அரசியல் அமைப்பு (Federal Constitution) உருவாக்கப்பட்டது. அதன் மூலம் நிர்வாகத்துறை, சட்டமன்றம் (Congress), நீதித் துறை என்ற அரசின் மூன்று துறைகளும் உருவாக்கப்பட்டன. அரசின் அதிகாரங்கள் தேசிய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே பங்கீடு செய்யப்பட்டன. அத்தகைய கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்கிய கூட்டாட்சியாளர்கள் ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரை முதல் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுத்து 1789ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடியரசினைத் தோற்றுவித்தனர். ஜார்ஜ் வாஷிங்டனின் தலைமையில் அலெக்சாந்தர் ஹாமில்டன் கருவூலச் செயலாளராகவும், தாமஸ் ஜெப்பர்சன் உள்துறை செயலராகவும் பதவியேற்றனர். 1797ஆம் ஆண்டில் ஜார்ஜ் வாஷிங்டன் பதவி விலகிய பின்னர் ஜான் ஆடம்ஸ் (John Adams) என்ற மற்றொரு கூட்டாட்சியாளர் அமெரிக்கக் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்காவின் புதிய குடியரசினை நிலைபெறச் செய்வதில் கூட்டாட்சியாளர்களின் பங்கு மகத்தானதாகும். உள்நாட்டில் சட்டம், ஒழுங்கு ஆகியவைகளை நிலைநாட்டியும், வெளியுறவில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியும், கூட்டாட்சியாளர்கள் தங்களது ஆட்சியினை நிலைநிறுத்திக் கொண்டனர். தேசிய வங்கி ஒன்றினை உருவாக்கியும், கூடுதல் வரிகளை விதித்தும், நாட்டின் நிதி நிலைமையைச் சீராக்கினர். அரசியல் அமைப்பின் கூறுபாடுகளுக்குத் தாராள விளக்கங்கள் அளித்ததன் மூலம் தேசிய அரசு மிகுந்த அதிகாரத்தினைப் பெற்றுச் செயல்படுத்தியது. தொழிலகங்கள் பல அமைத்து, அமெரிக்கா தொழில் வளர்ச்சி கண்டது. ஸ்பெயினுடன் செய்துகொண்ட ஜே–யின் உடன்படிக்கையின் (Jay's Treaty) மூலமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்கு, தெற்கு எல்லைப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட்டது. கட்சி முறைகள் தோன்றின. கூட்டாட்சியாளர்களுக்கு எதிர்ப்பணியாகச் செயல்படும் வகையில் தாமஸ் ஜெப்பர்சன் குடியரசுக் கட்சியைத் (Republican Party) தோற்றுவித்தார். குடியரசுக் கட்சியினர் மாநிலங்களின் அதிகாரங்கள், உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும் என்றும், வேளாண் பெருங்குடி மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பாடுபட்டது. ஆனால், கூட்டாட்சியாளர்கள் தேசிய அரசின் மேன்மை மிகு நிலையினையும், தொழில் வளர்ச்சினையும் ஆதரித்தனர். 1800ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில்

குடியரசுக் கட்சியினர் வெற்றி பெற்று, தாமஸ் ஜெப்பர்சன் என்பவர் குடியரசு தலைவராகப் பதவியேற்றார்.

**(இ) அமெரிக்க மக்களாட்சி முறையின் வளர்ச்சி**

சுதந்தர அறிவிப்பின் பின்னர் அரசியல் அதிகாரம் முழுவதும் செல்வச் சீமான்களிடமே குவிந்துகிடந்தது. ஜார்ஜ் வாஷிங்டன், அலெக்சாந்தர் ஹாமில்டன் போன்றோர் அத்தகைய வர்களின் பிரதிநிதிகளே. தாமஸ் ஜெப்பர்சனும் செல்வவளமிக்க குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும், அவரும் அவரது கட்சி யினரும் மக்களாட்சி முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண் டினர். 1800ஆம் ஆண்டு நடந்த தேர்தல்மூலமாக வடகிழக்குப் பகுதி பெரும் வர்த்தகக் குடும்பங்களிலிருந்து அரசியல் அதிகாரம் தென்மேற்குப் பகுதியிலிருந்த பெரும் பண்ணைகளின் உரிமை யாளர்களிடம் மாறியது.

வர்த்தகச் செல்வாக்கு மிக்க பெரும் செல்வந்தர்களிட மிருந்து அரசியல் அதிகாரம் பெரிய பண்ணைகளின் முதலாளி களிடம் மாறியதே தவிர, சாதாரணமானவர்களுக்கு அவ்வித மாற்றத்தால் எந்தவித அரசியல் உரிமைகளும் கொடுக்கப்பட வில்லை. பாமர மக்கள் கல்வியறிவு பெற்று, அரசியல் பொறுப்பு களைத் திறம்பட நிறைவேற்றும் தகுதியை அடைகின்ற வரையில் அவர்களிடம் அரசியல் அதிகாரங்கள் கொடுக்கப்படக் கூடாது என்பதில் குடியரசு தலைவர் ஜெப்பர்சன் உறுதியாக இருந்தார். இருப்பினும் குடியரசுக் கட்சியின் வெற்றிக்குப் பின்னர் அதிக மான பாமர மக்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கினர். அதே காலத்தில் நீதித்துறையின் அதிகாரங் களும் வளர்ந்தன. **மார்பரி** என்பவருக்கும் **மாடிசன்** (Marbury vs. Madison) என்பவருக்குமிடையே ஏற்பட்ட வழக்கில் நீதி வழங்கியவர் **ஜான் மார்ஷல்** (John Marshall) என்ற அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார். அவ் வழக்கின் தீர்ப்பின்போது, 'சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டுள்ளதா, முரண்பட் டுள்ளதா என்பதைத் தீர்மானம் செய்யும் அதிகாரம் நீதிமன்றத் திற்கே உண்டு' என்று நீதிமன்றத்தின் சட்ட மறுஆய்வு அதி காரத்தினை நிலை நாட்டினார். சட்ட மன்றங்களால் உருவாக் கப்படும் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு உட்பட்டவையேயென நீதி மன்றம் தீர்ப்பளித்தால்தான் அவைகளைச் செயல்படுத்த முடியும். இல்லையேல் அச்சட்டங்கள் விலக்கப்படும். அது **நீதி மறு ஆய்வு** (Judicial Review) அதிகாரம் எனப்படும்.

1816ஆம் ஆண்டில் நடைபெற்ற குடியரசு தலைவர் தேர்தலில் **ஜேம்ஸ் மன்ரோ (James Munroe)** என்ற குடியரசுக் கட்சியினைச் சேர்ந்த மற்றொருவர் வெற்றி பெற்றார். அவருடைய பதவிக் காலத்தில் கட்சிப் பூசல்கள், பிளவுகள் காணப்படாதது வியப்பிற்குரிய நிகழ்ச்சியாகும். அவர் 1823ஆம் ஆண்டில் அமெரிக்க வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற **மன்ரோ கொள்கையினை (Munroe Doctrine)** வெளியிட்டார். அலாஸ்கா பகுதி வழியாகத் தெற்கு நோக்கி நகரமுயன்ற ருஷியர்களைத் தடுக்கும் வகையிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டத்தினை ஐரோப்பிய நாடுகளின் தலையீடுகளினின்றும் காப்பதற்காகவுமே, அத்தகைய புரட்சிகரமான கொள்கையினைத் துணிந்து வெளியிட்டார். அக்கொள்கையின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கப் பெருநிலப்பரப்பில் மீண்டும் குடியேற்றங்கள் நிறுவுவதையும், அமெரிக்க நாடுகளின் உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவதனின்றும் தடுக்க முடிந்தது. அதேபோல அமெரிக்காவில் ஏற்கெனவே இருக்கும் ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களில் காணப்படும் பிரச்சினைகளிலும், மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்படும் போர், மற்றும் அனைத்துப் பிரச்சினைகளிலும் அமெரிக்கா தலையிடாது என்ற உறுதியினையும், 'மன்ரோ கொள்கை'யின் மூலமாக குடியரசு தலைவர் உறுதி யளித்தார். **அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே** என்று உலக நாடுகளுக்கு எச்சரித்து விளக்கிய அக்கொள்கையே அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை விதியாக அமைந்துவிட்டது.

1828ஆம் ஆண்டில் **ஜேக்சன் (Jackson)** என்பவர் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது வெற்றி அமெரிக்க மக்களாட்சிக் கொள்கைகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது. அவர் மக்களின் உளம் நிறைந்த மாபெரும் தலைவராகப் போற்றப்படுகின்றார். பெரும்பான்மையினரின் ஆட்சியையும், வாக்காளர் பெருமக்களின் அரசியல் உரிமைகளையும், மக்கள் அனைவருக்கும் சமமான பொருளாதார வாய்ப்பளிக்க வேண்டும் என்பது போன்ற கொள்கைகளில் நம்பிக்கைகொண்டு செயலாற்ற முனைந்தார். எனவேதான் பாமர மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களுக்கு வாய்ப்பளித்து வளம் காண உதவும் வகையில் சட்டங்களை இயற்றிச் செயல்படுத்தினார். தொழிலாளர் நலனைப் பேணும் வகையில் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த வகைசெய்தார். இலவச வீட்டு வசதியையும், கல்வி நிறுவனங்களையும ஏற்படுத்தி, பாமர மக்களின் துயர்துடைக்கப் பெரிதும்

பாடுபட்டார். அவரது காலத்தில் நாடு உண்மையிலேயே மக்களாட்சி முறையில் முன்னேற ஆரம்பித்தது. அமெரிக்காவைப் போன்றே, ஐரோப்பிய நாடுகளிலும் மக்களாட்சி முறையில் வளர்ச்சி ஏற்பட்டது.

### (ச) அமெரிக்கா விரிவடைதல் (Territorial Expansion)

அமெரிக்கா சுதந்திரப் போரில் வெற்றிபெற்று, சுதந்திரமடைந்தபோது அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியிலிருந்து மிசிசிபி நதிவரை மட்டுமே பரவியிருந்தது. அப்பகுதியிலும் புளோரிடா மாநிலம் ஸ்பெயினின் ஆதிக்கத்திலும், லூசியானா சமவெளிப் பகுதி பிரான்சின் பொறுப்பிலும், தென்மேற்குப் பகுதி மெக்சிகோவிடமும் இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்குப் பகுதியில் இந்திய இன மக்கள் வாழ்ந்தனர். போர்களின் மூலமாகவும், ஒப்பந்தங்கள் மூலமாகவும், இந்தியர்களிடமிருந்தும், ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும் பெரும் நிலப்பரப்புகளைப் பெற்று, அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியினின்றும் மேற்கு நோக்கி வளர்ந்து, பசிபிக் மாக்கடல் பகுதிவரை அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரிவடைந்தன.

ஆரம்ப காலத்திலிருந்தே அமெரிக்கர்களுக்கும் செவ்விந்தியர்களுக்குமிடையே பகைமை வளர்ந்திருந்தது. செவ்விந்தியர்கள் அமெரிக்கர்கள் மீது தீராத வெறுப்புக் கொண்டிருந்தனர். தங்களுக்குச் சொந்தமான தங்களுடைய நாட்டினை வெள்ளையர்கள் வலிந்து தாக்குவதன் மூலமும், ஏமாற்றுதல், சதிசெய்தல் போன்ற கயமை வழிகளைப் பின்பற்றிப் பிடுங்கிக் கொண்டுவிட்டனரே என்ற ஆத்திர உணர்வு ஒவ்வொரு செவ்விந்தியனிடமும் குடிகொண்டிருந்தது. இந்தியர்கள் வாழ்ந்த கிராமங்களுக்குள் அமெரிக்கர்கள் படைகளை ஏவியும், தலைவர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து நிலங்களை அபகரித்தும், போதை மருந்துகளை இந்தியர்களுக்குக் கொடுத்து அவர்களைத் திறமையற்றவர்களாக்கியும், காலரா, பெரியம்மை போன்ற கொள்ளை நோய்களைப் பரப்புவதன்மூலம் இந்தியர்களின் கூட்டங்களையே அழித்தும், ஆதிவாசிகளைத் தொல்லைகளுக்குட்படுத்தி, அவர்களது நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டனர். அரக்கத்தனமான அழிவுகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், தங்களது உயிருக்காகவும், இந்தியர்கள் கூட்டங்கூட்டமாக, தாங்கள் வாழ்ந்த பகுதிகளை விட்டு மேற்கு நோக்கி ஓடி, அடர்ந்த காடுகளில் பதுங்கிக் கொண்டனர். அவ்வாறு ஓடி ஒளிந்து கொண்டவர்கள் மீண்டும் திரும்பி வந்து அமெரிக்கர்களைத் தாக்குவர். அத்தாக்குதலிலிருந்து ஒருவர்கூட மீளாமல்

அத்தனை இந்தியர்களும் அழிக்கப்படுவர். இத்தகைய நிலை தொடர்ந்தால் இந்திய இனமே அடியோடு அழிக்கப்பட்டுவிடும் என்பதனைத் தெளிவாக உணர்ந்த **தேக்கும்சே (Tecumseh)** என்ற இந்தியத் தலைவன், பிரிந்து, கூட்டங்கூட்டமாகத் திரிந்த இனத்தினர் அனைவரையும் ஒன்று திரட்டி, ஒன்றுபடுத்தி, இந்தியக் கூட்டரசினை உருவாக்கினார். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து ஒதுங்கி, தங்கள் இனத்தினருடன் தனித்து வாழ்வதும், அமெரிக்க அரசிற்கு எந்தவித ஒத்துழைப்பும் நல்குவதில்லை என்ற குறிக்கோள்களுடனும் இந்தியக் கூட்டரசு உருவாக்கப்பட்டது. ஆனால், ஒதுங்கி வாழ முயன்ற இந்திய இனத்தினரை வாழவிட அமெரிக்கர்களுக்கு விருப்பமில்லை. 1811ஆம் ஆண்டில் அமெரிக்கப்படை இந்தியக் கூட்டரசின் தலைநகரான **திப்பிக் கானோ (Tippecano)** என்ற இடத்தினைத் தாக்கி, அந்நகரை முற்றிலுமாக அழித்துவிட்டது. அத்தகைய வலுத்தாக்குதலையும், தங்கள் தலைநகரம் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டதையும் கண்ட இந்தியர்கள் தேக்கும்சேயின் தலைமையில் வெகுண்டெழுந்தனர். 1812ஆம் ஆண்டில் இங்கிலாந்து-அமெரிக்கப் போர் தொடங்கியபோது, இந்தியத் தலைவனான தேக்கும்சே ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டார். கானடா பாதுகாப்புப் போரில் ஆங்கிலேயருக்குத் துணைநின்ற தேக்கும்சேயின் படை தோற்கடிக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டில் கானடாவில் தேம்ஸ் நதிக் கரையில் அமெரிக்கர்களுடன் நடந்த போரில் தேக்கும்சே உயிரிழந்தார். அதன் விளைவாக **கிரீக்** என்ற இந்திய இனத்தினர் (Creek Indians) சரணடைந்தனர். இந்தியரின் கூட்டரசு அழிக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டில் **கென்ட் உடன்படிக்கை** மூலம் **(Treaty of Ghent)** இங்கிலாந்து அமெரிக்காவுடன் சமாதானம் செய்து கொண்டது. அவ்வுடன்படிக்கையின் காரணமாகப் பெரும் நிலப்பரப்பினை இந்தியர்கள் அமெரிக்கர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. குடியரசு தலைவர் **ஜேக்சன்** இந்திய இனத்தினருடன் பல கடுமையான போர்களை நடத்தி, அவர்களை மிசிசிபி நதிக்கப்பால் உள்ள பகுதிகளுக்குள் விரட்டினார். விரட்டப்பட்டு ஓடி ஒளிந்த இந்தியர்கள் திரும்பவே இல்லை. அவர்கள் அனைவரும் காட்டுப் பகுதிகளிலேயே மடிந்தனர்.

மிசிசிபி நதிக் கரையிலிருந்து ராக்கி மலைத் தொடர் வரை விரிந்து பரந்து கிடக்கும் வளம் கொழிக்கும் பெரும் நிலப்பரப்பே **லூசியானா (Louisiana)** ஆகும். அப்பகுதியில் பெரும்பாலும் செவ்விந்தியர்களே வாழ்ந்தனர். அத்தகைய சிறப்பு மிக்க பகுதியை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கைப்பற்றின.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேற்கு நோக்கி வளர்கின்ற இயக்கம் (Westward Expansion) தொடங்கப்பட்டது. லூசியானா பிரான்சுக்குச் சொந்தமானது. பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியன் அமெரிக்காவிலும் தனது பேரரசினை நிறுவவும் அவா கொண்டிருந்தார். ஆனால் ஹைதி (Haiti) தீவு நீக்ரோக்களிடம் பிரெஞ்சுப் படைகள் அடைந்த தோல்வி, அவருக்கு எச்சரிக்கை விடுத்தது. எனவே, நெப்போலியன் தமது நோக்கினை மாற்றிக் கொண்டுவிட்டார். பின்னர் லூசியானா பகுதியை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விற்றுவிட முடிவு செய்தார். அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்ட ஜெப்பர்சனின் தலைமையிலான அமெரிக்க அரசு பதினைந்து மில்லியன் டாலர்கள் விலை கொடுத்து லூசியானா பகுதியை வாங்கிக் கொண்டது. 1819ஆம் ஆண்டில் குடியரசு தலைவர் மன்ரோ, ஸ்பெயினுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் மூலம் தெற்கிலிருந்த புளோரிடா பகுதியின் உரிமைகளைப் பெற்று, அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணைத்துக் கொண்டார்.

அட்லாண்டிக் கடற்கரைப் பகுதிகளிலேயே அடைபட்டுக் கிடந்த அமெரிக்கர்கள் மேற்கு நோக்கித் திரும்ப ஆரம்பித்தனர். தங்களுக்கு மேற்கில் பசிபிக் பெருங்கடல் வரையிலும் இயற்கை கனிவளங்களுடன் எல்லையற்று விரிந்து கிடக்கும் கன்னி நிலப்பரப்பினைக் கொண்டனர். அப்பகுதிகளில் நுழைந்து, வளம் தேட முனைந்தனர். அட்லாண்டிக் கடற்கரைப் பகுதியில் நின்று கிழக்குத் திக்கையே நோக்கிக் கொண்டிருந்த அமெரிக்கன், திசை மாறினான்; வளம் கண்டான். கூட்டம் கூட்டமாக, செயற்கரிய செய்து வரலாற்றுப் புகழ் பெற எண்ணிய வீரமறவர்கள் மேற்கு நோக்கி விரைந்தனர். அலை அலையாகச் சென்ற அமெரிக்க வீரர்கள் கூட்டம் கலிபோர்னியா, ஒரகான், டெக்ஸாஸ் போன்ற எல்லைப் பகுதிகளை அடைந்தது. டெக்ஸாஸ் பகுதியில் அமெரிக்கர்களின் எண்ணிக்கை பெருகியது. அதைக் கண்ட மெக்சிகோ அரசு அமெரிக்கர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க ஆரம்பித்தது. கட்டுப்பாட்டுச் சட்டங்களை எதிர்த்த அமெரிக்கர்கள் புரட்சியில் இறங்கினர். அமெரிக்கப் புரட்சியாளர்கள் மெக்சிகோ அரசின் படைகளை வென்று, டெக்ஸாஸ் மாநிலத்தின் சுதந்திரத்தினை அறிவித்தனர். மேற்கு எல்லைப் பகுதியில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒரகான் பகுதியின் மீது உரிமை கொண்டாடினர். 1846ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஒரகான் பகுதியை அவ்விரு நாடுகளும் தங்களுக்குள் சுமுகமாகப் பங்கிட்டுக் கொண்டன.

**1846-1848**ஆம் ஆண்டுகளில் **அமெரிக்கா-மெக்சிகோ போர்** ஏற்பட்டது. மெக்சிகோ நிலப்பரப்புகளின்மீது அமெரிக்கர்கள் கொண்டிருந்த பேராசையே அப்போருக்கான அடிப்படைக் காரணமாகும். மிதமான, இன்பமளிக்கும் கால நிலையுடன், அளவற்ற கனிவளங்களையும், இயற்கைச் செல்வத்தினையும் தன்னகத்தே கொண்டுள்ள புதிய மெக்சிகோ, கலிபோர்னியா பகுதிகள் உண்மையிலேயே மெக்சிகோ அரசிற்குச் சொந்தமான பகுதிகளே ஆகும். அப்பகுதிகளை எப்படியாகிலும் கைப்பற்றிக்கொள்ள அமெரிக்கா மிகவும் தீவிரமாகச் செயல்பட்டது. எனவே, அமெரிக்கர்கள் அலை அலையாகச் சென்று அப்பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு பெருந்திரளாகக் குடியேறியவர்கள் கலகங்களில் ஈடுபட்டனர். அத்தகைய கலகங்களை அடக்கி, அமைதி ஏற்படுத்த மெக்சிகோ அரசு முயன்றபோது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசு வெகுண்டெழுந்தது. 1845ஆம் ஆண்டு டெக்ஸாஸ் பகுதிகளை இணைத்துக்கொள்ள உரிமையளிக்கும் சட்டத்தினை அமெரிக்கக் காங்கிரஸ் நிறைவேற்றியது. அத்துடன் ரியோ கிராண்டே (Rio Grande) வரையுள்ள பகுதிகளுக்கு அமெரிக்க அரசு உரிமை கொண்டாடியது. மெக்சிகோவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே பகைமை வளர்ந்தது. அமெரிக்கக் குடியரசு தலைவர் **போக்** (President Polk) என்பார் மெக்சிகோவிற்குத் தூதுவர் குழு ஒன்றினை அனுப்பி, டெக்ஸாஸ் பகுதிகளை விட்டுக்கொடுக்கும்படி வற்புறுத்தினார். ஆனால், அவரது முயற்சி பலிக்கவில்லை. எனவே, மெக்சிகோவிற்குள் தமது படைகளை அனுப்பிப் போரைத் தொடங்கினார். மூன்று அமெரிக்கப் பெரும் படைகள் மூன்று திக்குகளில் முன்னேறின. மெக்சிகோவின் வடக்குப் பகுதியை நோக்கி ஒரு படையும், கலிபோர்னியாவை நோக்கி இரண்டாவது படையும், மெக்சிகோ நகரினையே நோக்கி மூன்றாவது படையும் அனுப்பப்பட்டன. மெக்சிகோவின் குடியரசு தலைவரான **சாண்டா அண்ணா** (Santa Anna) என்பவரின் முயற்சியால் மெக்சிகோவின் படைகள் மிகவும் முனைந்து போரிட்டாலும், **பியூனா விஸ்டா** (Buena Vista) மற்றும் மெக்சிகோ நகர்ப் பகுதிகளில் நடந்த கடும் போர்களில் மெக்சிகோ படையினர் படுதோல்வியடைந்தனர். **'குடாலூப் ஹிடால்கோ'** (Gudalupe Hidalgo) என்ற இடத்தில் 1848ஆம் ஆண்டில் அமெரிக்க-மெக்சிகோ உடன்படிக்கை கையெழுத்தானது. கலிபோர்னியா, நியு மெக்சிகோ பகுதிகளை அமெரிக்கா பெற்றது. ரியோ கிராண்டே அவ்விரு நாடுகளின் எல்லையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போரின் விளைவாகத் தனது நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட பகுதியை மெக்சிகோ இழந்தது. வலிமை பொருந்திய பசிபிக்

கடல் பகுதி அரசாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் சிறப்படையும் வாய்ப்பு உருவாகியது. 1868ஆம் ஆண்டில் ருஷியாவிடமிருந்து அலாஸ்கா பகுதி விலைக்கு வாங்கப்பட்டது.

இவ்வாறு பசிபிக் கடற்கரைப் பகுதி வரையில் தனது எல்லைகளை விரிவாக்கிக்கொண்ட நிலை, அமெரிக்க வரலாற்றில் மாபெரும் விளைவுகளுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்டது. தான் பெற்றுவிட்ட பகுதிகளிலிருந்த ஆதிவாசிகளான செவ்விந்தியர்கள் வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டனர். அமெரிக்காவின் செல்வாக்கு வளர்ந்து, குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. மெக்சிகோ அரசு, தனது பெருமை மிகு உயர்நிலையினின்றும் இழிந்தது. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளின் அமெரிக்க செல்வாக்கு மறைந்தது. மாபெரும் அரசாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் உயர்ந்தது. அவ்வாறு நாட்டின் எல்லைகளை விரிவாக்கி, மாபெரும் அரசாக உயர்ந்துவிட்ட அமெரிக்காவில் புதிய உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றும் தோன்றியது. தெற்குப் பகுதியில் இருந்தவர்கள் பெரும் பண்ணை முதலாளிகள். அப்பண்ணைகளில் உழைக்க, நீக்கிரோ அடிமைகளைப் பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தினர். இவ்வாறு தெற்குப் பகுதி மாநிலங்களில் அடிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர். ஆனால், வட மாநிலங்களில் அடிமைகள் முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அடிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகள் என்றும், அடிமைகள் முறை மறுக்கப்பட்ட பகுதிகள் என்றும் அமெரிக்காவிலேயே உள்நாட்டுப் பிரிவினை ஏற்பட்டது. புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்க்கப்பட்ட போது, அடிமை முறை அனுமதிக்கப்பட்ட மாநிலமா, அடிமை முறை மறுக்கப்பட்ட மாநிலமா என்பதில் போட்டி ஏற்பட்டது. அந்தப் போட்டி அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாயிற்று. அப்போரில் ஐக்கியத்தை, அமெரிக்க ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் கட்சியினர் வெற்றி பெற்றனர். அமெரிக்க ஐக்கியம் காப்பாற்றப்பட்டது. அத்தகைய உள்நாட்டுப் போருக்குப் பின்னர் அமெரிக்கா பல துறைகளிலும் விரைந்து முன்னேறி, உலகிலேயே சிறந்த மாபெரும் வல்லரசாக உயர்ந்து வளர ஆரம்பித்தது.

## அத்தியாயம் 6

# பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனும்

### *பிரெஞ்சுப் புரட்சி (1789 — 1799)*

'புரட்சி' என்ற சொல் 18ஆம் நூற்றாண்டில் புதிய விளக்கத்தைப் பெற்றது. முன்பெல்லாம் வன்முறைச் சம்பவங்கள் இன்றி அமைதியான முறையில் அரசியலில் ஏற்படும் மாற்றங்களையே 'புரட்சி' என்ற சொல் குறிப்பிட்டிருந்தது. 1789ஆம் ஆண்டிலிருந்து, அளவற்ற சமுதாய, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்த அடிப்படைக் காரணமாக அமைவதே 'புரட்சி' எனக் கருதப்பட்டது.

உலக வரலாற்றில் 1789ஆம் வருடத்திய பிரெஞ்சுப் புரட்சி ஒரு முக்கிய இயக்கமாகக் கருதப்படுகிறது. மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்த இயக்கங்கள், அறிவு, சமயத் துறைகளில் எவ்வாறு பெரிய மாறுதல்களைக் கொண்டுவந்தனவோ, அதே மாதிரி அரசியல், சமூகத் துறைகளில் பிரெஞ்சுப் புரட்சி பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தது. இவ்வியக்கம் பிரான்சில் வரம்பில்லாத முடியாட்சியையும், சில சமூகங்கள் அனுபவித்துவந்த விசேஷ உரிமைகளையும் ஒழித்து, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளைப் பரப்பியது. இக்கொள்கைகள் 19, 20ஆவது நூற்றாண்டுகளில் உலகில் பரவி, பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தன. வரம்பில்லா முடியரசை ஒழித்த புரட்சி பிரான்சில் சிறிது காலம் நெப்போலியனின் யதேச்சாதிகாரத்தை நிறுவியபோதிலும், இறுதியில் மக்களாட்சி, தனி மனிதனின் உரிமை முதலிய கருத்துகள் உலகம் முழுவதும் பரவுதற்கு உதவியது.

#### (அ) புரட்சியின் காரணங்கள்

**(1) வரம்பில்லா முடியரசின் குறைபாடுகள் :** 1789-க்கு முன் இருந்த பிரெஞ்சு சமூகமும் அரசியலும் **பழைய அமைப்பு (Ancien Regime)** என அழைக்கப்பட்டது. 1789-க்கு முன் வரம்பில்லா முடியாட்சி பிரான்சில் நடைபெற்றது. 1643-லிருந்து 1715 வரை ஆட்சி செய்த பதினான்காம் லூயி கூறுவ

துண்டு: ''அரசாங்கமா? நான்தான் அரசாங்கம்.'' 1614ஆம் வருடத்திலிருந்து 175 வருடங்களாக பிரான்சின் தேசிய சபையாகிய **ஸ்டேட்ஸ் ஜெனரலை** மன்னர்கள் கூட்டவேயில்லை. மக்களுக்கு உரிமைகள் கிடையா. விசாரணை **ஏதுமின்றி**, தனக்குப் பிடிக்காத எவரையும் அரசரோ, அவரது நண்பர்களோ **சிறப்பு ஆணைகள் (Letters de Cachet)** மூலம் கைது செய்ய முடியும். அரசரின் கையெழுத்து இடப்பட்ட அந்த ஆணைகளை அரசரிடமிருந்து அவரது நண்பர்கள் பெற்று, தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் காவலில் வைத்தனர். பதினான்காம் லூயி யதேச்சாதிகாரம் செலுத்தினபோதிலும் திறமையுடன் ஆட்சி செய்தார். ஆனால், அவர் நடத்தின பல போர்களினால், பிரான்சின் பொருளாதாரம் சீர்குலைந்தது. அவருக்குப்பின் வந்த பதினைந்தாம் லூயி சிற்றின்பப் பிரியர். அவர் தம்முடைய ஆசைநாயகி **பாம்பதூர் அம்மையாரிடம்** ஆட்சியை ஒப்படைத்தார். அவருக்குப் பின் வந்த பதினாறாம் லூயி திறமையற்றவர். அவருடைய மனைவியான **மேரி அண்டாயினெட்** ,அரசாங்கப் பணத்தை ஆடம்பர வழிகளில் செலவழித்தார்.

(2) **பிரபுக்கள், உயர்தர மத குருமார்களின் உரிமைகளும் சலுகைகளும்:** பிரான்சில் பிரபுக்களும் உயர்தர மத குருமார்களும் விசேஷ உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருந்தனர். பிரபுக்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்தனர். உயர்தர மத குருமார்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர். நாட்டின் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தைப் பிரபுக்களும், மூன்றில் ஒரு பங்கு நிலத்தை மத குருமார்களும் பெற்றிருந்தனர். சாதாரண மக்களுக்கு ஒருவித உரிமைகளும் இல்லாதபோது, இவர்களுக்கு அநேக சலுகைகள் இருந்தன. அக்காலத்தில் வழங்கிவந்த பழமொழி: ''பிரபுக்கள் ஆடிக்களித்தனர்; மக்கள் வறுமையினால் வாடி வதங்கினர்.''

(3) **மக்களின் அவலமான நிலை:** நடுத்தர வகுப்பினரான 'பூர்ஷோவ்'க்களும், குடியானவர்களும் மிகவும் அவதிப்பட்டனர். அக்காலத்தில் சொல்வதுண்டு: ''பிரபுக்கள் போர் புரிகிறார்கள்; மத குருமார்கள் வழிபாடு செய்கிறார்கள்; சாதாரண மக்கள் வரிகள் கொடுக்கிறார்கள்.'' நாட்டின் நிதி, மக்களின் வரிகளை அடிப்படையாகக் கொண்டது. **கபெல் (Gabelle)** என்ற உப்பு வரி **டைல்** என்ற நிலவரி, தலைவரி, சுங்கவரி, **டைத்** என்ற சமய வரி ஆகிய வரிகளால் சாதாரண மக்கள் ஒடுக்கப்பட்டனர். இவ்வரிகளைத் தவிர, குடியான

வர்கள் பிரபுக்களுக்கு சில நிலமானிய முறை வரிகளையும் செலுத்த வேண்டி வந்தது. மேலும் அவர்கள், பிரபுக்கள் பண்ணைகளில் ஊதியமின்றி உழைக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டனர். மக்களின் வறுமையும், அதிருப்தியும் புரட்சிக்கு அடிகோலிகளாயின.

**(4) பிரெஞ்சு அறிஞர்களின் பங்கு :** இவ்வாறு பிரெஞ்சு மக்கள் அதிருப்தி அடைந்திருந்தபோது, பல நூல்கள் தோன்றின. மான்டெஸ்க்யூ, வால்டேர், ரூஸோ முதலிய அறிஞர்கள் புரட்சிக் கருத்துகளைத் தங்களுடைய நூல்களில் புகுத்தி, மக்களின் சிந்தனையைத் தூண்டி, அவர்களின் உணர்ச்சிக் குமுறல்களை வெளிக் கொணர்ந்து, அவர்களை வீறு கொண்டெழச் செய்தனர். மான் டெஸ்க்யூ தமது **சட்டங்களின் சாராம்சம் (Espirit de Lois)** என்னும் நூலில் பிரான்சின் வரம்பற்ற முடியரசைக் கண்டித்து, இங்கிலாந்தின் வரம்புக்குட்பட்ட முடியாட்சிதான் சிறந்தது எனத் திட்ட வட்டமாகக் கூறினார். சட்டமியற்றும் துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றும் தனித்தனியாக சுதந்திரமாக இயங்கினால்தான் சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்றும், அதேபோல் பிரான்சிலும் அக்கோட்பாடு பின்பற்றப்பட வேண்டுமென்பதனையும் வலியுறுத்தினார். 'எழுத்துக் கலையின் மந்திரவாதி' என்ற பெயர்பெற்ற வால்டேர் திருச்சபையையும், மக்களின் மூட நம்பிக்கைகளையும், நாட்டின் அநீதிகளையும் வன்மையாகத் தாக்கினார். ஏராளமான மக்கள் அவருடைய கருத்துகளினால் ஈர்க்கப் பட்டார்கள். ரூஸோ 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலில் 'அரசனுடைய அதிகாரம் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரமென்றும், ஆகவே, அவன் மக்கள் விருப்பத்தின்படி ஆட்சி புரியவேண்டும் என்றும், அவன் அப்படி ஆட்சி செய்யாவிட்டால் அவனை அதிகார பீடத்தினின்று நீக்குவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு' என்றும் வாதாடினார். 'மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கிறான்; ஆனால் எங்கும் கட்டுகளால் பிணைக்கப்பட்டுத் துயருறுவதைக் காண்கிறோம்' என்று மக்களின் உரிமைகளை வற்புறுத்தினார். ரூஸோவின் கருத்துகள் பிரெஞ்சு மக்களை வரம்பில்லா முடியாட்சியை ஒழிக்கத் தூண்டின.

மேலே கூறிய மூன்று அரசியல் தததுவ ஞானிகளைத் தவிர, கலைக் களஞ்சியத்தை (Encyclopaedia) வெளியிட்ட **டிடிராட் (Diderot), டி அலெம்பர்ட் (De Alembert)** முதலியோர் சமுதாயம், அரசியல், சமயம் ஆகியவற்றில் காணப்பட்ட குறைபாடுகளைத் தாக்கினர். **கியூனே (Quesnay), டூர்கோ (Turgot)** போன்ற பொருளாதார நிபுணர்கள் பிரான்சின் பொருளாதார

நிலையின் குறைபாடுகளை விளக்கி, அவற்றைத் தகர்த்தெறிய வேண்டுமென முழங்கினர்.

கருத்துகள் நடைமுறையில் ஏற்பட்டால் புரட்சி தோன்றும் என்று சொல்வார்கள். இம்மாதிரி புரட்சிக் கருத்துகள் தோன்றவே அவற்றைச் செயலுக்குக் கொண்டுவர பிரெஞ்சு மக்கள் புரட்சி செய்தனர்.

(5) **அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவு:** 1775-லிருந்து 1783 வரை நடந்த அமெரிக்க சுதந்திரப் போரில் பிரெஞ்சு அரசாங்கம் அமெரிக்கக் குடியேற்ற மக்களுக்கு உதவி செய்தது. லே.வெயட் (Lay fayette) போன்ற பிரெஞ்சு பிரபுக்கள் அமெரிக்க சுதந்திரப் போரை ஒரு புனிதப் போராகக் கருதி அதில் பங்கெடுத்துக் கொண்டனர். இதனால் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன: (1) பிரெஞ்சு அரசாங்கத்தின் செலவு அதிகமாகி, பிரான்சின் பொருளாதார நிலை சீர்குலைந்தது. (2) அமெரிக்கர்கள் சுதந்திரப் போரின் முடிவில் ஒரு ஜனநாயக ஆட்சியை நிறுவினர். அம்மாதிரி ஆட்சியைத் தங்களது நாட்டிலும் நிறுவ, பிரெஞ்சு மக்கள் விரும்பினர்.

(6) **உடனடிக் காரணங்கள்:** பதினான்காம், பதினைந்தாம் லூயி மன்னர்கள் நடத்திய ஸ்பானிஷ் வாரிசுப் போர், ஆஸ்திரிய வாரிசுப் போர், ஏழாண்டுப் போர் ஆகியவற்றினாலும், 14, 15, 16 லூயி மன்னர்களின் ஆடம்பரச் செலவுகளினாலும் பிரான்சில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்த நெருக்கடியைச் சமாளிக்கவும், மக்களின் துயரை நீக்கவும் 16ஆம் லூயி மன்னர் முதலில் **டர்கோவையும்** பின்னர் **நெக்கர்** என்பவரையும் தமது மந்திரிகளாக நியமித்தார். பிரபுக்களும் உயர்தர மதகுருமார்களும் சாதாரண மக்களைப்போல் எல்லா வரிகளும் செலுத்த வேண்டுமென அவர்கள் ஆலோசனை கூறினர். உயர்தர மக்கள் பிடியிலிருந்த லூயி மன்னர் அந்த யோசனையை ஏற்காமல், அவர்களைப் பதவியிலிருந்து நீக்கினார். பின்னர் நியமிக்கப்பட்ட **கலோனும் (Calonne)** நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. எனவே, 1614ஆம் வருடத்திலிருந்து கூட்டப்படாத ஸ்டேட்ஸ் ஜெனரலை பதினாறாம் லூயி 1789ஆம் வருடம் மே மாதம் 5ஆம் தேதி கூட்டினார். அந்தச் சபையின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் புரட்சிக் கருத்துகளைக் கொண்டிருந்தமையால், அது கூட்டப்பட்டதும் பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது என்று சொல்லலாம்.

**(ஆ) புரட்சியின் போக்கு**

(1) **ஸ்டேட்ஸ் ஜெனரல் தேசிய மன்றம் ஆனது:** ஸ்டேட்ஸ் ஜெனரலின் உறுப்பினர்கள் பிரபுக்கள், சமய குருமார்கள், சாதாரண மக்கள் என்ற மூன்று பிரிவுகளாக இருந்தனர். பழங் காலத்திலிருந்து இந்த மூன்று பிரிவினர்களும் தனித்தனியாகக் கூடி வாக்களித்தனர். இதில் மூன்றாவது பிரிவினரால் கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள், தீர்மானங்கள் அனைத்தையும், முதல் இரு பிரிவினர்களும் இணைந்து நிராகரிக்கின்ற ஆபத்து இருந்தது. எனவே, அத்தகைய நிலையினை மாற்றி, ஒரே அவையாகச் செயல்பட வேண்டுமென்றும், ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற அளவில் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றும் புது ஸ்டேட்ஸ் ஜெனரல் வற்புறுத்தியது. 1789 ஜூன் மாதம் 17ஆம் தேதி தங்களை இறைமைத் தன்மை பெற்றுள்ள **தேசிய மன்றம் (National Assembly)** என்றும், அதில் பிரபுக்களையும், சமய குருமார்களையும் இணையும்படியும் வேண்டினர். மன்னர் அவர்களது கோரிக்கைகளை நிராகரித்து, வெர்செய்ல்ஸ் அறையிலிருந்து வெளியே போகும்படி உத்தரவிட்டார். உறுப்பினர்கள் அருகிலிருந்த டென்னிஸ் மைதானத்திற்குச் சென்று **அபிசியஸ் (Abbe Sieyes), மிராபோ (Mirabeau)** தலைமையில், புதியதோர் அரசியல் அமைப்பினை உருவாக்கி முடிக்கும் வரையில் தாங்கள் கலைந்து போவதில்லை என்ற சபதம் செய்து கொண்டனர் **(Oath of Tennis Court).** இதைக் கண்டு பயந்த லூயி மன்னர் பிரபுக்களையும், சமய குருமார்களையும், பொது மக்கள் பிரிவினருடன் இணைய அனுமதித்தார். ஸ்டேட்ஸ் ஜெனரல் உண்மையிலே பிரான்சின் தேசிய சபையாக மாறியது. டென்னிஸ் கோர்ட் சபதம் மக்களின் இறைமைத்தன்மையின் **(Popular Sovereignty)** ஆரம்பமும் வரம்பில்லாத முடியாட்சியின் முடிவும் ஆகும்.

(2) **புரட்சிக் கூட்டமும், தேசியக் காவலர் படையும்:** புரட்சியின் ஆரம்பத்தில் மிதவாதிகளான பூர்ஷ்வாக்கள் (நடுத்தர வகுப்பினர்) செல்வாக்குப் பெற்றிருந்தனர். நாளடைவில் பாரிஸ் மக்கள் கூட்டத்தினர் புரட்சியை நடத்தலாயினர். பாரிஸ் நகரசபை நிர்வாகம் நீக்கப்பட்டு, **மாராட் (Marat), கமில்லே டெஸ்மௌலின்ஸ் (Camille Desmoulines)** தலைமையில் ஒரு புரட்சி நிர்வாகம் அமைக்கப்பட்டது. இந்த நிர்வாகம் தேசியக் காவலர் படையைத் தனக்கு உதவியாக அமைத்தது. இதேமாதிரி பிரான்சின் எல்லா நகரங்களிலும் இம்மாதிரிப் புரட்சி நிர்வாகமும், தேசியக் காவலர் படையும் நிறுவப்பட்டன. இவற்றினால் புரட்சி நாடெங்கும் பரவியது.

**(3) பாஸ்டில் கோட்டை தாக்கப்பட்டது (1789, ஜூலை 14) :** பழைய அமைப்பின் சிறைச்சாலை பாஸ்டில் கோட்டையாகும். அரசாங்க விரோதிகள் இதில் சிறை செய்யப்பட்டிருந்தமையால், இது கொடுங்கோல் ஆட்சியின் சின்னமாகக் கருதப்பட்டது; பாரிஸ் மக்கள் இதனை 1789 ஜூலை 14ஆம் தேதியில் தாக்கி, அதில் உள்ள கைதிகளை விடுதலை செய்தனர். பாஸ்டில் தாக்குதல் பிரான்சின் விடுதலை நிகழ்ச்சியாகும். ஆகவே ஒவ்வொரு வருடமும் ஜூலை 14ஆம் தேதி பிரான்சின் தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**(4) சலுகைகள் நீக்கப்படுதல் (1789, ஆகஸ்டு 4) :** 1789 ஆகஸ்டு மாதம் 4ஆம் தேதி பிரபுக்களும், சமய குருமார்களும் தாங்கள் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்த விசேஷ உரிமைகளையும் சலுகைகளையும் இழந்தனர். நிலமானிய முறை மறைந்தது.

**(5) அரசியல் நிர்ணய சபை — மனித உரிமை அறிக்கை (Declaration of the Rights of Man — 1789, August 12) :** 1789, ஆகஸ்டு மாதம் 12ஆம் தேதி தேசிய மன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாறியது. சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற 'மனித உரிமை அறிக்கை'யை அரசியல் நிர்ணய சபை வெளியிட்டது. இது அமெரிக்கக் குடியேற்றங்களின் அரசியல் அமைப்பின் எதிரொலியேயாகும்.

**(6) அரச குடும்பம் பாரிஸில் சிறையிலிடப்பட்டது (1789, அக்டோபர் 6) :** பதினாறாம் லூயி புரட்சி விரோதிகளுடன் தொடர்பு கொள்ளாதவாறு, அவரையும், மேரி அன்டாயினட் அரசியையும் புரட்சிக் கும்பல் வெர்சயில்ஸிலிருந்து பாரிஸுக்கு அக்டோபர் மாதம் 6ஆம் தேதி கொண்டுவந்து, அவர்களை **ட்யூலரிஸ்** மாளிகையில் புரட்சி தேசியக் காவல் படையின் கண்காணிப்பில் இருக்கும்படி செய்தது.

**(7) மதஸ்தாபன சொத்துகள் தேசியமயமாக்கப்பட்டன (1789, நவம்பர் 2)—புதிய திருச்சபைச் சட்டம் (1790) :** புரட்சி அரசாங்கத்திற்குப் பண நெருக்கடி ஏற்பட்டது. எனவே, 1789, நவம்பர் மாதம் 2ஆம் தேதியில் மதஸ்தாபன சொத்துகள் தேசியமயமாக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் புரட்சி அரசாங்கம் **அஸ்ஸிக்னாட்ஸ** (Assignats) என்ற காகித நாணயங்களை வெளியிட்டது. இந்த நாணயங்கள் பெருமளவில் வெளியிடப்பட்டதால், நாணயத்தின் மதிப்பு மிகவும் குறைந்தது.

1790-ல் 'புதிய திருச்சபைச் சட்டம்' (Civil Constitution of the Clergy) இயற்றப்பட்டது. அதன்படி திருச்சபை, அரசின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டது. குருமார்கள் அரசாங்க ஊழியர்கள் ஆயினர் அவர் புரட்சி அரசாங்கத்தைக் காப்பாற்றுவதாக சபதம் எடுக்கவேண்டும். போப்பாண்டவரும், பிரெஞ்சு மக்களின் ஒரு பகுதியினரும், திருச்சபைச் சட்டத்தை எதிர்த்தனர். புரட்சியின் தீவிர நடவடிக்கைகளை அவர்கள் கண்டித்தனர்.

**(8) வரென்ஸ் ஓட்டம்** (Flight to Varennes—**1791, June 20**): 'புதிய திருச்சபைச் சட்டத்தின்' விளைவாகப் புரட்சிக்கு எதிர்ப்புத் தோன்றவே, அதை லூயி மன்னர் பயன்படுத்தினார். பிரான்சின் வடகிழக்கு எல்லையில் **பௌயில்** (Bouile) என்ற அரசரின் கட்சி தளகர்த்தர் ஒரு படையுடன் இருப்பதை அறிந்து, லூயி மன்னர் தமது குடும்பத்துடன் பாரிஸிலிருந்து 1791, ஜூன் 20ஆம் தேதி இரவு ரகசியமாக வெளியேறி, பௌயிலைச் சந்திக்க விரைந்தார். பிரெஞ்சு வடக்கு எல்லைக்கு அருகிலுள்ள வரென்ஸ் என்னும் இடத்தை அவர் அடைந்ததும், பொழுது விடிந்தது. மன்னரும் அவர் குடும்பத்தினரும் புரட்சிக் காவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்கள் பாரிஸ் நகரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். வரென்ஸ் ஓட்டத்தினால் மன்னர் புரட்சியின் எதிரி என்றும் நாட்டின் துரோகி என்றும் கருதப்பட்டார். தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகரித்தது. மன்னர் புரட்சியை அடக்கத் திட்டம் போட்டதனால், புரட்சிக்காரர்களில் பலர் தீவிரவாதிகளாகி, இறுதியில் முடியாட்சியை ஒழித்துக் குடியரசை நிறுவினர்.

**(9) 1791 அரசியலமைப்பு:** 1791-ல் அமைக்கப்பட்ட அரசியலமைப்பின்படி லூயி வரம்புக்குட்பட்ட முடியரசராக்கப் பட்டார். 750 உறுப்பினர்களைக்கொண்ட ஓர் அவை (பார்லிமெண்டு) நிறுவப்பட்டது. அதன் பதவிக் காலம் இரண்டு வருடங்களாகும்.

**(10) புரட்சியின் பயங்கரப் போக்கு:** 1791-ல் நிறுவப்பட்ட வரம்புள்ள முடியரசு அமைக்கப்பட்டவுடன், புரட்சி முடிந்துவிடும் என்று அநேகர் கருதினர். ஆனால், ஆங்கில அரசியல் தத்துவ ஞானி **எட்மண்ட் பர்க்** தமது 'பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றிச் சில சிந்தனைகள்' என்ற நூலில் எதிர்பார்த்ததுபோல், 1791ஆம் ஆண்டிலிருந்து புரட்சிக்காரர்கள் வரம்பு மீறி செயல்களைச் செய்தனர். பலாத்காரமும் படுகொலையும் தலை விரித்தாடின. இதற்கு முக்கியக் காரணம், பிரான்சிலிருந்து வெளியேறிய பிரபுக்களும், மத குருமார்களும் அந்நிய நாடுகளின் உதவியை

நாடினதேயாகும். புரட்சி பிரான்சிலிருந்து வெளியேறிய **எமிக்ரே** எனப்பட்ட பிரபுக்கள் பிரஷ்யா, ஆஸ்திரியா, ருஷ்யா மன்னர்களை பிரான்சின்மீது படை யெடுத்து, புரட்சியை அடக்க வேண்டினர். அந்நியப் படைகள் பிரான்சின் வட கிழக்கு எல்லையில் படையெடுத்தன. இப்படையெடுப்பு தீவிரவாதிகளின் செல்வாக்கை அதிகரித்தது. **டான்டன்** என்ற தீவிரவாதியின் தலைமையில் பாரிஸ் கும்பல், அரசர் அரசியிருந்த ட்யூலரிஸ் மாளிகையை 1791, ஆகஸ்டு 10ஆம் தேதி தாக்கி, மன்னர் ஆட்சியை ஒழிக்க நடவடிக்கைகள் எடுத்தது.

1791, செப்டம்பர், 2ஆம் தேதி **பிரன்ஸ்விக்** கோமகன் தலைமையில் இயங்கிய அந்நியப் படை பிரெஞ்சுப் புரட்சிப் படையை முறியடித்தது. அதன் விளைவாக, புரட்சியின் எதிரிகள் என்று கருதப்பட்ட 1,500 பேர்கள் **கில்லட்டின்** என்ற ஓர் இயந்திரத்தின் உதவியால் பாரிஸ் நகரில் புரட்சி அரசாங்கத்தால் சிரச் சேதம் செய்யப்பட்டனர். இச்சம்பவம் **செப்டம்பர் படுகொலை** என்றழைக்கப்படுகிறது. இப்படுகொலையினால் எதிரிகளை ஒழித்து, பிரெஞ்சுப் படை புதிய ஆர்வத்துடன் சென்று பிரன்ஸ்விக்கின் படையை **வால்மி** என்னுமிடத்தில் சிதறடித்தது. புரட்சிப் படையின் புகழ் ஓங்கியது. மக்களுக்குப் புரட்சியில் நம்பிக்கை வலுத்தது.

1792 செப்டம்பர் 21ஆம் தேதி தேசிய மன்றம் கலைக்கப்பட்டு **தேசிய கன்வென்ஷன்** கூட்டப்பட்டது. இந்தக் கன்வென்ஷனில் **டான்டன், ரோபஸ்ப்பியர்** ஆகியோர் முக்கியத் தலைவர்களாவர். அவர்கள் பிரான்ஸை குடியரசு எனப் பிரகடனம் செய்தனர். 1793, ஜனவரி 21ஆம் தேதி, லூயி மன்னர் புரட்சிக்கு விரோதமாகச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டார்.

லூயி சிரச்சேதம் செய்யப்பட்டதும், பிரிட்டன், பிரஷ்யா, ஆஸ்திரியா, ஹாலந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் **முதல் கூட்டு (First Coalition)** ஒன்றை பிரான்சுக்கு எதிராக அமைத்தன. பிரான்சின் சில பகுதிகளில் புரட்சி அரசாங்கத்திற்கு விரோதமாக லூயி மன்னர் கட்சியினர் கலகம் செய்தனர். உள்நாட்டுக் குழப்பத்தையும், அயலார் படையெடுப்பையும் சமாளிக்க, **புரட்சி நீதி மன்றமும்** (Revolutionary Tribunal—1793, March 10), **பாதுகாப்புக் குழுவும்** (Committee of Public Safety—1793, April 6) அமைக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் புரட்சிக்கு விரோதமாக இருந்தவர்களை, ஈவு இரக்கமின்றிச் சிரச்சேதம்

செய்தன. இதற்குப் பயங்கர ஆட்சி என்று பெயர். இக்காலத்தில் மேரி அன்டாய்னெட் அரசி சிரச்சேதம் செய்யப்பட்டார்.

தேசிய கன்வென்ஷனின் புரட்சிகரமான செயல், கிறிஸ்தவ மதத்திற்கு பதிலாகப் பகுத்தறிவு வழிபாடு செய்ததேயாகும்.

புரட்சியாளர்களுள் தீவிரவாதிகள் **ஜாக்கோபின்கள்** என்றழைக்கப்பட்டனர். அவர்களின் முக்கியத் தலைவர்கள் **டான்டனும், ரோபஸ்பியரு**மாவர். இவர்களுக்குள் போட்டியேற்பட்டு அதன் விளைவாக டான்ட்னையும், அவரது சகாக்களையும் ரோபஸ்பியர் சிரச்சேதம் செய்தார். ரோபஸ்பியரின் பயங்கர ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்து ரோபஸ்பியரை டான்டனின் நண்பர்கள் 1794, ஜூலை 28ஆம் தேதி சிரச்சேதம் செய்தனர். ரோபஸ்பியரின் வீழ்ச்சியுடன் புரட்சி நீதி மன்றம், பாதுகாப்புக் குழு முதலியன ஒழிக்கப்பட்டன; 'பயங்கர ஆட்சி' முடிவடைந்தது. புதிய அரசியல் அமைப்பில், நிர்வாகப் பொறுப்பு **ஐந்து பேர் கொண்ட** ஒரு குழுவிடமும் (Directory), சட்டமியற்றும் அதிகாரம் 500 பேர்கள் கொண்ட ஒரு சபையிடமும், முதியோர்கள் அடங்கிய ஒரு மன்றத்தினிடமும் ஒப்படைக்கப்பட்டன.

தேசிய கன்வென்ஷனால் நிறுவப்பட்ட புதிய அரசியலமைப்புக்குப் பொதுவாக மக்களின் ஆதரவு இருந்தது. ஆனால், அதற்கு எதிராக பாரிஸ் கும்பல் கலகம் செய்யவே, புரட்சி அரசாங்கத்தின் புகழ்பெற்ற தளகர்த்தரான நெப்போலியனைக் கலகத்தை அடக்கும்படி கன்வென்ஷன் கட்டளையிட்டது. நெப்போலியன் 1795, அக்டோபர் 5ஆம் தேதி கலகத்தை அடக்கினார்.

தேசிய கன்வென்ஷனின் ஆட்சி 1797, அக்டோபர் 26ஆம் தேதி முடிவடைந்து, **டைரக்டரியின்** ஆட்சி தொடங்கியது. **பாராஸ், கார்னோ, லிடூர்னர், ரூபல், லெப்பா** என்ற ஐந்து பேர் டைரக்டரியின் உறுப்பினர்கள்; அவர்களுள் பாராஸ்தான் முக்கியமானவர். இந்தக் குழு ஆஸ்திரியாவை அடக்க நெப்போலியன் தலைமையில் ஒரு படையை இத்தாலிக்கு அனுப்பியது. நெப்போலியன் ஆஸ்திரியப் படைகளை **லோடி, காஸ்டிகிளியோன், ஆர்கோலா, ரிவோலா, மான்டுவா** ஆகிய இடங்களில் முறியடித்து, பிரான்சின் ஆதிக்கத்தை இத்தாலியின் வடபாகத்தில் நிறுவினார். பின்னர் அவர் கப்பல் படையுடன் எகிப்திற்கு அனுப்பப்பட்டார். நெப்போலியன் எகிப்தை வென்றார். ஆனால் 1799, ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி நைல் நதி முகத்துவாரத்தில் நெல்சன் என்ற ஆங்கிலேயக் கப்பற்படைத் தளபதி

நெப்போலியனின் கப்பற்படையை நாசமாக்கினார். நெல்சன் அடைந்த நைல் வெற்றியின் பயனாக, இங்கிலாந்து தனது தலைமையின்கீழ் ருஷ்யா, பிரிட்டன், துருக்கி, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் அடங்கிய **இரண்டாவது கூட்டை (Second Coalition)** அமைத்தது. டைரக்டரியின் ஆட்சி திறமையாக இல்லை. அதனால் இரண்டாவது கூட்டு சில வெற்றிகளைப் போர்க் களத்தில் அடைந்தது. பிரான்சின் உள்நாட்டு நிலைமையும் திருப்திகரமாக இல்லை. சிக்கலான பிரச்சினைகளுக்கு டைரக்டரியால் முடிவு காண முடியாமல் இருந்தது. நாட்டில் குழப்பம் அதிகரித்தது. இந்த நிலைமையை அறிந்த நெப்போலியன் எகிப்திலிருந்து பிரான்ஸ் திரும்பி, தமது படையின் உதவியினால் 1799, நவம்பர் 10ஆம் தேதி ஐந்து பேர் ஆட்சியை நீக்கி மூவர் கொண்ட **கான்சுலேட் (Consulate)** என்ற அரசை அமைத்தார். அதில் அவர் **முதல் கான்சல்;** அவருடைய சகாக்கள் **அபிசேயஸும், டூலிராண்டும்** ஆவர். இது **புருமெயர் புரட்சி** (Brumaire Coup detat) என்றழைக்கப்படுகிறது. 1789, மே மாதம் ஆரம்பித்த பிரெஞ்சுப் புரட்சி 1799, நவம்பரில் முடிந்தது. நெப்போலியனின் வீரதீரச் செயல்களும் அவர் அமல்படுத்திய சீர்திருத்தங்களும் பிரெஞ்சு வரலாறு மட்டுமல்லாமல் உலக வரலாறு மாகும். அந்த மாபெரும் வீரரைப்பற்றி படிப்போம்.

**(இ) புரட்சியின் விளைவுகள்**

(1) இடைக்காலக் கருத்துகள், மூடநம்பிக்கைகள், நிலமானிய முறை, வரம்பில்லாத முடியரசு ஆகியவை பிரெஞ்சுப் புரட்சியினால் ஒழிக்கப்பட்டன. பிரெஞ்சுப் புரட்சி நெப்போலியன் சர்வாதிகாரி ஆட்சியில் முடிவடைந்ததே என்று ஆச்சரியப் படலாம். ஆனால், அதில் விந்தை ஒன்றுமில்லை. உலக வரலாற்றில் தோன்றிய பல புரட்சிகளில் ஒரு கட்டத்தில் சர்வாதிகாரி ஆட்சி தோன்றியிருக்கிறது. ஆனால், நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் உலக மக்களுக்கு அநேக நன்மைகளை வழங்கியிருக்கின்றன. அடிமைத்தனம் ஒழித்தல், சமயத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்ட கொடுமைகள் ஆகியவை 19ஆவது நூற்றாண்டில் ஒழிக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம் பிரெஞ்சுப் புரட்சியேயாகும். 19ஆவது நூற்றாண்டின் **மனித அபிமான இயக்கங்கள் (Humanitarian Movements)** பிரெஞ்சுப் புரட்சியால் தூண்டப்பட்டவை.

(2) புரட்சி, பிரான்சில் ஒற்றுமையையும் நாட்டுப்பற்றையும் வளர்த்தது. இந்தத் தேசிய உணர்ச்சி மற்ற நாடுகளுக்கும் பரவியதால் நெப்போலியனின் வீழ்ச்சி ஏற்பட்டது.

(3) பிரெஞ்சுப் புரட்சியின் ஜனநாயக, தேசியக் கருத்துகள் இலத்தின் அமெரிக்க நாடுகளின் விடுதலைக்கும் இத்தாலி, ஜெர்மனியின் ஐக்கியத்திற்கும், துருக்கிப் பேரரசின் சிதைவுக்கும் காரணமாக இருந்தன.

(4) புரட்சியினால் இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகியவை மறுமலர்ச்சி அடைந்தன. புரட்சியினால் தூண்டப்பட்ட மக்களின் சிந்தனா சக்தி, இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகியவற்றில் பிரதிபலித்தது. புதிய முறையில் நூல்கள் எழுதப்பட்டன. பிரான்சில் **விக்டர் ஹியூகோ,** ஜெர்மனியில் **கதே,** இங்கிலாந்தில் **வொர்ட்ஸ்வொர்த், கால்ரிட்ஜ், பைரன், ஷெல்லி, எட்மண்ட் பர்க், டாம் பெயின்** ஆகியோர் தங்களது நூல்களில் பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளை வெளியிட்டிருக்கின்றனர்.

## நெப்போலியன் போனபார்ட் (1769—1821)

### (அ) முன்னுரை

உலக வரலாற்றில் புகழ் பெற்று விளங்கும் ராணுவ மேதையும், ஐரோப்பாவில் பத்து வருடங்கள் ஆதிக்கம் செலுத்திவந்தவருமான நெப்போலியன் போனபார்ட், கார்ஸிகா தீவிலுள்ள **அஜ்ஜாஷியோ** என்னுமிடத்தில் 1769ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதி பிறந்தார். 1762ஆம் ஆண்டிலேயே கார்ஸிகாவைப்பற்றி ரூஸோ பின்வருமாறு எழுதியுள்ளார். ''இந்தச் சிறு தீவு ஐரோப்பா வியக்கத்தகும் முறையில் செயல்படும் என்று எனக்குத் தோன்றுகிறது.'' அவர் கூறிய ஏழு வருடங்களுக்குப் பிறகு ஐரோப்பாவைச் சிறிது காலம் அடக்கி ஆண்ட நெப்போலியன் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் நடுத்தர வகுப்பினரான **கார்லோ போனபார்ட்டும், லெட்டி சியாவும்** ஆவர். கார்ஸிகா பிரெஞ்சு ஆட்சியின்கீழ் இருந்தமையால், நெப்போலியன் பிரான்சிலுள்ள **பிரியன்** என்ற ராணுவப் பள்ளியில் பயிற்சி பெற்றார்.

பிரெஞ்சுப் புரட்சி நெப்போலியனின் திறமைக்கு ஒரு வாய்ப்பு அளித்தது. 1793-ல் **டூலான்** என்ற இடத்தை பிரிட்டிஷ் படை தாக்குதலினின்றும் காப்பாற்றிப் புரட்சி அரசாங்கத்தின் பாராட்டு தலைப் பெற்றார். 1795, அக்டோபர் 5ஆம் நாள் தேசிய கன்வென்ஷன் நிறுவிய டைரக்டரிக்கு விரோதமாக பாரிஸ் கும்பல் கலகம் செய்தபோது, அவர் தமது படையினரால் கலகத்தை அடக்கி, ஐந்து பேர் குழு ஆட்சியைப் பலப்படுத்தினார். வட இத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கத்தை நீக்கி, பிரான்சின் அதிகாரத்தை நிலைநாட்ட, அவர் இத்தாலிக்கு டைரக்டரி அரசினால்

அனுப்பப்பட்டார். ஆஸ்திரியப் படைகளை லோடி, காஸ்டிகிளியோன், ஆர்கோலா, ரிவோலா, மான்டுவா ஆகிய இடங்களில் முறியடித்து, வட இத்தாலியில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிறுவினார். பின்னர், அவர் எகிப்துக்கு அனுப்பப்பட்டார். அவர் எகிப்தை வென்றபோதிலும், அவருடைய கப்பற்படை ஆங்கில தளபதி நெல்சனால் நைல் நதி முகத்துவாரத்தில், அபூக்கிர் விரிகுடாவில் நாசமாக்கப்பட்டது. பின்னர் அவர் பிரான்ஸ் திரும்பி, 1799, நவம்பர் 10ஆம் தேதி ஐந்து பேர் கொண்ட குழுவினை நீக்கி, கான்சலேட்டை அமைத்தார். அதில் அவர் முதல் கான்சலாக இருந்தார். இது புருமெயர் புரட்சி என்றழைக்கப்படுகிறது.

### (ஆ) கான்சலேட் (1799—1804)

**வெற்றிகளும், சீர்திருத்தங்களும்—(1) வெற்றிகள்:** நெப்போலியன் பிரெஞ்சுப் புரட்சியின் வாரிசாக இருந்தபோதிலும், அவர் ஒரு பிரெஞ்சுப் பேரரசை அமைக்க விரும்பினார். மகா அலெக்சாண்டரைப்போல் தாமும் புகழ்பெற விரும்பினார். பிரெஞ்சுப் புரட்சியினால் அவர் முன்வந்தபோதிலும், அதன் கொள்கைகளைப் புறக்கணித்தார். 'எனது ஆசை நாயகி ஆதிக்கம்' என்று அவர் கூறுவதுண்டு. 14ஆம் லூயி காலத்தில் இருந்தது போல், பிரான்ஸை ஐரோப்பாவின் தலைசிறந்த நாடாக்க விரும்பினார்.

ஐரோப்பாவின் பல நாடுகளுடன் அவர் போர் புரிந்தார். முதல் கான்சல் ஆனவுடன் அவர் இத்தாலிமீது படையெடுத்து ஆஸ்திரியப் படையினை மாரெங்கோ என்னுமிடத்தில் முறியடித்தார. அவருடைய தளகர்த்தரான மோரோ மற்றோர் ஆஸ்திரியப் படையினை ஹோஹென் லிண்டன் என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆஸ்திரியா பிரான்சுடன் 1801-ல் லூனிவில் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி பிரான்சுக்கு ரைன் நதியின் இடது பாகம் கிடைத்தது. நைல் வெற்றிக்குப் பின் பிரிட்டிஷ் பிரதமர் இளைய பிட் அமைத்த இரண்டாம் கூட்டிலிருந்து ஆஸ்திரியா விலகிக் கொண்டது.

நாட்டில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்காக, நெப்போலியன் சமாதானத்தை விரும்பி, 1802-ல் ஏமியன்ஸ் என்னுமிடத்தில் தமது முக்கிய எதிரியான பிரிட்டனுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ''இந்த உடன்படிக்கை எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது; ஆனால், அதைப்பற்றிப் பெருமிதப்படுவதற்கு ஒன்றுமில்லை,'' என்று அக்காலத்தில் மக்கள் பேசிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

**(2) சீர்திருத்தங்கள்: (i) நிதி:** நாட்டின் நிதிப் பற்றாக் குறையை நீக்க நிர்வாகத்தில் சிக்கனங் கொண்டுவந்து லஞ்ச ஊழலை அவர் ஒழித்தார். **பாங்க் ஆப் பிரான்ஸ்** என்ற நிறுவனத்தை அமைத்து, அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்தினார். மது, உப்பு, புகையிலை ஆகியவற்றின்மீது மறுபடியும் வரிகளை விதித்தார். அத்துடன் தோல்வியடைந்த நாடுகளிலிருந்து வசூலிக்கப்பட்ட பெருந் தொகைகள்மூலம், நிதிநிலையினை நெப்போலியன் சரிக்கட்டினார்.

**(ii) சமயம் - போப்பாண்டவருடன் சமரச ஒப்பந்தம்:** நெப்போலியனின் ஆளும் திறமைக்கும், ராஜதந்திரத்திற்கும் எடுத்துக் காட்டு போப்பாண்டவருடன் செய்துகொண்ட ஒப்பந்தமும், சட்டத் தொகுப்புமாகும். புரட்சி அரசாங்கம் புதிய திருச்சபைச் சட்டத்தை அமைத்ததிலிருந்து போப்பாண்டவருக்கும் பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் மனக் கசப்பு இருந்துவந்தது. கத்தோலிக்க சமயத்தினர் தலைவரான போப்பாண்டவருடன் நெப்போலியன் நல்ல உறவு வைத்துக் கொள்ள விரும்பினார். அதனால், அவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி பிரெஞ்சுத் திருச்சபையின்மீது போப்பாண்டவரின் சமய அதிகாரம், மதகுருமார்கள் திருமணம் செய்யாதிருத்தல், பிஷப்புகளுக்குப் போப்பாண்டவர் சமய அதிகாரம் அளித்தல், திருச்சபைச் சட்டம் (Canon Law) ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டன. மதகுருமார்கள் அரசிடமிருந்து ஊதியம் பெறவேண்டுமென்பதனையும், புரட்சியின்போது திருச்சபையிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளைத் திருப்பித்தர வேண்டியதில்லை என்பதனையும் போப்பாண்டவர் ஏற்றுக் கொண்டார். இந்த ஒப்பந்தம் 1905ஆம் ஆண்டு பிரெஞ்சுத் திருச்சபையுடன் அரசாங்கத் தொடர்பு முறியும்வரை அமலில் இருந்தது.

**(iii) சட்டத் தொகுப்பு:** நெப்போலியனின் சட்டத் தொகுப்பு அவர் பிரான்சுக்குச் செய்த அரிய தொண்டு ஆகும். இன்றும் அச்சட்டம் பிரான்ஸ் நாட்டில் அமலில் இருந்துவருகிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் அத்தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. சமய சகிப்புத் தன்மை, மத சம்பிரதாயமில்லாத 'சிவில்' திருமணம், விவாக ரத்து ஆகியவை அனுமதிக்கப்பட்டன. அதே சமயத்தில் குடும்ப வாழ்க்கை, குடும்பத்தில் தந்தையின் அதிகாரம், தனியார் சொத்துரிமை ஆகியனவும் ஒப்புக் கொள்ளப்பட்டன. பெண்களின் அந்தஸ்து சட்டத் தொகுப்பில் சற்றுக் குறைவாக இருந்தது. அதற்கு நெப்போலியன் பொறுப்பன்று என்று சொல்லப்படுகிறது.

சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்னும் புரட்சிக் காலத்துக் கொள்கை வற்புறுத்தப்பட்டது.

**(iv) கல்வி:** நாடு முழுவதற்கும் நெப்போலியன் ஒரு கல்வித் திட்டம் வகுத்தார். சாதாரணப் பள்ளிகள், தொழில் பயிற்சிப் பள்ளிகள், ராணுவப் பள்ளிகள் என மூன்று வகைப் பள்ளிகள் அமைக்கப்பட்டன. கணிதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. **எக்கோலே** ராணுவச் சிறப்புப் பயிற்சிப் பள்ளியும், **எக்கோலே** ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் 1808-ல் நிறுவப்பட்டன. அதே ஆண்டில் பாரிஸ் நகரில் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

நெப்போலியன் காலத்தில் கல்விக் கூடங்கள், நாடக நிலையங்கள், பத்திரிகைகள் பேரரசரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கின.

**(v) பொதுப் பணி:** நெப்போலியன் தம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க கட்டடங்களைக் கட்டியும், துறைமுகங்களைச் செப்பனிட்டும், ஆல்ப்ஸ் மலைமீது சாலைகள் அமைத்தும், சரித்திரச் சின்னங்களைப் புதிதாக அமைத்தும், பழைய சின்னங்களைப் புதிப்பிக்கவும் செய்தார். அவர் சதுப்பு நிலங்களைச் சரிப்படுத்தி அவைகளைப் பலப்படுத்தினார். புரட்சிக் காலத்தில் கவனிக்கப்படாமலிருந்த வெர்செய்ல்ஸ், ஸெண்ட் கிளவுட், லூவர் ஆகிய இடங்களில் உள்ள அரண்மனைகளைச் செப்பனிட்டார். கலைச் சின்னங்களை இத்தாலி, ஆஸ்திரியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலிருந்து கொணர்ந்து பாரிஸ் நகரை அலங்கரித்தார். பாரிஸ் நகரில் கம்பீர அழகுடன் தோன்றும் **ஆர்க் டி டிரயம்ப் (Arc de Triumphe)** அவரால் கட்டப் பட்டது. இம்மாதிரி பாரிஸை அழகுபடுத்தியதால், அவர் காலத்தில் பாரிஸ் ஐரோப்பாவின் தலைநகராயிற்று என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

**(vi) தொழில் முன்னேற்றம்:** நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காகக் காப்பு வரித் திட்டத்தை (Protective Tariff) நெப்போலியன் தமது நாட்டில் செயல்படுத்தினார். லியான் பட்டுத் தொழில் மறுபடியும் வளர்ந்தது; பருத்தி கிழக்கு நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டது; நூற்கும் ஜென்னியை இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்தார். தொழில் வளர்ச்சிக்கு விஞ்ஞானம் அவசியம் என்று உணர்ந்து புதிய கருவிகள், முறைகள் கண்டுபிடித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். அவர் தொழில்கள் வளரக் கடனுதவி செய்து கண்காட்சிகள் நாடெங்கும் நடத்த உதவினார். பிரிட்டிஷ் கப்பற்படை முற்றுகையினால்

சர்க்கரையை இறக்குமதி செய்ய முடியவில்லை. பீட் கிழங்கி லிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யும்படி தொழிலதிபர்களுக்கு அவர் உத்தரவிட்டார்.

(vii) **பட்டங்கள் வழங்குதல்:** பிறப்பு, செல்வம் ஆகியவற்றை நீக்கி, திறமை, தொண்டு இவற்றின் அடிப்படையில் பலவித அதிகாரிகளை நெப்போலியன் உருவாக்கினார். ''எந்தச் சாதா ரண வீரனும் பீல்ட் மார்ஷல் பதவிக்கு வரமுடியும்'', என்று நெப்போலியன் சொல்வதுண்டு. முழுத் திறமையை ஊக்குவிக்க வும், சிறந்த பணியை நாட்டிற்குச் செய்யவும், நிர்வாகத்துறை, சட்டத்துறை, சமயத்துறை, அரசியல்துறை, ராணுவத் துறை ஆகியவற்றில் அதிகாரிகளுக்குப் பலவித சிறப்புப் பட்டங்கள் அளிக் கப்பட்டன. இந்தப் பட்டதாரிகள் பேரரசரிடம் விசுவாசமாக இருந்தனர் பட்டங்களை அடைய போட்டி இருந்தமையால் திறமையும் பணியும் வெளிவந்தன.

(viii) **இலக்கியம், கலை:** நெப்போலியன் இலக்கியம், கலை, கட்டடக் கலை ஆகியவற்றை ஆதரித்தார். அவர் கட்டின கட்டடங்களை முன்பு குறிப்பிட்டோம். சாட்டு பிரயாண்ட் (Chateau briand), மாடம் டி ஸ்டீல் (Madame-de-Stael) என்ற கவிஞர்கள் தங்களுடைய நூல்களில் இயற்கையின் அழ கைப்பற்றியும், மனிதனின் நற்குணங்களைப்பற்றியும் மிகைப் படுத்தியுள்ளார்கள். நெப்போலியன் காலத்தில் பழங்காலக் கலை யின் சிறப்புகளும் புதிய கலையின் சிறப்புகளும் அமைந்த ஒரு புதிய கலை தோன்றியது.

### (இ) பேரரசு (1804—1815)


பிரெஞ்சு வரலாற்றில் கான்சுலேட் காலம் பேரரசுக் காலத்தைக் காட்டிலும் சிறந்தது. ஏனெனில், அக்காலத்தில் நெப்போலியன் சிறந்த சீர்திருத்தங்கள் செய்தார். ஆனால், அதற்குப் பின் இடைவிடாமல் போர்கள் தொடுத்து ஐரோப்பிய மக்களைத் துன்பப்படுத்தினார். போர்க்களத்தில் நெப்போலியப் பேரரசு பிறந்தது; வளர்ந்தது; மாண்டது.

நெப்போலியனது செல்வாக்கும் புகழும், அவருடைய வெற்றிகளாலும் சீர்திருத்தங்களாலும் வளர்ச்சியடைந்தன. அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு நெப்போலியன் 1804, டிசம்பர் 2ஆம் நாள் பிரான்சின் சக்கரவர்த்தியானார். போப் யாண்டவர் அந்த மகுடாபிஷேகத்திற்கு வந்திருந்து மகுடத்தை அளித்தார்

1802ஆம் ஆண்டு ஏமியன்ஸ் உடன்படிக்கை வெறும் போர் நிறுத்த ஒப்பந்தமாகவே கருதப்பட்டது. பேரரசர் ஆன தும் நெப்போலியன் பிரிட்டன்மீது படையெடுக்கத் திட்டமிட் டார். பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் கப்பற்படைகளை இணைத்துள்ளார். பிரிட்டன்மீது படையெடுக்க முயன்றார். ஆனால், பிரிட்டிஷ் தளபதி நெல்சன் டிரபால்கர் என்னுமிடத் தில் 1805ஆம் ஆண்டு பிரெஞ்சு - ஸ்பானிஷ் கப்பற்படையைச் சிதறடித்தார். போர்க்களத்தில் நெல்சன் மாண்டபோதிலும், நெப்போலியனின் படையெடுப்பை முறியடித்து, தமது நாட்டைக் காப்பாற்றினார்.

டிரபால்கர் வெற்றியின் பயனாகப் பிரிட்டிஷ் பிரதமரான இளைய பிட், பிரிட்டன், ருஷ்யா, ஆஸ்திரியா, ஸ்வீடன் ஆகிய நாடுகள் அடங்கிய **மூன்றாவது கூட்டை** (Third Coalition) அமைத்தார். கடலில் தோல்வி கண்ட நெப்போலியன், ஐரோப் பாவில் அமோக வெற்றிகளைக் கண்டார். நெப்போலியன் ஆஸ்திரியப் படையை **அல்ம்** (Ulm) என்னுமிடத்திலும், ஆஸ் திரிய ருஷ்யப் படைகளை **ஆஸ்டர்லிட்ஸ்** என்னுமிடத்திலும் 1805-ல் சிதறடித்தார். நெப்போலியனின் வெற்றியைக் கேட்ட இளைய பிட் மனமுடைந்து மாண்டார். ஆஸ்டர்லிட்ஸ் வெற்றி யைக் கேட்டதும் தமது அறையில் மாட்டப்பட்டிருந்த ஐரோப்பா தேசப் படத்தைப் பார்த்து ''இந்தப் படம் இன்னும் 10 வருடங் களுக்குப் பயன்படாது. படத்தைச் சுருட்டு'' என்றாராம். அவர் சொன்னபடியே ஆஸ்டர்லிட்ஸுக்குப் பிறகு பத்து ஆண்டுகள் நெப்போலியன் பல நாடுகளை வென்று, தமது பேரரசை நிறுவி னார். பல சிறிய நாடுகளாக இருந்த தெற்கு ஜெர்மன் இராஜ் யங்களை இணைத்து **ரைன் பிரதேசக் கூட்டு அரசு** என்பதைத் தமது ஆதிக்கத்தின்கீழ் அமைத்தார். வட ஜெர்மன் இராஜ்ய மான பிரஷ்யா, அவருடைய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாத தால், அதன்மீது படையெடுத்து, பிரஷ்யாவை 1806-ல் **ஜீனா** (Jena), **ஆர்ஸ்டாட்** (Auerstat) என்னுமிடங்களில் தோற்கடித்து பெர்லின் நகரத்தினுள் பிரவேசித்தார். பிரஷ்யா வின் உதவிக்கு வந்த ருஷ்யப் படைகளை **ஐலா** (Eylaw), **பிரீட்லாந்து** (Friedland) என்னுமிடங்களில் 1807-ல் முறியடித் தார். அதன் விளைவாக சார் மன்னர் அலெக்சாண்டர் நெப்போ லியனுடன் **டில்சிட்** (Tilsit) உடன்படிக்கை செய்துகொண்டார்.

1808-ல் நெப்போலியனின் ஆதிக்கம் ஐரோப்பாவில் உச்ச நிலையை அடைந்திருந்தது. ருஷ்யாவின் மன்னர் சார் அலெக் சாண்டர் அவருடைய நண்பர்; ரைன் பிரதேசக் கூட்டு அரசு




படம் 6.1 நெப்போலியன் பேரரசு

அவர் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது; **வட இத்தாலி இராஜ்யங்கள்** அவருக்குக் கப்பங் கட்டின. ஐரோப்பாவை அவர் தமது குடும்பச் சொத்துபோல் நினைத்துத் தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இராச்சியங்களைப் பரிசாக அளித்தார்; அவருடைய மைத்துனரான **மூராட்** நேப்பிள்ஸ் மன்னராக்கப்பட்டார்; அவருடைய ஒரு சகோதரர் **லூயி போனபார்ட்** ஹாலந்து அரசராக்கப் பட்டார்; மற்றொரு சகோதரர் **ஜெரோம் போனபார்ட்** வெஸ்டுபேலியா அரசராக்கப்பட்டார். 1808-ல் அவர் கூட்டின **எர்பர்ட் மகாநாட்டில் (Congress of Erfurt)** 4 மன்னர்களும் 34 சிற்றரசர்களும் நெப்போலியனுக்கு மரியாதை செலுத்தினார்கள் என்றால், அவருடைய ஆதிக்கத்தின் பெருமையை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வளவு உச்சநிலையில் இருக்கும்போது பிரிட்டனைத் தலைபணியச் செய்ய நெப்போலியன் **கண்டதிட்டத்தை (Continental System)** வகுத்தார். அவர் வெளியிட்ட **பெர்லின் ஆணைகள்**மூலமும், **மிலான் ஆணைகள்**மூலமும் ஐரோப்பிய நாடுகளை பிரிட்டிஷ் வர்த்தகத்தைப் பகிஷ்காரம் செய்ய உத்தரவிட்டார். நெப்போலியனின் கண்டதிட்டத்திற்கு எதிராக பிரிட்டன் **அரசு ஆணைகளை (Orders in Council)** வெளியிட்டது. அவற்றின்மூலம் பிரிட்டிஷ் கப்பல்படை பிரெஞ்சுப் பேரரசின் துறைமுகங்களை முற்றுகையிட்டு, பிரெஞ்சு வாணிகத்தை ஸ்தம்பிக்கச் செய்தது. கண்டதிட்டம்மூலம் நெப்போலியன் பிரிட்டனின் பொருளாதாரத்தைப் பாழ்படுத்தி, பிரான்சை ஒரு பெரிய தொழில்மயமான நாடாக்க முயன்றார். ஆனால், கண்டதிட்டம் வெற்றியடையவில்லை. அதற்குக் காரணங்கள் மூன்று உள. (1) பிரிட்டனில் அப்பொழுது தொழிற் புரட்சி நடந்துகொண்டிருந்தது. பொருள்கள் நன்றாகவும், நவீனமாகவும், மலிவாகவும் இருந்தன. அவற்றை ஐரோப்பிய நாடுகள் வாங்காமல் இருக்கமுடியவில்லை. (2) நெப்போலியனுக்குக் கடல் ஆதிக்கம் இல்லாததால், பிரிட்டிஷ் சாமான்கள் ஐரோப்பியத் துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்க முடியவில்லை. (3) ருஷ்யா, போர்ச்சுகல் போன்ற நாடுகள் கண்டதிட்டத்தை எதிர்த்தன.

போர்ச்சுகல் கண்டதிட்டத்தை எதிர்க்கவே, நெப்போலியன் ஒரு படையை அனுப்பி, அந்நாட்டைக் கைப்பற்றினார். போர்ச்சுகல் அரச குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறி, குடியேற்ற நாடாகிய பிரேசிலுக்குச் சென்றனர். ஸ்பெயின் நாட்டின் மன்னருக்கும் அவர் மைந்தருக்கும் தகராறு ஏற்படவே,

அவர்கள் இருவரையும் நீக்கி, தமது சகோதரர் **ஜோஸப் போனபார்ட்டை** மன்னராக்கினார். இதனால் ஸ்பானிஷ் மக்கள் பிரான்சுக்கு எதிராகக் கொதித்து எழுந்தனர். போர்ச்சுகலிலும் மக்கள் நெப்போலிய ஆதிக்கத்தை எதிர்த்தனர். ஐபீரியத் தீபகற்பத்தில் தோன்றிய தேசிய உணர்ச்சியைப் பயன்படுத்தி, பிரிட்டன் அம்மக்களுக்கு உதவி செய்ய ஒரு படையை **ஸர் ஆர்தர் வெல்லஸ்லியின்** தலைமையில் அனுப்பியது. அத் தீபகற்பத்தில் போர் மூண்டது. அது **தீபகற்பப் போர்** என்று அழைக்கப்படுகிறது. அதில் பிரிட்டிஷ் தளகர்த்தரான ஆர்தர் வெல்லஸ்லி **சலமான்கா, விட்டோரியா** ஆகிய இடங்களில் பிரெஞ்சுப் படைகளை முறியடித்து, தீபகற்பத்திலிருந்து ஜோஸப் போனபார்ட்டை வெளியேறச் செய்தார்.

இதற்குள்ளாக, நெப்போலியனுக்கும் ருஷ்ய மன்னரான ஸார் அலெக்சாந்தருக்கும் மனக் கசப்பு ஏற்படவே, நெப்போலியன் ருஷ்யா மீது 1812-ல் படையெடுத்தார். **போரோடினோ** என்னுமிடத்தில் மிகுந்த கஷ்டத்துடனும், நஷ்டத்துடனும் ருஷ்யப் படையைத் தோற்கடித்து, தலைநகரான மாஸ்கோவை அடைந்தார். அப்பொழுது மாரிக் காலம் ஆரம்பித்திருந்தபடியால், நெப்போலியனது வீரர்கள் குளிர் தாங்க முடியாமல் மடிந்தனர். ருஷ்ய வீரர்கள் பின்வாங்கும்போது, நாட்டைச் சுட்டு எரித்துவிட்டமையால், பிரெஞ்சுப் படைக்கு உணவு கிடைப்பது அரிதாயிற்று. நெப்போலியன் நாடு திரும்பினார். திரும்பும் போது **மாரெங்கோ, ஹோகன்லின்டன், ஆஸ்டர்லிட்ஸ்** முதலிய போர்க்களங்களில் பங்குகொண்ட வெற்றி வீரர்கள் அனைவரும் உயிரிழந்தனர். நெப்போலியனின் தலைசிறந்த படை சின்னாபின்னமாயிற்று. 'தளகர்த்தர் மாரிக்காலம் நெப்போலியனைத் தோற்கடித்தார்' என்று கூறுவதுண்டு.

பாரிஸ் நகருக்குத் திரும்பிய நெப்போலியன் புதிய படையினைத் திரட்டினார். அதன் வீரர்கள் அவ்வளவு பயிற்சி பெற்றவர்கள் அல்லர். இதற்குள் பிரிட்டன், ருஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, சுவீடன் ஆகிய நாடுகள் பிரான்சுக்கு எதிராக **நான்காம் கூட்டை (Fourth Coalition)** அமைத்தார்கள். புதிதாக உருவாக்கப்பட்ட படையுடன் நெப்போலியன் **லீப்சிக் (Leipzig)** நகரை 1813 அக்டோபர் மாதம் அணுகினார். அங்கு நடந்த மூன்று நாள் போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். லீப்சிக் போர் **தேசமக்களின் போர் (Battle of the Nations)** என்றழைக்கப்படுகிறது. ஏனெனில், ஐரோப்பிய தேசிய உணர்ச்சிக்கும் ராணுவ சர்வாதிகாரத்திற்கும் நடந்த போரில் தேசியம் வெற்றியடைந்தது.

லீப்சிக்கில் தோல்வியடைந்த நெப்போலியன் பாரிசுக்குத் திரும்பினார். அப்பொழுது தெற்கேயிருந்து பிரனிஸ் மலை வழியாக ஆர்தர் வெல்லஸ்லியின் பிரிட்டிஷ் படையும், வடக்கே யிருந்து லீப்சிக்கில் வெற்றியடைந்த ஐரோப்பியப் படைகளும் பிரான்ஸ்மீது படையெடுத்தன. நேச நாடுகள் பாரிஸ் நகரத்தைக் கைப்பற்றின. நெப்போலியன், மன்னர் பதவியைத் துறந்தார். அவர் இத்தாலிக்கு அண்மையிலுள்ள எல்பா தீவுக்கு அனுப்பப்பட்டார்.

பிரிட்டன், பிரஷ்யா நீங்கலாக, ஐரோப்பிய நாடுகள் தங்களது படைகளைக் கலைத்துவிட்டு, ஐரோப்பாக் கண்டத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு மகாநாட்டைக் கூட்டும் சமயத்தில், நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பி, பிரான்சுக்குத் திரும்பினார். பிரெஞ்சு மக்கள் அவருக்கு அமோக வரவேற்புக் கொடுத்தனர். அவர் மறுபடியும் பிரான்சின் பேரரசரானார். ஆனால், 'நூறு நாள்கள்' தான் ஆட்சி புரிந்தார். ஏனெனில் 1815, ஜூன் 18ஆம் நாள் ஆர்தர் வெல்லஸ்லியின் தலைமையின்கீழிருந்த பிரிட்டிஷ் படையினாலும், புளூசர் தலைமையின்கீழிருந்த பிரஷ்யப் படையினாலும் வாட்டர்லூ என்னுமிடத்தில் முறியடிக்கப்பட்டார். நெப்போலியன் பிரிட்டிஷ் கப்பல் பெல்லாரோபோன் காப்டனிடம் சரணடைந்தார். அவருடைய திட்டங்களைத் தோல்வியுறச் செய்தது பிரிட்டிஷ் கப்பற்படை; அதே பிரிட்டிஷ் கப்பலில் நெப்போலியன் சரண் அடைய வேண்டி வந்தது. அவர் அட்லாண்டிக் பெருங் கடலில் உள்ள செண்ட் ஹெலினா தீவுக்கு அனுப்பப்பட்டார். அங்குப் புற்றுநோயினால் 1821-ல் அவர் மாண்டார்.

**(உ) நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்**

(i) நெப்போலியன் பல ஐரோப்பிய நாடுகளில் தலையிட்டுப் புரட்சிக் கருத்துகளைப் பரப்பினார். ஆனால், அவரது போர்கள் ஐரோப்பாவில் தேசியம் வளரக் காரணமாக இருந்தது. தேசியம் அவருடைய வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகும்.

(ii) பிரிட்டனின் கடல் வலிமையும் பொருளாதார பலமும் அவருடைய வீழ்ச்சிக்குக் காரணங்களாகும்.

(iii) ருஷ்யப் படையெடுப்பு மற்றொரு காரணமாகும்.

(iv) போர்கள் அவருடைய நிதி நிலைமையைப் பாழாக்கின.

(v) நெப்போலியன் ஒருவரின் படைத் திறமை, நிர்வாகத் திறமையை மட்டுமே நம்பி பேரரசு உருவாக்கப்பட்டது. நெப்போலியனது உடல் நலம் குறையவே (புற்றுநோய்) பேரரசு சரியத் தொடங்கியது.

## (உ) நெப்போலியன் மதிப்பீடு

பிரெஞ்சுப் புரட்சி நடந்திராவிட்டால் நெப்போலியனுக்குத் தம்து திறமையைக் காண்பிக்க வாய்ப்புகள் கிடைத்திருக்காது; அவர் உலகப் புகழ் அடைந்திருக்க முடியாது. நவீன உலக வரலாற்றில் தோன்றின தளகர்த்தர்களுள் அவர் தலைசிறந்தவர். நூறு போர்களில் வெற்றி பெற்ற இந்த மாவீரர் ஒரு போரில் (வாட்டர்லூ) தோல்வியடைந்ததால், அவர் திறமையற்ற தளகர்த்தர் என்று கருதிவிட முடியாது. அவருடைய தோல்விக்குக் காரணங்கள் தேசிய உணர்ச்சியும், பிரிட்டிஷ் கடல் ஆதிக்கமும், பொருளாதார பலமுமேயாகும். அவர் அடைந்த சில மாபெரும் வெற்றிகள் மாரெங்கோ, ஹோகன் லின்டன், ஜீனா, ஆஸ்டர்லிட்ஸ் ஆகியன வாகும். அவர் லண்டனைத் தவிர, எல்லா ஐரோப்பியத் தலை நகரங்களுக்குள்ளும் வெற்றியுடன் நுழைந்திருக்கிறார். ரோம், பெர்லின், வியன்னா, மாட்ரிட், மாஸ்கோ முதலிய நகரங்களில் அவருடைய வெற்றிவீரர்கள் வரவேற்புக் கொடுத்திருந்தனர். கடல்தான் அவர் லண்டனுக்குப் போவதைத் தடுத்தது.

நெப்போலியனின் வெற்றிகளினால் அமைக்கப்பட்ட பேரரசு சிறிது காலத்திற்குள் அழிந்தபோதிலும், அவருடைய சீர் திருத்தங்கள் நிலைத்து நின்று அவருடைய புகழைக் காக்கின்றன. அவர் ஆட்சிக்கு வரும்போது பிரான்சில் குழப்பம் மிகுந்திருந்தது; அவர் வீழ்ச்சியடையும்போது நாட்டில் அமைதி நிலவியது. அவருடைய திறமைக்கு அவரது சீர்திருத்தங்களே, முக்கியமாகப் போப்பாண்டவருடன் செய்து கொண்ட ஒப்பந்தமும், சட்டத் தொகுப்பும் சான்றுகளாகும். அவரது ஆட்சியில் திறமைக்குத்தான் இடமிருந்தது. **சூல்ட், மூராட், மாஸ்ஸினா** முதலிய **மார்ஷல்கள் (Marshals)** சாதாரணப் படைவீரர்களாயிருந்து திறமையினால் உயர்ந்த பதவி அடைந்தவர்கள். பிரான்சில் புரட்சிக் கருத்துக்களையும், புரட்சியின் விளைவாகத் தோன்றிய சமூக, பொருளாதார மாற்றங்களைக் கட்டிக் காத்து, வளர்ச்சியடைய வழி செய்திருக்கின்றார். ஐரோப்பாவில் காணப்பட்ட பழைய நிறுவனங்கள் அழிக்கப்பட்டு, அவ்விடங்களில் புதுமை, புரட்சிக் கருத்துகள் தோன்றக் காரணமாக இருந்தவர் நெப்போலியனே ஆவார். நூற்றுக்கணக்கான ஜெர்மானியச் சிற்றரசுகளை இணைத்து ஒருசில பெரிய அரசுகளாக ஆக்கி, ஒருமைப்பாட்டின் மேன்மையை உணர்த்தியவரும் நெப்போலியனே ஆவார். கேட்பாரும் மதிப்பாரும் இன்றி, வெறும் பகட்டாரவாரத்துடன் காணப்பட்ட பண்டைய சின்னமான 'புனித ரோமானியப் பேரரசு' என்ற நிறுவனத்தை 1806ஆம் ஆண்டில் நெப்போலியன் அழித்துவிட்டார்.

''புனிதத் தன்மை ஒன்று மட்டுமன்றி, மனிதன் எந்த அளவுக்குப் பேறு பெற முடியுமோ, அந்த உயர் அளவினை எட்டியவர் நெப்போலியன் ஒருவரே'' என **தாக்குவில் (Tocqueville)** என்ற புகழ்பெற்ற பிரெஞ்சு அறிஞரின் கூற்றினைவிட அதிகமாக நெப்போலியனின் பெருமையை அளவிட முடியாது எனக் கருதலாம். அதேமாதிரிப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியரான **ஆக்டன்** பிரபுவும் நெப்போலியனைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்: ''வரலாற்றில் மிகவும் திறமையுள்ளவரும் புகழ் பெற்றவருமான நெப்போலியனின் மனது செயல்படுவதைக் கவனிப்பதைக் காட்டிலும் அறிவுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடிய பயிற்சி வேறு எதுவுமில்லை.''

## அத்தியாயம் 7

# லத்தீன் அமெரிக்காவில் விடுதலைப் போராட்டங்கள்

லத்தீன் இனத்தவர்களான ஸ்பானியர், போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் குடியேற்றங்கள் நிறைந்த தென் அமெரிக்காவும், மத்திய அமெரிக்காவும், மெக்சிக்கோவும், மேற்கிந்தியத்தீவுகளும் லத்தீன் அமெரிக்கா எனப் பெயர் பெற்றன. இந்த லத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதி ஸ்பெயின் போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன. 1500-ல் பிரேசிலை போர்ச்சுகீசியர் கைப்பற்றினர். 1520-ல் மெக்சிகோவை ஸ்பானிய படைத்தலைவர் கார்டஸ் என்பார் (Cortez) வெற்றிகொண்டு அங்கே ஸ்பெயினின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். பிஸாரோ (Pizarro) எனும் பிறிதொரு ஸ்பானிய படைத் தலைவர் 1530-ல் பெருவைக் (Peru) கைப்பற்றி ஸ்பானியப் பேரரசுடன் இணைத்தார். இங்ஙனம் வட அமெரிக்காவில் 13 குடியேற்ற நாடுகளையும் கனடாவையும் உள்ளடக்கிய பேரரசு ஒன்றை பிரிட்டன் உருவாக்கியதைப் போல ஐபீரிய அரசுகளான (Iberian) ஸ்பெயினும் போர்ச்சுகலும் லத்தீன் அமெரிக்கா முழுவதையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தன.

வட அமெரிக்காவின் பதின்மூன்று குடியேற்றங்களும் 18ஆம் நூற்றாண்டில் விடுதலைப் போரின் விளைவாக பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட்டன என்பதை முன் ஓர் அத்தியாயத்தில் கண்டோம். அதுபோல, விடுதலை இயக்கங்களின் விளைவாக லத்தீன் அமெரிக்க நாடுகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கின என்பதை இவ்வத்தியாயத்தில் காணலாம்.

### (அ) லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கத்திற்கான காரணங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டில் வட அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் செய்த புரட்சிக்கும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் லத்தீன் அமெரிக்காவில் எழுந்த விடுதலை இயக்கத்திற்கும்

இடையே சிறு வேற்றுமையுள்ளது. அதாவது, ஏழாண்டுப் போரில் வெற்றி பெற்று புகழேணியின் உச்சியிலிருந்த பிரிட்டனின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்தன பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றநாடுகள். ஆனால், ஸ்பெயினும் போர்ச்சுகலும் மாவீரன் நெப்போலியனிடம் தோற்றுப் பெருமையிழந்த நிலையில் வலிமை குன்றி இருந்தபோதுதான் லத்தீன் அமெரிக்க விடுதலைக்கான முதலடி எடுத்து வைக்கப்பட்டது. மேலும், ஆங்கில நாட்டுக் குடியேற்றக்காரர்கள் கொடுங்கோல் மன்னர் மூன்றாம் ஜார்ஜின் அநீதியானதும், முறையற்றதுமான வரி விதிப்பிற்கு எதிராகப் போர்க் கொடி ஏந்தினர். ஆனால் லத்தீன் அமெரிக்கக் குடியேற்றக்காரர்களோவெனில், பிரெஞ்சுக்காரர் **ஜோசப் போனபார்ட்டின் (Joseph Buonaparte)** ஜனநாயகப் பற்று காரணமாக, வரம்பற்ற முடியாட்சியில் நம்பிக்கை கொண்ட ஸ்பானிய மன்னர் **ஆறாம் பர்டினாண்டு (Ferdinand VI)** வீழ்ச்சியுற்றதால் புரட்சியில் இறங்கினர். மூன்றாவதாக, ஆங்கிலக் குடியேற்றக்காரர்கள் சுதந்திர வாழ்க்கை மரபுகளில் ஊறித் திளைத்தவர்கள். அப்படிப்பட்ட மரபுகள் லத்தீன் அமெரிக்கக் கிளர்ச்சியாளரிடம் வேருன்றியிருந்ததாகக் கூற முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் லத்தீன் அமெரிக்கக் குடியேற்றங்களில் நடைபெற்ற புரட்சிக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, பொன்னும் வெள்ளியும் நிறைந்து வழிந்த பெரு, பிரேஸில், மெக்சிக்கோ ஆகிய குடியேற்ற நாடுகளை யாண்ட ஸ்பானிய, போர்ச்சுகீசிய ஆளுநர்கள் பழைய குடியேற்ற நாட்டுக் கொள்கையைப் பின்பற்றினர். தாய் நாட்டின் நன்மைக்காகக் குடியேற்ற நாடுகளின் நலனைப் புறக்கணித்தனர். இதனால் லத்தீன் அமெரிக்கக் குடியேற்றங்களில் வெறுப்பு வளர்ந்தது. மக்கள் மனம் வெதும்பினர்.

இரண்டாவதாக, இக்குடியேற்றங்களில் வாழ்ந்த மக்கள் பல வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர். அவர்களில் ஐபீரிய தீபகற்பத்திலிருந்து வந்த ஸ்பானியர் அல்லது போர்ச்சுகீசியர் முதல் பிரிவினர். அவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தபோதிலும் ஏற்றம் பெற்று விளங்கினர். தலைமை இடத்தைப் பிடித்திருந்தனர். அவர்களுக்கு அடுத்தபடியாக இருந்தவர்கள் குடியேற்றங்களில் பிறந்த ஸ்பானியர் அல்லது போர்ச்சுகீசியர்கள். அவர்கள் **கிரியோல்கள் (Creoles)** என அழைக்கப்பட்டனர். இந்த இரு வகுப்பாருந்தான் லத்தீன் அமெரிக்காவின் ஆட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். அவர்களுக்குக் கீழே **மெஸ்டியோக்கள் (Mestizos)** என வழங்கும் இந்தியரும் (பாதி ஐரோப்பியர் பாதி

இந்தியர் — கலப்பினம்) நீக்ரோக்களும் இருந்தனர். லத்தீன் அமெரிக்காவின் நிலையை எண்ணிப் பார்ப்போமானால் அது தாய் நாட்டு மக்கள் தாராளமாகக் குடியேறி வாழக்கூடிய பகுதியாகக் கருதப்படவில்லை. அதற்கு மாறாக ஸ்பானிய அல்லது போர்ச்சுகீசிய மன்னர்களுக்குச் சொந்தமான நிலப் பகுதியாகவே கருதப் பட்டது. அங்கே குடியேறும் உரிமையை இந்நாடுகளின் மன்னர் களே வழங்கினர். குடியேற்றங்களின் ஆட்சியும் அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் தாய் நாடுகளில் இருந்து வந்த ஸ்பானியரும், போர்ச்சுகீசியரும், கிரியோல்களும், இந்தியரும், நீக்ரோக்களும் பொதுவான அரசாங்கத்தின்கீழ்ப் பிணைந்திருந்தனர். இங்ஙனம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விடுதலைப் போர் எழுவதற்கு முன்னால் புதிய உலகத்தில் (New World) இருந்த ஸ்பானிய, போர்ச்சுகீசியப் பேரரசில் முழு அமைதி, **ஸ்பானிகா அமைதி** (Pax Hispanica) நிலவி வந்தது. ஜெசூட் பாதிரிமார்களின் தீவிர பிரச்சாரத்தின் விளைவாக லத்தீன் அமெரிக்கக் குடியேற்ற மக்கள் ஸ்பெயின், போர்ச்சுகீசிய மன்னர்களிடம் பற்றுறுதிகொண்டு அடங்கி வாழப் பழகியிருந் தனர். தங்களின் கல்வி நிறுவனங்களின் மூலமாகவும் பிரச் சாரத்தின்மூலமாகவும் குடியேற்ற மக்களை ஸ்பெயினுக்கும் போர்ச்சுகலுக்கும் அடங்கிய குடிமக்களாகச் செய்துவந்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் 1768ஆம் ஆண்டில் தென் அமெரிக்கா விலிருந்து விரட்டப்பட்டனர். இது ஐபீரியப் பேரரசுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக வந்தது. ஜெசூட் சபையினரைக் கலைத்ததால் ஐபீரியாவிடம் லத்தீன் அமெரிக்க மக்கள் கொண் டிருந்த பற்றுறுதி ஆட்டங்கண்டது.

மூன்றாவதாக, லத்தீன் அமெரிக்காவில் விடுதலை இயக்கம் வளர்ச்சியடைய அமெரிக்க விடுதலைப் போரும் பிரெஞ்சுப் புரட்சியும் உதவி செய்தன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகியவற்றை வலியுறுத்திய பிரெஞ்சுப் புரட்சி எழுத் தாளர்கள் தென் அமெரிக்காவின் அறிஞர்கள்மீது செல்வாக்கு செலுத்தினர். விழிப்புணர்ச்சிகொண்ட அவ்வறிஞர்கள், ஸ்பெயினும் போர்ச்சுகலும் குடியேற்றங்களை மாற்றாந்தாய் போல் புறக்கணிப்பதையும், பல நூற்றாண்டுகளாக அவைகளைச் சுரண்டி வந்ததையும் உணரத் தொடங்கினர். 13 அமெரிக்கக் குடியேற்றங்கள் பிரிட்டனின் ஆதிக்கத்தை ஒழித்தபோதும் 1789ஆம் ஆண்டில் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியானது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னதக் கருத்துகளை மக்களுக்குக் கிடைக்குமாறு செய்தபோதும் லத்தீன் அமெரிக்க அறிஞர்களும் உரிமை வேட்கை கொண்டனர்.

நான்காவதாக, தென் அமெரிக்காவில் விடுதலை இயக்கம் எழுந்ததற்கு ஸ்பெயினின் சீரழிவு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. 1713ஆம் ஆண்டில் முடிவடைந்த ஸ்பானிய வாரிசு உரிமைப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் ஸ்பெயின் வலிமை குன்றி அது இரண்டாந்தர நாடாக நலிந்திருந்தது. பதினாறாம் நூற்றாண்டில் ஸ்பெயினை **இரண்டாம் பிலிப்** (Philip II) ஆண்ட போது அது ஒரு சக்தி வாய்ந்த பேரரசாக விளங்கியது. ஸ்பெயின், போர்ச்சுகலோடு ஐரோப்பியப் பகுதிகளும் அமெரிக்கக் குடியேற்றங்களும் அதில் அடங்கியிருந்தன. சமயச் சீர்திருத்தத்தின் விளைவாக (Reformation) ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் அஸ்திவாரமே கலகலக்கும் ஆபத்து வந்தபோது, ஸ்பெயின்தான் கத்தோலிக்க மறு சீர்திருத்த இயக்கத்திற்குத் (Counter Reformation) தலைமை தாங்கி புராடஸ்டென்ட் புரட்சி அலை பரவுவதை தடுத்தது. ஆனால் பதினேழாம் நூற்றாண்டில் அது பேரரசப் பொலிவிழந்து, பலங்குன்றி இருந்தது. போர்போன் மன்னர்கள் ஆட்சியில் பிரெஞ்சுப் பேரரசிற்குட்பட்ட சிற்றரசுபோல் தடுமாறி நின்றது. பிரான்ஸிற்கும் இங்கிலாந்திற்குமிடையேயான ஆதிக்கப் போட்டியில் அதன் வளங்களெல்லாம் பாழ்பட்டன. அமெரிக்கச் சுதந்திரப்போர் நடைபெற்றபோது பிரான்சும் ஸ்பெயினும் தனக்கெதிராகக் குடியேற்றக்காரர்களுடன் சேர்ந்து கொண்டதையோ, அதனால் குடியேற்றக்காரர்கள் வெற்றி பெற்றதையோ பிரிட்டன் மறக்கவில்லை. ஸ்பெயினைப் பழிவாங்கத் தக்க தருணம் நோக்கிக் காத்திருந்த பிரிட்டன் 1805-ல் **ட்ரபால்கருக்கருகில்** (Trafalgar) பிரெஞ்சு-ஸ்பானியக் கடற்படையை அழித்துத் தனது பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டது. இவற்றினாலெல்லாம் வலிமையிழந்த ஸ்பெயினின் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் லத்தீன் அமெரிக்கக் குடியேற்றக்காரர்கள் தாய் நாட்டிற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.

இறுதியாக, ஸ்பெயினைக் கைப்பற்றிய மாவீரன் நெப்போலியன் அந்நாட்டின் மரபுரிமையால் வந்த மன்னரை நீக்கிவிட்டுத் தமது சகோதரன் ஜோசப் போனபார்டை அந்நாட்டு அரியணையில் அமர்த்தினார். அதுபோலவே போர்ச்சுகீசிய அரசு குடும்பத்தினரை லிஸ்பனிலிருந்து விரட்டினார். இந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு லத்தீன் அமெரிக்காவில் புரட்சிப் புயல் கிளம்பியது. இங்ஙனம் எழுந்த லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கத்தில் **பிரான்சிஸ்கோ டி மிராண்டா** (Francisco de Miranda), **சான் மார்டின்** (San Martin), **சைமன் பொலிவர்** (Simon Bolivar) ஆகிய புரட்சி வீரர்கள் முக்கியப் பங்கு கொண்டனர்.

### (ஆ) புரட்சியின் போக்கு

வெனிசுவெலா (Venezuela) நாட்டில் பிறந்த **பிரான்சிஸ்கோ மிராண்டா** (1750 - 1816) அமெரிக்க விடுதலைப் போரிலும் பிரெஞ்சுப் புரட்சியிலும் நேரடியாகப் பங்குகொண்டு நல்ல அனுபவம் பெற்றிருந்தார். அவர் 1810ஆம் ஆண்டில் வெனிசுவெலாவில் மக்கள் புரட்சியை உருவாக்கி அந்நாட்டை விடுவித்தார். ஆனால் புரட்சியாளர்களிடையே எழுந்த உட்பூசலால் அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார். ஸ்பானிய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு காட்ஸ் நகரச் சிறையில் வாடினார். விடுதலைச் சிறகடித்துப் பறக்க நினைத்த அவர் 1816-ல் வெங்கொடுமைச் சிறையில் மாண்டார்.

மிராண்டாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் தெற்கில் சான் மார்ட்டினும், வடக்கில் சைமன் பொலிவரும் விடுதலைப் பணியைத் தொடர்ந்து செய்து வரலாயினர். அர்ஜன்டினாவில் பிறந்த **சான் மார்ட்டின்** (1778 - 1850) ஸ்பானியப் படையில் சேர்ந்து பணியாற்றினார். ஆனால் தாய்நாட்டின் விடுதலைக்காகப் படைப் பதவியைத் துறந்துவிட்டு ஆர்ஜன்டினாவிலும் சிலியிலும் (Chile) புரட்சியைத் தூண்டினார். ''ஆண்டீஸ் மலைப் படை'' யெனும் (the "Army of the Andes") புரட்சிப் படையை உருவாக்கி, ஸ்பானியப் படையை **கிரானடாவிலும் சான்டியாகோ**விற்கு அருகிலுள்ள **மெய்போ** (Maipo) விலும் முறியடித்தார். சிலியைச் சுதந்திர நாடாக அறிவித்தார். அடுத்தபடியாக பெருவிலும் ஸ்பானியரை விரட்டிவிட்டு அந்நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார். அங்கேதான் அவர் சைமன் பொலிவரைச் சந்தித்தார். ஆனால் அவ்விருவரும் இரு துருவங்கள் போல் இருந்தனர். மார்ட்டின் முடியாட்சியில் மாறாத நம்பிக்கை கொண்டிருந்தார். சைமன்பொலிவரோ குடியாட்சியை ஆதரித்தார். வேற்றுமை வளர்ந்து கிளர்ச்சியாளர்களிடையே பிளவு ஏற்படுவதை மார்ட்டின் விரும்பவில்லை. எனவே, விடுதலை இயக்கம் வெற்றிபெறவும், கிளர்ச்சியாளர் ஒன்றுபட்டுப் பணி புரியவும் சான் மார்ட்டின் அரசியலிலிருந்து ஓய்வு பெற்று பிரான்சுக்குச் சென்று விட்டார். அங்கே 1850ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

மார்ட்டின் ஓய்வு பெற்றதும் தென் அமெரிக்க விடுதலை இயக்கத்தின் தலைவராக விளங்கியவர் **சைமன் பொலிவரானார்** (1783 - 1830). வெனிசுவெலாவில் பிறந்து ஸ்பெயினிலே கல்வி கற்ற பொலிவரை பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகள் வெகுவாகக் கவர்ந்தன. விரைவிலேயே அவர் தென் அமெரிக்காவின் வட




**படம் 7.1 விடுதலை அடைந்த லத்தீன் அமெரிக்க நாடுகள்**

பகுதியில் புரட்சியாளர்களின் தலைவரானார். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் சில தோல்விகளைத் தழுவ நேர்ந்த போதிலும் பின்னால் அவர் ஸ்பானியப் படையை நியூ கிரானடாவில் உள்ள **பொயாகா** (Boyaca) எனுமிடத்தில் சிதறடித்தார். வெனிசுவெலாவையும் ஸ்பானியரிடமிருந்து விடுவித்தார். விடுதலையடைந்த இவ்விரு நாடுகளின் ஜனாதிபதியாகத் தம்மை அறிவித்துக் கொண்டார். அதே சமயத்தில் அவர் ஈக்வெடார், பெரு, பொலீவியா (அவரது பெயரால் அழைக்கப்பட்ட பெருவின் ஒரு பகுதி) ஆகிய பகுதிகளையும் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதில் வெற்றி கண்டார். இங்ஙனம் விடுதலை வீரராகத் திகழ்ந்த சைமன் பொலிவர் "தென் அமெரிக்காவின் வாஷிங்டன்" என வருணிக்கப்பட்டார். ஆயினும் அவர் தமது இறுதிக் காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ முடியவில்லை. தமது தொண்டர்கள் அற்பமான பிரச்சினைகளுக்ாகத் தமக்குள்ளே மோதிக் கொண்டதைக் கண்டு அவர் மனம் மிக நொந்தார். "போரைவிட அமைதியைக் கண்டே நான் அதிகமாக அஞ்சுகிறேன்" என அவர் மனம் வெதும்பிக் கூறினார்.

1821-ல் மெக்சிகோ விடுதலை அடைந்தது. **இடுர்பைட்** (Iturbide) எனும் புரட்சித் தலைவரின் சீரிய தலைமையில் அந்நாடு சுதந்திர நாடாகத் தலையெடுத்தது. அதைத் தொடர்ந்து **கோச்ரேன்** (Cochrane) என்பாரின் தலைமையில் எழுந்த புரட்சி பிரேசிலை உரிமை பெற்ற நாடாகச் செய்தது. இவ்வாறு மத்திய மற்றும் தென் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கலுற்றன.

குடியேற்றங்களை ஒவ்வொன்றாக இழப்பதைப் பொறாத ஸ்பெயினும் போர்ச்சுகலும் சில ஐரோப்பிய நாடுகளின் உதவியை நாடின. இதன் விளைவாக ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் அடங்கிய ஐரோப்பியக் கூட்டு அமைப்பு (Concert of Europe) லத்தீன் குடியேற்றங்களை மீட்டும் பணியில் ஸ்பெயினுக்கும் போர்ச்சுகலுக்கும் உதவ முன்வந்தது. இந்நிலையில்தான் 1823-ல் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி **மன்ரோ** அவர்கள் புதிய உலக நாடுகளின் விவகாரங்களில் தலையிட வேண்டாமெனப் பழைய உலக நாடுகளை (ஐரோப்பிய நாடுகள்) கேட்டுக் கொண்டார் அமெரிக்கச் சட்டப் பேரவைக்குத் (Congress) தாம் அனுப்பிய புகழ்பெற்ற உரையில் **'அமெரிக்கா அமெரிக்கருக்கே'** என முழங்கினார். ஐரோப்பிய நாடோ அல்லது கூட்டமைப்போ மேற்குக்கோளத்தில் (Western Hemisphere) தலையிடுவதோ தமது

திட்டத்தைப் பரப்ப முயல்வதோ் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு (U.S.A.) எதிரான செயலாகக் கருதப்படுமென அறிவித்தார். இந்த **மன்ரோ கொள்கையை** (Munro Doctrine) பிரிட்டனின் பிரதமர் **ஜார்ஜ் கானிங்** (George Canning) ஆதரித்தார். பதினெட்டாம் நூற்றாண்டில் தனக்கு எதிராகப் புரட்சி செய்த அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு உதவ முன்வந்த ஸ்பெயின் மீது இப்போது பிரிட்டன் வஞ்சம் தீர்த்துக் கொண்டது. விடுதலை பெற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அங்கீகாரம் அளித்து ஜார்ஜ் கானிங் "உலகில் சக்திச் சமநிலையைக் காக்க புதிய உலகம் வாழ்வது அவசியம்" எனவும் முழங்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் தென் அமெரிக்காவை ஐரோப்பியரின் தாக்குதலிலிருந்து காக்க மன்ரோ கொள்கையைவிட, பிரிட்டனின் சக்தி வாய்ந்த பிரிட்டிஷ் கடற்படையே என்பதை நினைவிலே கொள்ள வேண்டும்.

### (இ) விடுதலைப் போரின் விளைவுகள்

(1) விடுதலைப் போரின் விளைவாகத் தென் அமெரிக்காவில் பல சுதந்திரக் குடியரசுகள் தலையெடுத்தன.

(2) ஐபீரிய நாடுகளான ஸ்பெயினும் போர்ச்சுகலும் தங்களது பேரரசை இழந்தன. பேரரசை இழந்ததால் அவற்றின் பெருமை மங்கியபோதிலும் அவற்றின் வளம் குன்றவில்லை. ஒருவகையில் குடியேற்றங்களின் இழப்பு நன்மையாக முடிந்தது. பொருளாதார ரீதியாகப் பார்த்தால் தற்போது ஸ்பெயினும் போர்ச்சுகலும் எப்போதும் இல்லாத அளவு செல்வம் கொழிக்கும் நாடுகளாக விளங்குகின்றன. மகிழ்ச்சியாக வாழ்கின்றன. மக்கள் தொகை இரட்டிப்பானதுடன் உள்நாட்டு வளங்களெல்லாம் பல்கிப் பெருகியுள்ளன.

(3) தென் அமெரிக்கப் பகுதிகளை இழந்ததால் ஸ்பானிய மன்னர்களின் வருவாய் வெகுவாகக் குறைந்து விட்டது. அதனால் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டி வரிகளைத் திரட்டுவதற்கு ஸ்பானிய மன்னர்கள் **கார்ட்டஸ்** (Cortes) எனும் பாராளுமன்றத்தின் தயவை நாட வேண்டி வந்தது. இங்ஙனம் மன்னர்களின் நிதித் தட்டுப்பாட்டினால் ஸ்பெயினில் மக்களாட்சி வேண்டுமென்று வற்புறுத்திவந்த **லிபரல்களின்** (Liberals) கை மேலோங்கியது. இருப்பினும் அந்நாட்டில் மக்களாட்சியோ அல்லது வரம்பிற்குட்பட்ட முடியாட்சியோ வளர முடியவில்லை. ஒருமுகப்படுத்தப்பட்ட வல்லாட்சியையும் வரம்பற்ற முடியாட்சியையும் ஆதரித்த திருச்சபையின் செல்

வாக்கே மக்களாட்சி அதிக வளர்ச்சியடையாமல் தடை செய்தது. எவ்வாறெனினும் ஸ்பெயினில் மன்னருக்கும் கார்டசுக்குமிடையே யான போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

(4) லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கம் அப்பகுதியில் இருந்த அமைதியைக் குலைத்து விட்டது. ஸ்பானியர், கிரியோல்கள், இந்தியர், நீக்ரோக்கள் எனப் பிரிந்து நின்ற மக்கட் கூட்டத்தினர் மூன்று நூற்றாண்டுகள் ஒன்றுபட்டு அமைதியாக வாழ முடிந்தது என்றால் அதற்குக் காரணம் அவர்கள் பொதுவான கொள்கைத் திட்டமும் நம்பிக்கையுமே யாகும். அவை மறைந்ததும் பூசல்கள் எழுந்தன. ஐபீரியர்களைப் போலவே லத்தீன் அமெரிக்க மக்களும் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், அமைதியற்ற குணம் படைத்தவர்களாகவும் இருப்பதால் தென் அமெரிக்காவில் ஓயாத கலகங்களும் ஒழியாத புரட்சிகளும் மலிந்து கிடக்கின்றன. ''இஸ்பானிகா அமைதி'' இருந்த இடத்தில் இன்று அரசுகளுக்கிடையேயான போர்களும் உள்நாட்டுப் புரட்சிக் கலகங்களும் நடந்த வண்ணமிருக்கின்றன.

## அத்தியாயம் 8

# ஐரோப்பாவில் தேசிய இயக்கம் நிறைவுறுதல்

### (அ) முன்னுரை


பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல நிகழ்ச்சிகள் நல்ல ஒற்றுமையும் ஒருமைப்பாடும்கொண்டு வளர்ந்துள்ளன. ஐரோப்பிய வரலாற்றில் 1830 — 1880 ஆண்டுகளுக்கிடையேயான காலத்தில் இருநாடுகள் தேசிய ஒற்றுமைகொண்டு உருவானகதையைக் காண முடிகின்றது. சவாய் (Savoy) அரசகுலத்தில் இறையாதிக்கம் இத்தாலிய தீபகற்ப முழுவதும் பரவியதையும், 1871-ல் பிரஷ்ய மன்னர் முதலாம் **வில்லியம்** (William I) ஜெர்மன் பேரரசராக முடிசூட்டிக் கொண்டதன்மூலம் ஜெர்மனி பிரஷ்யமயமானதையும் காண முடிகின்றது. அப்போது ஜெர்மானிய அரசுகளும், இத்தாலிய நாடுகளும் பல போர்களில் ஈடுபட்டு ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை அழிக்க முற்பட்டன; பிரான்ஸ், ருஷ்யா போன்ற வல்லரசுகளின் சக்தியினை மட்டுப் படுத்தின; அந்தந்தப் பகுதியில் வாழ்ந்த சிறுநாடுகளை அச்சுறுத்தி அவற்றின் இறைமையைப் பறித்தன. இவற்றின் விளைவாக ஐரோப்பாவில் இத்தாலி என்றும் ஜெர்மனியென்றும் இரண்டு புதிய அரசுகள் ஆர்த்தெழுந்தன.

### (ஆ) ஐக்கிய இத்தாலி உருவாகுதல்

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பாவின் தலைவிதியை நிர்ணயிக்கவந்த **வியன்னா காங்கிரஸ்** (Vienna Congress) இத்தாலியில் வளர்ந்திருந்த தேசிய உணர்வுகளை மதிக்கவில்லை. வியன்னா காங்கிரஸ் திட்டத்தின்கீழ் இத்தாலி பல அரசுகளால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. பியட்மாண்ட்-சார்டினியாவை ஆட்சி செய்து வந்த சவாய் வம்சத்து இரண்டாம் **விக்டர் இம்மானுவேல்** ஒருவர்தான் இத்தாலியர். இத்தாலியின் வடபகுதியில் உள்ள **வெனிஷியா, லம்பார்டி** ஆஸ்திரிய ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. மத்திய இத்தாலியில் உள்ள **பார்மா, மொதினா, டஸ்கனி** பகுதிகள் ஆஸ்திரிய கோமகன்களால் ஆட்சி செய்யப்

யட்டு வந்தன. **போப் ஆண்டவர்** ஆட்சி செய்த பகுதிகள் மத்திய இத்தாலியில் இருந்தன. தெற்கு இத்தாலியும், சிசிலித் தீவும் **போர்பன் மன்னரால்** நேப்பிள்ஸ் நகரிலிருந்து ஆளப்பட்டு வந்தன. அதன் விளைவாக இத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. ஆனால் 1830ஆம் 1848ஆம் ஆண்டி லும் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திற்கு இத்தாலியில் எதிர்ப்பு தோன் றியது. இத்தாலிய மக்கள் அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். ஏற்கெனவே செயல்பட்டு வந்த **கார்பொனரி இரகசியக் கழகத்தின்** (Carbonari Secret Society) அடிப்படையில் **மாஸினி** (Mazzini) எனும் சிந்தனையாளர் **இளம் இத்தாலி** (Young Italy) என்ற புதிய இரகசியச் சங்கமொன்றை நிறுவினார். விரைவிலேயே ஆயிரக்கணக்கான இத்தாலிய இளைஞர்கள் தாய்நாட்டுப் பணியில் தம்முயிரையும் அளிக்கத் தயாராக நின்றனர். விடுதலை பெற்ற ஐக்கிய இத்தாலியை உருவாக்கும் **மாஸினியின் இயக்கம்** (Resorgimento) வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்தது. ஆயினும் 1831-ல் நாடு தழுவிய புரட்சி தோல்வி கண்டது. மாஸினியும் நாடு கடத்தப்பட் டார். அவரது புரட்சி தோல்வியுற்றபோதிலும் ஆஸ்திரிய ஆதிக்கத்திலிருந்தும் குருமாரின் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட்டு மக்களாட்சி மலரும் குடியரசின்கீழ் இத்தாலி ஐக்கியமடைய வேண்டுமென்ற கருத்திற்கு அவர் ஊக்கமும் உத்வேகமும் ஊட்டிச் சென்றார். இதற்கிடையில் **ஒன்பதாம் பயஸ்** (Pius IX) எனும் போப்பாண்டவர் இத்தாலியக் கூட்டரசு உருவாக்கும் சில முன் னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். **பியட்மாண்ட்** மன்னர் (Piedmont) **சார்லஸ் ஆல்பர்டும்** (Charles Albert) சார்டீனிய மக்களுக்குத் தாராளத் தன்மை கொண்ட அரசியல் திட்டமொன்றை (Statuto) வகுத்தளித்தார். இத்தகைய சூழ் நிலையில்தான் இத்தாலியில் புரட்சிப் புயல் வீசத் தொடங்கியது. 1848-ல் எழுந்த புரட்சியில் ஆஸ்திரியாவிற்கு எதிரான ஒற்றுமை உணர்ச்சி இறுதியில் இத்தாலிய விடுதலைக்கு வழி வகுத்தது என்றாலும் அத்தகைய இத்தாலிய விடுதலைக்கும் ஐக்கியத் திற்கும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியது பியட்மாண்ட் அரசே யாகும்.

மாஸினி கனவு கண்ட குடியரசு இத்தாலியில் உருவாவதாக இல்லை. அதற்கு மாறாகப் பியட்மாண்ட்டின் மன்னர் **விக்டர் இமானுவலின்** (Victor Emmanuel) தலைமையில் ஒன்றுபட்ட முடியரசாக எழும் வாய்ப்பே பெருகியது. **கவுன்ட் கவூரை** (Count Cavour) முதலமைச்சராகப் பெற்றிருந்த முற்போக்குக் கொள்கையுடைவரான விக்டர் இமானுவல் பியட்மாண்டை ஒரு




படம் 8.1 ஐக்கிய இத்தாலி

மூன்மாதிரி அரசாக உருவாக்கினார். அப்பணியில் கவூருக்கும் பெரும் பங்குண்டு. அமைச்சரவையின் தலைவரான கவூர் தமக்கு முன்னால் இருந்த **ஜியோபர்டி** (Gioberti), **தால்போ** (Dalbo), **தியஸிக்லியோ** (D'Azeglio) போன்றோரின் எழுத்துகளால் உருவாகியிருந்த தேசிய உணர்வை நெறிப்படுத்தித் தமது நாட்டின் வலிமையைப் பெருக்கத் திட்டமிட்டார். உள்நாட்டில் முன்னேற்ற நடவடிக்கைகளின்மூலம் பாராளுமன்ற முறை அரசியலைப் புகுத்தினார். பொருளாதாரத்தைப் பொலிவுறச் செய்தார். சமயத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். குறுகிய எண்ணங்கொண்ட பியட்மாண்ட் அரசியல் வாதியாக விளங்க அவர் விரும்பவில்லை. இத்தாலிய விடுதலைக்கும் ஐக்கியத்திற்கும் ஐரோப்பிய அரசியலில் செல்வாக்குப் பெற்றுள்ள நாடுகளின் ஆதரவைப்பெறவும் அவர் தயங்கவில்லை. **கிரிமியப் போர்** (Crimean War) அவருக்குப் பெருவாய்ப்பாக வந்தது. அந்தக் கிரிமியப் போரைப் பயன்படுத்திப் பாரீஸ் மாநாட்டில் இத்தாலியப் பிரச்சினையைப் பல நாடுகள் அக்கறை கொள்ளத்தக்க ஐரோப்பியப் பிரச்சினையாக்கினார். அதற்குக் காரணம், அவர் மாஜினியைப் போன்று அல்லாமல், ஆஸ்திரிய ஆதிக்கத்தை இத்தாலியர் தனித்து நின்று விரட்டிவிட முடியாது என நம்பியதேயாகும். வலிமையற்ற இத்தாலியில் சூழ்ச்சிகளும், கிளர்ச்சிகளும், கலகங்களும், புரட்சிகளும் அன்னியரின் ஆதரவின்றி அதிகம் பயன்தரா என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். கடந்த நாற்பதாண்டு கால வரலாறு அதையே காண்பித்தது என்பதை அவர் நன்கறிவார். எனவே, பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியனுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஆஸ்திரியாவிற்கு எதிரான போரில் இத்தாலியருக்கு உதவி செய்வதாக நெப்போலியன் ஒப்புக்கொண்டார். அதற்குப் பதிலாக **சவாய்** (Savoy), **நீஸ்** (Nice) ஆகிய பகுதிகளை பிரான்சுக்கு அளிப்பதாக கவூர் உறுதியளித்தார். இங்ஙனம் இரண்டாவது விடுதலைப் போரில் இத்தாலியர் இறங்கினர். 1859-ல் **மேஜன்டாவிலும்** (Magenta) **சால்பர்னோவிலும்** (Solferino) ஆஸ்திரியா தோல்வி கண்டபோது ஐக்கிய இத்தாலி உருவாகும் வாய்ப்பு அதிகரித்தது. லம்பார்டி பியட்மாண்டினால் இணைத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் வெண்ணை திரண்டுவரும் வேளையில் தாழி உடைவதைப் போல இத்தாலியருக்கு வெற்றி மிக அருகில் வந்த நேரத்தில் அதன் விளைவுகளை எண்ணி அஞ்சிய மூன்றாம் நெப்போலியன் ஆஸ்திரியாவுடன் **வில்லா பிராங்கா** (Villa franca) உடன்படிக்கை செய்துகொண்டு, தமது படைகளை விலக்கிக் கொண்டார். இருப்பினும் போரின்போது **பார்மா, மாடனா** (Modena),

**தஸ்கனி (Tuscany)** ஆகிய நாடுகளில் மன்னர்கள் விரட்டப் பட்டு அப்பகுதிகள் பியட்மாண்டுடன் இணைந்துவிட்டதால், வில்லா பிராங்கா உடன்படிக்கையை ஆஸ்திரியாவால் நிறை வேற்ற முடியவில்லை.

ஆஸ்திரியாவுடனான இரண்டாவது போரில் இத்தாலியின் பல பகுதிகள் பியட்மாண்ட் மன்னர் விக்டர் இமானுவலின் ஆட்சியில் வந்தபோதிலும் இத்தாலிய ஐக்கியமென்பது கட்டி முடிக்காத கோபுரமாகவே இருந்தது. வெனிஷியாவும் போப் பாண்டவர் ஆதிக்கத்திலிருந்த அரசுகளும், நேபிள்ஸும் சிசிலியும் விடுவிக்கப்பட்ட இத்தாலிக்கு வெளியிலேயே இருந்தன. மாஸினியின் சீடரும், 1831, 1848ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற இத்தாலிய மக்களின் புரட்சி இயக்கங்களில் பங்கு கொண்டவருமான **கரிபால்டி** எனும் கர்மவீரர் இத்தாலிய ஐக்கியத்தை விரைவு படுத்தினார். அவர்தம் தலைமையிலான **செஞ்சட்டை வீரர்கள் (Red Shirts)** பல இடையூறுகளுக் கிடையே சிசிலியையும் நேபிள்ஸையும் வென்றனர். அதைத் தொடர்ந்து ரோம் நகரை நோக்கி முன்னேறத் திட்டமிட்டனர். ஆனால் கவூரின் வெல்திறம் வேலை செய்யத் துவங்கி விட்டது. அன்னாரது தூண்டுதலால் கரிபால்டி, தமக்கிருந்த பெரும் வாய்ப்பினைத் துறக்க முன்வந்ததுடன், இரண்டாம் விக்டர் இமானுவல் தலைமையில் இத்தாலி ஐக்கியமடைவதை ஒப்புக் கொள்ளவும் முன்வந்தார். பல்வேறு இத்தாலியப் பகுதிகளில் சார்டீனிய அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெற்ற கருத்துக் கணிப்புகளில், அவை சார்டீனியாவுடன் இணைவதை விரும் பியதாகத் தெரிந்தது. 1861-ல் கூடிய இத்தாலியப் பாராளு மன்றம் 'ஆண்டவரின் அருளாலும் மக்களின் விருப்பார்வத்தா லும் இரண்டாம் விக்டர் இமானுவலே இத்தாலியின் மன்னர்' என அறிவித்தது.


சில ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற மூன்றாவது விடுதலைப் போரில், வெனிஷியா ஆஸ்திரியாவிடமிருந்து விடுதலை பெற்று வெளியேறியது. அதாவது, ஆஸ்திரியாவிற்கு எதிராகப் பிரஷ்யாவிற்கு இத்தாலி உதவியது. அதற்குப்பதிலாக 1866-ல் வெனிஷியா இத்தாலிக்குக் கிடைத்தது. அப்போதும் ரோம் ஐக்கிய இத்தாலியுடன் இணையவில்லை. 1870-ல் பிரெஞ்சு-பிரஷ்யப் போரின்போது பிரெஞ்சுப் படைகள் ரோமி லிருந்து விலகின. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு ரோம் நகரம் இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. இங்ஙனம் ஒன்றுபட்ட இத்தாலி உருவாகியது. மாஸினியின் மாறாத் தொண்டும், கரிபால்டியின் வீரமும், கவூரின் வெல்திறமும், போர்

களும் பொது மக்கள் விருப்பார்வமும் உரிமைபெற்ற ஐக்கிய இத்தாலியை உருவாக்கின.

### (இ) ஐக்கிய ஜெர்மனி உருவாகுதல்

ஐக்கியமுற்ற ஜெர்மனி ஐரோப்பாவிலேயே மக்கள் தொகை மிகுந்த நாடாகியது. படை பலத்தில் முதன்மை இடத்தைப் பெற்றது. பிளவுபட்டு, பிணக்குற்று, வலிமைகுன்றியிருந்த ஜெர்மன் நாடுகளை ஒன்றுபடுத்தி உத்வேகங்கொண்ட ஐக்கிய நாடாக மாற்றிய பெருமை **பிஸ்மார்க் (Bismarck)** என்பாரையே சாரும். முன்பு பிரான்சும் ருஷ்யாவும் செய்ததையே **மெட்டர்னிக்கின் (Matternich)** ஆதிக்கத்தில் இருந்த ஆஸ்திரியா பத்தொன்பதாம் நூற்றாண்டில் செய்து வந்தது. ஜெர்மானிய இனத்தவரிடையே வேற்றுமைகளை வளர்ப்பது, உள்நாட்டுப் போர்களை ஊக்குவிப்பது, அதன்மூலமாக அவைகளைத் தமது ஆதிக்கத்திலேயே வைத்திருப்பது ஆகிய பழைய வல்லரசு விளையாட்டையே மெட்டர்னிக்கும் விளையாடி வந்தார். 1819-ல் **கார்ல்ஸ்பர்க் ஆணைகளின் (Carlsburg Decrees)** மூலமாக உறுதி மிக்க இரும்புவலை ஒன்றை ஜெர்மானியர்மீது வீசினார். அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு ஆஸ்திரிய அடக்கு முறையும் வல்லாட்சியும் ஜெர்மனியில் எதிர்ப்பேதும் இல்லாமல் கோலோச்சி வந்தன.

ஆனால் 1830ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிரான்சில் எழுந்த புரட்சிப் பொறிகள் ஜெர்மனியிலும் சிதறின. ஜெர்மானியரின் மனநிறைவின்மையும் வெறுப்பும் கிளர்ச்சிகளாக வெடித்தன. தாராளமான அரசியல் திட்டத்தையும் ஐக்கியத்தையும் விழைகின்ற தேசிய உணர்ச்சி வளர்ந்து வந்ததன் அடையாளமாக 1832-ல் ஹாம்பர்க்கில் அடக்குமுறை ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு எழுந்தது. அக்காலச் சிந்தனையாளர்கள், வரலாற்று நிகழ்ச்சிகளும் இயக்கங்களும் எவர் தடுப்பினும் நிற்கா என்பதை வலியுறுத்தியதைப்போலவே ஐக்கியத்தையும் இறைமைகொண்ட அரசையும் சிறப்பித்துப் பேசி வந்தனர். இத்தகைய சூழ்நிலையில் ஆஸ்திரியாவின் அடக்குமுறைகளுக்கிடையே பிரஷ்யாவின் தலைமையிலான **சுங்க ஐக்கியத்தில் (Customs Union)** பல ஜெர்மன் அரசுகள் இணைந்தன. 1830-க்குப் பிறகு எழுந்த அச்சுங்க ஐக்கியத்தில் ஆஸ்திரியாவிற்கு இடமில்லை. ஜெர்மன் நாடுகள் தங்களுக்கிடையே இருந்த தடைச் சுவர்களை நீக்கிவிட்டுத் தடையிலா வாணிபத்திற்கு வழிவகுத்தன. இத்தகைய சுங்க ஐக்கியம் வரப்போகும் அரசியல் ஐக்கியத்திற்கு முன்னோடியாக இருந்தது.


ஜெர்மனி ஐக்கிய இயக்கம்
டென்மார்க்
ஹோல்ஸ்டீன்
பால்டிக் கடல்
வட கடல்
ஹாலந்து
ஹானோவர்
பெர்லின்
ப்ரஷ்யா
ருஷ்யா
பெல்ஜியம்
ஸெடான்
பிரான்ஸ்
பிராங்பர்ட்
ஹெஸ்
சாக்ஸனி
சாடோவா
பிரேக்
ஆஸ்திரியப் பேரரசு
பவேரியா
வர்ட்டம்பர்க்
பேடன்
அல்ஸாஸ்
லொரேன்

1848-ல் எழுந்த பாரிஸ் புரட்சிபற்றிய செய்தி ஜெர்மனியில் மீண்டும் தேசிய உணர்ச்சியைத் தூண்டியது. சிற்றரசர்கள் தாராள அரசியல் திட்டங்களைப் பெற விழைந்தனர். நடுத்தர மக்கள் அந்நிய ஆட்சியாளரை வெளியேற்றும் நம்பிக்கை கொண்டனர். ஜெர்மன் அரசுகளின் ஐக்கியம் என்னும் அழகிய கனவு யாவர் உள்ளத்தையும் நிறைத்து நின்றது. ஒன்றுபட்ட ஜெர்மனியை அமைக்கத் தான் தயாராக இருப்பதாக மன்னர் நான்காம் பிரடரிக் வில்லியமும் அறிவித்தார். பிராங்பர்டில் ஜெர்மன் மாநாடு ஒன்று கூடியது. கருப்பு, சிவப்பு, தங்க நிறக் கொடி தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேசியப் பாராளுமன்றம் கூடுவதற்குமுன் ஜெர்மன் பிரதிநிதிகளடங்கிய சபை கூடவேண்டுமென்று அந்த மாநாடு தீர்மானித்தது. ஆனால் ஆஸ்திரிய படையெடுப்பு வருமென்று அஞ்சிய பிரடரிக், மாநாட்டு முடிவுகளை ஏற்க மறுத்துவிட்டார். இங்ஙனம் ஒற்றுமையற்றிருந்த ஜெர்மன் அரசுகள்மீது மீண்டும் ஆஸ்திரியாவின் பிடி இறுகியது. தேசிய உணர்வால் உடனடியாக எப்பயனும் ஏற்படவில்லை.

1858-ல் முதலாம் வில்லியம் பிரஷ்யாவின் மன்னரானார். தமது வாழ்நாளின் பெரும் பகுதியை போர்களத்திலேயே கழித்து அத்துறையில் மேலான அனுபவமும் பிடிப்பும் கொண்டிருந்த வில்லியம் பிரஷ்ய நாட்டுப் படையைச் சீர்திருத்தி வலிமை கொண்டதாகச் செய்ய விரும்பிய அவர் பாராளுமன்றத்தின் எதிர்ப்பு இருந்தபோதிலும் படை வலிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். புகழ்மிக்க பிஸ்மார்க்கை முதலமைச்சராகக் கொண்டு படைத்துறை வளர்ச்சியில் பேரார்வம் காட்டி பிரஷ்யாவின் படை பலத்தைப் பெருக்கினார். 1863-ல் எழுந்த போலந்து பிரச்சினையில் ருஷ்ய மன்னர் அலக்சாந்தருடன் நட்புறவுடன் நடந்து கொண்டார். ஜெர்மனியின் ஐக்கியப் போராட்டத்தில் அலக்சாந்தரின் நட்பு உதவியாக இருக்குமென அவர் நம்பினார். ஐரோப்பிய நாடுகள் போலந்து பிரச்சினைப்பற்றியே சிந்தித்து வந்த நேரத்தில் ஸ்லஸ்விக் ஹோல்ஸ்டீன் (Schleshwig-Holstein) பிரச்சினையை வில்லியத்தின் அமைச்சரான பிஸ்மார்க் மீண்டும் எழுப்பினார். டென்மார்க்கிற்கு எதிரான இப்பிரச்சினையைத் தீர்க்க அவர் ஆஸ்திரியாவையும் உதவிக்கழைத்தார். இந்த நடவடிக்கை ஜெர்மனி ஐக்கியத்திற்கான முதற்படியாக அமைந்தது. பிரான்சும் ருஷ்யாவும் பிஸ்மார்க்கின் வெல்திறத்தால் நடுநிலை வகிக்கச் சம்மதித்தன. டென்மார்க் தோல்வியுற்றது. ஆனால் வென்ற பகுதிகளைப் பகிர்ந்து கொள்வதில் மீண்டும் பிரஷ்யாவிற்கும்

ஆஸ்திரியாவிற்குமிடையே மோதல் ஏற்பட்டது. பிரான்ஸ் நடு நிலை வகிக்கும் என்ற நம்பிக்கையில் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடன் போர் தொடுத்தார். ஏழு வார காலப் போர் முடிவில் பிரஷ்யா வின் கை மேலோங்கியது. பிரஷ்யப்படைத் தலைவரான வான் மால்ட்கே (Von Moltke) தமது நவீனப் படையுடன் சென்று, ரயில்வே, தந்தி, ஊசி முனைத் துப்பாக்கி ஆகியவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி, 1866-ல் சடோவா (Sadowa) எனு மிடத்தில் ஆஸ்திரியப் படைகளை முறியடித்தார். 'தடியெடுத் தவன் தண்டல்காரன்' ஆவதைப் போல பிராக் உடன்படிக்கை யின் (Treaty of Prague) மூலமாக ஸ்லஸ்விக் ஹோல்ஸ்டீன் கோமக நாடுகளும், ஆஸ்திரியாவுடன் இணைந்திருந்த வடக்கு ஜெர்மன் அரசுகளும் பிரஷ்யாவுடன் இணைந்தன. இவ்வாறு வட ஜெர்மன் கூட்டரசு பிரஷ்யாவின் தலைமையில் உருவாகியது.

ஸ்பெயின் நாட்டு அரியணையில் ஹோஹன் ஸோலர்ன் இளவரசர் (Hohen-Zollern) அமரும் பிரச்சினை, எம்ஸ் தந்தி (Ems Despatch) அனுப்பக் காரணமாக இருந்த வெல்திற நெருக் கடி ஆகியவற்றின் விளைவாக 1870-71 ஆண்டில் பிரான்சுடன் ஜெர்மனி போரில் ஈடுபட்டது. இந்தப் பிரெஞ்சு-பிரஷ்யப் போரில் மீண்டும் பிரஷ்யாவின் படை வலிமை மேலோங்கி நின்றது 1866-ல் நடந்ததைப் போல, 1870-லும் பிரஷ்யப் படைக்குப் பெரு வெற்றி கிடைத்தது. படை வலிமையாலும் பிஸ்மார்க்கின் சூழ்ச்சித் திறத்தாலும் பிரான்ஸின் எல்லையைக் காத்து நின்ற பெரும் படையைச் சுற்றிக்கொண்டு மூன்றாம் நெப்போலியனின் தலைமை யிலிருந்த பிரெஞ்சுப் படையை முறியடித்தது பிரஷ்யப் படை. இத் தகைய பிரெஞ்சுத் தோல்வியின் அடிப்படையில் ஐரோப்பாவில் இரண்டாவது பேரரசுக்கு, ஜெர்மன் பேரரசுக்கு, அடிக்கல் நாட்டப் பட்டது. வெர்சாய் நகரில் உள்ள கண்ணாடி மண்டபத்தில் (Mirror Hall at Versailles) பிரஷ்ய மன்னரான முதலாம் வில்லி யம் 1871ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் தேதி ஜெர்மன் பேரரசராக முடிசூட்டப்பட்டார். ஜெர்மனி ஐக்கிய நாடாகியது. இந்த வெற்றி பிஸ்மார்க்கின் வெற்றியாகும்.

இங்ஙனம் ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த தேசிய இயக்கம் இத்தாலி, ஜெர்மனி எனும் இரு தேசிய அரசுகள் தோன்றக் காரணமாயிருந்தது. பிரதேச ஒற்றுமையும் ஒருமைப்பாடு உணர்வும் கொண்ட இரு அரசுகள், மன்னர் களின் பெயரால் அரசியல் தலைவர்கள் வெளிநாட்டுக் கொள் கையை வகுக்கும் நிலை கொண்ட இரு வல்லரசுகள்—ஐரோப்பிய அரசியல் வானில் எழுந்துள்ளன. இத்தாலியிலும் ஜெர்மனியி

லும் படை வலிமை அரசை உருவாக்க உதவியது. ஆனால், நாட்டு மக்களிடம் மறைந்து கிடக்கும் சக்திகளை எல்லாம் ஒன்று திரட்ட தேசிய உணர்வு தோன்றாத் துணையாக விளங்கியுள்ளது புலனாகும்.

## அத்தியாயம் 9

# அமெரிக்க உள்நாட்டுப் போரும் புனரமைப்புப் பணிகளும்

**(அ) முன்னுரை**

தாய்நாட்டான இங்கிலாந்திற்கு எதிராகப் புரட்சியில் இறங்கி யும், போரிட்டும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரத்தினைப் பெற்றன. அத்தகைய சுதந்திரப் போரின்போது ஏற்பட்ட அழிவுகளும், உயிர்ச் சேதமும் மிகவும் குறைவு என்பதை அமெரிக்க உள்நாட்டுப் போர் தெளிவாக்கியது. அமெரிக்காவில் நடந்த போர்களிலேயே ஆட்சேதமும், பொருள் சேதமும் அழிவும் அதிகம் நிறைந்த, மிகவும் கொடூரமாக நடத்தப்பட்ட போர் இந்த உள்நாட்டுப் போரேயாகும். தேசிய அரசின் உயர் நிலைக்கு ஏற்பட்ட ஆபத்தான சோதனையே இப்போர் எனவும், அதே நேரத்தில் சுதந்திரம் அடைந்து நூறு ஆண்டுகளுக்குள் அமெரிக்க சமுதாயத்தில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு, முன் னேற்றம் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தது வலிமையான தேசிய அரசே என்பதும் தெளிவாயிற்று.

**(ஆ) காரணங்கள்**

அமெரிக்க ஐக்கிய நாடுகளினின்றும் பிரிந்துசென்று முழு இறைமைத்தன்மை கொண்ட கூட்டரசினை நிறுவும் எண்ணங் கொண்ட தென் மாநிலங்களின் தேசிய எழுச்சியே அமெரிக்க உள்நாட்டுப் போராகும். ஆனால் தென்மாநிலங்களின் அத் தகைய முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டது. தென்மாநிலங் களில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்புக் காணப்பட்டது. அம்மாநிலங்களில் மிகவும் அதிக மாக உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியும் புகையிலையும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்தகைய வேளாண்மைப் பண்ணைகளில் உழைப்பதற்காக நீக்ரோ அடிமைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டனர். வடமாநிலத் தவர்கள் பெரும்பாலும் தொழிலதிபர்களாகவும், வணிகர்களா கவும் இருந்தனர். எனவே வடமாநிலச் சமுதாய அமைப்பில்

அடிமை முறையற்ற, சுதந்திரமான தொழிலாளர் அமைப்பும் உரிமைபெற்ற பண்ணையார்களும் மிகுந்து காணப்பட்டனர். இவ்வாறு மாறுபட்ட பொருளாதார நிலைகளுடன் மாறுபட்ட வாழ்க்கை முறைகளும், அரசியல் சமுதாயக் கோட்பாடுகளும் வட, தென் மாநிலங்களுக்கிடையே வேறுபட்டுக் காணப்பட்டன. அத்தகைய வேறுபாடுகளை மேலும் தூண்டிவிட்டு, போராட்டமும், பகையுணர்வும் மேலும் வளர்ந்து, போராகவே உருவெடுப்பதற்குக் காரணமாக இருந்தது அடிமைகளைப்பற்றிய பிரச்சினையே ஆகும். அடிமைகள் முறை மனித இனத்திற்கே ஏற்பட்ட அவமானமாகும் என வட மாநிலத்தவர்கள் நம்பி, அதை வெறுத்தனர் ஆனால் அடிமைகள் முறை சமுதாய அமைப்பில் சாதாரணமாகக் காணப்படுகின்ற இயற்கையான அமைப்பே யாகும் என தென் மாநிலத்தவர்கள் உறுதிகொண்டிருந்தனர்.

1619ஆம் ஆண்டில் முதன் முதலாக வெர்ஜினியா மாநிலத்தின் பெரும் பண்ணைகளில் உழைப்பதற்காக, ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகள் கொண்டு வரப்பட்டனர். அதன் பின்னர் இருநூறாண்டுகளுக்கும் அதிகமாகவே தொடர்ந்து மனித அடிமைகளை இறக்குமதி செய்யும் பழக்கம் தொடர்ந்தது. இருப்பினும் மொத்த அடிமைகளின் எண்ணிக்கை குறைந்தே காணப்பட்டது. ஆகவே இந்த அடிமைகளைப்பற்றிய பிரச்சினைகளைப்பற்றி ஒருவரும் அக்கறை காட்டவில்லை. ஆனால் விரைவில் மனித இனத்தின்பால் பொதுவாகவே அன்பு கொண்ட நல்ல உள்ளம் கொண்ட தென் மாநிலத்தவர்களில் ஒரு சிலர், மனிதனை மனிதன் அடிமையாக நடத்தும் இழிநிலை அகற்றப்பட வேண்டும் என உறுதி கொண்டனர். அத்தகைய அன்புள்ளம் கொண்டோரில் பலர் நீக்ரோ அடிமைகளை விடுதலை செய்யும் உயில்களை (Wills) எழுதிவைத்தனர். நீக்ரோ அடிமைகளை, அடிமைத்தளையினின்றும் விடுவித்து, ஆப்பிரிக்காவிற்கே திருப்பி அனுப்பும் வகையில் திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களுக்குத் தாராளமாக நிதி உதவியும் செய்தனர். ஆனால் பஞ்சினின்றும் விதைகளை நீக்கும் இயந்திரம் (Cotton Gin) கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இந்நிலை தலைகீழாக மாறியது. அவ்வியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பருத்தித் தொழில் மிகவும சிறப்பு பெற்றது. அதுவரை அவ்வளவாக இலாபம் கொடுக்காது, தேக்க நிலையிலிருந்த பருத்தித் தொழில், விதைகளை நீக்கும் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் மாநிலங்களின் பொருளாதார மேன்மையினை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்றுமதிப் பொருளாகவும், பெருத்த

இலாபம் கொடுக்கும் தொழிலாகவும் திடீரென உயர்ந்துவிட்டது. 1790ஆம் ஆண்டில் தென் மாநிலங்களின் பருத்தி உற்பத்தியின் மொத்த அளவு 4000 கட்டுகளாகும் (Bales) இருபதே ஆண்டு களில் அதாவது 1810ஆம் ஆண்டில் பருத்தி மொத்த உற்பத்தி 1,75,000 கட்டுகளாகவும், 1860ஆம் ஆண்டில் 40,00,000 கட்டுகளாகவும் பல்கிப் பெருகியது. தென் மாநிலங்களின் பொருளாதார உன்னத நிலைக்குக் காரணமாக இருந்த பருத் தியை 'அரசன்' (Cotton King) என்றே பெருமையுடன் குறிப்பிட்டனர். பருத்தித் தொழிலுக்குக் காரணமான பெரும் பண்ணை முறைகளும், அதனுடன் இணைந்த அடிமை முறை யும், நீக்கமற நிலைபெற்றுவிட்டன.

தென் மாநிலத்தவர் தங்களது பொருளாதார மேன்மைக்குக் காரணமாக இருந்த அடிமைகளை—அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என வடமாநிலங்களிலுள்ளோர் வற்புறுத்தியதால் தான் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது எனக் கூற இயலாது. வடமாநிலங்களில் இருந்தவர் அனைவரும் ஒருமனதாக அடிமை முறை ஒழிக்கப்படவேண்டும் என்பதற்கு ஆதரவு காட்டவில்லை. புதிதாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணைக்கப்பெறும் மாநிலங்களில் அடிமை முறைகள் புகுத்தப்படக்கூடாது என்பதே வடமாநிலத்தவர்களின் முக்கிய குறிக்கோளாகும். தென் மாநிலங் களில் அடிமை முறை தொடர்வதை அவர்கள் எவ்விதத்திலும் தடைசெய்ய விரும்பவில்லை. பிரான்சிடமிருந்து விலைக்கு வாங் கிய லூசியானா பகுதியிலும், 1848ஆம் ஆண்டில் மெக்சிகோ விடமிருந்து வென்ற பகுதிகளிலும் அடிமை முறை புகுத்தப்படுவ தைக் கடுமையாக எதிர்த்தனர். அப்பகுதிகளை அடிமைகளற்ற மாநிலங்களாக்க வேண்டும் என விழைந்தனர். வட, தென் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வற்ற அதிகாரம், மற்றும் செல்வாக்கு நிலை காணப்பட்டிருந்தால் ஒருவேளை தென் மாநிலங்கள் அடிமைகளற்ற புது மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளப் படுவதை ஏற்றுக் கொண்டிருந்திருக்கலாம். 1846ஆம் ஆண்டில் கூட வட, தென்பகுதிகளில் மாநிலங்களின் எண்ணிக்கை ஒரே யள வாக இருந்தது. ஆனால் மக்கள் எண்ணிக்கையில் பெருத்த மாறு பாடு காணப்பட்டது. வடமாநிலங்களில் மக்கள் எண்ணிக்கை 9,778,000, தென்மாநிலங்களில் 7,344,000 என 1846ஆம் ஆண்டில் காணப்பட்டது. அதன் காரணமாக மக்கள் பிரதி நிதிகள் அவையில் வடமாநிலத்தவர்களுக்கு 155 இடங்களும், தென் மாநிலத்தினருக்கு 87 இடங்களுமே இருந்தன. அதன் காரணமாக குடியரசுத் தலைவர் தேர்தலில் எப்போதுமே வடமாநிலத்தவருக்கே வெற்றிவாய்ப்பு ஏற்படும் என

கால்ஹுன் (Calhoun) என்பார் அறிவுறுத்தினார். அத்தகைய நிலை ஏற்படின் தென் மாநிலத்தவர்கள் குடியரசுத் தலைவராக வெற்றிபெற இயலாது போய்விடும் எனவும் அவர் கருதினார்.

மேலும் தொழில்துறையில் மிகவும் வளர்ந்துவிட்ட வட மாநிலத்தவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை அந்நிய நாட்டுப் பொருள்களின் போட்டிகளினின்றும் காப்பாற்றிக்கொள்வதற்காக, இறக்குமதிப் பொருள்களின்மீது அதிக வரி விதித்தனர். அது 'காப்பு வரி' என அழைக்கப்பட்டது. காப்பு வரி பாதுகாப்பினைப் பெற்ற வட மாநிலத்தவர்கள் உற்பத்திப் பொருள்களை அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபமடைந்தனர். அதே நேரத்தில் தாங்கள் விளைவித்த பொருள்களுக்கு நேர்மையான விலையைக்கூட பெறமுடியாது தவித்த தென்மாநிலத்தவர்கள், தரமான பொருட்களைக் குறைவான விலைக்கு வாங்கிப் பயனடையும் வாய்ப்பினையும் இழந்துவிட்டிருந்தனர். நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி முன்னேற்றம் காண உறுதிவாய்ந்த தேசிய அரசு தேவை என்பதை வடமாநிலத்தினர் உணர்ந்திருந்தனர். பிரிந்து செல்லுதல், மற்றும் தேசிய அரசின் சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தல் ஆகியவை சட்டத்திற்குப் புறம்பானவை எனவும் கருதினர். தனித்தன்மை பெற்ற அடிமை முறையினை ஏற்றுக்கொண்டிருந்த தென்மாநிலத்தவர்கள், தேசிய அரசின் கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவில், இன்றியமையாத துறைகளில்மட்டுமே இருக்க வேண்டும் என விரும்பினர். இறைமைத் தன்மை மாநிலங்களில் மட்டுமே இருக்கின்றது. மாநிலங்கள் விரும்பி இணைந்ததனால் தான் தேசிய அரசு உருவாக்கப் பட்டுள்ளது; எனவே, மாநிலங்களின் பொறுப்பாளராகமட்டுமே தேசிய அரசு விளங்க வேண்டும் என தென்னவர்கள் வாதிட்டனர். மேலும், ஒவ்வொரு மாநிலமும் தாங்களாகவே விரும்பி இணைந்து கூட்டரசினை உருவாக்கியது போலவே, விரும்பியபோது பிரிந்து செல்லும் உரிமையும் உண்டு எனவும் வற்புறுத்தினர். மாநிலங்களின் உரிமைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும் தேசிய அரசின் எத்தகைய சட்டங்களையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் உரிமையும் உண்டு எனவும் முழக்கமிட்டனர். வகுப்புணர்வும் (Sectionalism) மாநிலங்களின் உரிமைப் பிரச்சினைகளும், அடிமைப் பிரச்சினையை மையமாகக்கொண்டு வளர ஆரம்பித்தது. வடவர்களுக்கு இணையான அரசியல் உரிமை மற்றும் செல்வாக்குப் பெறவேண்டி, அடிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய மாநிலங்களை ஏற்படுத்தும்படி தென்ன

வர்கள் வற்புறுத்தினர். தென்னவர்களின் குறிக்கோள்களை எதிர்க்கும் வகையில் வடவர்கள் 1848ஆம் ஆண்டில் **நில உரிமையினர் கட்சி (Free Soil Party)** யினைத் தோற்றுவித்து, புதிய மாநிலங்களில் அடிமைகள் இல்லாத நிலைமையினை உருவாக்கத் திட்டமிட்டுச் செயலாற்றினர்.

1857ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கூட்டரசின் சட்டம் மாநிலங்களில் அடிமை முறை அகற்றப்படமாட்டாது என உறுதியளித்தது. அத்தகைய சட்டம் தென்னவர்களுக்கு பெருத்த மகிழ்ச்சியினை அளித்தது. ஆனால் 1857ஆம் ஆண்டில் **டிரெட் ஸ்காட் (Dred Scot)** வழக்கில் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, உள்நாட்டுப்போர் ஏற்படுவதைத் தடுக்க இயலாதவாறு செய்துவிட்டது. அமெரிக்க தேசிய படையில் அறுவை சிகிச்சை நிபுணராகப் பணியாற்றிய, மிசூரி மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் டிரெட் ஸ்காட் என்ற பெயருள்ள அடிமை ஒருவனை, அடிமைமுறை இல்லாத இல்லினாய் (Illinois) மாநிலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து வடக்கு நோக்கிச் சென்று மின்னெசொட்டா (Minnesota) மாநிலத்திற்குச் சென்று குடியேறினார். மிசூரி சமரச இணக்கத்தின்படி அங்கெல்லாம் அடிமை முறை தடுக்கப்பட்டிருந்தது. எனவே, அங்கு வாழ்ந்த அடிமை முறை எதிர்ப்பாளர்களெல்லாம் ஒன்று கூடி, டிரெட் ஸ்கார்ட் நெடுநாள்களாக அடிமைமுறை தடுக்கப்பட்ட மாநிலங்களில் வாழ்ந்தமையால், அவன் அடிமைத் தனத்தினின்றும் விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரி ஒரு வழக்கைத் தொடர்ந்தனர். அவ்வழக்கினைத் தள்ளுபடி செய்த அமெரிக்கத் தலைமை நீதிமன்றம், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு சில பொதுக் கருத்துகளையும் வலியுறுத்தியது. தனிப்பட்ட குடிமகனின் சொத்துரிமைக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்றும், காங்கிரசுக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டின் எந்தப் பகுதியிலும் அடிமை முறையைத் தடைசெய்யும் உரிமை கிடையாது என்றும் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு அடிமை முறை தடை செய்யப்பட்டால், அது தென்னவர்களின் உரிமையினைப் பாதிக்கும் என்றும் அறிவித்தார். மேலும் நீக்ரோக்கள் அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற முடியாதென்றும், அதனால் டிரெட் ஸ்காட் அத்தகைய வழக்கினை அமெரிக்க நீதிமன்றங்கட்குக் கொண்டுவர அருகதையற்றவன் என்றும் அமெரிக்கத் தலைமை நீதிபதி தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் வலியுறுத்தியிருந்தார். அமெரிக்க அரசியல் சட்டத்தின் உருவாக்கியவர்கள் அமெரிக்க வெள்ளையினத்தினருக்கு இணையான உரிமையை அமெரிக்க நீக்ரோ என்றுமே பெற இய

லாது என்றே கருதியிருப்பார் என்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். அடிமைகள் பிரச்சினையைப்பற்றி தான் முடிவான கருத்தினை அறிவித்து விட்டதாகவும், இனியும் அடிமைகள் பிரச்சினை போருக்குக் காரணமாக இருக்காது எனவும் அவர் நம்பியிருந்தார். அத்தகைய தீர்ப்பினை வடவர்கள் அனைவரும் மிகவும் கடுமையாக எதிர்த்தனர். தலைமை நீதிபதியின் எண்ணத்திற்கு எதிரான நிகழ்ச்சிகள் தொடங்கின. அமெரிக்கா உள்நாட்டுப் போரை நோக்கி விரைந்தது.

அடிமை முறையினை எதிர்ப்பதையும், அதனை அமெரிக்காவினின்றும் விரட்டுவதையுமே தங்களது குறிக்கோளாகக் கொண்டிருந்த குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ஆபிரகாம் லிங்கன் 1860ஆம் ஆண்டில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது குடியரசுக் கட்சி, தென்மாநிலங்களில் அடிமை முறை தொடர்ந்து இருப்பதை வேறு வழியின்றி பொறுத்துக் கொண்டிருந்தாலும், அம்முறை வேற்று மாநிலங்களில் பரவுவதைமட்டும் தடுக்க உறுதி கொண்டிருந்தது. அத்தகைய மிதமான கொள்கையைக் கடைப்பிடித்திருந்தாலும், குடியரசுக்கட்சியின் வெற்றியைக் கண்ட தென் மாநிலத்தவர்கள் அதைப் போர் அறிவிப்பு என்றே எண்ணினார்கள். அரசியல் சட்டத்திருத்தத்தின்மூலம் தென்மாநிலங்களில் அடிமை முறை இருப்பதை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதை லிங்கன் விரும்பினாலும், ஒரே நாட்டில் பாதிப்பகுதி அடிமை முறை உள்ள பகுதியாகவும், மறுபகுதி அம்முறை இல்லாத பகுதியாகவும் எனப் பிரிந்து இருகூராக இருப்பதை லிங்கன் விரும்பவில்லை.

1860ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் முன்னரே லிங்கனது வெற்றி நாட்டினைத் துண்டிக்கும் எனத் தென் கரோலினா அறிவித்திருந்தது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டவுடன் தென் கரோலினா கூட்டாட்சியினின்றும் பிரிந்துவிட்டது. தென் கரோலினா மாநிலத்தைப் பின்பற்றி மேலும் ஆறு மாநிலங்கள் கூட்டாட்சியினின்றும் பிரிந்து சென்றன (பிப்ரவரி 8, 1861). அம்மாநிலங்கள் பிரிந்து சென்றதைக் கண்ட லிங்கன் போர் அறிவிப்புச் செய்தார். போர் அறிவிப்புச் செய்தவுடன் மேலும் நான்கு மாநிலங்கள் கூட்டாட்சியினின்றும் விலகின. மொத்தம் பதினோறு மாநிலங்கள் பிரிந்து சென்றன. அவ்வாறு பிரிந்து சென்று விட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் அலபாமா (Alabama) நகரில் ஒரு மாநாட்டினைக் கூட்டினர். அம்மாநாடு சில தீர்மானங்களைத் தீட்டி முடிவு செய்

தது. அதன்படி அப்பதினோறு மாநிலங்களும் ஜெபர்சன் டேவிஸ் என்பவரின் தலைமையில் புதிய கூட்டரசினை (Confederate States of America) உருவாக்கின. துணைத் தலைவராக அலெக்சாந்தர் ஸ்டிபன்ஸ் 'என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஒரு மாத காலத்திற்குள் புதிய அரசியலமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுவிட்டது. அந்தப் புதிய அரசியலமைப்பு ஒருசில குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பினை ஒத்து இருந்தது. அவ்வரசியல் அமைப்பு நீக்ரோ அடிமை முறையினை உறுதி செய்து, பாதுகாப்பும் அளித்தது. குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என்றும், ஒருவர் ஒரு முறைதான் அப்பதவியை வகிக்கக்கூடும் என் றும் குறிப்பிட்டிருந்தது. கூட்டரசுத் தலைவரின் குறிப்பிட்ட வேண்டுகோளின்படி மட்டுமே, காங்கிரஸ் நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்றும், பணமசோதாக்களின் ஒவ்வொரு பிரிவையும் குறிப்பிட்டு, குடியரசுத் தலைவர் தனது தடுப்பாணை அதிகாரத் தைப் பயன்படுத்த முடியும் என்றும் அறிவித்தது. மந்திரி சபை உறுப்பினர்கள் சட்டமன்றங்களில் அமர்ந்து, விவாதங் களில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்கியது. அத்தகைய புதிய கூட்டரசினை உருவாக்கிய தென்மாநிலத்தவர் கள், 'அமெரிக்க சுதந்திர அறிக்கை'யில் காணப்பட்டுள்ள அடிப் படைக் கருத்துகளின்படியே பிரிந்து சென்று, தனி அரசினை அமைத்துக்கொண்டு விட்டதாக நம்பினர். 'உரிமை, உடைமை, உயிர், மற்றும் இன்ப வாழ்வு' ஆகிய மனிதனின் அடிப்படைத் தேவைகளைத் தடைசெய்யும் அல்லது தகர்க்க முயலும் அரசினை மாற்றியமைக்கவோ, அல்லது அழித்துவிட்டு, புதிய அரசினைத் தோற்றுவிக்கவோ தேவையான அதிகாரம் மக்க ளிடமே உள்ளது என அமெரிக்க விடுதலை அறிக்கை உறுதியளித் திருந்தது. அத்தகைய உரிமையின் காரணமாகவே, தாங்கள் பிரிந்து சென்றுவிட்டதாக தென்னவர்கள் அறிவித்தனர். மக்க ளின் உரிமைகளை நசுக்கி, கொடுமைப்படுத்தும் கொடுங் கோலாட்சியினை அகற்றவோ, அல்லது திருத்தியமைக்கவோ மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும், மக்களின் நலம் பேணும், ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி, நாட்டின் வளர்ச்சி காணும், மக்களாட்சி அரசினை அல்ல என்றும் வட வர்கள் தங்களது தனித்தன்மை வாய்ந்த இணையற்ற குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன்மூலம் பதிலளித்தனர்.

### (இ) நிகழ்ச்சிகள்

நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போர் மிகவும் துயரமான நிகழ்ச்சிகள் பலவற்றினைக் கொண்டுள்ளது.

1861ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ஆம் நாள் கூட்டாட்சி அரசுக்குச் சொந்தமான **சம்டர் கோட்டை** (Fort Sumter) தாக்கப்பட்டதிலிருந்து தொடங்கப்பட்ட போர், 1865ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9ஆம் நாள் **அப்போமடாக்ஸ்** என்னு மிடத்தில் தென்னவர் தளபதி **ராபர்ட் லீ** சரணடைந்தது வரை நீடித்தது. போரின்போது வடவர்களுக்குச் சாதகமாக ஒரு சில நிலைகள் அமைந்திருந்தன. மக்கள் தொகை வடபகுதியில் 22,000,000, தென் பகுதியில் 9,000,000 மட்டுமே இருந்தது. பெரும் அளவு நிதி வசதி, கப்பல்படை, நன்கு அமைந்துவிட்ட பொருளாதாரத் தன்னிறைவு பெற்ற நிலை ஆகிய அனைத்தும் வடவர்களுக்கு, அதாவது தேசிய அரசுக்குச் சாதகமாக அமைந்து விட்டது. அத்தகைய வலுவான நிலையினைக் கூட்டரசு நாடுகள் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் தென்னவரின் கூட்டரசுக்குச் சாதகமான ஒரு சில நிலைகளும் இருந்தன. தென்பகுதியில் நீண்ட கடற்கரைப் பகுதிகள் இருந்ததால், கடற்படை கொண்டு கூட்டரசுப் பகுதிகளை முற்றுகையிட இயலாது. மேலும் போரிடுவதில் தென்னவர் வல்லவர், வீரம் செறிந்த ஆற்றல் மிக்கவர். தங்களுடைய நாட்டிலேயே போர் நடப்பதால் நிலவியல் அமைப்புகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நல்வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். அத்தகு சாதகமான நிலையினைக் கொண்ட கூட்டரசு நாடுகள் முதல் இரண்டாண்டுகள் ஆரம்ப வெற்றிகளையும், பின்னர் தோல்வி யுறாமலும் போரிட்டு வந்தன. அந்நிய நாடுகளின் உதவி கிடைக்கும் வாய்ப்புகளும் அதிகமாக இருந்தன. ஆனால் 1862ஆம் ஆண்டின் இறுதியில் வெற்றிவாய்ப்புகள் மாறின. தேசிய அரசின் பகுதிகளை இரண்டாகத் துண்டிக்கும் வகையில் வெற்றியுடன் முன்னேறிய தளபதி லீயின் படைகள் மேரிலாந்தில் '**ஆண்டியேடம்**' (Antietam) என்னுமிடத்தில் தேசிய அரசின் தளபதி **ஜார்ஜ் மெகல்லன்** என்பவரால் முறியடிக்கப் பட்டது. முறியடிக்கப்பட்ட லீயின்படை பொடோமாக் நதியினைக் கடந்து பின்வாங்கியது. 1863ஆம் ஆண்டு ஜூலையில் வடக்கு நோக்கி படை நடத்த தளபதி லீ மறுபடியும் முயன்று தோல்வியுற்றார். கூட்டரசு நாடுகளின் தோல்வி ஆரம்பமானது. வெற்றிவாய்ப்பு உறுதிப்பட்டு விட்டதைக் கண்ட லிங்கன் நீக்ரோ விடுதலைப் பேரறிக்கையினை வெளியிட்டார். அதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும், கூட்டரசின்கீழ் இருக்கும் மாநிலங்களையும் உள்ளிட்டு, இருக்கும் நீக்ரோ அடிமைகள் அனைவரையும் அடிமைத்தனத்தினின்றும் விடுவித்தது. நாட்டின் படையில் சேருமாறு அவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டனர். அதன்மூலம் அமெரிக்க

உள்நாட்டுப் போர் மனித இனத்தின் உரிமைகளுக்காகவும், நீக்ரோக்களின் விடுதலைக்காகவும் ஏற்பட்ட அறப்போராக மாறியது. அத்தகு நிலை வடவர்களின் வெற்றிக்குக் கட்டியம் கூறியது.

**(ஈ) விளைவுகள்**

உள்நாட்டுப் போரின் விளைவுகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் மிகவும் முக்கியமான திருப்புமுனையாக அமைந்துவிட்டன. 200,000 பேருக்கும் அதிகமாக போர்க்களத்திலோ அல்லது போர்க்காயங்களால் பின்னரோ உயிரிழந்தனர். போர்க்காலத்தில் ஏற்பட்ட கொள்ளை நோய்கள் விபத்துகள் மற்றும் பல்வேறு காரணங்களால் மேலும் 413,000 பேர்கள் மாண்டுபோயினர். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி சட்டபூர்வமாக அடிமைமுறை அகற்றப்பட்டது. அரசியல் சட்டத்தின் 14ஆவது திருத்தம் அடிமைத்தனத்தினின்றும் விடுதலையளிக்கப்பட்ட நீக்ரோக்களுக்கு அமெரிக்கக் குடியுரிமையினை வழங்கியது. இனம், நிறம், முந்தைய அடிமைநிலை ஆகிய காரணங்களின் அடிப்படையில் நீக்ரோக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகின்ற நிலையினை, 15ஆவது திருத்தச் சட்டம் அகற்றியது.

உள்நாட்டுப் போரின் விளைவாக, தென் மாநிலங்கள் தங்களது செல்வாக்கினையும், புகழையும் இழந்து, அவல நிலையில் இருந்தன. வளமான வயல்கள் அழிவுண்டு கிடந்தன. பல நகரங்கள் தீக்கிரையாக்கப்பட்டு, அழிபாடுகளுக்கிடையே கிடந்தன. பல பெரிய பண்ணைகள் கேட்பாரற்றுக் கிடந்தன. மக்கள் என்ன நடக்குமோ என்ற அச்சத்தினாலும், பேரழிவைக் கண்ட திகைப்பினாலும் செய்வதறியாது தடுமாறினர். அத்தகைய வறிய நிலையில் காணப்பட்ட மக்கள், தங்கள் வளப்பத்தினையும், செல்வாக்கினையும் மீண்டும் பெற்று, போரின் அழிவுகளை நீக்கி, புனரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி, புதுவாழ்வு பெற்று, அரசியல் ஆக்கம்பெற மேலும் பல ஆண்டுகள் ஆயின. போரில் பங்கெடுத்திருந்த தென்னவர்களுக்கு வாக்குரிமையும், பதவியில் அமரும் உரிமையும் தடைசெய்யப்பட்டுவிட்டது. தேசிய காங்கிரஸ் தென்னவர்கள் தங்களது தவற்றினை உணர்ந்து, திருத்திக்கொள்ளும்வண்ணம் அத்தகையத் தடைச் சட்டங்களை ஆக்கித் தண்டித்தது. அத்தகு தடைச் சட்டங்களின் விளைவாகக் கல்வியறிவற்ற, ஆட்சி அனுபவமோ பயிற்சியோ இல்லாத நீக்ரோக்கள் தென் மாநிலங்களில் முக்கிய பதவிகளை ஏற்றனர். அந்த அவல

நிலையினைப் பயன்படுத்திக்கொண்டு, வடமாநிலங்களிலிருந்து அரசியல் வாதிகள் எனக் கூறிக்கொண்டு ஊதியம் பெற வேண்டிவந்த சுயநலவாதிகள் (Carpet Baggers) தென் பகுதி மக்களை அச்சுறுத்தி, சுரண்டி, மேலும் தொல்லைகளை ஏற்படுத்தினர்.

தென் மாநிலங்களில் அமெரிக்கா புகுத்திய மக்களாட்சி முறை 19ஆம் நூற்றாண்டின் அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. 14ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நாட்டின் பொருளாதார ஏற்றத்திற்கு உதவும் மாபெரும் சிறப்புத்தன்மை பெற்று விளங்குகின்றது. 'சட்ட முறைகளை முறையாகப் பின்பற்றாமல் ஒருவரது உயிர், உடைமை, உரிமை ஆகியவை களைப் பறிக்கும் அல்லது தடுக்கும் உரிமை எந்த மாநில அரசுக்கும் இல்லை' என்பது 14ஆவது அரசியல் திருத்தச் சட்டம். அத்திருத்தத்தில் காணப்படும் 'Person' என்ற சொல் தனிமனிதரை மட்டுமன்றி, நிறுவனங்களையும் (corporations) குறிப்பிடுகின்றது எனப் பெரும் வர்த்தக நிறுவனங்களின் பிரதி நிதிகள் வாதிட்டனர். 1886ஆம் ஆண்டில் அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் அத்தகு வாதத்தினை ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாக வர்த்தக நிறுவனங்கள் ஏராளமாக நிறுவப் பட்டன. அரசுகளின் தலையீடு, கட்டுப்பாடுகள், தடைகள் ஆகிய எவ்விதத் தொல்லைகளுமின்றி அத்தகைய பெரும் நிறு வனங்கள் போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்தன. பல் ஆண்டு கள் அத்தகைய நிறுவனங்களை மாநில, தேசிய அரசுகள் கட்டுப் படுத்த இயலவில்லை. அதிக நேர உழைப்பு, குறைந்த ஊதியம் ஆகியவைகளைத் தடுக்கும் எத்தகைய சட்டங்களை மாநிலங் கள் இயற்றினாலும், வர்த்தக, மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் சட்டத்தின் துணையின்றி, தங்களது சொத்துரிமை தடை செய்யப்பட்டது எனக் கூக்குரலிட்டனர். அத்தகைய தடை யற்ற நிலையில் பொருளாதார வளர்ச்சி மிகவும் விரைந்து காணப்பட்டது. தொழில்கள் வியத்தகு வளர்ச்சிபெற்றன. உள்நாட்டுப்போர் ஒன்றினைத் தவிர, வேறு எந்த வரலாற்று நிகழ்ச்சிகளும் அமெரிக்காவின் மாபெரும் பொருளாதார வளர்ச்சியின் அத்தகைய வேகத்தினை தூண்டிவிட்டிருக்க முடி யாது எனக் கருதப்படுகின்றது.

உள்நாட்டுப் போர் முடிவுற்றது. அமெரிக்க ஐக்கியம் காப்பாற்றப்பட்டுவிட்டது. ஆனால் அவ்வாறு காப்பாற்றும் வகையில் அளவற்ற ஆட்சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டது. நாடு எண்ணற்ற தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

போரின் பின்னர் எழுந்த பிரச்சனைகளைச் சமாளிக்க மேலும் அதிக தொகையும், திட்டங்களும், பொறுப்பும் தேவைப்பட்டன. அத்தகைய பிரச்சனைகளைத் துணிந்து ஏற்றுத் திறம்பட நடத்தி, அழிவுகளினின்றும் மீண்டு, விரைந்து செல்வ நிலையை மீண்டும் அடைய சீரிய, ஆக்கத்திறன் பொருந்திய தலைமை தேவைப் பட்டது. அத்தகைய தலைமையை ஏற்கும் திண்மைகொண்ட குடியரசுத் தலைவரும் கொல்லப்பட்டார். 1865ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாளிரவு தளபதி லீ-யின் படைகள் சரணடைந்த ஐந்தாம் நாள் வாஷிங்டன் நகரிலுள்ள ஃபோர்டு நாடக அரங்கில் குடியரசுத் தலைவர் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போது, நாடக நடிகர்களில் ஒருவரான வில்கின்ஸ் பூத் என்பார் லிங்கனைச் சுட்டுக் கொன்றார். அமெரிக்க ஐக்கிய நாட்டு வரலாற்றின் மிகவும் இக்கட்டான நிலையில் ஆர்வமுடன், நேர்மையான திறமையுடன் பணியாற்றும் தகைமை சான்ற தலைவனை கொலைகாரன் ஒருவனின் தீய செயலால் அமெரிக்கா இழந்தது.

(உ) புனரமைப்பு

உரிமை, சமத்துவம் ஆகிய உயரிய கொள்கைகளை நிலை பெறச் செய்வதில் ஏற்பட்ட போராட்டமே அமெரிக்க உள் நாட்டுப் போர் எனப் பல அறிஞர்களால் கருதப்படுகின்றது. அத்தகைய உள்நாட்டுப் போரின் பின்னர் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. நாணயமற்ற முறையிலும், சமுதாயச் சுரண்டல் களிலும் ஈடுபட்டு பணம் சேர்க்க முயன்றவர்கள் பலவித அரக்கத் தன்மை கொண்ட இயக்கங்களை உருவாக்கி, மக்களை மேலும் துன்புறுத்தலாயினர். எவ்விதத்திலேனும் செல்வம் சேர்த்து வளம் காண பெரும்பாலோர் முயன்ற அக்காலத்தினை **'பொன் வேய்ந்த புது நாகரிகக்காலம்'** (Gilded Age) என **மார்க் ட்வெயின்** (Mark Twain) என்ற ஆசிரியர் குறிப் பிடுகின்றார். 1890ஆம் ஆண்டு வரையில் சுயநல வேட்கை கொண்ட எவரும் சொந்த முயற்சியால் எம்முறையைக் கடைப் பிடித்தாகிலும், அமெரிக்காவின் செல்வ வளத்தில் பங்கு கொண்டு உயர முடியும் என்ற எண்ணத்தில் செயல்பட்டிருந்தனர். தடை யற்ற வர்த்தக உரிமை, கட்டுப்பாடற்ற வணிகப் போட்டி என்ற கொள்கைகளே அக்காலத்து பொருளாதாரக் கோட்பாடு களாக விளங்கின. 'தகுதியுள்ள எவரும் வாழும் வகை தேடிக் கொள்ள முடியும்' என்ற இயற்கையின் நியதிப்படி, அமெரிக்க மக்களும் பொருளாதார ஆக்கம் தேடுவதில் போட்டியிட்டனர். அது அமெரிக்கர்களின் வாழ்க்கைப் போராட்டமாகவும் அமைந்து

விட்டது. அத்தகைய போராட்டங்களின் போது சிறப்புரிமை களற்ற பாமர மக்கள் பெரிதும் அல்லலுற்றனர்.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர் அமெரிக்காவில் தோன்றிய பொருளாதார இயக்கங்களில் Green Backs-Movement என்ற **அமெரிக்கப் பணத்தாள் முறைச் சீர்திருத்த இயக்கம்** (1870's-1880's) மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும். அவ்வியக்கத்தினைச் சேர்ந்தவர்கள் நாட்டில் காணப்பட்டுள்ள பணத் தட்டுப்பாட்டு முறை போரில் புண்பட்டுப்போன பாமர மக்களையும் வேளாண் குடியினரையும் மேலும் துன்புறுத்துகின்றது என்றும், அத்தகு நிலையினை மாற்ற அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றனர். 1865ஆம் ஆண்டில் தனியொருவரது ஆண்டு வருமானம் 58 டாலர்களாக இருந்தது. 1876ஆம் ஆண்டுக்குள் 17 டாலராகக் குறைந்துவிட்டிருந்தது. அவ்வாறு அமெரிக்காவில் புழங்கிவருகின்ற பணத்தாள்களின் அளவில் ஏற்பட்ட குறைவு ஏற்கெனவே கடன்பட்டுக் கிடந்த விவசாயப் பெருங்குடி மக்களை மேலும் கடன் பளுவில் ஆழ்த்தி வெறுப் படையச் செய்திருந்தது. அத்தகைய இக்கட்டான பணத் தட்டுப்பாட்டினை நீக்க, தேசிய அரசு, தேவையான அளவிற்குப் **பச்சை நிறப் பணத்தாள்களை** (Green Back Currency) அச்சிட்டு வெளியிடவேண்டும் என்றும், அத்தகைய முறையே **பண நிர்வாக முறை** (Managed Currency) என்றும் பொருளாதார வல்லுநர்கள் அரசிற்கு அறிவுரை கூறினர். **ஹென்றி கேரி** (Henry Carey) என்பவரும், பல தொழிலகங்களின் உரிமையாளரும், 1876ஆம் ஆண்டு **சுதந்திர தேசியக் கட்சியின்** வேட்பாளராகக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டவருமான **பீட்டர் கூப்பர்** (Peter Cooper) என்பவரும் அரசு பணத்தாள் முறையைச் சரிவர நிர்வாகம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் தேவையான அளவு காகித நாணயங்களை அச்சிட்டு வெளியிட வேண்டும் என வற்புறுத்தியவர்களில் ஒரு சிலராவர்.

அத்தகையப் பணத் தட்டுப்பாடுகளினால் மிகவும் இன்னலடைந்தவர்கள், உள்நாட்டுப் போருக்குப் பின்னர், பெருந் தொகையைக் கடனாகப் பெற்று, அதிக விலை கொடுத்து விளை நிலங்களை வாங்கிய விவசாயப் பெருங்குடி மக்களே யாவர். புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவு உயர வேண்டும். அவ்வாறு பண அளவு உயரும்போது தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களின் விலையும் உயரும். அதனால் அதிக லாபமடைந்து தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பி அடைத்துவிட்டு, அட

மானப் வைத்திருந்த பொருள்களை மீட்டுக்கொள்ள முடியும் என நம்பினர். ஆனால் **Green Backs** என்ற பணத்தாள் முறை சீர்திருத்த இயக்கத்தினர் வேறுசில கொள்கைகளை வற்புறுத்தினர். வருமானவரி விதிக்கவேண்டும் என்றும், நிலங் களைப் பயன்படுத்துவோருக்கு நாட்டின் பொது நிலங்களை விற்பனை செய்வதை (1888ஆம் ஆண்டு) குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வாதாடினர். தொழிலாளர் இயக்கங்களின் ஆதரவினைப் பெறும் வகையில் ரயில் பாதை கள், தந்தி நிறுவனங்கள், மகளிர் வாக்குரிமை, செனெட்டர் களைத் தேர்ந்தெடுக்க மறைமுகத் தேர்தல் முறையினைப் பயன்படுத்தல் ஆகிய கோரிக்கைகளையும் தங்களது அடிப் படை நோக்கங்களாகக் கொண்டனர்.

1891ஆம் ஆண்டில் **பாப்புலிசக் கட்சி** (Populism) தோன்றி யது. இக்கட்சியானது விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியவர் களின் உரிமைகளைக் காக்கவும், நாட்டின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் பெற்றுள்ள முதலாளித்துவப் போக்கினை அடக்கவும் தோன்றியது. அத்தகு இயக்கங்கள் அரசின் குறைபாடுகளை எடுத்துரைத்து, பொது மக்களின் எண்ணங்களை அரசுக்கு எடுத்தியம்பின. அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ந்தோங்கத் தொடங்கியது.

# அத்தியாயம் 10

# மேஜியின் முன்னிலை மீட்சி (1868) ருஷிய - ஜப்பானியப் போர்

1868ஆம் ஆண்டில் ஏற்பட்ட மேஜியின் முன்னிலை மீட்சி ஜப்பானிய வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்தது. வரலாறு காணாத நிகழ்ச்சியாக, இது அமைந்துவிட்டது. அறிவும், திறமையும் துணிச்சலும், வேகமும் ஆர்வமும் கொண்ட ஜப்பானியர் மிகவும் குறுகிய காலத்தில் வியத்தகு சாதனைகள் புரிந்து, ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இணையாக உயர்ந்து சிறந்தனர். 1868ஆம் ஆண்டிற்கு முன்னர் பழமையின் சின்னமாக நில மானிய முறையின் வளர்ச்சியற்ற தன்மையில் உழன்று பின் தங்கிய நிலையிலிருந்த ஜப்பான் மேஜியின் முன்னிலை மீட்சி ஏற்பட்ட ஒரு சில ஆண்டுகளில் முற்றிலுமாக மேலை நாட்டினரைப் பின்பற்றி மாறிவிட்டது. மிகமிக வளர்ந்து விட்டிருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இணையாக உயர்ந்துவிட்டிருந்தது. அதிலும் சிறப்பாக ருஷியாவையும் விட சிறந்து காணப்பட்டது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஜப்பானிய நிகழ்ச்சியை ஈண்டு காண்போம்.

## மேஜியின் முன்னிலை மீட்சி (1868)

### (அ) முன்னிலை மீட்சிக்கான காரணங்கள்

1853ஆம் ஆண்டு அமெரிக்க கடற்படைத் **தளபதி பெர்ரி** (Commodore Perry) என்பவர் நான்கு போர்க் கப்பல்களுடன் தோக்கியோ விரிகுடா பகுதியிலிருக்கும் **உராகா** (Uraga) துறைமுகத்திற்கு வருகை தந்தார். அமெரிக்க வாணிபத்திற்கு ஜப்பான் தனது துறைமுகங்களைத் திறந்து விட்டாகவேண்டும் என அச்சுறுத்தினார். தாம் அடுத்த ஆண்டு மேலும் பெரிய படையுடன் வருவதாகவும், அவ்வாறு வரும்போது இணக்கமான முடிவினைத் தெரிவிக்க வேண்டுமென்றும் உரைத்துச் சென்றார். அவர் அச்சுறுத்தியது போன்றே தளபதி பெர்ரி அவர்கள் 1854 ஆம் ஆண்டு மேலும் சில போர்க் கப்பல்களுடன் திரும்பி வந்தார். அமெரிக்க வாணிபத்திற்காக இரண்டு ஜப்பானியத் துறைமுகங்

கள் திறந்து விடப்படும் என்ற உடன்படிக்கையை ஜப்பானிய அரசு செய்து கொண்டது. இது **கனகாவா உடன்படிக்கை** (Treaty of Kanagawa) என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் இங்கிலாந்து, ருஷ்யா, ஹாலந்து நாடுகளும் ஜப்பானில் வர்த்தக உரிமைகள், சலுகைகள் பெற்றன

1854ஆம் ஆண்டு செய்து கொண்ட உடன்படிக்கையின் கூறுபாடுகளைக் கணிசமான அளவில் விரிவாக்கிய புதிய வர்த்தக உடன்படிக்கையொன்றினை ஜப்பானில் அமெரிக்காவின் வர்த்தக நிலையராகத் தங்கியிருந்த தளபதி **டவுன்ஷெண்டு ஹாரிஸ்** (General Townshend Harris) என்பார் 1858ஆம் ஆண்டில் செய்துகொண்டார். இதே போன்ற விரிவான உடன்படிக்கைகளை இங்கிலாந்து, ருஷியா, பிரான்சு போன்ற நாடுகளும் செய்து கொண்டு மேலும் புதிய சலுகைகளைப் பெற்றன.

முதல் அபினிப் போரின் முடிவில் கையெழுத்தான நாங்கிங் உடன்படிக்கையின்போது (Treaty of Nanking) சீனா அடைந்திருந்த அதே அவலநிலையை தளபதி பெர்ரியின் வருகைக்குப் பின்னர் ஜப்பானும் அடைந்தது. ஜப்பானின் நகரங்களில் அந்நியரின் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன. உடன்படிக்கையின் படி பல துறைமுகங்கள் அந்நிய வர்த்தகர்களுக்குத் திறந்து விடப்பட்டன.

மேலையரின் வர்த்தகத்திற்காக அவர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து, ஜப்பானியக் கதவுகள் திறந்துவிடப்பட்டதால், ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஷோகன்களின் மதிப்பு வெகுவாகக் குறைந்தது. திறமையற்று விளங்கிய ஷோகன்களின் ஆட்சிக்கெதிராகவும், வலிந்து நுழைந்துவிட்ட அந்நியர்களுக்கு எதிராகவும் ஜப்பானியர் எழுப்பிய முழக்கங்கள் தலைநகரில் மட்டுமல்லாது ஜப்பானிய நகரங்கள் அனைத்திலும் எதிரொலித்தன. 'பேரரசரை பெருமைப்படுத்துவோம்— அந்நியர்களை விரட்டுவோம்' என்பது போன்ற முழக்கங்கள் ஜப்பானின் மூலை முடுக்குகளிலெல்லாம் விண்ணதிர எதிரொலித்தன. ஷோகன்களுக்கு எதிரான முழக்கங்களும், அதன் விளைவாக எழுந்த எதிர்ப்புகளும் ஷோகன்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயின. மிகாடோ (Mikado) ஜப்பானியப் பேரரசர் மீண்டும் முழு அதிகாரம் பெற்றார். இதுவே மிகாடோவின் முன்னிலை மீட்சி என வழங்கப்படுகின்றது.

ஷோகன்களின் வீழ்ச்சிக்கு வேறு பல காரணங்களும் உண்டு. ஷோகன்களின் நீண்டகால ஆட்சியின்போது உழவர் பெருமக்கள்

மீது படிப்படியாக அதிக வரி விதிக்கப்பட்டிருந்தது. மிக அதிக மான வரிச்சுமையைத் தாங்க இயலாத உழவர் கூட்டம் அதிருப்தி அடைந்திருந்தது. **பகுஃபு (Bakufu)** அல்லது இராணுவ ஆட்சியாளர்களான ஷோகன்கள் சிறந்த அரசியல் கொள்கைகளையோ அல்லது பொது நிதியியல் (Public Finance) கோட்பாடு களையோ உருவாக்கிச் செயல்படுத்தவில்லை. பணத் தட்டுப் பாடு ஏற்பட்டபோது தாற்காலிகமாக அவைகளைச் சரிக்கட்டிக் கொண்டனரே தவிர, தேசியக் கடன்கள் போன்ற நிலையான, முறையான வழிகளேதும் கடைப்பிடிக்கப்பட வில்லை. பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட போதெல்லாம் உழவர்கள் மீதும், வணிகர்கள் மீதும் அதிக வரி விதிக்கப்பட்டது. வரிப்பளுவால் நசுக்கப்பட்ட அவ்விரு சாரரும் 1868ஆம் ஆண்டில் ஷோகன் களுக்கு எதிராக ஏற்பட்ட புரட்சிக்குத் தலைமையேற்று நடத்தி, வெற்றி பெற்றனர் இதன் விளைவாக எழுநூறு ஆண்டுகளுக் கும் மேலாக ஜப்பானில் ஷோகன்கள்-பேரரசர் என இருந்த இரட்டையாட்சி முறையை நீக்கிவிட்டதாக ஜப்பானிய மிகாடோ (பேரரசர்) அரசப் பேராணை ஒன்றினை வெளியிட்டார். அந்தப் பேராணையின்படி ஷோகன்கள் பதவி நீக்கப்பட்டனர். பேரரசர் தனது முழு அதிகாரங்களையும் மீண்டும் பெற்றார். இந்த நிகழ்ச்சியே **மேஜியின் முன்னிலை மீட்சி** என ஜப்பானிய வர லாற்றில் இடம் பெற்றுள்ளது. அவ்வாறு முன்னிலை மீட்கப் பட்ட ஜப்பானிய **மிகாடோ முட்சு ஹிடோ** (Mutsuhito) ஆவர். அவருடைய ஆட்சிக்காலமே (1868 — 1912) ஜப்பானிய வரலாற்றில் 'மேஜியின் காலம்' அல்லது 'ஒளி பொருந்திய' அல்லது 'தெய்விகத தன்மை வாய்ந்த' ஆட்சிக்காலம் என்று புகழப்படுகின்றது.

மேஜியின் முன்னிலை மீட்சி என்பது ஷோகன்களின் ஆட்சி, கொள்கைகள் ஆகியவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இருப்பினும் ஷோகன்கள் தங் களது ஆட்சிக்காலத்தின் இறுதியில் ஏராளமான ஜப்பானிய இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி கல்வி கற்றுவரச் செய்தனர். அவ்வாறு மேலைநாட்டில் கல்வி பயின்று தாயகம் திரும்பிய இளைஞர்கள் சீர்திருத்த இயக்கத்தின் முன்னணியில் நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் புதிதாக அரசின் முழுப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்ட ஜப்பானிய மிகாடோ (பேரரசர்) ஷோகன்களின் காலத்தில் நியமிக்கப்பட்ட அரசின் அதிகாரிகளையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று. அதே அதிகாரிகள் புதிய ஆட்சி முறையின் சீர்திருத்தக் கருத்துகளை யும் ஏற்றுச் செயல்படுத்தினர். எழு நூறு ஆண்டுகளுக்கும்

அதிகமாக ஷோகன்களின் கைப்பாவையாக இருந்த ஜப்பானிய மிகாடோ 1868ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியால் தனது பண்டைய அதிகாரங்கள் அனைத்தையும் மீட்டு, அவைகளைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரத்தையும் திரும்பப் பெற்றார். அத்தகைய மீட்சிக்குக் காரணமாக இருந்த புரட்சித்தலைவர்கள் முறையாகத் திட்டமிட்டு பல நூற்றாண்டுகளாக ஜப்பானைப் பிணித்திருந்த பழமைத் தளைகளை உடைத்தெறிந்து, புதிய ஜப்பான் உருவாக வழிவகை செய்தனர்.

**(ஆ) அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்**

ஜப்பானின் புதிய ஆட்சி, வளர்ந்துவிட்ட மேலைநாடுகளின் பாணியில் சீர்திருத்தங்களை விரைந்து மேற்கொண்டது. நில மானிய முறை ஒழிக்கப்பட்டது. பல நிலப்பிரபுக்களுக்கு ஓய்வூதியம் அளித்தோ அல்லது மொத்தமாக ஒரு தொகையைக் கொடுத்தோ அவர்களது பரம்பரை அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. சமுதாயத்தில் இருந்த பல குலங்களின் (Clans) செல்வாக்கு ஒடுக்கப்பட்டது. ஜப்பானிய மறவர் குலமான **சாமுராய்கள்** (Samurais) என்பவர்கள்தான் படைத் தலைவர்களாக, ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள். 'சாமுராய்' குலத்தினர்தான் படைப் பொறுப்பினை ஏற்கவேண்டும் என்றிருந்த பண்டைய சிறப்புரிமையைத் தளர்த்தி, ஜப்பானிய குலங்கள் அனைத்திலுமிருந்து இளைஞர்களைச் சேர்த்து மேலை நாடுகளின் பாணியில் பிரெஞ்சு படையதிகாரிகளின் ஆதரவுடன் புதிய ஜப்பானிய தேசியப் படை உருவாக்கப்பட்டது. டச்சுக்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் உதவியுடன் ஜப்பானியக் கடற்படை திருத்தியமைக்கப்பட்டது. இரயில் போக்குவரத்து, தந்திமுறை, கலங்கரை விளக்குகள், கப்பல்கட்டும் தளங்கள் ஆகிய அனைத்தும் உருவாக்கப்பட்டன. கட்டாய ஆரம்பக்கல்வி முறை புகுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களும், தொழில்பயிற்சிப் பள்ளிகளும் நாடெங்கிலும் ஏற்படுத்தப்பட்டன. பலதுறையைச் சார்ந்த பேராசிரியர்கள் மேலை நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டனர். ஜப்பானிய இளைஞர்கள் மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டனர். நிலங்கள் முறையாக அளக்கப்பட்ட பின்னர் நிலவரி விதிக்கப்பட்டது. மேலை நாட்டு சட்டத்துறை வல்லுநர்களின் உதவியுடன் புதிய குற்றவியல் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் 1902ஆம் ஆண்டு வரை மகளிர் உயர்கல்வி கற்க வழிவகை செய்யப்படவில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலை நாட்டுப் பாராளுமன்ற முறையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் அவை,

பிரபுக்கள் அவை என்ற இரு அவைகளைக் கொண்ட டயட் (Diet) என்ற நாடாளுமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆட்சித் துறையில் சிறந்த அனுபவம் பெற்றவர்களும், மக்கள் பணியில் சிறப்பு பெற்றவர்களும் கொண்ட **அமைச்சரவையும்** (Cabinet) **அரசப் பேரவையும்** (Privy Council) ஏற்படுத்தப்பட்டன. நாடாளுமன்றமும் அமைச்சரவையும் ஜப்பானியப் பேரரசரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த இயலாது என்ற கருத்தினை நோக்கும்போது, ஜப்பானில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு முறை ஆங்கிலப் பாராளுமன்ற முறையினின்றும் மாறுபட்டிருப்பது தெரியவரும். பல நூற்றாண்டுகளாக ஜப்பானியப் பேரரசர் **கியோத்தோ** (Kyoto) நகரில் வாழ்ந்து வந்தார். அவர் அங்கிருந்து ஜப்பானின் தலைநகரமான **எதோ** (Yedo) அல்லது **தோக்கியோ** நகருக்குக் குடிபெயர்ந்தார். பேரரசர் தெய்வத் தன்மை பெற்றவராகவே கருதி வணங்கப்பெற்றார். சூரியக் கடவுளின் நேரடி வாரிசாகத் தோன்றிய பேரரசர், கடவுளைப் போலவே வணக்கத்திற்குரியவர் என்ற கருத்து மக்களிடையே பரவியது. அக்கருத்தினை மக்களும் நம்பி ஏற்றுக்கொண்டனர். ஜப்பானில் புத்த சமயத்தினரும், கிறிஸ்தவ சமயத்தினரும் பேரரசரை தெய்வீகத்தன்மை கொண்டவராக ஏற்றுக்கொண்டு அவரடி தொழுது நிற்பதைத் தங்களது சமயக் கொள்கையாகவே ஏற்றுக் கொண்டனர். இதே கருத்தினை ஜப்பானிய **ஷிண்தோ** (Shinto) சமயக் கருத்தாகவும் ஏற்றுக் கொள்ளலாம். ஷிண்தோ சமயம் நாட்டுப் பற்றினையும் சமயக் கொள்கையாகவே ஏற்றுக் கொண்டுள்ளது. ஷிண்தோ சமயம் மறுமலர்ச்சியடைந்தது. புத்த சமயக் கோட்பாடுகளைக் களைந்து, புதிய மறுமலர்ச்சியடைந்த ஷிண்தோ சமயம், பேரரசரை ஜப்பானின் ஈடு இணையற்ற சக்தி பெற்றவராக, தெய்வமாகவே வழிபடவேண்டும் என்பதனை வலியுறுத்தியது. "பேரரசர் தெய்வத் தன்மை பெற்றவர்; தெய்வங்கள் உறையும் நாடு ஜப்பான்; எனவே மானிட இனத்தின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாக, ஜப்பான் இருக்கவேண்டும் என்பது இறைவனின் கட்டளை" என்பது போன்ற ஷிண்தோ சமயத்தின் கோட்பாடுகள், ஜப்பானியரின் பரம்பரைக் கருத்துகளுக்கு சிறப்பிடம் அளித்தது. இதனால் மேலை நாட்டினரின் புதிய, புதுமையான கருத்துகள், கோட்பாடுகள் ஜப்பானிய உள்ளங்களில் நிலைபெற இயலாத சூழ்நிலை உருவாகியது. மக்களாட்சி முறைக்கும் எதிர்ப்புகள் தோன்றின.

ஆட்சித் துறையின் முழு பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்ட தெய்வீகப் பேரரசர் இருக்கும்போது, பாராளுமன்ற முறை ஆட்சி ஏற்படுவது என்பது இயலாத ஒன்றாகும். அமைச்

சரவை பேரரசரின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுத்தவேண்டும். ஜப்பானிய 'டயட்' அல்லது நாடாளுமன்றம் மக்களின் உள்ளக் கிடக்கைகளைப் பேரரசருக்கு அறிவிக்கும் ஆலோசனை மன்ற மாகவே செயல்பட முடிந்தது.

மேஜியின் அரசியலமைப்புச் சட்டம் வல்லாட்சி முறை, அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சிமுறை ஆகிய இவ்விரண்டின் கலப்பு முறையாக இருந்தது. அரசியலமைப்பு முறையைக் கொண்ட அதே நேரத்தில் அதிகாரங்கள் அனைத்தும் பேரரசரிடமே ஒப்படைக்கப்பட்ட முடியாட்சியாகவே விளங்கியது. 1868ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னிலை மீட்சி அதுவரை மேட்டுக் குடி யினரின் சிறப்புரிமையாக இருந்த அதிகாரங்களை நடுத்தர வகுப் பினருக்கு அளித்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். 1873ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கட்டாய இராணுவ சேவை முறை போரையே தொழிலாகக் கொண்ட புதிய வகுப்பு ஒன்றினையே உருவாக்கிவிட்டது. அத்தகைய படையினர் பேரரசரின் வாயிலாக மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். மூத் தோர் அவை (Genro) என்றழைக்கப்பட்ட புதிய அமைப்பும் பேரரசரின் பாதுகாப்பில் உயர்ந்த அதிகாரம் பெற்று விளங் கியது. பேரரசரின் ஆதரவுடன் எத்தகைய தனி அதிகாரியொரு வா அல்லது எந்த ஒரு குழு மேஜியின் முன்னிலை மீட்சி முதல், இரண்டாம் உலகப் போரின் இறுதிவரை ஜப்பானிய அரசியலில் மிக்குயர் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை, ஜப்பானிய அரசியல் அமைப்பு முறையின் வரலாற்றைத் துருவிப் படிக்கின்ற மாணவர்கள் கண்டுபிடித்து எடுத்துக்காட்ட வேண்டியிருக்கும்.

வளர்ந்துவிட்ட மேலை நாடுகளுக்கு இணையாக ஜப்பானை முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்த ஜப்பா னியர், மேலைநாடுகள்தான் உயர்ந்தவை என்ற கருத்தினை ஏற்க மறுத்தனர். அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கத்துறையில் மேலை நாட்டினரின் மிக்குயர் வளர்ச்சியை ஜப்பானியர் மதித் தனர். அவைகளை அப்படியே பின்பற்றி வளர்ந்து, தாங்களும் மேலை நாட்டினரைப் போன்றே பண்பாட்டுச் சிறப்புமிக்கவர்கள் தாம் என்பதனையும் அறிவுறுத்தினர். அதே நேரத்தில் மேலை நாட்டினரின் சமுதாய அமைப்பு, கோட்பாடுகள் ஆகியவை ஜப் பானிய சமுதாய அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த இயலாத வாறு காத்துக் கொண்டனர். மேலை நாட்டினரின் அறிவியல் முன்னேற்றத்தினைப பயன்படுத்திக் கொண்ட ஜப்பானியர், அவர்களது வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை ஒதுக்கி விட்டனர். மாறாக, மேஜி மாமன்னர் காலத்தில் மேலை நாட்டுக்

கலப்பற்ற, ஜப்பானியருக்கே உரித்தான வகையில் புதிய இனக் கொள்கை (Race Theory) அரசியல் கோட்பாடுகள் (Political Ideology) தேசிய நீதிமுறை, ஒழுக்கப் பண்பு ஆகியவைகளையும் உருவாக்கிக் கொண்டனர். மேலை நாட்டுத் தொடர்பால் ஜப்பானிய சமுதாய அமைப்பில் எவ்விதக் குறிப்பிடத்தக்க மாறுதல்களும் ஏற்படவில்லை. மேலை நாடுகளிடமிருந்து ஜப்பான் எதிர்பார்த்தது—ஏற்றுக்கொண்டது அவர்களின் சமுதாயக் கோட்பாடுகளையல்ல. அதற்கு மாறாக, மேலை நாடுகளுக்கு இணையாக முன்னேற வேண்டும் என்ற முனைப்பார்வத்தின் காரணமாக, அவர்களது அறிவியல் வளர்ச்சியை, தொழில் நுணுக்கத் திறமையைப் பின்பற்றி, தனதாக்கிக் கொண்டு முன்னேற்றப்பாதையில் விரைந்து சென்றது; வல்லரசாக உயர்ந்தது. 'மேஜியின் முன்னிலை மீட்சி' அல்லது நிப்பான் உயிர்த்தெழுதல் (Nippon's Revival) என்பதன் விளைவாக ஏற்பட்ட மிக முக்கிய மாறுதல் ஜப்பானின் பண்டைய ஷிண்தோ சமயத்தில் ஏற்பட்டது. ஷிண்தோ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் உயர்வடைந்தன. ஜப்பானியரின் வாழ்க்கையின் அடிப்படையாகவும்,தேசியக் கொள்கைகளின் நிலைக்களனாகவும், சமயமாகவும் உயர்ந்து நின்றது. வளர்ச்சியடைந்து, தனித்தன்மை கொண்ட வல்லரசாக உயரவேண்டுமானால் ஜப்பானியர் அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒரே சமயக் கொள்கையினடிப்படையில் ஒரே இனம் என்ற உணர்வு மேலோங்கவேண்டும்; அந்த ஒருமைப்பாட்டு உணர்வை, தனித்தன்மை, பண்பாட்டின் அடிப்படையை வழங்கியது ஷிண்தோ சமயத்தின் மறுமலர்ச்சியாகும். எனவேதான் ஜப்பான் மேலைநாட்டு அறிவியல், தொழில் நுணுக்கங்களை மட்டுமே ஏற்றுக்கொண்டு, தனது சமுதாய அமைப்பினைக் காத்துக் கொண்டு, மேலை நாடுகளுக்கு இணையான தனித்தன்மை கொண்ட மாறுபட்ட வல்லரசாக உயர்ந்தது.

**(இ) அரசியல் வளர்ச்சி**

முன்னேற்றப் பாதையில் விரைந்து, வளர்ச்சியடைந்த ஜப்பான், தன்னை இன்னமும் பிணித்திருக்கின்ற தளைகளை, மேலை நாட்டினரால் வற்புறுத்தி, அச்சுறுத்திப் பெறப்பட்ட ஒருதலையான உடன்படிக்கைகளை, உடைத்து, மாற்றியமைக்கும் எண்ணங்கொண்டது. அத்தகைய ஒருதலையான உடன்படிக்கைகள் தளபதி பெர்ரியின் வருகையைத் தொடர்ந்து, ஏற்பட்டவையாகும். அத்தகைய உடன்படிக்கைகளைத் திருத்தியமைக்க ருஷியா மட்டுமே ஒத்துக்கொண்டது. ஏனைய ஐரோப்பிய

நாடுகளும், அமெரிக்காவும் அதற்கு மறுத்தன. 1875ஆம் ஆண்டு ருஷியா ஜப்பானுடன் புதிய உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டது. அவ்வுடன்படிக்கையின்படி ஜப்பான் சகாலின் தீவில் (Sakhalin) ருஷ்யாவின் உரிமையை ஏற்றுக்கொண்டது. அதேபோல குரில் தீவுகளில் (Kurile) ஜப்பானின் உரிமைகளை ருஷ்யா அங்கீகரித்தது. இவ்வுடன்படிக்கை சம நிலையில் உள்ள இரு அரசுகளுக்கிடையே ஏற்பட்டது ஆகும். அதன் விளைவாக உலக வல்லரசுகளின் பட்டியலில் ஜப்பானும் இடம் பெற்றது.

1878ஆம் ஆண்டில் ரியுகு தீவுகளைக் (Ryukus) கைப்பற்ற முனைந்தது. ரியுகு தீவுகளில் வாழ்ந்தவர்கள் ஜப்பானிய இனத்தினர். பண்டைய காலத்தில் அத்தீவுகள் ஜப்பானின் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் ரியுகு தீவுகளின் மன்னர்கள் பீகிங் நகரிலிருந்த சீனப் பேரரசர்களுக்குத் திறை செலுத்தியிருந்தனர். எனவே, ஜப்பானின் எண்ணத்தை சீனா எதிர்த்தது. ஆனால் மேலைநாடுகளின் வற்புறுத்தலின் காரணமாக ரியுகு தீவுகளின் மன்னர் ஜப்பானின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார். 1879ஆம் ஆண்டிலிருந்து ரியுகு தீவுகள் ஜப்பானியப் பேரரசின் ஒரு பகுதியாக மாறின.

தன்மீது திணிக்கப்பட்ட உடன்படிக்கைகளைத் திருத்தியமைக்க முயன்றபோது, இங்கிலாந்துமட்டுமே தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி, அம்முயற்சியைத் தடுப்பதை உணர்ந்து கொண்ட ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி, பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டது. அந்நாடுகளின் ஆதரவுடன் உடன்படிக்கைகளைத் திருத்தியமைக்கும் எண்ணம் கொண்டது. ஜப்பானின் வெளியுறவு அமைச்சராக இருந்த இனோயி பிரபு (Count Inouye, 1879—1887) தமது அரிய முயற்சிகளின் விளைவாக மேலை நாடுகளை சமரச இணக்கத்திற்கு உட்படச் செய்தார். இதற்கு இனோயி சமரச இணக்க வரைவு (The Inouye Compromise Proposals) என்று பெயர். அந்த சமரச இணக்கக் கொள்கையில் 'வெளி நாட்டினரை உள்ளிட்ட வழக்குகளை ஜப்பானிய நீதிமன்றங்கள் விசாரிக்கும்போது, வெளி நாட்டினைச் சார்ந்த நீதிபதி ஒருவரையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்ற கூறுபாடும் காணப்பட்டது. அந்தக் காரணத்தினால் ஜப்பான் இனோயி சமரச முயற்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜப்பானின் அரசியல் கோட்பாடுகளை, ஜப்பானின் அரசியல் நோக்கங்களை மிகவும் சுருக்கமாக விளங்க வைக்கும் வகையில் தளபதி டானி பிரபு (General Viscount Tani) ஓர் அறிக்கை

மூலமாக வெளியிட்டார். அந்த அறிக்கை அரச தந்திர முயற்சிகளையும், அந்நிய நாட்டினரை மகிழ்விக்கும் வகையில் அவர்களின் புகழ் பாடுதலையும், அதன் விளைவாக உருவாக்கப்பட்ட இனோயி சமரச இணக்கத்தையும் சாடியது. ஆகவே இனோயி சமரச முயற்சி கைவிடப்பட்டது.

ஜப்பானில் வளர்ந்தோங்கி வருகின்ற தேசிய உணர்வினை உணர்ந்து கொண்ட இங்கிலாந்து 1894ஆம் ஆண்டு ஜப்பானுடன் ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டது. அதன்படி 'ஜப்பானியச் சட்டங்கள் ஆங்கிலேயரைக் கட்டுப்படுத்தாது' **(Extra Territorial Rights)** என்ற கூறுபாட்டினை ஐந்து ஆண்டுகளில் சிறுகச் சிறுக விலக்கிக்கொள்ள இங்கிலாந்து இணங்கியது. ஜப்பானின் வரிவிதிப்பு உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1894-95ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சீன ஜப்பானியப் போரில் ஜப்பான் மாபெரும் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து மேலை நாடுகள் அனைத்தும் தாங்கள் ஜப்பான் மீது வலிந்து திணித்திருந்த உடன்படிக்கைகளை விலக்கிக் கொண்டன. ஜப்பான் வல்லரசாக உயர்ந்தது.

**(ஈ) சமுதாய — பொருளாதார வளர்ச்சி**

மேஜியின் முன்னிலை மீட்சியின் பின்னர் ஜப்பானில் ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஊதிய உயர்வும், தொடர்ந்து வருமான அதிகரிப்பும், அதன் விளைவாக வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது. இவ்வுயர்வுகள் மக்களிடையே புதிய தெம்பையும், ஒருவரோடொருவர் பழகுவதில்கூட மாறுபாடுகள் ஏற்பட்டன. மாணவர் ஆசிரியர் உறவு, வாடகைக்கார் ஓட்டுநர்- போலீஸ் உறவு, பொது அதிகாரிகள் - ஊழியர் உறவு போன்றவைகூட ஒருவித மதிப்புடன் காணப்பட்டது.

1868ஆம் ஆண்டின் பின்னர் நாட்டுப் பாதுகாப்புடன் தொடர்பு கொண்ட தொழில்கள் விரைவாகப் பெருகின. இரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, படைக்கலன் உற்பத்தி ஆகியவை அரசின் ஆதரவுடன் பெருகி வளர்ந்தன. நெசவு, இயந்திர சாதனங்கள், சுரங்கத் தொழில் ஆகியவை ஆரம்ப காலத்தில் அரசால் ஏற்று நடத்தப்பட்டது. அத்தொழில்கள் பின்னர் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. ஒருசில தொழில்கள் **சைபாத்சு (Zaibatsu)** என்ற செல்வக் குடும்பங்களிடம், மிகக் குறைந்த விலையில் ஒப்படைக்கப்பட்டன. இதனால் நிதிப் பெருக்கமும், தொழில் துறைகளும் குறிப்பிட்ட ஒருசில குழுவின் பொறுப்பில் வந்தன. மிட்சுயி, மிட்சுபிஷி, சுமிதாமோ,

யசுதா (Mitsui, Mitsubishi, Sumitamo, Yasuda) போன்ற செல்வக் குடும்பங்களே 'சைபாத்சு' என்றழைக்கப்பட்டன. இந்தச் செல்வக் குடும்பங்கள் பின்னர் பெரும்பாலான தொழில்களைக் கட்டுப்படுத்தி, நாட்டின் வர்த்தகம் முழுவதையுமே கட்டுப்படுத்தின.

தொழில் துறையில் ஏற்பட்ட வியத்தகு வளர்ச்சியைப் போல அவ்வளவு சிறப்பான வளர்ச்சி விவசாயத் துறையில் ஏற்படவில்லை. அரசு விதித்த நிலவரியைக்கூட செலுத்த இயலாத ஏழை உழவர்கள், தங்களது நிலங்களைப் புதிதாகத் தோன்றிய நிலப் பிரபுக்களிடம் விற்றனர். அவ்வாறு ஒரு சில செல்வந்தர்களிடம் பெரும்பாலான விளை நிலங்கள் விற்கப்பட்ட பின்னரும், ஏழை உழவர்கள் நகரங்களை நோக்கிச் செல்லவில்லை. மூத்தவர்கள் புதிய நில உரிமையாளர்களுக்கு அதிகக் குத்தகை கொடுத்துவிட்டு, விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். இளைஞர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றி குடும்ப வருமானத்தைப் பெருக்கினர்.

தொழில்துறை வளர்ச்சி ஜப்பானியக் குடும்ப அமைப்பினைப் பாதித்தது. இது சமுதாய அமைப்பில் ஏற்பட்ட முக்கியமான மாற்றமாகும். தொழில் வளர்ச்சியும், மக்கள்தொகைப் பெருக்கமும், இதுவரை அமைதியாக ஒரே இடத்தில் பரம்பரை பரம்பரையாக இருந்த நிலைமை மாறக் காரணமாக இருந்தது. வயதில் மூத்தோர் கிராமப் புறங்களில் தங்களது பரம்பரை உழவுத் தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ள, அல்லது சிறு குடிசைத் தொழில்களில் ஈடுபட, இளைஞர்கள் அதிக ஊதியம் தருகின்ற தொழிற்சாலைகளை நாடி நகரங்களுக்குச் சென்றனர்.


முன்னிலை மீட்சியின் ஆரம்ப நாள்களில் மேலையர் நாகரிகத்தின் மீது அதிகமான மோகம் ஏற்பட்டது. மேலை நாட்டினரின் பாணியில் உடையணிவது விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமுதாயப் பிரிவினைகள் நீக்கப்பட்டன. புத்த சமயத் துறவில் திருமணம் செய்துகொண்டு குடும்பவாழ்வில் ஈடுபடவும் வேண்டுமென்றும், மாட்டிறைச்சிகூட உண்ணவேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டனர்! 1885ஆம் ஆண்டின் பின்னர் கண்மூடித்தனமாக மேலையரைப் பின்பற்றும் புதிய மோகம் குறைந்து ஜப்பானியப் பாரம்பரியத்தை, பண்டைய ஜப்பானிய பழக்கவழக்கங்களைப் போற்றித் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்தது. முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## ருஷ்ய - ஜப்பானியப் போர் (1904-05)

ருஷியா மஞ்சூரியாவில் நுழைந்து முன்னேறியதன் விளைவாக ஏற்பட்டதே ருஷிய-ஜப்பானியப் போர். சீனாவின் வலிமையற்ற நிலையைச் சாதகமாகக் கொண்டு ருஷியா தனது கிழக்கெல்லையிலிருந்த மஞ்சூரியாவில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தது. இது ஜப்பானியருக்கு அச்சத்தை விளைவித்தது. தனக்கு எதிரான செயலாக ஜப்பான் கருதியது. 19ஆம் நூற்றாண்டில் மத்திய ஆசியா பகுதிகளில் ஏற்பட்ட ருஷியாவின் ஆதிக்க வளர்ச்சி இங்கிலாந்தை அச்சுறுத்தியது. அத்தகைய **ருஷ்ய ஆபத்தால்** (Russo - Phobia) இங்கிலாந்தும் ஜப்பானும் நெருங்கிவர ஆரம்பித்தன. சீனாவின் வடபகுதியில் ஜப்பானுக்கும் ருஷியாவிற்குமிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில், இங்கிலாந்தின் ருஷியாவைப் பற்றிய அச்சமுமே இப்போருக்கான அடிப்படையான காரணமாகும்.

### (அ) காரணங்கள்

(1) சிமானோசெகி உடன்படிக்கையின் மூலம் ஜப்பான் பெற்ற பகுதிகள் ருஷியாவின் ஆதிக்க வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தது. பனி உறையாத துறைமுகமான ஆர்தரை உள்ளடக்கிய லியோடுங் தீபகற்பத்தினை சிமானோசெகி உடன்படிக்கையின் மூலம் ஜப்பான் பெற்றது. ஆர்தர் துறைமுகத்தை இராணுவத் தளமாகக் கொண்டு, பீகிங்கை அச்சுறுத்த இயலும். இது ருஷியாவின் கீழை ஆதிக்க வளர்ச்சிக்குப் பெரும் தடையாக அமையும். அத்துடன் மஞ்சூரியாவில் ருஷியாவிற்கு ஜப்பான் செயல்பட முடியும். எனவே சிமானோசெகி உடன்படிக்கையைத் திருத்தியமைக்க இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவியை நாடியது. அத்தகைய ருஷியாவின் வேண்டுகோளை இங்கிலாந்து ஏற்க மறுத்தது. இங்கிலாந்து ஜப்பானின் நட்புறவைப் பெற்றது. இருவர் கூட்டணியில் (Dual Alliance) ருஷியாவும் பிரான்சும் உறுப்பினர்கள். எனவே பிரான்சின் ஆதரவை ருஷியா பெற்றது. **மஞ்சள் இனத்தவரின் ஆபத்து** என ஜப்பானின் வளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்ட ஜெர்மனியும் ருஷியாவை ஆதரித்தது. இம்மூன்று நாடுகளின் வற்புறுத்தலால், தான் பெற்ற வெற்றியின் பயனின் ஒரு பகுதியை இழந்தது. ஆர்தர் துறைமுகம் உள்ளடங்கிய லியோடுங் தீபகற்பத்தை ஜப்பான் திரும்பவும் கொடுக்க வேண்டியதாயிற்று. அதற்குப் பதிலாகப் பெருந்தொகையை ஜப்பான் பெற்றுக்கொண்டது. இருப்பினும் லியோடுங் தீபகற்பத்தை இழக்கநேர்ந்ததை ஜப்பான் தனக்கு ஏற்பட்ட தலைக்குனிவாகவே கருதி பொருமியது.




படம் 10.1 ருஷ்ய - ஜப்பானியப் போர்

ஜப்பான் ருஷியாவைப் பழிவாங்க தக்க தருணத்தை எதிர்நோக்கி யிருந்தது. அதன் விளைவே 1904-05ஆம் ஆண்டுகளில் இவ்விரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போராகும்.

(2) 1897ஆம் ஆண்டு ருஷியா சீனாவை வற்புறுத்தி ஆர்தர் துறைமுகத்தைப் பெற்றுக்கொண்டது. சிமானோசெகி உடன்படிக்கையால் தனக்குக் கிடைத்த துறைமுகத்தை ருஷியா வின் தலையீட்டினால் இழந்ததையும், அதே துறைமுகத்தைப் பின்னர் ருஷியாவே வற்புறுத்திப் பெற்றதையும் கண்ட ஜப்பான் மிகுந்த ஆத்திரமடைந்தது. தன்னுடைய கிராண்ட் சைபீரிய இரயில் பாதைத் தொடரை மஞ்சூரியா வழியாக விளாடி வாஸ் டாக் வரை அமைக்கின்ற உரிமையைப் பெற்ற ருஷியா, மஞ்சூரி யாவிலிருந்து ஆர்தர் துறைமுகத்தையும் இணைத்தது. இதன் காரணமாக மஞ்சூரியாவின் தெற்குமுனை வரையிலும் ருஷியா வின் செல்வாக்குப் பரவி நிலைக்க வழியேற்பட்டது.

(3) தூரகிழக்கு நாடுகளின்மீது ருஷியா கொண்டிருந்த ஆதிக்க வளர்ச்சி இங்கிலாந்து-ஜப்பான் நட்புறவு ஏற்படக் காரணமாக இருந்தது. சிமானோசெகி உடன்படிக்கையைத் திருத்தியமைக்க ருஷியா மேற்கொண்ட முயற்சியில் இங்கிலாந்து ஒத்துழைக்கவில்லை என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். 1902ஆம் ஆண்டில் ஏற்பட்ட **ஆங்கில-ஜப்பானிய உடன்படிக் கையின்படி**, உடன்படிக்கை செய்து கொண்ட இருநாடுகளில் ஏதாவது ஒன்றினை எதிரிநாடுகள் இணைந்து தாக்கினால், மற்ற நாடு உதவிக்கு வர வேண்டும். கீழைநாடு ஒன்று சமநிலையில் ஐரோப்பிய வல்லரசுடன் நட்புறவு செய்துகொள்வது இதுவே முதல் தடவையாகும். இதனால் ஜப்பான் உலகநாடுகளிடையே வல்லரசு என்ற உயர் நிலையை அடைந்தது.

ஆங்கில-ஜப்பானிய நட்புறவு உடன்படிக்கையின் உடனடி விளைவு ருஷிய-ஜப்பானியப் போரின் தொடக்கமாகும். அந்த நட்புறவு ஒப்பந்தம் ஜப்பானுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி யாகும். அது கொரியாவில் ஜப்பானுக்கிருந்த சிறப்புரிமையை அங்கீகரித்தது. இருவர் கூட்டணியின் பெயரால் ருஷியாவிற்கு பிரான்சு உதவி செய்யுமானால், ஜப்பானை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் தாக்கியதாகும். அதன் விளைவாக இங்கிலாந்து ஜப்பா னுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். இங்கிலாந்துடன் போரிட வேண்டியிருக்கும் என்ற நிலையால், பிரான்சு ருஷியாவிற்கு உதவ முடியவில்லை. இவ்வாறு ருஷியா தனித்து விடப்பட்டதும் ஜப்பானுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

(4) 1903ஆம் ஆண்டு மாஸ்கோ-ஆர்தர் துறைமுகம் வரையிலான நேரடி இரயில் போக்குவரத்து ஆரம்பமாயிற்று. தூரகிழக்கு நாடுகளின் வைசிராய் ஒருவரையும் ருஷியா நியமித்தது. இத்தகைய நிகழ்ச்சிகள் மஞ்சூரிய ரஷிய் மாநிலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டியது. மஞ்சூரியாவிலிருந்த ருஷியப் படைகள் கொரியாவினுள்ளும் நுழைந்தன. அதுவரை பொறுமையாக இருந்த ஜப்பான் ருஷியாவிற்கு எதிராகத் தலையிட்டது. சீனா, கொரியா போன்ற நாடுகளில் எல்லைகளை மதிக்கவேண்டும் என்றும், **அனைத்து நாடுகளுக்கும் சம உரிமை வழங்கும் கொள்கை (Open door policy)**யைப் பின்பற்றும் உறுதியளித்தல், கொரியாவில் ஜப்பானின் செல்வாக்கினையும், மஞ்சூரியாவில் ருஷியாவின் செல்வாக்கினையும் ஏற்றுக்கொள்ளுதல் என்பன போன்ற உறுதிமொழியினை ஜப்பான் ருஷியாவிடமிருந்து கேட்டது. ஆனால் மஞ்சூரியாவில் தனக்குத் தடையற்ற உரிமைவேண்டும் என்று வற்புறுத்திய ருஷியா அதே போன்ற தடையற்ற உரிமையைக் கொரியாவில் ஜப்பானுக்கு அளிக்க மறுத்தது. எனவே ஜப்பான் வேறு வழியின்றிப் போரைத் தொடங்கியது.

**(ஆ) போரின் போக்கு**

ஜப்பானுக்கும் ருஷியாவிற்கும் இடையே நடந்த இப்போர், எவ்வித ஆக்கிரமிப்புச் செயல்களிலும் ஈடுபடாத நடுநிலை நாடான சீன மண்ணில் நடைபெற்றது இப்போரைப் பற்றிய விந்தையான நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். தனது பேரரசிற்குட்பட்ட மஞ்சூரியாவில் நடக்கும் போரைத் தடுக்கும் வலிமையற்ற நிலையில் சீனா இருந்தது. வலிமையனைத்தும் பெற்ற மாபெரும் அரக்கனுக்கும் சித்திரக்குள்ளனுக்குமிடையே நடக்கும் இப்போரில் சித்திரக்குள்ளனைப் போன்றிருக்கும் ஜப்பானை, அரக்கனைப் போலுள்ள ருஷியா மிக எளிதில் வென்று விடும் எனப் பலர் எண்ணி ஏமாந்தனர். மேலைநாடுகளுக்கு அதிர்ச்சியும் வியப்புமளிக்கும் வகையில் **யாலு நதி, லியோ-யங், ஷாகோ, முக்டன்** ஆகிய இடங்களில் நடந்த போர்களனைத்திலும் ஜப்பான் ருஷியப் படைகளை முறியடித்தது. நீண்ட முற்றுகைக்குப் பின்னர் ஜப்பான் ஆர்தர் துறைமுகத்தையும் கைப்பற்றியது. கொரியாவிற்கும் ஜப்பானுக்கும் இடைப்பட்ட **ஷுஷிமா (Tsushima)** நீரிணைப்பில் நடந்த கடற்போரே, ருஷியா-ஜப்பானியப் போரின் உச்சகட்டமாகும். பால்டிக் கடல் பகுதியினின்று உலகைப் பாதிவலம் வந்த ருஷிய கப்பற்படையை ஜப்பானியக் கப்பற்படைத் தளபதி **தோகோவின்** (ஜப்பானிய நெல்சன் எனப் புகழ் பெற்றவர்) தலைமையில் திறமையுடன்

போரிட்டு அழித்தது. டிரபால்கர் போரில் இங்கிலாந்து பெற்ற மாபெரும் வெற்றிக்கு, இவ் இணையாக ஜப்பானின் இந்த மாபெரும் வெற்றியும் புகழப்படுகின்றது. ருஷியக் கடற்படையின் அழிவின் பின்னர், அமெரிக்கக் குடியரசு தலைவரான **தியோடர் ரூஸ்வெல்டின்** சமாதான முயற்சியை ஏற்று, இரு நாடுகளும் போரை நிறுத்தின. அவரது சமரச முயற்சியின் விளைவாக 1905ஆம் ஆண்டு **போர்ட்சு மவுத் நகரில்** சமாதான உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அவ்வுடன்படிக்கையின்படி ஆர்தர் துறைமுகம் உட்பட லியோடுங் தீபகற்பத்தினையும், சீனாவின் கிழை இரயில் தொடரின் தென்பகுதி முழுவதையும் ருஷியா ஜப்பானுக்கு அளித்தது. மேலும் சாகாலின் தீவின் தென்பாதியையும் ஜப்பானுக்கு அளித்தது. மஞ்சூரியாவைச் சீனாவிடம் ஒப்படைத்தது. கொரியாவில் ஜப்பானின் செல்வாக்கினை ஏற்றுக்கொண்டது. போர் இழப்பீடாக ஜப்பானுக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை.

அப்போரில் ஜப்பான் எடுத்துக் கொண்ட முயற்சிகள், செய்த தியாகங்கள் ஆகியவற்றிற்கு ஈடாகப் பெற்ற பயன்கள் மிகவும் குறைவானதாகவே தென்பட்டது. போர் இழப்பீட்டுத் தொகையைப் பெறாதது ஜப்பானுக்கு மிகவும் எரிச்சலூட்டியது. திருப்தியற்ற இந்த உடன்படிக்கை அமெரிக்காவின் தலையீட்டினால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதை உணர்ந்த ஜப்பான் வருத்தமடைந்தது.

## (இ) விளைவுகள்

ருஷிய - ஜப்பானியப் போரின் காரணமாக முக்கிய விளைவுகள் பல ஏற்பட்டன. தூர கிழக்கு நாடுகளில் தனது ஆதிக்க வளர்ச்சியை ஜப்பான் தடை செய்துவிட்டதால், ருஷியா பால்கன் நாடுகளின்மீது தனது கவனத்தைத் திருப்பியது. ருஷியாவின் மாபெரும் தோல்விகள் ருஷியாவின் மாமன்னருக்கெதிரான புரட்சி தோன்றக் காரணமாக அமைந்தது. தரைப் போரிலும், கடற்போரிலும் ஜப்பான் பெற்ற வியத்தகு வெற்றிகள் ஆசிய நாடுகளிடையே, சிறப்பாக இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் புதிய எழுச்சி மிக்க உணர்வுகள் தோன்றக் காரணமாக அமைந்தது. 1911ஆம் ஆண்டில் சீனாவில் ஏற்பட்ட புரட்சிக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்டது. இந்திய சுதந்திரப் போரில் புதிய வேகம் ஏற்படவும் காரணியாயிற்று. ஜப்பானைப் பொறுத்தமட்டில் இப்போர் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது. உலக வல்லரசுகளில் ஒன்றாக உயர்ந்துவிட்ட ஜப்பான், ஐரோப்பிய வல்லரசுகளுக்கு இணையாக, அவைகளின்

அடிச்சுவட்டைப் பின்பற்றி சீனாவில் நுழைந்து தன்னுடைய செல்வாக்குப் பகுதிகளைப் பெற்றது. **கீழை நாடுகளில் இங்கிலாந்து** என்ற பெரும் புகழை இப்போரின் பின்னர் பெற்ற ஜப்பான், மேலை நாடுகளைப் போலவே பேரரசுக் கொள்கையை உருவாக்கிக் கொண்டு, செயல்படுத்த ஆரம்பித்தது.

ருஷிய - ஜப்பானியப் போரின் விளைவாக ருஷியாவிடமிருந்து பெற்ற இரயில் பாதை மற்றும் ஏனைய தொடர்பான சொத்துகளைப் பராமரிக்கும் வகையில் **தென் மஞ்சூரியா இரயில் நிறுவனம்** (Southern Manchurian Railway Company — SMR) என்ற புதிய நிறுவனம் ஒன்றினை ஜப்பான் உருவாக்கியது. அந்நிறுவனத்தில் பாதிப் பங்குகளை ஜப்பானிய அரசு எடுத்துக் கொண்டு, அதன்மூலமாக உயர் அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பையும் பெற்றது. அந்த தெற்கு மஞ்சூரிய இரயில் நிறுவனத்தின் வாயிலாகத் தென் மஞ்சூரியா முழுவதிலும் ஜப்பான் தனது ஆதிக்கத்தை விரிவாக்கியது. அதன் விளைவாக ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஜப்பானைக் கண்டு பொறாமையடைந்தன. வடமஞ்சூரியாவில் ருஷியா தனது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்தது. இவ்வாறாக ருஷிய - ஜப்பானியப் போரின் காரணமாக ருஷியாவும் ஜப்பானும் சீனாவில் தங்களது செல்வாக்குப் பகுதிகளைப் பெற்று உறுதிப்படுத்திக்கொண்டன. **சீனாவில் அனைத்து நாடுகளுக்கு சம உரிமை வழங்குதல்** என்ற கோட்பாடும் இதனால் முறிவடைந்தது. சீனாவின் எல்லைகளும், சுதந்திரமும்கூட அந்நிய நாடுகளால் மதிக்கப்படவில்லை.

போர்ட்சுமவுத் உடன்படிக்கை கையெழுத்தான ஒரு சில வாரங்களில் ஜப்பான் கொரிய மன்னரை வற்புறுத்தி, கொரியாவின் வெளியுறவுக் கொள்கையை உருவாக்கும் அதிகாரத்தினைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் ஜப்பானிய நிலையர் (Resident General) ஒருவர், கொரியாவின் ஆட்சி முறையைக் கண்காணிக்கும் உரிமையுடன் கொரியத் தலைநகரான **செவூலில்** (Seoul) தங்க அனுமதியையும் பெற்றது. கொரியாவில் இத்தகைய இரட்டையாட்சி 1910ஆம் ஆண்டுவரை நீடித்தது. அவ்வாண்டில் ஜப்பான் கொரியாவைத் தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டது.

ருஷிய - ஜப்பானியப் போரில் தான் பெற்ற மாபெரும் வெற்றியின் விளைவாக ஜப்பான் சீனாவைச் சுரண்ட ஆரம்பித்தது. மிக அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட சீனா, ஜப்பானிய தொழிலகங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் மாபெரும் சந்தையாக மாறியது. சீன மண்ணில்

புதைந்து கிடந்த, அதுவரை பயன்படுத்தாது கிடந்த மிகப் பெரிய இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்களை ஜப்பான் தனது தொழில் வளர்ச்சிக்காக முழு அளவில் பயன்படுத்திக் கொண்டது. சீனாவின் நதிகளில் ஜப்பானிய இயந்திரப் படகுகள் பவனி வந்தன. சீனப் பள்ளிகளில், சீனாவின் இளம் தலைமுறையினருக்குக் கல்வி புகட்டும் பணியில் ஏராளமான ஜப்பானிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மேலை நாட்டு கல்வி பயில வேண்டும் என்ற துடிப்புள்ள சீன இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் தோக்கியோ பல்கலைக்கழகத்தை நாடினர். சீனாவில் தோன்றிய பல சீர்திருத்த இயக்கங்கள் ஜப்பானை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டவையே ஆகும்.

# அத்தியாயம் 11

# சீனப் புரட்சி 1911

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவில் புரட்சி ஏற்படத் தொடங்கியது. ஜப்பானிய அரசியலமைப்பை முன் மாதிரியாகக்கொண்ட சீன அரசியலமைப்பு 1909ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அதன்படி சீனாவில் வரம்புக்குட்பட்ட முடியாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஜப்பான் தனது அரசியல் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த முறை களுக்கு முடியாட்சி நிலவிவந்த மேலை நாடுகளைப் பின்பற்றி யிருந்தது. ஆனால் சீனாவோ பசிபிக் பெருங்கடலின் அப்பால் இருந்த அமெரிக்கக் குடியரசின் செயல்முறைகளில் ஆர்வம் காட் டியது. 1911ஆம் ஆண்டு சீனாவில் புரட்சி ஆரம்பமானது. 1912ஆம் ஆண்டில் உலகின் மிகப் பெரிய மக்கள்தொகையைக் கொண்ட சீனா குடியரசானது.

## (அ) மஞ்சு அரச குலத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களும் சீனாவில் குடியரசு ஏற்படுவதும்

பிற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட பாக்ஸர் கலகமும் அதன் தோல்வியும், சீனாவில் பழைய, சீர்திருத்தப்பட வேண்டிய முறைகள் அனைத்துமே நீக்கப்பட்டு, புதுமைக் கருத்துகள் புகுந்து நிலைபெற அடிப்படைக் காரணமாக அமைந்தன. சீனா வின் மஞ்சுகுலப் பேரரசியார் **ஸீ-ஷி** (Tzu-hsi) என்பார் தமது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் புதுமைக் கருத்துக்களில் நாட்டம் கொண்டு, நவீன முறையில் ஆட்சி செய்ய முயன்றார். அரசியல் அமைப்பினைப் புதிய முறைகளுக்கேற்ப உருவாக்கும் பணியினை, சீன அரசிலேயே மிகவும் பெருமை பெற்று விளங்கிய **யுவான்-ஷி-கை** (Yuan-Shi-Kai) என்பவரிடம் ஒப்படைத் தார். அவர் படையமைப்பு முறையைத் திருத்தியமைத்தார். கல்விச் சீர்திருத்தங்கள், அரசுப் பணித் தேர்வு நடத்தும் முறை களிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அரசியலில் மாற் றங்கள் செய்வதாகவும் உறுதியளிக்கப்பட்டது. கன்பூசியத் தத்துவங்களை அடிப்படையாகக்கொண்ட பண்டைய சீன இலக்கியங்களில் நடத்தும் அரசுப் பணித் தேர்வுகள் முறை

மாற்றியமைக்கப்பட்டு மேலைநாட்டுப் பாணியில் கல்வி கற்றவர் களைத் தேர்ந்தெடுக்கும் புதிய முறை புகுத்தப்பட்டது. பரம் பரை பரம்பரையாக சீன மக்களும் அரசும் போற்றிக் காத்து வந்த பழம்பெரும் இலக்கியங்களும் தத்துவங்களும் அவைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வாழ்க்கை விதிமுறைகளும் மதிப்புகளும் தூக்கியெறியப்பட்டு, புதுமைக் கருத்துகளை ஏற்றுக்கொண்ட இந்த நிகழ்ச்சி, சீன உள்ளங்களில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியது. இளம் அதிகாரிகளிடையே குடியரசுபற்றிய கருத்துகள் பரவலாக வேரூன்றியிருந்தன. குடியரசுபற்றிய கருத்துகள் அமெரிக்காவின் செல்வாக்கினால் சீனாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

சீனாவின் மஞ்சு அரசகுலம் மாறிவரும் சூழ்நிலைகளுக் கேற்ப புதிய கருத்துகளை ஏற்றுச் செயல்படுத்த முன்வந்தது. ஆனால் 1908ஆம் ஆண்டில் மஞ்சுகுலப் பேரரசியார் ஷீ-ஷீ இறந்தார். அவருக்குப் பிறகு சீன அரியணையில் அமர்ந்தவர் பு-யி (Pui-Yi) என்ற பாலகனாகும். அவரது பொறுப்பில் ஆட்சிப் பொறுப்பேற்றவர் 'சுன்' இளவரசனாகும் (Prince Chun) இவர் திறமையற்றவர். செயலாற்றும் ஆர்வமில்லாதவர்.

சீன-ஜப்பானியப் போரின் முடிவில் சீனா பெருந் தொகையைப் போர் இழப்பீடாகக் கொடுக்க வேண்டியிருந்தது. போர் இழப்பீட்டுத் தொகையின் பொருட்டு அதிக அளவு வரி விதிக்க வேண்டியிருந்தது. 1901ஆம் ஆண்டில் பாக்ஸர் கலகத்தின் பின்னர் மேலும் ஒரு பெருந்தொகையை இழப்பீடாகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஏற்கெனவே வரிப்பளுவைத் தாங்க இயலாது அல்லலுற்ற சீனக் குடிமகன் மேலும் வரி உயர்த்தப்பட்ட போது தடுமாறினான். வரிப்பளுவைத் தாங்க இயலாது தடுமாறிய சீனனை இயற்கையும் பழிவாங்கியது. 1910—11ஆம் ஆண்டுகளில் வெள்ளமும் கடும்பஞ்சமும் ஏற்பட்டு அலைக் கழித்தது. மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், அத்தகைய தொல்லைகளிலும் சிக்கித் தவித்த சீனர்கள் மலேயா, இந்தோ சீனா போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பெருமளவில் குடிபெயர்ந்தனர்.

பு-யி என்ற சிறுவயதுப் பிள்ளை அரியணை ஏறியதுமுதல் புரட்சி இயக்கம் வேகமாகப் பரவத் தொடங்கியது. ருஷிய-ஜப்பானியப் போரில் ஜப்பான் பெற்ற மாபெரும் வெற்றிக்குக் காரணம் மேலைநாடுகளைப் பின்பற்றி ஜப்பான் வளர்ந்து விட்டதால்தான் என்ற எண்ணம் சீனாவில் பரவியது. அவ் வெண்ணத்தினைத் தொடர்ந்து மேலைநாட்டுப் பாணியில்

ஜப்பானைப் போலத் தாங்களும் வளர வேண்டும் என்ற வேட்கை சீனமக்களிடையே எழுந்தது. ஆனால் சீனப் பேர ரசரின் பேராளராக (Regent) ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற சுன் இளவரசனின் திறமையின்மையும், தேசிய நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதில் காட்டப்பட்ட அக்கறையின்மை யும், நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை வரையறுத்துக் குறிப் பிடுவதில் காட்டிய தேவையற்ற தாமதமும், வலிமை பெற்ற மைய அரசு ஏற்படுத்தப்படும் என்பதனால் செல்வவளம் பெற்ற முதலாளிகளுக்கு ஏற்பட்ட அச்சமும், ஆத்திரமும், அவ் வாறு மைய அரசு வலிமை மிகுந்து காணப்பட்டால் மாநில அரசுகளின் அதிகாரமும், சுயாட்சித் தன்மையும் குறைக்கப்பட லாம் என்பதனால் ஏற்பட்ட அதிருப்தியும் புரட்சிக் கருத்துகள் வேகமாகப் பரவி, கொந்தளிப்பு நிலை ஏற்படக் காரணமாக இருந்தது. சீர்திருத்த இயக்கத்தின் தலைவராக இருந்தவர் டாக்டர் **சுன்யாட்சன்** (Dr. Sun-Yat-Sen) என்பவராகும். அவருடைய பிறப்பிடமான **காண்டன்** (Canton) நகரில் முதலில் புரட்சி வெடித்தது.

சீனாவின் எதிர்ப்புகளுக்கிடையேயும், மேலைநாட்டவர் தங்களின் வலிமையால் சீனாவை மண்டியிடச் செய்து, தங்களது செல்வாக்குப் பகுதிகளென, சீனப் பேரரசின் பல பகுதிகளையும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டிருந்த துயரமான காலத்தில் டாக்டர் சுன்யாட்சென் பிறந்தார். சீன-ஜப்பானியப் போரில் சீனாவுக்கேற்பட்ட மிகவும் கேவலமான தோல்வி, டாக்டர் சுன்யாட்செனை மஞ்சு அரச குலத்தின் முதல் எதிரியாக்கியது. சுன்யாட்செனின் அரச எதிர்ப்புச் செயல்கள், அவரைப் பதினேழு ஆண்டுகள் தலைமறைவாக வாழவேண்டிய கட்டாயம் ஏற்படுத் தியது. அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பெருந் தொகை பரிசாக அளிக்கப்படும் என்று அரசு அறிவிப்புச் செய் திருந்தது. எனவே, மாறுவேடத்தில் அவர் சீனா முழுவதிலும் பயணம் செய்தார். மஞ்சு அரச குலத்தினை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வந்த இரகசிய இயக்கங்களின் மதிப்பையும் ஆதரவையும் இவர் பெற்றார். இரண்டு முறை டாக்டர் சுன்யாட்சென் உலகச் சுற்றுப் பயணங்களை மேற் கொண்டார். சென்றவிடமெல்லாம் சீனா தேசிய மறுமலர்ச்சி யடைய வேண்டியதன் அவசியத்தினை வலிந்துரைத்தார். அவ ருடைய கொள்கைகளை மேலும் மக்களிடையே பரப்பும் வகை யில் 'தேசிய மக்கள் கட்சி' **கோமிங்டாங்** (Kuomintang) என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். அக்கட்சியில் காண்டன், ஷாங்காய் போன்ற நகரங்களில் வாழ்ந்த நடுத்தர வகுப்பைச்

சேர்ந்த வர்த்தகர்களும் மற்றவர்களும் பெருமளவில் உறுப்பின ரானார்கள். அக்கட்சியினர் முன்னேற்றம் காணும் தாராளக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர். 1911ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் காண்டன், ஹாங்கோ, ஊசாங் ஆகிய நகரங்களில் புரட்சி வெடித்தது. புரட்சி வெடித்தபோது டாக்டர் சுன்யாட்சென் அமெரிக்க நாட்டில் பயணம் மேற் கொண்டிருந்தார். புரட்சியைப்பற்றிய செய்தி எட்டியவுடனே டிசம்பர் திங்களில் சீனா வந்தடைந்து, புரட்சிக்குத் தலைமை யேற்றார். புரட்சித் தீ மளமளவென்று சீனாவின் மற்ற நகரங் களிலும் பரவியது. அத்தகு புரட்சிப் புயலை அடக்கும் திறமை யற்ற சீனாவின் மைய அரசு யுவான்-ஷி-காய் என்ற திறமை மிகு அதிகாரியைத் திரும்ப அழைத்தது. அவர் 1908ஆம் ஆண்டில் பதவியினின்றும் நீக்கப்பட்டவர். பதவியேற்பதற்கு முன்னரே யுவான்-ஷி-காய் தடையற்ற செயல்முறை உரிமையை மைய அரசிடமிருந்து பெற்றுக் கொண்டார். அவரது கோரிக்கையை மறுக்கும் துணிவு மைய அரசிற்கு இருக்கவில்லை. அதற்கிடை யில் ஒன்றன்பின் ஒன்றாக சீன நகரங்கள் மஞ்சு குல அரசிற்கு எதிராக இணைந்தன. 1911ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சீனாவின் தேசிய கவுன்சில் நாங்கிங் நகரில் கூடி, டாக்டர் சுன் யாட்சென் அவர்களை சீனாவின் குடியரசுத் தலைவராகத் தேர்ந் தெடுத்தது. சீனாவின் பேரரசர் 1912ஆம் ஆண்டில் பதவி விலகினார். பதவி விலகும்போது சீனாவில் குடியரசு ஏற்படுத் தப்படவேண்டும் என யுவான்-ஷி-காய் அவர்களுக்கு ஆணையிட் டார். சீனக்குடியரசு ஏற்படுத்துவதில் டாக்டர் சுன்யாட்செனுக் கும் யுவான்-ஷி-காய்க்குமிடையே போட்டி ஏற்பட்டது. சீனா வின் ஒற்றுமையைக் காப்பாற்றும் எண்ணத்துடனும், தனது வாழ் நாளின் தலையாய கோட்பாடாக இருந்த சீனாவில் குடியரசு ஏற்படவேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேறும் என்ற நம்பிக் கையிலும், நாட்டுப்பற்று மிக்க டாக்டர் சுன்யாட்சென், யுவான்-ஷி-காய் அவர்களுக்குக் குடியரசுத்தலைவர் பதவியை விட்டுக் கொடுத்தார். யுவான்-ஷி-காய் சீனாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார்.

மஞ்சு அரசகுலம் பதவியிழந்தது. சீனப் பேரரசு குடியர சாக மாறியது. கன்பூசியத் தத்துவங்களின் அடிப்படையிலான பேரரசு முறையும், ஆட்சி முறைகளும், கொள்கைகளும் நீக்கப் பட்டன. பழையன கழிந்து புதியன புகுந்தன. புரட்சிக்கு முன்னர் சீன சமுதாய அமைப்பின் அடிப்படையில் குடும்ப அமைப்பு இருந்தது. கட்டுக்கோப்பான குடும்ப அமைப்பில் இறந்தோர் வழிபாடு முக்கியப் பங்கு பெற்றிருந்தது. ஆனால்

சீனாவின் புதிய அரசியல் அமைப்பில் மேலைநாட்டுக் கிறிஸ்துவ சமய சமுதாயக் கொள்கைகளான தனிமனிதனின் புனிதத்தன்மையும், ஆண்-பெண் ஆகிய இருபாலருக்கும் சமஉரிமையும் அந்தஸ்தும் வற்புறுத்தப்பட்டன. மேலையரின் பாணியில் சமுதாய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. புதிய சீனாவில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டது. அவர்களும் புதிய சீனாவை உருவாக்குவதில் முக்கிய பங்கேற்றனர் என்பதை சூங் சகோதரிகள் (Soong Sisters) ஆற்றிய பணியிலிருந்து அறியலாம். அவர்களில் ஒருவர் சியாங்-கை-ஷேக் என்பாரை மணந்து, நவீன சீனாவை உருவாக்குவதில் அவருக்கு உறுதுணையாக நின்றார். புத்தம், தாவோயிச சமயங்களைவிட கன்பூசிய சமயம் புரட்சிக்கு முந்திய சீனாவில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. கன்பூசிய சமய மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதனையும், மக்களின் கடமைகளையுமே அதிகம் வலியுறுத்தியது. 1911ஆம் ஆண்டிற்குப் பின்னர் கல்வியறிவு பெற்ற சீனர்களில் பெரும்பாலோர் கிறிஸ்துவ சமயத்தினை ஏற்றுக் கொண்டனர். டாக்டர் சுன்யாட்சென் உள்பட பலர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவினர்.

புதிய சீனா தனது அருவருக்கத்தக்க பண்டைய வழக்கங்களில் சிலவற்றை விட்டொழித்தது. அவைகளில் முக்கியமானது கோ டோ (Kow Tow) என்ற பழக்கம் முதன்மையான தாகும். சீனப் பேரரசர் மற்றும் உயர் அதிகாரிகள் அல்லது மூத்தோர் முன்னர் நெடுஞ்சான் கிடையாக வீழ்ந்து வணங்கும் முறையே 'கோடோ' என்பதாகும். அத்துடன் பெண் குழந்தைகளின் பாதங்களைத் துணியால் இறுக்கிக்கட்டி வளரவிடாமல் தடுக்கும் பழக்கத்தினையும், ஆண்கள் தலையின் முன்பாதியை மழித்துவிட்டு, பின் பகுதியில் சிறிய சடையொன்றினைப் பின்னிக் கொள்வதும் (Pig Tail or Queu) போன்ற மஞ்சு குலத்தினரால் சீனாமீது திணிக்கப்பட்ட பழக்கங்கள் நீக்கப்பட்டன. சீனமொழி எழுத்துகளும் சொற்றொடர்களும் பல்லாயிரக்கணக்கில் இருந்தன. அதன் காரணமாகவே சீனாவில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்பட்டது. எனவே. புதிய சீனா சீனமொழி எழுத்துகளில் மாற்றங்கள் கொண்டுவந்து, மொழியை எளிமையானதாக்கியது. அவ்வாறு எளிமையாக்கப்பட்ட மொழியை எவரும் எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் சுன்யாட்சென்னின் வியத்தகு வெற்றிகளுக்குக் காரணம் அவர் கடைப்பிடித்த கொள்கைகளாகும். அவர் மக்களுக்கு மூன்று கொள்கைகளை வெளியிட்டார். அவையாவன: சான்-மின்-சின் (San, Min, Chin) என்பவையாகும்.

'சான்' என்பது தேசியம், நாட்டுப் பற்றினையும், 'மின்' என்பது மக்களாட்சியையும், 'சின்' என்பது மக்கள் நலன் அல்லது சோசலிஸ சமுதாய அமைப்பினையும் குறிப்பிட்டன. புதிய உழவு முறைகளும், புதிய தொழிலகங்களும்; திருத்தியமைக்கப்பட்ட போக்குவரத்து வசதிகளும் மக்களிடையே புகுத்தப்பட்டன. அதனால் சீன மக்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவுக்கேனும் உயர வழிவகை செய்யப்பட்டது.

### (ஆ) யுவான்-ஷி-காயின் தலைமையில் சீனக் குடியரசு

1912ஆம் ஆண்டில் முதன் முதலாகச் சீனாவில் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அரசியலமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டது. அதன்படி பாராளுமன்றம் அல்லது தேசியக் கவுன்சிலின் பொறுப்பில் குடியரசு தலைவர் செயல்படவேண்டும். குடியரசு ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடந்த தேர்தலில் கோமிங்டாங் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1913ஆம் ஆண்டில் படைத்தலைவர்களை நியமிக்கும் வகையில் குடியரசுத் தலைவருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. பாராளுமன்றத்தின் கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் நோக்கத்துடன் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் வங்கிகளிடமிருந்து ஏராளமான தொகையைக் கடனாகப் பெற்று ஆயுதங்களை வாங்கிக் குவித்தார். அந்நாடுகள் யுவான் கடனாகக் கோரிய தொகைகளை மகிழ்வுடன் தாராளமாகவே அளித்தன. அக்கடன்களுக்கு ஈடாக சீனாவின் உப்புவரி வசூலித்தலைக் கேட்டன. சுங்கவரி, உப்புவரி வசூலிப்பது ஏற்கெனவே அந்நிய அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. யுவான் யாங்ட்சி பள்ளத்தாக்குப் பகுதிகளிலிருந்த படைத்தலைவர்களை நீக்கிவிட்டு, அப்பகுதியில் தன்னுடைய ஆதரவாளர்களை நியமித்தார். அத்தகைய செயலை டாக்டர் சுன்யாட்சென்னின் தலைமையிலான கோமிங்டாங் கட்சியினர் எதிர்த்துக் கலகம் செய்தனர். யுவான் கலகக்காரர்களை வென்று அடக்கினார். டாக்டர் சுன்யாட்சென் ஜப்பானுக்குத் தப்பியோடினார். பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டால் கோமிங்டாங் கட்சியினரின் வலிமை தானாகவே குறைந்துவிடும் என்ற நோக்கத்தில் யுவான் சீனப் பாராளுமன்றத்தினைக் கலைத்தார். பின்னர் பொது வாக்கெடுப்பு (Referendum) ஒன்றினை நடத்தினார். அவ்வாக்கெடுப்பு தனக்குச் சாதகமாக இருக்கும் வகையில் அதிகாரத்தினைப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வாக்கெடுப்பின் முடிவில் சீன மக்கள் மீண்டும் தனது தலைமையிலான முடியாட்சியை விரும்புகின்றனர் என யுவான் வெளியிட்டார்.

பேரரசரென யுவான் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாலும், மக்களாட்சி முறையில் சீன மக்களுக்கு இருந்த அசைக்க முடியாத பற்றினை உணர்ந்தார். அதன் காரணமாகவே ஹியுங் சீன் (Hiun-Hsien) அல்லது **மாண்புறு அரசியலமைப்புவாதி** (Glorious Constitutionalist) என்று தன்னை அழைத்துக் கொண்டார். ஆனால் **யுனான்** (Yunnan) மாநிலத்தில் தொடங்கிய யுவான் எதிர்ப்புக் கலகம் வெகுவிரைவில் சீனா முழுவதிலும் பரவியது. தான் பேரரசு பட்டம் சூட்டிக் கொள்வதை எதிர்த்துத் தோன்றிய புரட்சியின் வலிமையை யுணர்ந்து யுவான், அரியணை யேறுகின்ற விழாவினைத் தள்ளி வைத்தார். 1916ஆம் ஆண்டில் யுவான் இறந்தார். நான்கு வயதான சீனக் குடியரசு என்ற குழந்தை பல்வேறு மாபெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சீனாவில் ஏற்பட்ட புரட்சி வேகம் குறைந்து காணப்பட்டாலும், வரலாற்றுக்கு முந்தைய காலத்தினின்றே தொடர்ந்து வந்த முடியாட்சி முறையை சீனர்கள் விரும்பவில்லை என்பதனைத் தெளிவாக்கிவிட்டது.

சீனாவின் அத்தகு குழப்பமான நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஜப்பான் தரக்குறைவான முறையில் நடந்துகொண்டது. முதல் உலகப்போரில் ஐரோப்பிய வல்லரசுகள் மிகவும் கடுமையான போரில் மூழ்கிக் கிடந்தபோது, ஜப்பான் ஜெர்மனிக்குச் சொந்தமான சீனாவின் **கியாச்சோ** (Kiaochow) தீபகற்பத்தினையும் **சிங்தோ** (Tsingtao) துறைமுகத்தையும் தாக்கிப் பிடித்துக் கொண்டது. தன்னுடைய 21 கோரிக்கைகளையும் சீனாமீது வற்புறுத்தி, யுவான்-ஷி- காயை ஏற்கும்படிச் செய்தது. ஜப்பானின் அந்த இருபத்தொரு கோரிக்கைகளையும் முழுவதுமாக ஏற்றுக் கொண்டிருந்தால் சீனா ஜப்பானின் பொறுப்பிலுள்ள பாதுகாப்பு நாடாக மாறியிருக்கும். அக்கோரிக்கைகளின் சாரமாவது: "சீனாவில் ஜப்பானின் மிக்குயர் தன்மை எப்போதும் குறைக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும்; சீன விவகாரங்களில் அந்நியர் தலையீடு முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்; **ஷாண்டுங், புகின்** (Shantung, Fukien) போன்ற பார்மோசா தீவின் எதிர்ப்புறத்திலுள்ள மாநிலங்களில் ஜப்பானின் தனிச்செல்வாக்கு ஏற்றுக் கொள்ளப் படவேண்டும்; மஞ்சூரியா, கிழக்கு மங்கோலியாவின் உள்பகுதி ஆகிய பகுதிகள் ஜப்பானின் தனிப் பாதுகாப்புப் பகுதிகளாக்கப்படவேண்டும்; சீன-ஜப்பானியக் கூட்டு நிர்வாகத்தின் மூலம் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளில் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலை நாட்டும் காவல்துறை நிர்வாகப் பொறுப்பு அளிக்கப்படல் வேண்டும்.

1916ஆம் ஆண்டில் சீனக் குடியரசு தலைவர் யுவான் மரணமடையவே, தென்சீனப் பகுதிகளின் குடியரசுத் தலைவராக டாக்டர் சுன்யாட்சென் தேர்ந்தெடுக்கப்பட்டார். மைய அரசு என்ற ஒன்று இருக்கவில்லை. தேசிய சீனப் படையும் இருக்கவில்லை. பீகிங் நகரில் இருந்த அரசு ஜப்பானின் கைப்பாவையாக இருந்தது. காண்டன் நகரைத் தலைமையாகக்கொண்ட தென்சீன அரசு தேசிய வேட்கையோடு, முன்னேற்றக் கருத்துகளின் அடிப்படையில், விரைந்து செயலாற்றும் ஆர்வத்துடன் காணப்பட்டது. யுவான் இறந்த 1916ஆம் ஆண்டிலிருந்து 1928ஆம் ஆண்டுவரை உள்ள காலத்தை சீன வரலாற்றில் **படை பிரபுக்களின் காலம் (War Lords Period)** எனக் குறிப்பிடப்படுகின்றது. **டசுன்கள் (Tuchuns)** என்றழைக்கப்பட்ட போர் பிரபுக்கள் வடசீனா முழுவதையும் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டு, சொந்தப் படைகளையும் உருவாக்கிக்கொண்டு, ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருந்தனர். எனவேதான் அக்காலம் **போர் பிரபுக்களின் காலம்** எனக் குறிப்பிடப் பெறுகின்றது.

1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட சீனப் புரட்சி தோல்வியடைந்தது எனக் கருதவேண்டும். ஏனெனில், புரட்சியைத் தொடர்ந்து மக்களாட்சி முறையில் அரசு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக யுவானின் தலைமையில் இராணுவ வல்லாட்சியே ஏற்படுத்தப்பட்டது. தனது பதவியைக் காப்பற்றிக் கொள்ளும் எண்ணத்தில் இராணுவ தளபதிகளை மாநிலங்களின் ஆளுநர்களாக நியமித்திருந்தார். அதன் விளைவாகவே யுவானின் இறப்பிற்குப் பின்னர் 'டசுன்கள்' என்றழைக்கப்பட்ட போர் பிரபுக்கள் பல பகுதிகளிலும் தோன்றி, ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டிருந்தனர். டாக்டர் சுன்யாட்செனின் மூன்று முக்கிய கோட்பாடுகளான நாட்டுப் பற்று, மக்களாட்சி, சோசலிசம் ஆகியவை செயல்படுத்தப்படவில்லை. சீனப் புரட்சி, சீனாவின் பாதுகாப்பு நாடுகளான மங்கோலியா, திபெத் போன்ற நாடுகளில் சுதந்திரப் போராட்டங்கள் தொடங்கக் காரணமாக இருந்தது. மங்கோலியாவின் சுயாட்சியைமட்டும் (முழுச் சுதந்திரத்தையல்ல) சீனா ஏற்றுக்கொண்டது. திபெத்தைப் பொறுத்தமட்டில் சீனா சுயாட்சி வழங்கியது. ஆனால் சீன அரசின் நிலையர், சிறிய பாதுகாப்புடன் திபெத்தின் தலைநகரான லாசாவில் தங்கியிருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

## அத்தியாயம் 12

# முதல் உலகப் போரும் பன்னாட்டுக் கழகமும்

### முதல் உலகப் போர்

1914-18ஆம் ஆண்டுகளில் நடந்த முதல் உலகப் போருக்கு மூலகாரணமே ஜெர்மனிதான் எனக் கூறி, அதனைச் சாடுவது வழக்கம். ஆனால் 1914ஆம் ஆண்டுக்கு முன்னரே ஐரோப்பிய வல்லரசுகள் அனைத்தும் தீவிர தேசியக் கொள்கையைப் பின்பற்றி, நாடுகளுக்குள் அனைத்துத் துறைகளிலும் கடுமையான போட்டியும் ஏற்பட்டு, அதன் காரணமாக அனைத்து நாடுகளுமே போரை நோக்கி விரைந்து முன்னேறிக் கொண்டிருந்தன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகும். பேரரசுக் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றிய ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் அப்போரின் ஆரம்பத்தினை விரைவுபடுத்தித் தூண்டியிருக்கக்கூடும். ''தானாகவே புதை குழியில் வீழ்ந்த ஜெர்மனி, தன்னுடைய தீவிரச் செயல்களால் மேலும் அழுந்தியது'' என்றும், ''உடனிருந்து பாவ காரியங்களில் ஈடுபட்ட அனைவருமே அவர்களில் ஒருவனைமட்டுமே பாவி எனச் சாடுதல் போன்ற மிக மோசமான மாதிரியாக ஜெர்மனி காணப்பட்டது'' என்றும் H. G. வெல்ஸ் (H. G. Wells) என்பாரின் கூற்றுகள் நோக்கத் தக்கதாகும்.

#### (அ) போருக்கான காரணங்கள்

(1) **ஜெர்மனியின் பேராசை :** 1888ஆம் ஆண்டில் இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியின் பேரரசராக அரியணை ஏறியதுமுதல் ஐரோப்பிய அரசியல் அமைதி குலையலாயிற்று. அவர் ஜெர்மனியை ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கண்டு அச்சம் கொள்கின்ற வகையில் மிகவும் வலிமைமிகுந்த நாடாக ஆக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். உலகில் தனது உயர்வினை எடுத்துக்காட்டுகின்ற வகையிலும், பெருகிவருகின்ற ஜெர்மானிய மக்கள்தொகையின் போக்கிடமாகவும், பொருளா

தார காரணங்களுக்காகவும் குடியேற்றங்களை ஏற்படுத்தியாக வேண்டும் என கெய்சர் முடிவு செய்தார். குடியேற்றங்களை நிறுவி, அவைகளைப் பாதுகாக்க வலிமை வாய்ந்த கடற்படை தேவை. எனவே, அதுவரை கடற்படைக்கென செலவிட்ட அளவை விட மூன்றில் ஒரு பங்கினை அதிகமாகச் செலவிட முடிவுசெய்தார். கடற்படைக்கான நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டதைக் கேட்ட இங்கிலாந்து பெரிதும் அச்சமடைந்தது.

ஜெர்மனியின் இரும்பு மனிதர் என்று புகழப்படுகின்ற பிஸ்மார்க், இரண்டாம் கெய்சர் வில்லியம் அரியணை ஏறும் முன்னரே, ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளின் மூவர் கூட்டணியை (Triple Alliance) 1882ஆம் ஆண்டில் உருவாக்கியிருந்தார். அந்த மூவர் கூட்டணி சிறப்பாக பிரான்சுக்கு எதிராக அமைக்கப்பட்டதாகும். எனவே, பிரான்சு தனக்கும் ஆதரவாக நட்பு நாடுகளை அடையத் துடித்தது. இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் திட்டங்களின் மூலமாக அவரது பேரரசுக் கொள்கையையும் பேராசையையும் உணர்ந்த இங்கிலாந்தும் பிரான்சும் 1904ஆம் ஆண்டில் இருவர் நட்பு உடன்படிக்கையினைச் (Entente Cordiale) செய்து கொண்டன. அந்த ஆங்கில-பிரெஞ்சு நட்புறவினை ஏற்படுத்திய பெருமை இங்கிலாந்தின் மன்னர் ஏழாம் **எட்வர்டையும்** (Edward VII) அவரது வெளியுறவுச் செயலரான **லான்ஸ்டவுன்** பிரபுவையுமே (Lord Landsdowne) சாரும்.

1904ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கில-பிரெஞ்சு உடன்படிக்கையை **அரச தந்திரப் புரட்சி** (Diplomatic Revolution) என்றே வியந்துரைக்கின்றனர். ஏனெனில் பல நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து போரிட்டுவந்த அவ்விரு நாடுகளும் அப்போது தங்களின் நீண்டகாலப் பகைமையை மறந்து நட்புறவை ஏற்படுத்திக் கொண்டன. அந்த நட்புறவு இன்றுவரை தொடர்ந்து நெருங்கிய நட்புறவாக வளர்ந்துள்ளது.

1904ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆங்கில-பிரெஞ்சு நல்லுறவு ஒப்பந்தத்தின் காரணமாக எகிப்தில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தைப் பிரான்சும், மொராக்கோவின் ஒரு பகுதியில் பிரான்சின் ஆதிக்கத்தினை இங்கிலாந்தும் அங்கீகரித்தன. மொராக்கோவின் மற்றொரு பகுதியில் ஸ்பெயின் ஆதிக்கம் செலுத்தியது. பிரான்சும் ஸ்பெயினும் மொராக்கோவைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதை இரண்டாம் கெய்சர் வில்லியம் கடுமையாக எதிர்த்தார். அவர் மொராக்கோவின் துறைமுகமாக **டான்ஜியருக்குச்** (Tangier) சென்று, மொராக்கோவின் பிரச்சினைக்கு முடிவு

-காணப் பன்னாடுகளின் மாநாடு கூட்டப்பட வேண்டும் என வற்புறுத்தினார். அவரது வற்புறுத்தலை பிரான்சு ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாக 1906ஆம் ஆண்டில் 'அல்ஜிசிராஸ்' (Algeciras) நகரில் பன்னாடுகளின் மாநாடு கூடியது. அம்மாநாடு மொராக்கோவின் சுதந்திரத்தினையும், அனைத்து நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ளும் உரிமையையும் அளித்தது.

அல்ஜிசிராஸ் நகரில் ஜெர்மனி பெற்ற வெற்றி இங்கிலாந்து பிரான்சின் நல்லுறவினை மேலும் உறுதிப்படுத்தியது. 1895ஆம் ஆண்டில் பிரான்சும் ருஷியாவும் இருவர் கூட்டணியை (Dual Alliance) உருவாக்கின. 1907ஆம் ஆண்டில் அந்த இருவர் கூட்டணியில் இங்கிலாந்தும் சேரவே அது **மூவர் நல்லுறவு ஒப்பந்தமாக** (Triple Entente) விரிவடைந்தது. ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் 'மூவர் கூட்டணி' யாக இணைந்தும், இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா ஆகிய இம்மூன்று நாடுகளும் 'மூவர் நல்லுறவு ஒப்பந்தத்தின்' மூலம் இணைந்தும், இவ்விரு பெரும் ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டணிகளும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன.

1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட **அகதிர் நெருக்கடியின்** போதுதான் (Agadir Crisis) மூவர் நல்லுறவு ஒப்பந்தத்தின் வலிமை வெளிப்பட்டது. மொராக்கோவில் உள்நாட்டுக் குழப்பம் மிகுந்துவிட்டது என்ற காரணத்தைக் காட்டி, பிரான்சு தனது படைகளை அனுப்பி மொராக்கோ முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. அந்நிகழ்ச்சியை எதிர்த்து இரண்டாம் கெய்சர் வில்லியம் **பெர்லின், பாந்தர்** என்ற தனது இரண்டு பெரிய போர்க் கப்பல்களை மொராக்கோவின் துறைமுகமான **அகதிர்** துறைமுகத்திற்கு அனுப்பினார். பெரும் போர் உருவாகக் கூடிய அபாய நிலை உருவாகியது. இங்கிலாந்தில் லிபரல் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தனர். ஜெர்மனி பிரான்சின் மீது போர்தொடுத்தால் இங்கிலாந்து பிரான்சுக்கு ஆதரவாகக் கண்டிப்பாகப் போரில் இறங்கும் என இங்கிலாந்தின் தலைமை அமைச்சரான 'அஸ்குவித்' (Asquith) அறிவித்தார் அவ்வறிவிப்பு எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தியது. ஜெர்மனி பிரான்சுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி ஒப்பந்தம் செய்து கொண்டது. போர் நெருக்கடி தவிர்க்கப்பட்டது. மொராக்கோவில் ஏனைய நாடுகளுக்கும் வர்த்தக உரிமை அளிக்கப்படும் என பிரான்சு உறுதியளித்தது. அவ்வுறுதியைப் பெற்ற பின்னர் மொராக்கோவை பிரான்சின் பாதுகாப்பு நாடாக ஜெர்மனி அங்கீகரித்தது.

அகதிர் நெருக்கடி ஜெர்மனிக்குப் பெருந்தோல்வியாக முடிந்தது. அத்தோல்விக்குப் பின்னர் ஜெர்மனி தனது தரைப் படை, கப்பல் படைகளைப் பெருக்கி, தனது படை வலிமையை மேலும் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தது.

**(2) பால்கன் பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி :** கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய 'உத்மானியப் பேரரசு' துருக்கிய சுல்தான்களின் தலைமையில் பால்கன் பகுதியிலும் விரிவடைந்து, அப்பகுதியின் கிரீஸ், செர்பியா, பல்கேரியா, மாண்டினிக்ரோ, ருமேனியா போன்ற கிறிஸ்தவ நாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. 19ஆம் நூற்றாண்டில் துருக்கி **ஐரோப்பாவின் நலிவுற்ற மனிதன்** எனக் கருதப்பட்டது. துருக்கியின் வலிமையற்ற தன்மையைச் சாதகமாக்கிக்கொண்டு 19ஆம் நூற்றாண்டில் பால்கன் பகுதியிலிருந்த கிறிஸ்தவ நாடுகள் சுதந்திரமடைந்தன. ஒருசில சுயாட்சி உரிமையைப் பெற்றிருந்தன. பால்கன் தீபகற்பப் பகுதியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்திக் கொள்வதையே தனது நோக்கமாகக் கொண்டிருந்த ருஷியா, பால்கன் நாடுகளின் சுதந்திரப் போராட்டத்திற்கு உதவியளித்தது. மேலும், கிரீஸ் ஒன்றினைத் தவிர ஏனைய நாடுகள் அனைத்து ருஷியாவின் இனமான 'ஸ்லாவ்' என்ற இனத்தைச் சேர்ந்தவை. மேலும் அவைகள் அனைத்தும் கிறிஸ்தவ சமயத்தினை ஏற்றுக்கொண்ட நாடுகள். எனவே, ருஷியா தனது இனமக்களுக்கு உதவி செய்வதாகவும், கிறிஸ்தவ சமயத்தின் மேன்மைக்காகப் பாடுபடுவதாகவும் தன்னை அறிவித்துக்கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரியாவும் பால்கன் பிரச்சினைகளில் முக்கிய பங்கெடுத்துக்கொள்ள விழைந்தது. 1878ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட பெர்லின் மாநாடு, பாஸ்னியா, ஹெர்சகோவினா என்ற இரு பால்கன் நாடுகளை ஆஸ்திரியாவின் ஆட்சிப் பொறுப்பில் விட்டிருந்தது. அந்த நாடுகளை ஜெர்மனியின் ஆதரவுடன் ஆஸ்திரியா 1908ஆம் ஆண்டில் தன் பேரரசுடன் இணைத்துக்கொண்டு விட்டது. ஸ்லாவ் இன மக்கள் நிறைந்த அப்பகுதிகள் இரண்டையும், ருஷ்யாவின் உதவியுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என செர்பியா அதற்கேற்ற வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தது. 1904-05ஆம் ஆண்டுகளில் நடந்த ருஷ்யா - ஜப்பானியப் போரில் படுதோல்வியடைந்து துயருற்ற நிலையில் இருந்த ருஷியா, செர்பியாவின் உதவிக்கு வர இயலவில்லை. இதனால் ருஷியாவும் செர்பியாவும் மிகவும் ஆத்திரமடைந்திருந்தன. அதுவும் போருக்குக் காரணமாக அமைந்தது.

மூவர் கூட்டணியின் மற்றோர் உறுப்பினரான இத்தாலி யும், துருக்கியின் வலிவற்ற தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு, துருக்கியின் மீது போர் தொடுத்தது. 1911ஆம் ஆண்டில் ஏற்பட்ட அப்போரின் விளைவாக வட ஆப்பிரிக்காவில் இருந்த **டிரிப்போலி (Tripoli)** என்ற பகுதியை இத்தாலி பிடித்துக் கொண்டது.

பால்கன் பகுதியிலிருந்த கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த நாடுகளான பல்கேரியா, ருமேனியா, கிரீஸ், செர்பியா மாண் டினிக்ரோ ஆகிய நாடுகள் அனைத்தும் 1912ஆம் ஆண்டில் துருக்கியின்மீது போர் தொடுத்தன. இது முதல் பால்கன் போர் என அழைக்கப்படுகின்றது. அப்போரின் முடிவில் லண்டன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அவ்வுடன்படிக்கையின்மூல மாக ஐரோப்பாவில் துருக்கியின் ஆதிக்கம், கான்ஸ்டான்டிநோபி ளைச் சுற்றியிருந்த சிறுபகுதியில்மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆனால், போரில் துருக்கியிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை பங்கிட்டுக் கொள்வதில் கிறிஸ்தவ சமய நாடுகளுக்குள்ளே தக ராறு எழுந்தது. அத்தகராறின் காரணமாக கிரீஸ், செர்பியா, மாண்டினிக்ரோ, ருமேனியா போன்ற நாடுகள் அனைத்தும் பல்கேரியாமீது போர் தொடுத்தன. இது இரண்டாவது பால்கன் போர் எனக் குறிப்பிடப்படுகின்றது. பல்கேரியா தோற்கடிக்கப் பட்டது. செர்பியா பெரும் பகுதிகளைப் பெற்றுப் பெருமை யுற்றது.

தான் இழந்த பகுதிகளைத் திரும்பவும் பெறுவதற்கு பல்கேரி யாவும் துருக்கியும் ஜெர்மனியின் உதவியை நாடின. செர்பியா வின் வளர்ச்சியைக் கண்ட ஆஸ்திரியா அச்சமடைந்தது. அத் தகைய போட்டிகளும் குழப்பங்களும் முதல் உலகப் போர் ஏற்படக் காரணங்களாக அமைந்தன.

**(3) ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரான பிரான்ஸ் பெர்டி னாண்டும் அவரது துணைவியாரும் கொலை செய்யப்படுதல் :** 1914ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாள் பாஸ்னி யாவின் தலைநகரான **செரஜிவோ (Serajevo)** நகரில் ஆஸ்திரி யப் பேரரசின் பட்டத்து இளவரசரான பிரான்ஸ் பெர்டினாண்டு என்பாரும் அவரது துணைவியாரும் செர்பிய நாட்டு இளைஞன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்நிகழ்ச்சியை வாய்ப் பாகக்கொண்டு செர்பியாவை நசுக்க ஆஸ்திரியா முடிவு செய் தது. செர்பிய அரசின் தூண்டுதலால்தான் அக்கொலை நடந் திருக்க வேண்டுமென்றும், அதனால் அதில் சம்மந்தப்பட்ட அதி காரிகளையும் பள்ளி ஆசிரியர்களையும் கண்டுபிடித்து, அவர்

களைப் பதவி நீக்கம் செய்து கடுந்தண்டனை விதிக்க வேண்டும் என்பது போன்ற பல கடுமையான கூறுபாடுகள்கொண்ட கட்டளையை ஆஸ்திரியா விதித்தது. ஆஸ்திரியாவின் ஒருசில வேண்டுதல்களை செர்பியா ஏற்றுக்கொண்டது. வேறு சில வேண்டுதல்களை ஏற்றுக்கொண்டால் அது செர்பியாவின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் ஊறுவிளைவிக்கும் என்பதனால் மறுத்துவிட்டது. செர்பியாவின் அத்தகைய பதிலை ஆஸ்திரியா ஏற்றுக் கொள்ளாது, செர்பியாமீது போர் தொடுத்தது.

அத்தகைய வேண்டுதல்கள்மூலமாக செர்பியாவைப் பணியச் செய்து, தனது மேலதிகாரத்தினை மீண்டும் பால்கன் பகுதியில் நிலைபெறச் செய்ய ஆஸ்திரியா முயற்சியெடுப்பதை ருஷியா உணர்ந்தது. அவ்வாறு ஆஸ்திரியாவின் அதிகாரம் பால்கன் பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது தனக்கு ஆபத்தாக முடியும் என்றும் ருஷியா அஞ்சியது. அதன் காரணமாக செர்பியாவுக்கு உதவும் பொருட்டு, ருஷியா தனது படைகளைப் போருக்கு ஆயத்தம் செய்தது. எனவே, ஆஸ்திரியாவின் நட்பு நாடான ஜெர்மனி ருஷியாவின்மீது போர் தொடுத்தது. தன்னுடைய நட்பு நாடான ருஷியாவிற்கு உதவி செய்யும் வகையில் பிரான்சு தனது படைகளை ஆயத்தம் செய்தது. எனவே, ஆகஸ்டுத் திங்கள் 3ஆம் நாள் ஜெர்மனி பிரான்சின்மீது படையெடுக்கத் தயாரானது. மூவர் கூட்டணியைச் சேர்ந்த இத்தாலி போரில் தலையிடாது நடுநிலைமை வகித்தது. ஏனெனில், தன்னுடைய நட்பு நாடுகள் பாதுகாப்புப் போரில் ஈடுபடவில்லை என்பதால் இத்தாலி நடுநிலைமை வகித்தது.

போர் தொடங்கிய பின்னர் இங்கிலாந்தைப் போரில் ஈடுபடாமல் நடுநிலைமை வகிக்கச் செய்ய ஜெர்மனி மீண்டும் முயன்றது. அம்முயற்சியின் விளைவாக இங்கிலாந்து போரில் இறங்காமல் நடுநிலைமை வகித்ததால் போரின் முடிவில் பிரான்சின் பகுதிகளை ஜெர்மனி எடுத்துக்கொள்ளாது, அதன் எல்லைகள் மதிக்கப்படும் என ஜெர்மனி உறுதி கூறியது. பிரெஞ்சுக் குடியேற்றங்களைப் பொறுத்தும் அத்தகைய உறுதியை வழங்காததனால் இங்கிலாந்து ஜெர்மனியின் வேண்டுகோளை நிராகரித்தது. போரின்போது பெல்ஜியத்தின் நடுநிலைமை காப்பாற்றப்படுமா என பிரான்சையும் ஜெர்மனியையும் இங்கிலாந்து கேட்டது. பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதிப்பதாகவும், அதற்கு இடையூறு விளைவிக்காதென்றும் பிரான்சு உறுதி கூறியது. ஆனால் ஜெர்மனி அவ்வாறு உறுதியளிக்கவில்லை. ஜெர்மனி பிரான்சின் மீது கடற்படைத் தாக்குதல்களைத் தொடங்கினால் இங்கிலாந்தின் கடற்படை பிரான்சின் வடக்கு மேற்கு எல்லைப் பகுதி


களைப் பாதுகாக்கும் என இங்கிலாந்து அறிவித்தது. ஜெர்மனி லக்சம்பர்க் (Luxemburg) நகரின் நடுநிலைமையைத் தகர்த்து விட்டு, பெல்ஜியத்தின்மீது படையெடுக்க ஆயத்தம் செய்தது. ஆகஸ்ட்டுத் திங்கள் 4ஆம் நாள் ஜெர்மனியின் படையெடுப்புக் கெதிராக உதவியளிக்குமாறு பெல்ஜியத்தின் மன்னர் இங்கிலாந்தை வேண்டினார். பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதிப்பதாக ஜெர்மனி 19ஆம் நூற்றாண்டிலேயே உறுதியளித்திருந்தது. எந்தவிதத் தகுந்த காரணமும் இல்லாமல், அவ்வுறுதி மொழியை மீறி பெல்ஜியத்தின்மீது ஜெர்மனி படையெடுத்ததைக் கண்ட இங்கிலாந்தும் ஜெர்மனிமீது போர் தொடுத்தது.

### (ஆ) போரின் போக்கு

மூவர் கூட்டணியில் உறுப்பினராக இருந்த இத்தாலி, ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு உதவியாகப் போரில் இறங்கவில்லை. ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் மத்திய வல்லரசுகள் என அழைக்கப்பட்டன. பல்கேரியாவும் துருக்கியும் மத்திய வல்லரசுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கின. அவைகளை எதிர்த்து மூவர் நட்புறவு நாடுகளும், பெல்ஜியமும், செர்பியாவும் போரிட்டன. அந்நாடுகளுடன் இத்தாலி 1915ஆம் ஆண்டிலும் போரின் இறுதியில் 1917ஆம் ஆண்டில் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டன. நேச நாடுகள் என அவை அழைக்கப்பட்டன.

இப்போர் உலகின் பல பகுதிகளிலும் கடுமையாக நடைபெற்ற உலகப் பெரும் போராகும். வரலாற்றில் முதல் முறையாக வானும் போர்க்களமாயிற்று. செப்பலின் (Zeppelins) என்றழைக்கப்பட்ட விண்ணில் பறந்து செல்லுகின்ற கப்பலும் பின்னர் ஆகாய விமானமும் இங்கிலாந்தின்மீது ஏவப்பட்டன. சர்ச்சிலும் மேஜர் சுவின்டனும் (Churchil and Major Swinton) இணைந்து உருவாக்கிய டாங்கிகள் (Tanks) என்ற புதிய படைக்கலனை இங்கிலாந்து கண்டுபிடித்து, போரின் இறுதி கட்டத்தில் பயன்படுத்தியது. நிலப்பரப்பில் அகழிச் சண்டையும், கடற்பரப்பில் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல்களும் இப்போரின் மற்ற சிறப்பு அம்சங்களாகும்.

**(1) மேற்குப் பகுதியில் போர் (1914):** பெல்ஜியம் முழுவதையும் வென்று, பிரான்சின்மீது ஜெர்மானியப் படைகள் பாய்ந்தன. ஜெர்மானியப் படைகள் பாரிஸ் நகரை நோக்கி விரைந்தன. ஆனால் மார்ன் நதிக்கரையில் ஜெர்மானியப் படைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆங்கில-பிரஞ்ச் படைத்தலைவர்களான ஜெனரல் பிரஞ்சு (General French) என்பாரும் ஜெனரல் ஜாஃப்ரே




படம் 12,1 முதல் உலகப் பெரும் போர்

(General Joffre) என்பாரும் மார்ன் ஆற்றங்கரையில் ஜெர் மானியப் படைகளைத் தோற்கடித்தனர். மார்ன் நதிப்போர் முதல் உலகப்போரில் ஒரு புதிய திருப்பத்தினை ஏற்படுத்தியது. அதன் பின்னர் மேற்குப் பகுதியில் நீண்டகாலம் அகழிப்போர் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

**(2) கிழக்குப் பகுதியில் போர் (1914-15):** ருஷியாவின் படைகள் கிழக்குப் பிரஷ்யாவில் நுழைந்தன. ஆனால் **டானன்பர்க்** (Tannen Berg) என்ற இடத்தில் **வான்ஹிண்டன்பர்க்** (Von Hindenburg) என்ற ஜெர்மானியப் படைத் தளபதி ருஷியாவின் படைகளை முறியடித்தார்.

இதற்கிடையில் துருக்கி மத்திய வல்லரசுகளுடனும், இத்தாலி நேச நாடுகளுடனும் சேர்ந்து போரில் இறங்கின. **டார்டனல்ஸ்** (Dardenelles) என்ற பகுதியை வென்று, ருஷியாவிற்குச் செல்லும் பாதையில் உள்ள தடையை நீக்கும் பொருட்டு இங்கிலாந்து தனது வலிமைமிக்க கடற்படையை அனுப்பியது. ஆனால் இங்கிலாந்தின் அத்தகைய முயற்சி படுதோல்வியில் முடிந்தது.

'டானன்பர்க்' என்ற விடத்தில் நடந்த போரின் வெற்றி வீரரான வான் ஹிண்டன்பர்க் என்ற ஜெர்மானியத் தளபதி ருஷியாவின் மற்றொரு மாபெரும் படையினை **மசூரியன் ஏரிக்கரைப்** (Masurian Lakes) பகுதியில் நடந்த போரில் முறியடித்து போலந்தில் நுழைந்து வார்சா நகரைக் கைப்பற்றினார். கார்பேத்தியன் மலைப் பகுதிகளிலிருந்து ருஷியப் படைகளை **வான் மாக்கென்சன்** (Von Mackenson) என்ற தளபதியின் ஜெர்மானியப் படைகள் விரட்டியடித்தன. இத்தகைய தோல்விகள் ருஷியாவின் சார் அரசப் பரம்பரையின் பெருமையைக் குலைத்தன. ருஷியப் புரட்சி 1917ஆம் ஆண்டில் வெடித்தது. ருஷியா போரினின்றும் விலகியது. ஜெர்மனியுடன் **பிரஸ்ட் லிதோஸ்க்** (Brest Litovsk) என்ற இடத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன்படி பால்டிக் கடல் பகுதியிலிருந்த பல பகுதிகளை ருஷியா ஜெர்மனிக்குக் கொடுத்தது.

**(3) மேற்குப் பகுதிப் போர் (1917):** ருஷியாவில் புரட்சி ஏற்பட்டவுடன், ருஷியா போரினின்றும் விலகியது. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களின் பயங்கரமானத் தாக்குதல்கள் அமெரிக்கக் குடியரசு தலைவர் உட்ரோ வில்சனையும் போர் அறிவிப்புச்செய்து, அமெரிக்காவையும் போரில் ஈடுபடுத்தியது. அத்தருணத்தில்தான்

டாங்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டு, நேச நாட்டுப் படைகள் டாங்கி களையும் பயன்படுத்தத் தொடங்கின. அமெரிக்கப் படைகள் மேற்குப் பகுதி போர்க்களத்தில் வந்திறங்கியது. நேச நாட்டுப் படைகளுக்கு மற்றுமொரு வெற்றியாக அமைந்தது. **மார்ஷல் ஃபோக்கின்** (Marshal Foch) தலைமையிலான நேச நாட்டுப் படை கள் புதிய படையெடுப்பு ஒன்றினைத் தொடங்கின. ஜெர்மனி யில் கெய்சருக்கு எதிராகப் புரட்சி வெடித்தது. கெய்சர் தனது பதவியைத் துறந்து நடுநிலை நாடான ஹாலந்திற்கு ஓடினார். 1918ஆம் ஆண்டின் பதினோராம் மாதம் பதினோராம் நாள், பதினோரு மணி, பதினோரு நிமிடத்தில் ஜெர்மானியப் படை சரணடைந்தது.

**(இ) போரின் விளைவுகள்**

(1) அளவற்ற பொருட்சேதமும் எண்ணற்ற ஆட்சேதமும் ஏற்பட்டது.

(2) நான்கு பேரரசுகள் அழிந்தன. ஜெர்மனி, ஆஸ்திரிய, துருக்கியப் பேரரசுகள் தோல்வியினாலும், ருஷியப் பேரரசு புரட்சியினாலும் வீழ்ந்தது.

(3) போரின்போது ஏற்பட்ட பயங்கரமான அழிவுகள் உலக அரசியல் தலைவர்களைப் பன்னாட்டுக் கழகம் ஏற்படுத்தும் படி தூண்டிவிட்டது.

(4) நேச நாடுகளின் தலைவர்கள் போருக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் அமைப்பையே வெர்சாய் மாநாட்டின் போது திருத்தியமைக்கவும் இப்போர் காரணமானது. போரின் முடிவில் ஏற்படுத்த வெர்சாய் மாநாட்டின் செயல்களைச் சற்று விளக்கமாகவே ஈண்டு குறிப்பிட வேண்டியுள்ளது.

**1919ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கை வெர்சாய்—மாநாடு**

(1) **மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்ட உலகத் தலைவர் கள்:** பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி ஆகிய நான்கு வல்லரசுகளின் தலைவர்களுமே வெர்சாய் மாநாட்டின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுச் செயல்முறைகளையும் கோட் பாடுகளையும் உருவாக்கிச் செயல்படுத்தினர். அவர்கள் பிரான் சின் குடியரசுத் தலைவர் **கிளமன்சு** (Clemenceau), இங்கிலாந் தின் பிரதமர் **லாயிடு ஜார்ஜ்** (Lloyd George), அமெரிக்கக் குடி யரசு தலைவர் **உட்ரோ வில்சன்** (Woodrow Wilson)

மற்றும் இத்தாலியின் பிரதிநிதி **ஓர்லாண்டோ** (Orlando) என்பவர்களாவர்.

வெர்சாய் மாநாட்டின் ஆரம்ப நிலையில் உலகை உய்விக்க வந்த **மெசையாவே** (Messiah) மீண்டும் உட்ரோ வில்சனின் உருவத்தில் அவதரித்து இருப்பதாகக் கருதுகின்ற அளவிற்கு அவருக்குச் சிறப்பிடம் அளித்துப் புகழப்பட்டது. வெற்றி பெற்று விட்ட நாடுகளின் சுயநலத்திற்காகமட்டுமல்லாது, உலக மக்கள் அனைவரின் விருப்பங்களின் அடிப்படையில் நீதியின்பாற்பட்ட, நேர்மையான, நிலையான சமாதான உடன்படிக்கையை உருவாக்க வேண்டுவதன் அவசியத்தை வில்சன் வலியுறுத்திப் பேசினார். போர் நடந்துகொண்டிருந்தபோதே நிலையான உலக அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தனது **பதினான்கு அம்சக் கொள்கையினை** வெளியிட்டிருந்தார். ஜெர்மனி கைப்பற்றியிருந்த பகுதிகள் அனைத்தையும் மீட்டு, அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி யளித்தல், அல்சேஸ் - லொரைன் பகுதியை பிரான்சுக்குத் திருப்பியளித்தல், போலந்தின் சுதந்திரத்தினை ஏற்றுக்கொள்ளுதல், பால்கன் நாடுகளின் எல்லைகளைத் திருத்தியமைத்தல், தேசியக் கொள்கைகளின் அடிப்படையில், இத்தாலி மற்றும் ஆஸ்திரியா - ஹங்கேரியை உருவாக்குதல், விருப்புவெறுப்பின்றிக் குடியேற்றங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், நாடுகளுக்கிடையேயான இரகசியப் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களைத் தவிர்த்தல், ஆயுத உற்பத்தியைக் குறைத்துக்கொள்ளுதல், கடல்களில் கலம் செலுத்த அனைத்து நாடுகளுக்கும் சுதந்திரம், பன்னாட்டுக் கழகம் ஒன்றினை உருவாக்குதல் போன்றவை வில்சனின் பதினான்கு அம்சக் கொள்கைகளில் காணப்பட்டவையாகும்.

வெர்சாய் மாநாட்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனைவிட இங்கிலாந்தின் லாயிடு ஜார்ஜும், பிரான்சின் கிளமென்சுவும் மிகவும் திறமையாகப் பணியாற்றினார்கள். **பிரான்சின் புலி** எனப் புகழ்ப் பெற்ற கிளமென்சு நாட்டுப் பற்று மிக்கவர். அவருடைய பேச்சு, மூச்சு அனைத்திலுமே பிரான்சின் நலனன்றி வேறெதுவும் இருந்ததில்லை. வெர்சாய் மாநாட்டில் பிரான்சின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு செயலாற்றினார். அவருடைய வாழ்நாளில் இரண்டு முறை (1870, 1914) ஜெர்மனி பிரான்சில் நுழைந்து வெற்றி பெற்றிருக்கின்றது. அத்தகைய நிகழ்ச்சி மீண்டும் ஏற்படாமல் இருக்கப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க அவர் தயங்கவில்லை. 'கடலில் அனைத்து நாடுகளுக்கும் சுதந்திரம்', மற்றும் 'தோல்வியுற்ற எதிரிகளிடமிருந்து போர் இழப்பீடு பெறுதல்' ஆகிய


இவ்விரண்டு கொள்கைகளையும் செயல்படுத்துவதில் மிகவும் தீவிரமாக இருந்தவர் இங்கிலாந்தின் லாயிடு ஜார்ஜ் ஆவார். அவர் மிகவும் அரசியல் நுணுக்கமும் தெளிவும் பெற்ற அரசியல் வாதியாவார். இங்கிலாந்தின் கப்பல் போக்குவரத்திற்கும் வர்த் தகத்திற்கும் விளைவித்த கேடுகளுக்காக ஜெர்மனியின் கெய்சரை தூக்கில் போடவேண்டும் என்ற ஒருமித்த கருத்து கொண்டுள்ள நாட்டின் பிரதிநிதியாக அவர் செயலாற்றினார்.

இத்தாலியின் பிரதிநிதியான ஓர்லாண்டோ என்பவர் போரின் பரிசாகத் தங்களுக்கும் புதிய நிலப்பரப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று போராடினார். பிரான்சிற்கு அல்சேஸ்-லொரைன் பகுதிகள் கொடுக்கப்படுகின்றது. ஜெர்மனியின் குடியேற்றங்களை இங்கிலாந்து எடுத்துக் கொள்கிறது. எங்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று இலாப நட்டக் கணக்குப் பார்த்து போராடினார்.

ஆக, வெர்சாய் மாநாடும், 1815ஆம் ஆண்டில் நடைபெற்ற வியன்னா மாநாட்டைப் போலவே செயலாற்றியது எனக் கொள்வதே பொருந்தும். 'சமுதாய அமைப்பினைத் திருத்தி யமைத்தல்', 'புதிய ஐரோப்பிய அரசியல் கோட்பாடுகளைத் தோற்றுவித்தல்' 'நீதி வழுவாது அமைதி காத்தல்' என்பது போன்ற முழக்கங்கள் வெர்சாய் மாநாட்டிலும் விண்ணளாவி நின்றனவே தவிர, அவைகள் வெறும் மேடைப் பேச்சளவிலேயே நின்றுவிட்டன. செயல்படுத்த எவ்வித முயற்சியும் மேற்கொள் ளப்படவில்லை. அவ்விரண்டு ஐரோப்பிய மாநாடுகளிலும் உண் மையிலேயே தோல்வியடைந்துவிட்ட எதிரியின் நாடுகளை வெற்றிபெற்ற நாடுகள் பங்கிட்டுக்கொள்வதே முதன்மையான நோக்கங்களாக இருந்திருக்கின்றன.

**(2) நாடுகளின் சீரமைப்பு மற்றும் இராணுவ, பொருளா தாரக் கருத்துகள்:** ஜெர்மனியுடன் **வெர்சாய் நகரிலும்**; ஆஸ்திரியாவுடன் **புனித ஜெர்மெய்ன்** நகரிலும், ஹங்கேரியுடன் **திரயனான்** என்ற இடத்திலும், பல்கேரியாவுடன் **நியூலி** என்ற நகரிலும், துருக்கியுடன் **செவ்ரே** நகரிலுமாக ஐந்து முதன்மை யான உடன்படிக்கைகள் முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்டன. சமாதானக் கூறுபாடுகள் இவ்வைந்து உடன்படிக்கை களிலும் விரவிக்கிடக்கின்றன

* ஜெர்மனி **அல்சேஸ்-லொரைன்** பகுதிகளை பிரான்சுக்குத் திரும்பக் கொடுத்தது. **மொரஸ்னெ, ஈப்பன், மால்மடி (Moresnet, Eupen, Malmedy)** என்ற இம்மூன்று சிறிய மாவட்





படம் 12.2 வெர்சாய் மாநாட்டின் முன்னர் ஐரோப்பா

டங்களை பெல்ஜியத்திற்கும், **போசனின்** (Posen) பெரும் பகுதியையும், மேற்கு பிரஷ்யாவின் மக்களின் கருத்தினைப் பொது வாக்கெடுப்பு நடத்தி மக்கள் விரும்பினால் முழுவதையும் போலந்திற்கும் ஜெர்மனி கொடுக்க வேண்டியதாயிற்று. **மெமல்** என்ற பால்டிக் கடல் துறைமுகத்தினை நேசநாடுகள் ஏற்றுக்கொண்டன. ஜெர்மனியின் குடியேற்றங்கள், வேற்று நாடுகளில் இருந்த ஜெர்மனியின் சொத்துகள், சிறப்புரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டன. போலந்திலிருக்கும் **டான்சிக்** (Danzig) துறைமுகம் சுங்கவரியற்ற துறைமுகமாக்கப்பட்டது (Free Port). அரை மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஜெர்மனியின் **சார் பள்ளத்தாக்குப் பகுதி** (Saar Valley) பதினைந்தாண்டுகளுக்குப் பன்னாடுகளின் பொறுப்பிலிருக்கும். அக்காலத்தில் பிரான்சின் வட பகுதியிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களை ஜெர்மனி அழித்துவிட்டதற்கு ஈடு செய்யும் வகையில் பிரான்சுக்கு சார் பள்ளத்தாக்குப் பகுதியிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களைப் பயன்படுத்தும் உரிமை கொடுக்கப்பட்டது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பொது வாக்கெடுப்பு நடத்தி, சார் பள்ளத்தாக்கு மக்களின் விருப்பப்படி பிரான்சுடனோ அல்லது ஜெர்மனியுடனோ அப்பகுதி இணைக்கப்பட வேண்டும்.

இத்தாலிக்கு **தெற்கு டைரோல், டிரிஸ்டி, இஸ்திரியா** மற்றும் சில தீவுகள் (Southern Tyrol, Trieste, Istria) ஆகிய பகுதிகளையும் யுகோஸ்லாவியாவிற்கு **பாஸ்னியா, ஹெர்சகோவினா, டால்மேசியக்** கடற்கரை பகுதி மற்றும் சில தீவுகளையும் செக்கோஸ்லாவேகியாவிற்கு **பொஹீமியா, மொரேவியா, சைலீஷியா** பகுதிகளையும், போலந்திற்கு **கலிசியாவையும்**, ருமேனியாவிற்கு **புகோவினாவையும்** ஆஸ்திரியா கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறாக ஆஸ்திரிய - ஹங்கேரி பேரரசு சின்னாபின்னமாக்கப்பட்டது. டான்யூப் நதியின் வடக்கில் வியன்னா நகரைச் சுற்றி ஆறு மில்லியன் மக்களைக்கொண்ட ஒரு சிறிய அரசாக ஆஸ்திரியா பேரரசு சிதைக்கப்பட்டது. **அன்ஷ்லஸ்** (Anchuluss) அல்லது ஆஸ்திரியா - ஜெர்மனி ஐக்கியம் தடை செய்யப்பட்டது. பன்னாட்டுக் கழகத்தின் பாதுகாப்புக் கவுன்சிலின் ஒருமித்த ஒப்புதலின் பேரில்தான் சிறிய ஆஸ்திரியா ஜெர்மனியுடன் இணைய முடியும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஹங்கேரியும் சிதைக்கப்பட்டது. **டிரான்சில்வேனியாவை** ருமேனியாவிற்கும், **குரோஷியாவை** யுகோஸ்லேவியாவிற்கும், **ஸ்லோவாகிய** மாநிலங்களை செக்கோஸ்லாவாகியாவிற்கும் ஹங்கேரி கொடுக்க வேண்டியதாயிற்று.




படம் 12.3 வெர்சாய் மாநாட்டின் பின்னர் ஐரோப்பா

ஏஜியன் கடற்கரைப் பகுதிகளை கிரீஸுக்கும், மேற்குப் பகுதியின் சில பகுதிகளை யுகோஸ்லாவியாவிற்கும் பல்கேரியா கொடுக்க வேண்டியதாயிற்று.

துருக்கியுடன் செய்துகொண்ட செவ்ரே உடன்படிக்கையினைத் துருக்கியின் தேசியவாதிகள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். எனவே, திருத்தப்பட்ட உடன்படிக்கை லாசேன் (Lausanne) என்றவிடத்தில் 1923ஆம் ஆண்டில் கையெழுத்தாயிற்று. லாசேன் உடன்படிக்கையின்படி சிரியா, பாலஸ்தீனம், மெசபொடேமியா பகுதிகளைத் துருக்கி இழந்தது. கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றி இருந்த ஒரு சிறிய பகுதிமட்டுமே ஐரோப்பாவில் துருக்கிக்குச் சொந்தமான பகுதியாக விடப்பட்டது.

ஜெர்மானியப் படையின் அளவு ஒரு லட்சம் பேருக்குமேல் இருக்க்கூடாதென்றும், கட்டாய இராணுவச் சேவைத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்தவும் தடை விதிக்கப்பட்டது. ரைன் நதிக்குக் கிழக்கே முப்பது மைல் அகலத்தில் உள்ள பகுதி படைபாதுகாப்பற்ற பகுதியாக (Demilitarised) ஆக்கப்பட்டது. அப்பகுதியில் ஜெர்மனி படைத்தளங்களை உருவாக்கவோ படையினரை நிறுத்தவோ கூடாதெனத் தடை செய்யப்பட்டது. ஜெர்மானியக் கடற்படை முழுவதும் இங்கிலாந்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மிகப் பெரும் அளவு நிலக்கரியை பிரான்சு, பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகளுக்கு ஜெர்மனி அனுப்ப வேண்டுமென்றும், அந்நாடுகளின் பொது மக்கள் உடைமைகளை அழித்ததற்கான இழப்பீடாக ஒரு பெருந்தொகையைக் கொடுக்க வேண்டுமெனவும் ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது. அவ்வுடன்படிக்கையின் விதிகள் செயல்படுத்தப்படுவதை வற்புறுத்துவதற்காக ரைன் நதியின் இடதுபக்கப் பகுதிகள் நேச நாடுகளின் பொறுப்பிலிருக்கும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

அதேபோல ஆஸ்திரியாவின் படையின் எண்ணிக்கையும் 30,000மாகக் குறைக்கப்பட்டது. ஹங்கேரியின் படையளவு 35,000, பல்கேரியாவின் படையளவு 20,000 எனவும் நிர்ணயிக்கப்பட்டது. கட்டாய இராணுவப் பயிற்சிமுறை அந்நாடுகள் அனைத்திலும் தடைசெய்யப்பட்டது. இவ்வாறாகப் போர் என்ற சூறாவளி அந்நாடுகளின் அரசகுலம், படை, பேரரசு ஆகிய அனைத்தையும் அழித்துச் சென்றது.

வருங்காலத்திலும் அதுபோன்ற போர்கள் ஏற்பட்டு, ஐரோப்பாவில் பேரழிவுகள் ஏற்படுத்துவதைத் தடுக்கும்பொருட்டு வில்சன் பன்னாட்டுக் கழகம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்தினார். எனவே பன்னாட்டுக் கழகத்தின் விதிமுறைகளும் வெர்சாய் உடன்படிக்கையின் கூறுபாடாக இணைக்கப்பட்டது.

வெர்சாய் உடன்படிக்கையின் கூறுபாடுகள் ஜெர்மனியைப் பொறுத்தவரை மிகவும் கடுமையானதெனக் கருதப்படுகின்றது. அவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட ஜெர்மானியப் பிரதிநிதிகள் தயங்கியபோது, லாயிடு ஜார்ஜ் ஜெர்மனியின் பிரதிநிதிகளிடம் கூறியதாவது 'நீங்கள் கையொப்பமிட்டாக வேண்டும். வெர்சாய் நகரில் கையொப்பமிட மறுத்தால், நீங்கள் பெர்லின் நகரில் கண்டிப்பாகக் கையொப்பமிட வேண்டியிருக்கும்'. ("Gentlemen, you must sign. If you don't do so in Versailles you shall do so in Berlin".)

(3) **அமைதி உடன்படிக்கையின் தன்மை:** வெர்சாய் உடன்படிக்கை, வெற்றியடைந்த நாடுகளால் வலிந்து திணிக்கப்பட்ட உடன்பாடாகும். உடன்படிக்கை ஏற்படுத்தப்படும்போது இருந்த கடுமையான சூழ்நிலைகளே உடன்படிக்கையின் கொடுமையான கூறுபாடுகளுக்குக் காரணமாகும். ருஷியா, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் பேரரசுத் தன்மையும் அரசுகுலமும் அழிந்தது. போலந்து மக்கள், செக்கோஸ்லாவாகியா, செர்பியர்கள் போன்றவர்கள் தங்களது சுதந்திர தேசிய அரசுகளை ஏற்படுத்தினர். அத்தகைய தேசிய எழுச்சிகளையும் சுதந்திர வேட்கைகளையும் நேச நாடுகளின் அரசியல்வாதிகளால் தடைசெய்ய இயலவில்லை. எனவேதான் போலந்து, செக்கோஸ்லாவாகியா, விரிவாக்கப்பட்ட செர்பியா அல்லது யுகோஸ்லாவியா போன்ற புதிய சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட்டன. உலகப் பெரும் போரைத் தோற்றுவித்த குற்றம் ஜெர்மனி, ஆஸ்திரியாமீது சுமத்தப்பட்டது. அத்தகைய குற்றத்திற்காக அவ்விரு நாடுகளும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்ற ஆத்திரம் வெற்றியடைந்த நேச நாடுகளிடையே காணப்பட்டது இரண்டாவது தன்மையாகும். சமாதான உடன்படிக்கை நடந்த இடம் வெர்சாய். ஜெர்மனியின் மூர்க்கத்தனமான தாக்குதல்களையும் அழிவுகளையும் விளக்கும் சின்னங்கள் அந்நகரைச் சுற்றிலும் ஏராளமாக இருந்தன. அழிபாடுகளின் வெகு அருகிலேயே சமாதான மாநாடு ஏற்படுத்தியது மூன்றாவது தன்மையாகும். 'போரின் கொடுமைகளினால் பாரிஸ் நகரமே கொந்தளித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்,

பழிவாங்க வேண்டும் என்ற வெறியுணர்வைத் தணிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பயனற்றுவிட்டன' என H. A. L. ஃபிஷர் என்ற பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மிகவும் கடுமையான கோட்பாடுகளைக் கொண்டிருந்தாலும் சமாதான உடன்படிக்கையில் வில்சனின் கொள்கைகளும் இடம் பெற்றிருந்தன. பாரிஸ் சமாதான மாநாட்டின் தலைவர்கள் உருவாக்கிய புதிய ஐரோப்பிய தேசப்படத்தைப் பார்க்கும்போது மொத்த பெருநிலப்பரப்பின் மக்கள்தொகையில் 3 சதவீதத்திற்கும் குறைவான மக்களே வேற்று நாட்டவர்களால் ஆளப்பட்டனர். சுய நிர்ணய உரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் முன்னர் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் அவ்வளவு திருப்திகரமாக இருந்திருக்கவில்லை. பன்னாட்டுக் கழகத்தின் அமைப்பும் கொள்கைகளும் சமாதான உடன்படிக்கையின் கூறுபாடுகளுள் ஒன்றாக்கப்பட்டது.

சமாதான உடன்படிக்கையில் அமைதி ஏற்படுத்தும் கொள்கைகளும் காணப்படுகின்றன. சுய நிர்ணய உரிமை, பன்னாட்டுக் கழகத்தின் கோட்பாடுகள் என்ற இரு முக்கியக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. புதிய சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட்டன; புதிய குடியரசுகள் தோன்றக் காரணமாக இருந்தது; சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டது; அனைத்திற்கும் மேலாக உலக அமைதியைப் பேண, பன்னாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. 1815-ல் ஏற்பட்ட வியன்னா மாநாடு தேசியம், மக்களாட்சி என்ற கருத்துகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 1919-ல் ஏற்பட்ட மாநாடு அக்கொள்கைகளை மதித்து ஏற்றுக்கொண்டது.

## பன்னாட்டுக் கழகம்

போர் அரக்கனின் கோரத்தாண்டவம், அதன் விளைவாக ஐரோப்பாவில் ஏற்பட்ட பேரழிவுகள், அதைத் தொடர்ந்து மனித இனத்திற்கு ஏற்பட்ட சொல்லொணாத் தொல்லைகள் ஆகியவை போன்ற போர்க்காலக் கொடுமைகளை அறவே தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்ற பேரார்வம் முதல் உலகப் போரின் முடிவில் பாரிஸ்-வெர்சாய் நகரில் கூடிய நேச நாடுகளின் பிரதிநிதிகளிடையே மிகுந்து காணப்பட்டது. அதன் விளைவுதான் போரை அடியோடு ஒழிக்க வகை செய்யும் முறையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சமாதான நிறுவனம் ஆகும். அமெரிக்கக் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சன் என்பவர் அத்தகைய சமாதான நிறுவனம் தோன்ற அரும்பாடு பட்டார். எனவேதான் அவர்

பன்னாட்டுக் கழகம் உருவாகக் காரணமாக இருந்தவர் எனப் போற்றப்படுகின்றார். அவர் பன்னாட்டுக் கழக அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை வரையறுத்து அவற்றை வெர்சாய் சமாதான உடன்படிக்கையின் கூறுபாடுகளுள் ஒன்றாகவே இணைத்து, அச்சமாதான உடன்படிக்கையைத் தோற்றுவித்துப் புதிய அரசியல் கொள்கையென அறிவிப்புச் செய்தார்.

## (அ) பன்னாட்டுக் கழகத்தின் அமைப்பும் நோக்கங்களும்

'நாடுகளுக்கிடையே எழும் பிரச்சினைகளுக்கு முடிவு காணப் போரை நாடுவதில்லை என்ற கட்டுப்பாட்டினை ஏற்றுக் கொள்வதன் மூலம், உலக நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, உலகின் அமைதியைக் காக்கவும், பாதுகாப்புடன் வாழவும் வழி செய்வதே' பன்னாட்டுக் கழகத்தின் தலையாய நோக்கங்களாகும். நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் போரின் துணைகொண்டு முடிவு காணும் முன்னர் பன்னாட்டுக் கழகத்தினிடம் தங்களது பிரச்சினைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கருத்தினை உறுப்பு நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டன. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் போர் அபாயம் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டதாகக் கருத இயலாது. ஆனால் போர் அபாயம் மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது எனக் கருதலாம். படைக்கலன்களின் உற்பத்தியைக் கணிசமாகக் குறைத்து நேரடியான பயனுள்ள பேச்சு வார்த்தைகளில் உறுப்பு நாடுகள் ஈடுபட வேண்டும் எனப் பன்னாட்டுக் கழகம் வற்புறுத்தியது. 'நேர்மையான முடிவுகள் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமே ஏற்பட முடியும்' என்ற எண்ணம் அனைத்து நாடுகளிடையேயும் ஏற்பட முடியும். உலகத் தொழிலாளர் நலம் பாதுகாக்கப்படவும், உலக சுகாதாரத்தை மேம்படுத்த ஆவன செய்வதும் பன்னாட்டுக் கழகத்தின் நோக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மனிதனை மனிதன் அடிமைப்படுத்துகின்ற தீய வழக்கத்தினை அகற்ற வியன்னா மாநாடு முடிவு செய்ததைப்போல, பின்தங்கிய, வளரும் வாய்ப்புகள் குறைந்த நாட்டு மக்களின் வளத்தைப் பெருக்கி, அவர்களது நாகரிக வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதனையும் பன்னாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டு செயல்படுத்த முயன்றது. அதன் விளைவாகவே 'பேராண்மை உரிமைக் கொள்கை' அல்லது 'கட்டளை உரிமைக் கொள்கை' (Mandatory Principle or the Principle of Trusteeship) உருவாக்கப்பட்டது. ஆளப்படுவோரின் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்காகவும் மட்டுமே ஆளுவோரின் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் பன்னாட்டுக் கழகம் வற்புறுத்தியது.

ஜெர்மனியின் குடியேற்றங்கள் அனைத்தும், ஈராக், பாலஸ்தீனம், சிரியா போன்ற துருக்கியின் குடியேற்றங்களும் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் கொடுக்கப்பட்டன. அப்பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பினை பன்னாட்டுக் கழகத்தின் கட்டளை உரிமையின் (Mandatories) வழியாக இங்கிலாந்தும் பிரான்சும் பெற்றன. கட்டளை உரிமை பெற்ற நாடுகள் தங்களின் ஆட்சிப் பொறுப்பில் விடப்பட்டுள்ள நாடுகளின் நிர்வாகம் மற்றும் அனைத்து நிலைகளைப்பற்றி அவ்வப்போது பன்னாட்டுக் கழகத்தின் குழுவினிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கை உலக நாடுகளிடையே நல்லெண்ணம் வளர பெரிதும் உதவியது. மேலும் அத்தகு நிலையால் வளர்ந்துவிட்ட நாட்டினர் வளராத நாடுகளைச் சுரண்டி அவைகளை அடிமைப்படுத்தும் தன்மையும் தடைசெய்யப்பட்டது.

பன்னாட்டுக் கழகத்தின் உறுப்புகள் வருமாறு: முதலாவதாகப் பொது அவை அல்லது **அசம்பளி** (Assembly) என்பதாகும். அசம்பளிக்கு ஒவ்வோர் உறுப்புநாடும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பவேண்டும். அக்கழகத்தின் தலைமையகமான **ஜெனிவா** (Geneva) நகரில் ஆண்டிற்கொருமுறை அப் பொது அவை கூடும். இரண்டாவதாகக் கவுன்சில், அதில் ஐந்து வல்லரசுகளின் உறுப்பினர்கள் நிரந்தரமாகவும், பொது அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாடுகளின் உறுப்பினர்கள் தற்காலிகமாகவும் ஆக மொத்தம் ஒன்பது உறுப்பினர்கள் இருந்தனர். அந்த எண்ணிக்கை பின்னர் உயர்த்தப்பட்டது. தேவைகளுக்கேற்ப கவுன்சில் எத்தனை முறை வேண்டுமானாலும் கூடலாம்.

இவையிரண்டினைத் தவிர மேலும் மூன்று முக்கிய நிறுவனங்களும் இருந்தன. அவைகளாவன: 1. **பன்னாட்டுக் கழகத்தின் செயலகம்**. அது கழகத்தின் செயல்திட்டங்களை வரையறை செய்து, முடிவுகளைச் செயல்படுத்தும் நிர்வாகத் தன்மை கொண்டிருந்தது. 2. **உலகப் பொது நீதிமன்றம்**. அது உறுப்பு நாடுகளுக்கிடையே எழும் வழக்குகளை ஆய்ந்து தீர்ப்பளித்தது. 3. **பன்னாடுகளின் தொழிலாளர் நல நிறுவனம்**. அதில் தொழில் அதிபர்களும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் கலந்துரையாடி, அவர்களுக்கிடையே எழும் பிரச்சினைகளுக்கு விடிவு கண்டு, தொழிலாளர் நலம் பேணும் அமைப்பாகச் செயல்பட்டது.

ஆரம்பத்தில் இந்தப் பன்னாட்டுக் கழகத்தில் 44 நாடுகளே உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தன. ருஷியா விலகி நின்றது. ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி போன்றவை எதிரி நாடுகளாக்

இருந்தமையால், உறுப்பினர்களாவதற்குத் தகுதியற்ற நாடு களாகக் கருதப்பட்டன. அக்கழகம் தோன்றுவதற்கே மூல காரணமாக இருந்தவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன். ஆனால் அமெரிக்கா அச்சபையில் உறுப்பினராக வில்லை. அதற்குக் காரணம், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை களை உருவாக்குவதில் அமெரிக்க செனேட் சபைக்கும் பங் கிருந்தது. அமெரிக்கச் செனேட் சபையில் குடியரசுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருந்த காரணத் தினால், மக்களாட்சிக் கட்சியைச் சார்ந்த குடியரசுத் தலைவரின் அத்தகைய வேண்டுகோளை நிராகரித்துவிட்டது.

தேசிய அரசுகளைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு மிகவும் சக்திவாய்ந்த அரசுகளுக்கெல்லாம் அரசாக பன்னாட்டுக் கழகம் மிக்குயர் நிலை பெற்றிருக்கவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும். உலகினை அலைக்கழிக்கும் பெரும் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, நல்லுறவு கொண்டு அமைதி யுடன் உலக நாடுகள் இணைந்து இயங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பன்னாடுகளின் கூட்டமைப்பே, இந்தப் பன்னாட்டுக் கழகம் ஆகும். எனவேதான் கவுன்சிலின் அனைத்து முடிவுகளும் ஒருமனதாகவே இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், இந்த விதிமுறை அக்கழகத்தின் செயல்முறைகளை வெகுவாகப் பாதித்தது. ஏனெனில் கவுன்சிலின் ஒருமனதான முடிவு என்பது செயல்முறையில் இயலாததாயிற்று.

அக்கழகத்தின் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து நாட்டி னுள்ள **ஜெனிவா** நகரில் அமைக்கப்பட்டது. எனவே ஜெனிவா நகரம் பன்னாட்டுக் கழகத்தின் தலைமையகமாயிற்று. இங்கி லாந்து நாட்டு செசில் **பிரபு** (Lord Cecil) கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கினார். செக்கோஸ்லோவாக்கியா வைச் சேர்ந்த **டாக்டர் பென்ஸ்** (Dr. Benes), நார்வே நாட்டு **நான்சன்** (Nansen), கிரீஸ் நாட்டின் **பாலிடிஸ்** (Politis) மற்றும் பிரான்சு நாட்டு **அரிஸ்டிட் பிரையன்** (Aristide Briand) போன் றோர் அக்கழகம் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அரும்பாடு பட்டவர்களில் முக்கியமானவர்களாவர்.

### (ஆ) பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகளும் தோல்வியும்

பன்னாட்டுக் கழகம் செயல்பட்ட பதினைந்து ஆண்டுகளில் அதன் தலையாய குறிக்கோள்களான ஆயுதக் குறைப்பு, போர் ஏற்படுவதைத் தடுத்தல் ஆகியவற்றில் வெற்றி பெறவில்லை. எனினும் ஏனைய துறைகளில் சிறப்பான பணியாற்றியுள்ளது.

என்பதை மறுக்க இயலாது. உலக நீதிமன்றம் முப்பதுக்கும் அதிகமான வழக்குகளை விசாரித்து ஒரு சிலவற்றில் தீர்ப்புகளை யும், மற்றவற்றில் ஆலோசனையையும் வழங்கியிருக்கின்றது. ஜெர்மனி 1926ஆம் ஆண்டிலும், சோவியத் ருஷியா 1934ஆம் ஆண்டிலும், அக்கழகத்தின் உறுப்பினர்களாயின. **ஆலண்டு தீவுகளைப் (Aaland Islands)** பற்றி ஸ்வீடன் - பின்லாந்து நாடு களுக்கிடையே ஏற்பட்ட பூசலைப் பன்னாட்டுக் கழகம் தீர்த்து வைத்தது. அதே போல கிரீஸ் - பல்கேரியா நாடுகளுக்கிடையே ஏற்படவிருந்த போரைத் தடுத்தது; **மெமல் (Memel)** பிரச்சினை யையும் தீர்த்து வைத்தது. தொழிலாளர் நலனை மேம்படுத்து வதிலும், அவர்களிடையே நோய்கள் பரவாமல் தடுப்பதிலும் உலகத் தொழிலாளர் நல நிறுவனம் அரும்பணியாற்றியுள்ளது. பின்தங்கிய, வளர்ச்சியுறாத நாடுகள் **கட்டளை உரிமை (Mandatory)** என்ற முறையில் வல்லரசுகளிடம் ஒப்படைக்கப் பட்டு வளர்ச்சியுற வகை செய்யப்பட்டது.

இருப்பினும் வல்லரசுகளை உள்ளிட்ட பெரும் பிரச்சினைகள் எழுந்தபோது, அல்லது வல்லரசுகளே பிரச்சினைக்குக் காரண மாக இருந்தபோது, பன்னாட்டுக் கழகம் செயலிழந்து நின்றது. 1930ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியா மீது படையெடுத்து, **மஞ்சுகோ (Manchuko)** என்ற பொம்மை அரசினை ஏற்படுத்தி யதைப் பன்னாட்டுக் கழகம் கண்டித்தது. இதனை ஜப்பான் எதிர்த்து, அக்கழகத்தினின்றே வெளியேறியது. 1935ஆம் ஆண்டில் இத்தாலியின் வல்லாட்சியாளர் முசோலினி அபிசினியா மீது வலுத்தாக்குதல் நடத்தினார். அதனைக் கண்டித்த பன்னாட்டுக் கழகம் தன்னிடமிருந்த ஒரே ஆயுதமான பொரு ளாதாரத் தடையினை (Economic Sanctions) இத்தாலியின் மீது விதித்தது. ஆனால் பன்னாட்டுக் கழகத்தின் அத்தகைய தடையையும் கண்டிப்பினையும் பொருட்படுத்தாது, முசோலினி போரினைத் தொடர்ந்து நடத்தி அபிசினியா முழுவதையும் இத்தாலியப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். அதே நேரத்தில் ஸ்பெயினில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் ஜெர்மனி, இத்தாலி, ருஷியா போன்ற வல்லரசுகள் தலையிட்டன. வெர்சாய் உடன்படிக்கையின் கட்டுப்பாடுகள் அனைத்தையும் தூக்கி எறிந்து விட்டு ஹிட்லர் ஜெர்மனியின் படை வலிமையைப் பன்மடங் காகப் பெருக்கி, வல்லரசாக மீண்டும் உயர்த்திவிட்டார். ஆஸ் திரிய - ஜெர்மனி இணைப்பு அல்லது "**அன்சுலஸ்**" **(Anchuluss)** என்பது பன்னாட்டுக் கழகத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விதிமுறை இருப்பினும், அவ் விதிமுறைகளை மீறி 1938ஆம் ஆண்டில ஹிட்லர் ஆஸ்திரியா

முழுவதையும் ஜெர்மானியப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். மேலும் ஜெர்மனி 1938ஆம் ஆண்டில் செக்கோஸ்லாவாகியாவையும், 1939ஆம் ஆண்டில் **மெமலையும் (Memel)** இணைத்துக் கொண்டது. அதே போல இத்தாலி 1939ஆம் ஆண்டில் அல்பேனியாவினை இணைத்துக் கொண்டது. அதே ஆண்டில் ருஷியாவும் பால்டிக்கடல் பகுதி நாடுகள் அனைத்தையும் தன்னுடைய செல்வாக்கிற்குட்படுத்தியது. இத்தகைய நிகழ்ச்சிகள் பன்னாட்டுக் கழகத்தின் தடையை மீறி ஆக்கிரமிப்பு நடத்திய நாடுகள் ஒவ்வொன்றாக வெளியேறின. ஜப்பான் 1933ஆம் ஆண்டிலும், ஏழே ஆண்டுகள் உறுப்பினராக இருந்த ஜெர்மனி 1933ஆம் ஆண்டிலும், இத்தாலி 1937ஆம் ஆண்டிலும் பன்னாட்டுக் கழகத்தினின்றும் வெளியேறின. வல்லரசுகளில் இங்கிலாந்தும் பிரான்சும் மட்டுமே தொடர்ந்து உறுப்பினர்களாக இருந்தன.

### (இ) பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்கள்

பன்னாட்டுக் கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளும் விதிமுறைகளும், வெர்சாய் உடன்படிக்கையின் கூறுபாடுகளுள் ஒன்றாக இணைத்து விட்டதையே, அக்கழகத்தின் தோல்விக்கான முதல் காரணமாகக் குறிப்பிடவேண்டும். பன்னாட்டுக் கழகம் தோன்றக் காரணமாக இருந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன், அக்கழகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதை வெர்சாய் உடன்படிக்கையின் கூறுபாடுகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தியிருந்தார். அதன் காரணமாகப் போரில் வெற்றிபெற்ற நாடுகள் ஏற்படுத்திய, தங்களுக்குச் சாதகமான அரசியல் நிலைகளை நிலைபெறச் செய்வதற்காகவே, அந்தப் பன்னாட்டுக் கழகத்தைத் தோற்றுவித்திருக்கின்றனர் என்ற எண்ணம் தோன்றிப் பரவக் காரணமாக இருந்தது. வெற்றிபெற்ற நாடுகள் தங்களுடைய வெற்றியின் பயனாகப் பெற்ற பகுதிகளை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே ஏற்படுத்திய 'வெற்றி பெற்ற நாடுகளின் குழுமம்' (Victors' Club) தான் பன்னாட்டுக் கழகம் என ஜெர்மனி நம்பியது.

ஆரம்ப காலத்தில் பன்னாட்டுக் கழகத்தினைப் பற்றி இருந்த தவறான கருத்துகள் காலப்போக்கில் மறைய, ஜெர்மனி 1926ஆம் ஆண்டு அக்கழகத்தின் உறுப்பினராகச் சேர்ந்தது. இருப்பினும், 1922ஆம் ஆண்டு இத்தாலியில் பாசிஸ் வல்லாட்சியும் 1933ஆம் ஆண்டில் ஜெர்மனியில் நாசிக் கட்சியினரின் வல்லாட்சியும் ஏற்பட்ட பின்னர், இவ்விரு நாடுகளும் ஆங்கில-பிரெஞ்சு வல்லரசுகளின் பேரரசுக் கொள்கையையும், அந்நாடு

களின் உயர் தனி நிலையையும் உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதே இந்தப் பன்னாட்டுக் கழகம் என மீண்டும் கருதின. அதன் விளைவாகவே அவ்விரு நாடுகளும் தங்களது வலுத்தாக்குதல்கள் மூலம் அக்கழகத்தினைச் செயலிழக்கச் செய்தன.

அமெரிக்க ஐக்கியநாடுகள் பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராகச் சேராதது, அதன் தோல்விக்கான இரண்டாவது காரணமாகும். பன்னாட்டுக் கழகம் ஏற்படுத்துவதைத் தனது உயிரனைய கொள்கையாகக் கொண்டிருந்தார் உட்ரோவில்சன். ஆனால், வெளியுறவுக் கொள்கையை உருவாக்குவதில் பங்கு கொண்டுள்ள செனேட் அவை, குடியரசுத் தலைவரின் விருப்பத்தினை எதிர்த்தது. அதனால் பன்னாட்டுக்கழகம் தோன்றுவதற்கே காரணமாக இருந்த அமெரிக்கா அக்கழகத்தில் உறுப்பினராக முடியவில்லை என்பது வருந்தத்தக்கதாக அமைந்தது. அத்தகைய நிகழ்ச்சி பன்னாட்டுக் கழகத்தின் செயல்முறையை ஆரம்பத்திலிருந்தே பாதித்தது.

மூன்றாவதாக மக்களாட்சி முறை அடிப்படையில் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் போன்றே இக்கழகத்தின் செயல்முறைகள் உருவாக்கப்பட்டிருந்தன. இம் முறையில் இங்கிலாந்தும் பிரான்சும் அனுபவம் பெற்றிருந்தன. ஏனைய நாடுகளுக்கு அத்தகைய முறை புதுமையானதாகக் காணப்பட்டது. எனவே முற்றிலும் புதிய முறையில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலையில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் திறமையாகச் செயலாற்ற இயலவில்லை.

இறுதியாகக் கூறுமிடத்துப் பன்னாட்டுக்கழகம் தனது தடைகளை மீறிச் செயல்படுகின்ற நாடுகளை வற்புறுத்திப் பணிய வைக்கின்ற அளவிற்குத் தேவையான நிர்வாக அதிகாரமோ அல்லது படை வலிமையையோ பெற்றிருக்கவில்லை. ஜப்பான் மஞ்சூரியா மீது வலுத்தாக்குதல் நடத்தி, தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டபோது, பன்னாட்டுக்கழகம் தனது எதிர்ப்பினை மட்டுமே தெரிவித்துக் கொள்ள முடிந்தது. இத்தாலி அபிசினியா மீது படையெடுத்தபோது, பன்னாட்டுக் கழகம் இத்தாலியின் மீது திறமையற்ற பொருளாதாரத் தடையை மட்டுமே விதித்தது. அத்தடையை உறுப்பு நாடுகள் மீறியபோது தடுக்க வழியில்லாது செயலற்று நின்றது. பின்னர் நாசிச ஜெர்மனி வலுத்தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டபோது பன்னாட்டுக் கழகம் செய்வதறியாது வெறும் பார்வையாளராக மட்டுமே செயல்பட்டது. ஒருவனைக் குற்றவாளி எனத் தீர்ப்

பளித்துவிட்டு, தான் அளித்த தண்டனையைச் செயல்படுத்தும் அதிகாரமற்ற நீதிபதியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டே குற்றவாளி நீதிமன்றத்தைவிட்டு வெளியேறுவதைப் போன்ற கேவலமான நிலையிலேயே பன்னாட்டுக் கழகம் இருந்தது. உலகின் ஏனைய நாடுகள் இக்கழகத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. நாடுகளின் கூட்டமைப்பாக இருந்த அக்கழகம் செயல்படுத்த இயலாத எண்ணங்களின் உறைவிடமாக மாறி செயலற்றது.

## அத்தியாயம் 13

# 1917ஆம் வருடத்திய ருஷ்யப் புரட்சி — லெனின்

### (அ) முன்னுரை

சமீப காலத்தில் நடந்த இயக்கங்களுள் ருஷ்யப் புரட்சி மாபெரும் இயக்கமாகும். 16ஆவது நூற்றாண்டு சமயச் சீர்திருத்த இயக்கம், 1789ஆம் வருடத்திய பிரெஞ்சுப் புரட்சி ஆகியவற்றைவிட உலக வரலாற்றில் இது முக்கியத்துவம் பெற்றது. பிரெஞ்சுப் புரட்சி 19ஆவது நூற்றாண்டில் தேசியத்தையும் ஜனநாயகத்தையும் வளர்ச்சியடையச் செய்ததுபோல ருஷ்யப் புரட்சி இந்த நூற்றாண்டை **சமதர்மக் கொள்கை காலமாக** (Age of Socialism) ஆக்கியுள்ளது. அநேக நாடுகள் **பொதுவுடைமை** (Communism) அல்லது சமதர்மக் (Socialism) கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு இக்கொள்கை அரசியல், சமூக, பொருளாதாரக் கோளாறுகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது.

### (ஆ) புரட்சியின் காரணங்கள்

1. **சார் மன்னர்களின் யதேச்சாதிகாரம்:** யதேச்சாதிகாரம் செலுத்திய சார் மன்னர்களால் ருஷ்யா ஆட்சி செய்யப்பட்டு வந்தது. மக்களுக்குத் தனி உரிமைகள் கிடையா. அரசாங்கம் மக்களைக் கவனிக்காமல் இருந்தமையால், அவர்கள் வறுமையினாலும், நோயினாலும் அவதிப்பட்டனர். முதல் உலகப் போர் மக்களுடைய துன்பங்களை அதிகரித்தது. அப்போரில் அநேக போர்க்களங்களில் ருஷ்யப் படைகள் ஜெர்மானியரால் முறியடிக்கப்பட்டன. அப்பொழுது ருஷ்யாவை ஆட்சி செய்து வந்த சார் இரண்டாம் நிக்கோலஸும் அவருடைய மனைவியும், கபட சந்நியாசியான (Rascal Monk) **ராஸ்புட்டீன்** பிடியில் இருந்தனர். எவ்வாறு மேரி அன்டாயினட் பதினாறாம் லூயிக்குத் தவறான ஆலோசனைகள் கூறி பிரெஞ்சுப் புரட்சிக்கு ஓரளவு காரணமாக இருந்தாரோ, அதேமாதிரி ராஸ்புட்டீன் பிடியிலிருந்த ருஷ்ய அரசி

தமது கணவரைத் தவறான பாதையில் இழுத்து, புரட்சிக்கு ஓரளவு காரணமாக இருந்தார். மன்னருக்கும் அரசிக்கும் முக்கிய ஆலோசகராக இருந்த ராஸ்புட்டீன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தமையால் மக்களால் வெறுக்கப்பட்டார். அவர் அவருடைய எதிரிகள் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டவுடன், ருஷ்ய மன்னர் கடுமையாக மக்களை ஒடுக்கினார். மக்கள் அரசை வெறுத்துப் புரட்சிக்குத் தயாராயினர்.

2. **குடியானவர்கள் நிலை:** நாட்டின் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் குடியானவர்கள் மிகவும் தாழ்ந்த நிலை யிலிருந்தனர். 1861ஆம் ஆண்டில் இரண்டாம் சார் அலெக் சாந்தர் இயற்றிய விடுதலைச் சட்டத்தினால் நிலங்களில் பணி யாற்றியவர்களுக்கு விடுதலை கிடைத்தது. அதன்படி அவர்கள் நிலங்கள் வாங்கவும், அந்நிலங்களை அவர்கள் இஷ்டப்படி பயன் படுத்தவும் உரிமை பெற்றனர். ஆனால், இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் நிலப் பிரபுக்களும், அரசாங்க அதிகாரிகளும் பல சிக்கல்களை உருவாக்கினர். உழவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங் கள் அவர்களுக்குப் போதுமான வருமானத்தைக் கொடுக்கவில்லை. அதனால் அவர்கள் பிரபுக்கள் நிலங்களில் உழைக்க வேண்டிய தாயிற்று. அல்லது வேறு துறைகளில் வேலைக்கு அமர்ந்து ஊதியம் தேட வேண்டியதாயிற்று. எனவே 1861 விடுதலைச் சட்டத்திற்குப் பிறகும் நிலப் பிரபுக்களின் ஆதிக்கமும், நிலமானிய முறையின் குறைகளும் நீங்காமல், குடியானவர்கள் மிகவும் துன்புறுத்தப் பட்டார்கள்.

3. **தொழிலாளர்களின் நிலை:** 19ஆவது நூற்றாண்டின் இறுதியில் ருஷ்யாவில் தோன்றிய தொழிற் புரட்சியின் விளை வாகத் தொழில் நகரங்களில் பாட்டாளி மக்கள் வகுப்பினர் தோன் றினர். நிலங்களில் பணியாற்றிய உழவர்களும், கிராமங்களை விட்டு நகரங்களுக்கு வேலை செய்ய வந்தனர். தொழில் அதிபர்கள் பாட்டாளி மக்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுத்து, அவர்கள் செல்வந்தர்களாயினர். இந்தச் சுரண்டி வாழும் முறையைத் தடுக்க, அரசாங்கம் சட்டங்கள் இயற்றிய பொழுதும், தொழிலாளிகள் நிலை மாறவில்லை. அதனால் தொழிற் சங்கங்கள் புரட்சிக் கருத்துக்களை முக்கியமாக **கார்ல் மார்க்ஸ்** கொள்கைகளை ஏற்று, புரட்சிக்குத் தயாராயினர்.

4. **புரட்சிக் கருத்துகள் பிரச்சாரம்—கார்ல் மார்க்ஸ்:** ருஷ்யப் புரட்சி முக்கியமாகப் பொதுவுடைமைப் புரட்சியாளர்களின் பிரச் சாரத்தினால் ஏற்பட்டதால், பொதுவுடைமைக் கொள்கையைப் பற்றி விளக்குவோம். கம்யூனிஸ்ட் கொள்கையை வகுத்தவர்

கார்ல் மார்க்ஸும், அவருடைய சகா பிரெடரிக் ஏங்கெல்ஸும், ஆவர். கம்யூனிஸ்டுகளின் வேத புத்தகங்கள் முதல் (Das Capital), கம்யூனிஸ்டு பேரறிக்கை ஆகிய இரண்டும் ஆகும். 'முதல்' அல்லது 'மூலதனம்' என்ற புத்தகத்தில், எவ்வாறு முதலாளிகள் தங்களது சுய நலத்திற்காகத் தொழிலாளிகளைப் பயன்படுத்து கிறார்களென்றும், முதலாளித்துவத்தின் தீமைகளையும் விளக்கினார். பெரிய தொழில் நிறுவனங்களின் முதல், பங்குதாரர்களால் கொடுக்கப்படுகிறது என்றும், ஆனால் அவர்கள் உழைப்பதில்லை என்றும் அவர் கூறினார். உழைக்காமலிருந்தும், அவர்களுக்கு லாபப் பங்கு கிடைக்கிறது. அதே மாதிரி ஒரு பெரிய நிலப்பிரபு, தனது நிலத்தைப் பயிரிடக் குத்தகைக்காரர்களிடம் விட்டாலோ, அல்லது வீடுகட்டக் கொடுத்தாலோ, அல்லது ஒரு கம்பெனிக்குத் தொழிற்சாலை அல்லது இருப்புப் பாதை அமைக்கக் கொடுத்தாலோ, அவருக்குக் குத்தகைப் பணமோ வாடகைப் பணமோ உழைக்காமல் கிடைக்கும். எனவே, இன்றைய சமூகத்தில் முதல் வைத்துக் கொண்டு உழைக்காமல் பணம் சம்பாதிப்பவரும், முதல் இல்லாமல் உழைத்து ஊதியம் பெருகிறவர்களும் இருக்கிறார்கள். காலம் செல்லச் செல்ல தனவந்தர்கள் மிகவும் தனவந்தர்களாகவும், ஏழைகள் மிகவும் ஏழைகளாகவும் ஆவார்கள். பாட்டாளி மக்கள் தங்களது அவல நிலையை நீக்க வேண்டுமானால், அவர்கள் முதலாளிகளின் முதலைக் கைப்பற்ற வேண்டும். முதலாளிகள் லேசில் தங்கள் முதலைக் கொடுக்கமாட்டார்கள். ஒரு வன்மைப் புரட்சியால் தான் அதைப் பறிமுதல் செய்ய வேண்டும். அதனால் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வர்க்கப் போராட்டம் (Class War) ஏற்படும். போராட்டத்தின் வெற்றியின்மூலம் கிடைத்த முதலை என்ன செய்வது? தங்களுக்குள் பகிர்ந்துகொண்டு, தாங்களும் குட்டி முதலாளிகள் ஆவதா? கார்ல் மார்க்ஸ் சொல்லுகிறார்: ''இல்லை, வர்க்கப் போராட்டத்தினால் கிடைத்த நிலங்கள், கட்டடங்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள் முதலியன அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்படும். அரசாங்கம் எல்லாவற்றையும் நடத்தி அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுப்பதுபோல், உழவர்கள், தொழிலாளிகள் முதலியோருக்கு அவரவர் வேலைக்குத் தகுந்த மாதிரி ஊதியம் அளிக்கும். எனவே 'முதல்' சமூகத்திடம் இருக்கும்; உழைத்தால்தான் ஊதியம் கிடைக்கும்; ஒரு வர்க்கத்தினர் மற்றொரு வர்க்கத்தினரைச் சுரண்டி வாழ்வது ஒழிக்கப்படும்; இதுவே சமதர்ம அல்லது சோஷலிசக் கொள்கையாகும்.'' இது கம்யூனிஸம் அல்லது பொதுவுடைமை என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் 'முதல்' பொதுவாக இருக்கிறது; தனியாரிடம் இல்லை. சோஷலிசத்

திற்கும் கம்யூனிஸத்திற்கும் முக்கிய வேறுபாடு: நாளாவட்டத்தில் பார்லிமெண்டைத் தேர்தல்மூலம் அதாவது சமாதான முறையில் கைப்பற்றி, சோஷலிச அரசாங்கம் அமைத்து சோஷலிசத்தைச் செயல்படுத்துவது **சோஷலிசமாகும்.** வன்மைப் புரட்சியினால் உடனடியாக சோஷலிசம் கொண்டு வருவது **கம்யூனிஸமாகும்.**

வால்டேர், ரூஸோ, மான்டஸ்க்யூ முதலிய அரசியல் அறிஞர்களின் நூல்கள் எவ்வாறு பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கிய காரணமாக இருந்தனவோ, அதேமாதிரி கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லியோ டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்கே, டர்கனீவ் ஆகியோரின் புரட்சிக் கருத்துகள் ருஷ்யப் புரட்சிக்கு வித்திட்டன. கடைசியில் கூறப்பட்ட மூன்று நூலாசிரியர்கள் சார் ஆட்சியின் கீழ் குடியானவர்கள், தொழிலாளிகள் ஆகியோரின் அவல நிலையையும், உரிமைகள் இல்லாத தனிப்பட்ட மனிதனுடையவும், சமூகத்தினுடையவும் வாழ்வினையும் தங்களது நூல்களில் விவரித்திருந்தனர். அவர்களின் பிரசாரத்தினால் 1917ஆம் ஆண்டு புரட்சி நடப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே அடிக்கடி நிலப் பிரபுக்களுக்கும், சாரின் அதிகாரிகளுக்கும் எதிரே மக்கள் கலகம் செய்து வந்தனர். 1860ஆம் ஆண்டிற்குப் பின்னர் ருஷ்ய அறிஞர்கள் **நிகிலிஸம்** என்ற இயக்கத்தை உருவாக்கினர். பழைய அரசியல், சமுதாய, பொருளாதாரக் கருத்துகளை எதிர்த்து, சார் கொடுங்கோல் ஆட்சியைக் கண்டித்து தனி மனிதனது உரிமைகள் வளரவேண்டும் என்று நிகிலிஸ்டுகள் போராட்டம் நடத்தினர். மற்றோர் இயக்கம் பட்டம் பெற்ற மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. கிராமங்களில் உள்ள மக்களை நாடிச் சென்று சீர்திருத்தக் கருத்துகளை அவர்களிடையே பரப்பும் இயக்கத்திற்கு **நரோதின் இயக்கம்** **(Narod to the People)** என்று பெயர். அரசின் பிற்போக்குத் தன்மைகளும், நரோதின் இயக்கத்திற்கு எதிரான அரசின் அடக்குமுறைகளும், நிகிலிஸ இயக்கத்தின் தீவிரவாதிகளைச் சிந்திக்க வைத்தன. அந்தச் சிந்தனையின் விளைவாக நிகிலிஸத்தின் தீவிரவாதிகள் **மக்கள் உரிமை இயக்கத்தைத்** தோற்றுவித்தனர். இதன் உறுப்பினர் தங்களது இலட்சியத்தை அடைய வன்முறையில் ஈடுபடத் தயாராயிருந்தனர். அதன் விளைவாக விடுதலைச் சட்டம் இயற்றிய இரண்டாம் சார் அலெக்சாந்தர் 1881-ல் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு புரட்சிக் கட்சி சோஷல் டெமொகிராட்ஸ் **(Social Democrats)** ஆகும். இக்கட்சி கார்ல் மார்க்ஸ் கொள்கைகளை ஏற்று, அவற்றைச் செயல்படுத்த **வன்முறையைக் கையாளத் தயாராயிருந்தது.**

சோஷல் டெமொகிராட்டிக் கட்சி சாரின் எதேச்சாதிகாரத்தையும், நாட்டின் முதலாளித்துவத்தையும் ஒழிக்க வேண்டுமென்றிருந்தது. இக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. **பிளக்னோ**வின் தலைமையின் கீழிருந்த **மென்ஷவிக்குகள்** அமைதி வழியில் அரசியலமைப்பின் வழியிலே சென்று, சோஷலிச சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்றனர். லெனின் தலைமையின் கீழிருந்த **பால்ஷிவிக்குகள்** வன்முறையைப் பின்பற்றி, சோஷலிசம் விரைந்து செயல்பட வேண்டுமென்றனர். கார்ல் மார்க்ஸ் கூறின **பாட்டாளி மக்களின் வல்லாட்சி (Dictatorship of the Proletariat)** ருஷ்யாவில் ஏற்படுத்த வேண்டுமென்பதே லெனினின் குறிக்கோளாக இருந்தது. கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தான் எழுதிய **The State and the Revolution** என்ற நூலில் பாட்டாளிகளின் வல்லாட்சி என்பது முதலாளித்துவத்தை வீழ்த்தி, பொதுவுடைமையை ஏற்படுத்துவதற்கிடையில், ஏற்படுத்தப்படுகின்ற தற்காலிக அமைப்பேயாகும் என விளக்கினார். சிறுகச் சிறுக 'அரசு', 'வல்லாட்சி' ஆகியவைகள் மறைந்துவிடும். இறுதியில் வகுப்புவாதப் பிரிவினைகள் இல்லாத, அடிப்படை அரசு என்ற ஓர் அமைப்பே கூட இல்லாத நிலை உருவாகும். வகுப்புப் பிரிவுகள் இல்லாத சமுதாயத்தில், சட்டங்கள் இயற்றிக் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்தும் அரசு அமைப்பு தேவையற்றதாகிவிடும். அத்தகைய சமுதாய நிலை ஏற்படும்போது, 'திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்' என்பதே சமுதாயக் கோட்பாடாக மிளிரும் என லெனின் கூறினார்.

லெனின் தமது புரட்சிக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்யாமலிருக்க, சார் அரசாங்கத்தால் நாடு கடத்தப்பட்டார். உலகப் போர் நடக்கும்பொழுது அவர் சுவிட்ஜர்லாந்தில் இருந்தார். ருஷ்யாவில் குழப்பம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ருஷ்யாவின் எதிரியான ஜெர்மனி அவர் தமது நாடு செல்ல உதவியது. அதே சமயத்தில் லெனின் சகாவான **லியோன் டிராட்ஸ்கி** தாம் அடைக்கலம் புகுந்திருந்த அமெரிக்காவிலிருந்து ருஷ்யா வந்து சேர்ந்தார். இந்த இரண்டு புரட்சித் தலைவர்களும் ருஷ்யாவில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ததன் பயனாக 1917-ல் புரட்சி தோன்றியது.

**5. உடனடிக் காரணங்கள்:** முதல் உலகப் போரில் ருஷ்யாவின் தோல்விகள் உடனடிக் காரணங்களாகும். **வான்ஹின்டன்பர்க்** என்ற ஜெர்மானிய தளகர்த்தர் ருஷ்யப் படையை **டானன்பர்க்** என்னுமிடத்தில் முறியடித்தார். தங்களது தோல்விக்கு அரசாங்

கத்தின் திறமையின்மை என்றும், தங்களுக்கு நல்ல யுத்தத் தளவாடங்கள் கொடுக்கப்படவில்லையென்றும் ருஷ்ய வீரர்கள் புகார் செய்தனர். எனவே, அநேக ருஷ்ய வீரர்கள் படையை விட்டு விலகினர். அவசியமான பொருள்கள், முக்கியமாக, உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் உணவின்றி வாடினர். இம்மாதிரியான குழப்பநிலையில் லெனினும் டிராட்ஸ்கியும் புரட்சிக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்யவே, அரசாங்கத்திற்கு எதிர்ப்பு அதிகமாகிப் புரட்சி தொடங்கியது.

### (இ) புரட்சியின் போக்கு

ருஷ்யப் புரட்சிக்கு இரண்டு நிலைகள் உண்டு. **முதல் நிலை**, 1917, மார்ச்சு 3ஆம் நாள் தலைநகரமான பெட்ரோகிராடில் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். மார்ச்சு 11ஆம் நாள் சார் இரண்டாம் நிக்கோலஸ் **டூமா** என்ற ருஷ்ய பார்லிமென்டைக் கலைத்து, வேலை நிறுத்தம் செய்தவர்களை வேலைக்குப் போகும்படி கட்டளையிட்டார். அவர்கள் மன்னர் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்களுடன் 'படை வீரர்களும் சேர்ந்தனர். படையின் ஆதரவு கிடைத்ததும், பெட்ரோகாட் சோஷலிஸ்ட் தீவிரவாதிகள், தொழிலாளிகள், படைவீரர்கள், டூமா பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சோவியத் குழு அமைத்து, சார் அரசாங்கத்தை எதிர்த்தனர். மார்ச்சு 14ஆம் நாள் **லூவாவ் பிரபு**வின் தலைமையில் ஒரு தாற்காலிக அரசு அமைத்தனர். சார் நிக்கோலஸ் பதவியைத் துறந்தார். ஜூலை மாதத்தில் லூவாவ் பிரபு நீக்கப்பட்டு **கொரன்ஸ்கி** என்பவர் தலைவரானார். புரட்சி பரவவே 1917 நவம்பர் 6, 7 தினங்களில் லெனின் டிராட்ஸ்கி தலைமையில் உள்ள பால்ஷிவிக்குகள் கெரன்ஸ்கியை நீக்கிவிட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றினர். இந்த நவம்பர் புரட்சிதான் ருஷ்யப் புரட்சியின் இரண்டாவது நிலையாகும். எல்லாருக்கும் உணவு, போர் நிறுத்தம், குடியானவர்களுக்கு நிலம், பாட்டாளிகளின் வல்லாட்சி — இவைதான் லெனின் திட்டமாகும். மக்கள் இத்திட்டத்தை விரும்பியதால் அவருடைய அரசுக்கு அமோக ஆதரவு இருந்தது. புரட்சி ஸ்திரப்பட்டது.

தமது திட்டத்தை நிறைவேற்றவும், பொதுவுடைமைக் கொள்கைகளைச் செயல்படுத்தவும் சமாதானம் இன்றியமையாதது என லெனின் கண்டார். எனவே, அவர் ஜெர்மனியுடன் 1918-ல் **பிரஸ்டு லிட்டோ வாஸ்க்** என்னுமிடத்தில் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, உலகப் போரிலிருந்து ருஷ்யாவை விலக்கிக் கொண்டார். லெனின் ஆட்சிகாலத்தின் ஆரம்பத்தில் நாட்டில் குழப்பம் இருந்தது. படைவீரர்கள் தங்

களது தளகர்த்தர்களைச் சுட்டுக் கொன்றனர்; அவர்கள் படையை விட்டு நிலத்தில் தங்கள் பங்கைப் பெற கிராமங்களுக்குச் சென்றனர்; குடியானவர்கள் பிரபுக்களிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றினர்; தொழிலாளிகள் ஆலைகளைக் கைப்பற்றினர்; ஒரு வர்க்கத்தினர் மற்றொரு வர்க்கத்தினருடன் சண்டையிட்டனர்; **எமிக்ரே** பிரெஞ்சுப் புரட்சி காலத்தில் பிரான்சை விட்டு அயல் நாடுகளுக்குச் சென்றதுபோல, புரட்சி எதிர்ப்பாளர்கள் ருஷ்யாவை விட்டு அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். முதலாளிகள் ஒழிக்கப்பட்டமையாலும் தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்ததனாலும், தொழில்கள் நசித்தன. நிலங்களைப் பயிர் செய்த குடியானவர்கள் தங்களுடைய தானியங்களை விற்க மறுத்தனர். லெனின் கம்யூனிஸ்டு அரசாங்கத்தை அயல் நாடுகள் ஒப்புக் கொள்ள ஏற்றதுமின்றி படைகளை ருஷ்யாவிற்கு அனுப்பி, புரட்சியை ஒடுக்க முயன்றனர். அந்தப் படைகள் **வெண்மைப் படைகள்** என்றழைக்கப்பட்டன. உள் நாட்டுப் போரும் பஞ்சமும் தலை விரித்தாடின.

இந்த நெருக்கடியான சமயத்தில் லெனின் தாம் ஒப்பற்ற தலைவர் என்பதை உலகத்திற்கு நிரூபித்தார். முதலாவது, வெண் படையினரை ஒழிக்கும் வேலையை டிராட்ஸ்கியிடம் ஒப்படைத்தார். அவர் திறமை வாய்ந்த கம்யூனிஸ்ட் படையை உருவாக்கி, அதன் மூலம் அந்நியப் படைகளைச் சிதறடித்தார். அந்நியர்கள் ருஷ்யாவில் தலையிடுவது நின்றுவிட்டது. இரண்டாவது, நாட்டின் நலனைக் கருதி, தமது பொதுவுடைமைக் கொள்கைகளிலிருந்து சற்றே விலக்கிக்கொள்ள முன்வந்தார். அவர் வகுத்த **புதிய பொருளாதாரக் கொள்கையின்** (New Economic Policy) படி, குடியானவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களின் ஒரு பகுதியை விற்று லாபம் பெற அனுமதித்தார். கனரகத் தொழில்களுக்கு அந்நிய நாடுகளினின்றும் மூலதனம் பெற்றார். 1921-ல் அவர் இங்கிலாந்துடனும், 1922-ல் ஜெர்மனியுடனும் ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டார். 1924ஆம் ஆண்டில் பிரிட்டன் சோவியத் அரசாங்கத்தை ஏற்றுக் கொண்டது; பிரிட்டனின் வழியைப் பிற நாடுகளும் பின்பற்றின.

ஏழு வருடங்கள் (1917—1924) பணியாற்றிய லெனின் மாபெரும் சிந்தனையாளர்; கர்மவீரர். அவர் பொதுவுடைமைக் கொள்கைகளை ரஷ்யாவில் பரப்பி, கம்யூனிஸ்டு கட்சியை வலுப் படுத்தினார். அமைதியை நிறுவி, லஞ்ச ஊழல்களை ஒழித்தார்; பொருளாதார நிலைமையை உயர்த்தினார். இந்த 20ஆம்

நூற்றாண்டின் தலைசிறந்த செயல் வீரர் லெனினே ஆவார். அவர் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி, சோஷலிஸ்டு அரசை அமைத்தார். அதனால் ருஷ்ய மக்கள் அவருக்கு அன்பும் மரியாதையும் செலுத்தினர்; இறந்த பிறகும் ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் மாஸ்கோவிலுள்ள அவருடைய சமாதிக்குச் சென்று அழியாத அவர் உடலுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

**(ஈ) புரட்சியின் விளைவுகள்**

(1) ருஷ்யப் புரட்சி ஒரே கட்சி (கம்யூனிஸ்டு) வல்லாட்சியை அமைத்துள்ளது. பாசிஸ்டு, நாசி நாடுகளைப்போல், கம்யூனிஸ்டு நாடாகிய ருஷ்யாவில் அரசுதான் முக்கியம், தனி மனிதனல்ல.

(2) கம்யூனிஸ்டு கொள்கைகள் பரவாதிருக்குமாறு, இத்தாலியில் பாசிஸமும், ஜெர்மனியில் நாசிஸமும் தோன்றின.

(3) புரட்சி ருஷ்யாவின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தியது. லெனினுக்குப் பிறகு வந்த ஸ்டாலின் ஐந்து வருட திட்டங்கள்மூலம் ருஷ்யாவை வலிமை மிகுந்த நாடாக்கினார். இன்று ருஷ்யா பொருளாதாரம், விஞ்ஞானம் ஆகியவற்றில் தலைசிறந்து, விண்வெளி ஆராய்ச்சிகளில் முன்னேற்றம் அடைந்து ஒரு பெரிய வல்லரசு நாடாக விளங்குகிறது என்றால் அது ருஷ்யக் கம்யூனிஸ்ட் புரட்சியின் விளைவேயாகும்.

## அத்தியாயம் 14

# சர்வாதிகார ஆட்சிகளின் எழுச்சி - இத்தாலி, ஜெர்மனி, துருக்கி

**முன்னுரை**

இருபெரும் போர்களுக்கிடையே *(1918—1939)* ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சர்வாதிகாரிகள், ஏதேச்சாதிகாரிகள் தலையெடுத்தனர். **முசோலினி** இத்தாலியின் சர்வாதிகாரியானார். நாஸி சர்வாதிகாரி **ஹிட்லர்** ஜெர்மனியை ஆளவந்தார். **முஸ்தபா கமால் பாஷா** (Mustafa Kamal Pasha) துருக்கியில் முன்னேற்ற எண்ணங்கொண்ட வல்லாட்சியை அமைத்தார். **லெனினின்** தலைமையிலான கம்யூனிஸ்டுக் கட்சி ரஷ்யாவை ஆளத்தொடங்கியது. **காடில்லோ பிரிமோ டி ரேவேரா** (Caudillo Primo de Rivera) ஸ்பெயினின் அதிபரானார். **டாக்டர் சலாசார்** போர்ச்சுகல்லில் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டினார். இப்படி ஐரோப்பாவில் பல நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு சர்வாதிகார ஆட்சிகளை ஏற்றுக்கொண்டதற்குக் காரணங்கள் இருந்திருக்கவேண்டும். முதல் உலகப்போரைத் தொடர்ந்து மக்கள் அனுபவித்த துன்பங்களால் ஜனநாயகக் கோட்பாட்டில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை நாசமாகியதுதான் எதேச்சாதிகார ஆட்சிகள் எழுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தது. போருக்குப்பின் பல ஐரோப்பிய நாடுகள் ஆட்சிக்கு வந்த ஜனநாயக அரசாங்கங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் தடுமாறின. இத்தாலியும் ஜெர்மனியும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அதனால் வலிமை மிக்க சர்வாதிகார அரசாங்கங்களின் தேவையை மக்கள் உணர்ந்திருந்தனர். மேலும் ஜனநாயகத்தைப் பேணிக்காக்கக்கூடிய ஜனநாயக மரபுகள் இந்நாடுகளில் வளர்ச்சி அடையாமல் இருந்ததும் சர்வாதிகார ஆட்சிகள் எழுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. ஹிட்லர், முசோலினி, லெனின், கமால் பாஷா போன்ற சர்வாதிகாரிகள் திறமைசாலிகள் என்பதால் மக்கள் எதிர்பார்த்த தலைமையை அவர்களால் அளிக்க முடிந்தது என்பதும் கவனிக்கத் தக்கது.

## (அ) இத்தாலியில் சர்வாதிகார ஆட்சி — முசோலினியும் பாஸிசமும்

### (1) முசோலினியின் சர்வாதிகார ஆட்சி தோன்றியதற்கான சூழ்நிலைகள்

முதல் உலகப்போரின் முடிவில் இத்தாலியில் அவநம்பிக்கையும் அமைதியின்மையும் மக்களை அலைக்கழித்து வந்தன. கூடுதல் நிலப்பரப்புகளை அடையலாம் என்ற நப்பாசையில் போரின்போது இத்தாலி நேசநாடுகளுடன் இணைந்து போரிட்டது. ஆனால் போரின் முடிவில் **டிரன்டினோ** (Trentino), **இஸ்டிரியா** (Istria) போன்ற சில சிறு பகுதிகளே இத்தாலிக்குக் கிடைத்தன. பாரீஸ்-வெர்செயில்ஸ் சமாதான மாநாட்டில் இத்தாலிய அரசாங்கம் வெல்திறம் வெளிப்பட நடந்துகொள்ளவில்லை என இத்தாலிய மக்கள் அரசாங்கத்தைக் குறை கூறலாயினர். அரசியல் வெறுப்புடன் இத்தாலி முழுவதும் பொருளாதாரத் துன்பத்தில் துவண்டது. பண்டங்களின் விலை விஷம் போல் உயர்ந்துவிட்டதுடன் வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடும் அதிகரித்தது. சிலபொருள்கள் கிடைப்பதே அரிதாகிவிட்டது. ருஷ்ய கம்யூனிஸ்டுகளின் வழியைப் பின்பற்றி இத்தாலியில் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக் கொண்டனர். விவசாயிகள் நிலச்சொந்தக்காரர்களை விரட்டிவிட்டு நிலங்களை அபகரிக்கத் துணிந்தனர். நாட்டின் பல்வேறு தொழிற்சாலைப் பகுதிகளில் வேலை நிறுத்தம் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. இத்தாலியும் கம்யூனிஸ நாடாகிவிடுமோ என்ற அச்சம் தலை தூக்கியது. ஆனால் **நிட்டி** (Nitte), **கியோலிட்டி** (Giolitti) ஆகியோர் தலைமையிலான ஜனநாயக அரசாங்கம் சீர்கேடுற்ற நிலைமையைத் திருத்தியமைக்கும் சக்தி கொண்டதாக இல்லை. இத்தகைய குழப்பமான நிலையில்தான் முசோலினியும் அவரது பாஸிசக் கட்சியும் முன்னணிக்கு வரமுடிந்தது.

**போர்லி** (Forli) எனுமிடத்தில் வாழ்ந்த கருமார் ஒருவரின் மகனாகப் பிறந்தவர் பெனிட்டோ முசோலினி. அவரது தாயார் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். முசோலினி வளர்ந்து பத்திரிகையாளரானார். அப்போது அவர் சமதர்மக் கொள்கைகளைக் கொண்டிருந்தார். அதன் பின்னர் முதல் உலகப் போரில் பங்குகொண்டு காயமுற்றுத் திரும்பினார். அப் போர் முடிந்த பிறகு நாட்டில் வெறுப்பும் குழப்பமும் நிலவியதைக் கண்ட அவர், ஆர்வமுள்ள இளைஞர் பலரைக் கொண்ட குழாம் ஒன்றை ஏற்படுத்தினார். அவர்கள் அனைவரும் பாசிஸ்டு

**கள்** என அழைக்கப்பட்டனர். பண்டைய ரோமானியப் பேரரசில் தலைமை நீதிபதிகளுக்கு முன்னால் செல்பவர்கள் ஒற்றுமையையும் அதிகாரத்தையும் குறிக்கும் சின்னமாக **பாசியோ** (Fasces) அல்லது சிறுகம்பங்கள் கொண்ட கட்டை எடுத்துச் செல்வது வழக்கம். அத்தகைய சின்னத்தையே முசோலினியும் அவரது குழுவினரும் தங்களது கொடியாகக் கொண்டதால் பாசிஸ்டுகள் எனப் பெயர் பெற்றனர். மேலும் அவர்கள் சீருடையாகக் கருப்புச் சட்டையை அணிந்திருந்ததால் **கருஞ்சட்டைப் படையினர்** (Black Shirts) என்றும் வழங்கப் பட்டனர். கருஞ்சட்டை வீரர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளித்து அவர்களிடம் கட்டுப்பாட்டையும் வளர்த்தார் முசோலினி. தம்முடைய கட்டளைகளுக்குத் தயக்கமின்றி அடிபணிய வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தினார். **நம்பு, அடிபணி, போரிடு** என்பவையே பாசிஸ்டுகளின் தாரக மந்திரங்களாக இருந்தன. நாளுக்குநாள் பாசிஸ்ட் கட்சியின் அளவும் ஆற்றலும் பெருகியது. போதிய வலிமை பெற்றவுடன் 1922ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் முசோலினி தமது கருஞ்சட்டை வீரர்களுடன் ரோம் நகரத்தின் மீது பாய்ந்து **மூன்றாம் விக்டர் எம்மானுவல்** மன்னரை (King Victor Emmanuel III) வற்புறுத்தி இத்தாலியின் அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார். புகழ் வாய்ந்த இந்த **ரோம் படையெடுப்பின்** விளைவாக முசோலினியின் பாசிஸ சர்வாதிகார ஆட்சி இத்தாலியில் உதயமானது.

### (2) பாசிஸத்தின் நோக்கங்கள்

பாசிஸம் முப்பெரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அரசை உயர் தனி நிலைக்கு உயர்த்துவது, தனியார் சொத்துரிமையைப் பேணிக்காப்பது, வீறார்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது ஆகியவையே அந்நோக்கங்களாகும். குறிப்பாக, கம்யூனிச எதிர்ப்பியக்கமாகத் தொடங்கிய பாசிஸம், ஜனநாயகத்திற்கும் தாராளக் கொள்கைக்கும் (Liberalism) எதிரான இயக்கமாக உருவெடுத்தது. பாசிஸத்தின் எழுச்சியால் பாராளுமன்ற ஜனநாயகம் வீழ்த்தப்பட்டது. அரசியல் கட்சிகள் ஒடுக்கப்பட்டன. தனிக்கட்சி ஆட்சி, அதாவது பாசிஸ்ட் கட்சியாட்சி அமைக்கப்பட்டது. கம்யூனிசத்தைப் போலவே பாசிஸமும் சர்வாதிகார அரசை உருவாக்கியது. 'அனைத்தும் அரசிற்குள் அடக்கம்; அரசுக்கு எதிராக ஏதும் இருத்தலாகாது. அரசுக்குப் புறம்பாக ஏதும் கிடையாது' என்பதே பாசிஸத்தின் குறிக்கோளாக விளங்கியது. பண்டைக்கால ரோமானியப் பேரரசின் மாட்சிமைகளை மீட்பதே அதன் வெளிநாட்டுக் கொள்கையின் நோக்கமாகும். **மத்தியதரைக் கடல் ஏகாதிபத்தியம்** என்

பதே முசோலினியின் மூச்சாக இருந்தது. ஆப்பிரிக்காவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இத்தாலிய ஆதிக்கத்தை உரு வாக்கி மத்தியதரைக் கடலை இத்தாலிய ஏரியாகச் செய்ய வேண்டுமென்பது அவரது பேரவா. இங்ஙனம் எதேச்சாதிகாரப் போக்குடைய தேசிய உணர்வுமிக்க, போர்ப் பிரியமுள்ள, ஏகாதி பத்தியக் கட்சியாக விளங்கியது பாசிஸ்ட் கட்சி.

### (3) பாசிஸத்தின் சாதனைகள்

முதல் உலகப் போருக்குப்பின் இத்தாலியில் ஏற்பட்ட குழப் பமும் ஒழுங்கீனமும் நிறைந்த சூழ்நிலையிலிருந்து அந்நாட்டைக் காப்பாற்றியது பாசிஸம். குழப்பத்திற்கு மாறாக நாட்டில் ஒழுங்கமைதியை அது நிலைநாட்டாது தொழில்துறையை உயிர்த் தெழச் செய்தது. அதன் மூலம் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கியது. பொதுப்பணித் திட்டங்கள் பலவற்றை நிறை வேற்றியது; சதுப்பு நிலங்களைத் திருத்தி அமைத்தது; பல சமுதாய நலப் பணிகளையும் மேற்கொண்டது.

பன்னெடுங்காலமாகப் போப்பாண்டவருக்கும் இத்தாலிய மன்னருக்குமிடையே இருந்துவந்த தீராத சண்டையைத் தீர்த்து வைத்தது முசோலினியின் தலைசிறந்த வெற்றிகளுள் ஒன்றா கும். இத்தாலிய ஐக்கியத்தைத் தொடர்ந்து போப்பாண்டவர் **வத்திகனில் (Vatican)** அடைபட்ட சிறைக் கைதிபோல வாழ்ந்து வந்தார். இத்தாலிய அரச குடும்பத்துடனான அவரது உறவு நேசம் நிறைந்ததாக இல்லை. முசோலினியின் முயற்சியால் 1929-ல் ஏற்பட்ட **லாட்டரான் ஒப்பந்தத்தின்படி (Lateran Treaty)** செவாய் அரச குலத்தவரின்கீழ் ரோமைத் தலைநகரமாகக் கொண்ட இத்தாலிய அரசைப் போப்பாண்டவர் ஏற்றுக்கொண் டார். இதற்கேற்றாற்போல வத்திகன் நகரில் மட்டும் போப் பாண்டவர் இறைமை அதிகாரத்துடன் ஆட்சி செய்யலாம் என் பதை முசோலினி ஒப்புக்கொண்டார். இவ்வாறு முசோலினி, ரோமன் பிரச்சினைக்கு முடிவு காண்பதில் வெற்றி பெற்றார். லாட்டரன் ஒப்பந்தத்தின் பயனாக இத்தாலிய அரசுக்குத் திருச் சபையின் ஆதரவு கிடைக்குமாறு செய்தார். அதனால் இத்தா லிய அரசின் வலிமை மேலும் பெருகியது.

நிலப் பாகுபாடு அடிப்படையில் இயங்கிவந்த இத்தாலியை முசோலினி பொருளாதார அடிப்படையில் மாற்றியமைத்தார். உற்பத்தியைப் பெருக்கும்பொருட்டுத் தொழிலாளர்களையும் முதலாளிகளையும் ஒற்றுமைப்படுத்தினார். நிலப்பகுதி அடிப் படையில் பல தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்

பினர்களைக் கொண்ட பழைய பாராளுமன்றத்திற்குப் பதிலாக பாசிஸ்டு கட்சி பிரதிநிதிகளும், பல்வேறு நிறுவனங்களின் (Corporations) பிரதிநிதிகளும் நிறைந்த சபை ஒன்றை (Chamber of Faslios and Corporations) உருவாக்கினார். பாசிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளைத் தவிர, பல பொருளாதார அமைப்புகளிலிருந்து வந்த உறுப்பினர்கள் தொழிலாளர்களின் குழுமங்களிலிருந்தும் முதலாளிகளின் குழுமங்களிலிருந்தும் (Syndicates) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அச்சபையில் இடம் பெற்றனர். சபையின் உறுப்பினர்கள் அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அச்சபை ஆலோசனை வழங்கும் அவையாகவே விளங்கியது. அதிகாரமனைத்தும் டூஷ் (தலைவர்) (Duce) என்று மரியாதையுடன் அழைக்கப்பட்ட முசோலினியின் தலைமையிலான பாசிஸ்ட் அரசாங்கத்திடமே இருந்தது.

ஆனால் முசோலினியின் பாசிஸக் கட்சியின் சாதனைகளெல்லாம் அரசியல் சுதந்திரம், தனியார் உரிமை ஆகியவற்றின் கல்லறையின் மேல் கட்டப்பட்ட கோபுரமாகும். மக்கள் அரசுக்காகவே வாழ வேண்டிவந்தது. அரசின் நலன்தான் முக்கியம், தனிமனித நலன் அல்ல. பாசிஸ்ட் எதிர்ப்பாளர்கள் ஜாடி நிறைய விளக்கெண்ணையைக் குடிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டனர். இதனாலெல்லாம் பாசிஸ்டுகள் மக்களிடையே அச்சத்தை வளர்த்தனர். முசோலினியின் ஓவ்ரா (Ovra) எனும் இரகசியப் படையினர் பாசிஸ ஆட்சியின் எதிரிகளையெல்லாம் ஒடுக்கினர்.

ஆரம்ப காலத்தில் தனது சாதனைகளால் பாசிஸம் பலரைக் கவர்ந்தது. மக்களாட்சி மலர்ந்திருந்த நாடுகளான, பிரான்ஸ் இங்கிலாந்து ஆகியவையும் பாசிஸ இத்தாலியைப் பெரிதும் பாராட்டின. ஆனால் அது ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியபோது அதனைப் பல நாடுகளும் வெறுக்கமுற்பட்டன. 1935-ல் அபிஸீனியா மீது படையெடுத்துச் சென்ற முசோலினி 1936-ல் அந்நாட்டை இத்தாலியுடன் இணைத்துக் கொண்டார். சர்வதேச சங்கத்தின் எதிர்ப்பையும் அவர் பொருட்படுத்தவில்லை. அதன் பிறகு அவர் நாஜி ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு 1939-ல் **ரோம் - பெர்லின் அச்சை** (Rome-Berlin Axis) உருவாக்கினார். 1939-ல் அல்பேனியாவை அடிமை கொண்டார். இரண்டாவது உலகப்போரின் போது பிரான்ஸ் தோல்வியில் துவண்ட நேரத்தில் போரில் குதித்து அந்நாட்டின் படுதோல்விக்கு வழிவகுத்தார்.

ஆனால் பாசிஸ இத்தாலியின் அழிவு மிகவிரைவில் வந்தது. 1943-லிருந்து போரின் போக்கு நேசநாடுகளுக்குச் சாதகமாகத் திரும்பியது. விரைவிலேயே ஜெர்மானிய, இத்தாலியப் படைகள் ஆப்பிரிக்க மண்ணிலிருந்து துரத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து இத்தாலியும் நேசப்படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகியது. இறுதியில் இத்தாலி தோல்வியைத் தழுவியது. 1944-ல் முசோலினி அதிகாரத்தை இழந்தார். அதன் பிறகு அவர் இத்தாலிய மக்களாலேயே சுட்டுக்கொல்லப் பட்டார். முசோலினியின் மரணத்துடன் இத்தாலியில் பாசிஸமும் மறைந் தொழிந்தது.

இரண்டாவது உலகப் போரின் முடிவில் இத்தாலியில் பாராளுமன்ற ஆட்சி ஏற்பட்டது. பாசிஸ்ட் கட்சியினர் அநியாய மாகஇணைத்த அபிஸீனியா, அல்பேனியா போன்ற பகுதிகள் இத்தாலியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டன.

## (ஆ) ஜெர்மனியில் சர்வாதிகார ஆட்சி — ஹிட்லரும் நாஸிசமும்

### (1) ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி எழுவதற்கான சூழ்நிலை

முதல் உலகப் பெரும் போரை அடுத்து ஜெர்மனியை இழிவுபடுத்தும் வகையில் 1919-ல் ஏற்பட்ட வெர்சாயி உடன் படிக்கை வந்தது. அதற்கு எதிரான மறுப்பாகவே **தேசிய சோஷலிச** அல்லது **நாஸி புரட்சி** (National Socialist or Nazi) அந்நாட்டில் புயல் வீசிப் புறப்பட்டது. உள்நாட்டில் நாஸி சத்தின் வலிமை நாளுக்கு நாள் பெருகிவந்தது. வெளிநாடு களிலும் வெல்திற வெற்றிகளைப்பெற்ற அது இடர்தரும் தேசிய இயக்கமாக உருவெடுத்தது. ஜெர்மானிய இனத்தவரின் பெரு மையைப் போற்றியும் படைப் பெருக்க வெறியைப் புகழ்ந்து பேசியும், உலக நாடுகளுக்கு பேரச்சமூட்டும் இயக்கமாக வளர்ந்துவிட்டது. தேசிய உணர்வும், இனவெறியும், போர் ஆர்வமும் மிக்க நாஸி கட்சியினரே அத்தகைய இயக்கத்தை உரு வாக்கினர். அவர்களே இரண்டாவது உலகப்போர் எழவும் வழி வகுத்துவிட்டனர்.

முதல் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியில் தோன்றிய புரட்சியின் விளைவாக இரண்டாம் **கெய்சர் வில்லியம்** (Kaiser William) முடிதுறந்தார். அதை ஒட்டி ஜெர்மனியில் குடியர சாட்சி ஏற்பட்டது. பெர்லின் நகருக்கருகிலிருந்த வீமாரில் கூடிய அரசியல்வாதிகளும் ராஜதந்திரிகளும் ஜனநாயக அரசியலமைப்புச்

சட்டத்தை உருவாக்கினர். அந்த வீமார் அரசியல் அமைப்பு முறை பன்னிரெண்டாண்டுகள் நடைமுறையிலிருந்தபோதிலும் போருக்குப் பின்னால் ஜெர்மனியில் எழுந்த பிரம்மாண்டமான பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. வெர்சாயி உடன்படிக்கையின் மூலம் இழிவு தரும் நிபந்தனைகள் ஜெர்மனியின்மீது திணிக்கப் பட்டன. அத்தகைய அவமானமிழைக்கும் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட சோஷியல் டெமாக்ரடிக் கட்சியினை ஜெர்மானியர் வெறுக்கத் தொடங்கினர். வெர்சாயி உடன்படிக்கையில் நிர்ணயம் செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையை பிரான்சுக்கும் கொடுக்க முடியாமல் ஜெர்மனி திண்டாடியபோது, **பிரான்ஸின்** பிரதமர் **பாயின்கேரின்** (Poincare) ஆணைப்படி பிரெஞ்சுப் படையொன்று ஜெர்மனியின் தொழில் வளமிக்க ரூர் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. அதன்மூலமாக ஜெர்மனியின் தொழில் வளத்தை நசுக்கியது. ரூர் பள்ளத்தாக்கைப் பற்றி நின்ற பிரான்சுப் படையைப் பராமரிக்கும் சுமையினால் ஜெர்மனியின் பொருளாதாரம் மேலும் சீர்குலைந்தது. பெருகி வரும் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் ஜெர்மனியின் ஜனநாயக அரசாங்கம் மேலும் மேலும் காகித நாணயங்களை (Currency Notes) அச்சிட்டு வெளியிட்டது. இதன் விளைவாகப் பணவீக்கம் (Inflation) தோன்றிப் பொருளாதாரத்தைப் பாழ்படுத்தியது. ஜெர்மன் **மார்க்** (Mark) நாணயம் மதிப்பிழந்து செல்லாக்காசாகும் நிலைக்கு வந்துவிட்டது. மேலும் **டாக்டர் ஸ்ட்ரஸ்மன்** (Dr. Stressmann) தலைமையிலான ஜெர்மன் குடியரசு பிரான்சுடன் 1925-ல் லொகார்னோ உடன்படிக்கைச் செய்துகொண்டு, அதன்படி வெர்செயில் உடன்படிக்கை, வகுத்திருந்த பிரான்ஸின் மேற்கு எல்லையை ஏற்றுக்கொண்டதுடன் அந்த எல்லையை மாற்றியமைக்கப் படையைப் பயன்படுத்துவதில்லை என்றும் உறுதி அளித்தது. அதனால் ஜெர்மனியின் நிலை மேலும் தாழ்ந்தது.

1926-ல் சர்வதேச சங்கத்தில் ஜெர்மனி உறுப்பு நாடாகச் சேர்ந்தது. அதன்பின்னர் ஜெர்மனியில் எல்லாத் துறைகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. எனினும் 1929-ல் ஏற்பட்ட 'பெருமந்தம்' (Great Depression) ஜெர்மனியின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துவிட்டது. மக்களின் வெறுப்பும் துன்பமும் அதிகரித்தன. அதன் விளைவாகக் கம்யூனிசக் கருத்துகள் பரவத் தொடங்கின. இத்தகைய துன்பந்தரும் பொருளாதார அவல நிலையில் மக்கள் செய்வதறியாது தவித்தனர். கட்டாயப் படைக்குறைப்பிற்கு ஜெர்மனி ஆளாக்கப்பட்ட அதே நேரத்தில் வெர்சாயி ஏற்பாட்டின்மூலம் உருவாகிய புதிய நாடுக்ளான

**செக்கோஸ்லோவாக்கியாவும்** (Czechoslovakia) **போலந்தும்** (Poland) பெரும்படைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டதைக் கண்டு ஜெர்மானியர் மனம் புழுங்கினர். ஜெர்மனியின் இக்கட்டான இக்கட்டத்தில்தான் அடால்ப் ஹிட்லர் முன்னணிக்கு வந்து, நாஸி அல்லது தேசிய சோஷலிஸ்ட் கட்சியை உருவாக்கினார்.

ஆஸ்திரியாவில் சிறு நகரமாக விளங்கிய பிரானாவில் (Braunau) 1889-ல் ஹிட்லர் ஒரு சாதாரணச் சுங்க அதிகாரியின் மகனாகப் பிறந்தார். முதலில் ஓவியராகவும், பின்னர் கட்டடம் கட்டுபவராகவும், அதன் பின்னர் போர் வீரராகவும் ஹிட்லர் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வந்தார். முதல் உலகப் போரில் அவர் வீரத்துடன் போர் புரிந்து, புகழ்பெற்றதுடன் **இரும்புப் பதக்கத்தையும்** (Iron Cross) தட்டிக் கொண்டார். போருக்குப் பின் ஜெர்மனுக்கு நேர்ந்த இழி நிலையையும், நாட்டில் தோன்றிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பணவீக்கத்தையும் சமாளிக்க முடியாமல் விமார் குடியரசு தடுமாறியதையும் கண்ட ஹிட்லர் தேசிய சோஷலிஸ்ட் அல்லது நாஸி கட்சியைத் தோற்றுவித்தார். **எனது போராட்டம்** (Mein Kampf) என்ற அவரது நூலில் தாம் உருவாக்கிய நாஸி கட்சியின் திட்டத்தை அவர் விவரித்தார். ஜெர்மானிய இனத்தவர் உயர்ந்தவர் என்ற அசையாத நம்பிக்கை அவரிடம் குடிகொண்டிருந்தது. ஜெர்மனி ஐரோப்பாவிலே முதன்மையான சக்தியாக விளங்க வேண்டுமென்று ஹிட்லர் விரும்பினார். அவர் யூதர்களையும் கம்யூனிஸ்டுகளையும் வெறுத்து வந்தார். அதனால் அவரது கட்சியும் யூத இன எதிர்ப்புக்கட்சியாகவும் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்கட்சியாகவும் விளங்கியது. ஜெர்மனியை இழிவுபடுத்திய வெர்சாயி உடன்படிக்கையைக் கிழித்தெறிய விரும்பிய ஹிட்லர் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒரு கட்சி ஆட்சியிலும் சர்வாதிகாரத்திலும் அவர் நம்பிக்கை வைத்திருந்தார். **ஒரு மக்கள், ஓர் அரசு, ஒரே தலைவர்** (Ein Volk, Ein State, Ein Fuehrer) என முழங்கினார். தமது கொடியில் **ஸ்வஸ்திகா** (Swasthika) சின்னத்தைப் பொறித்தார். அவரது தொண்டர்கள் **கருஞ் சிவப்பு நிறச் சட்டையைச்** (Brown Shirts) சீருடையாக அணிந்திருந்தனர். சுருங்கச் சொன்னால், தீவிர தேசிய உணர்வு, போர் வெறி, யூத இனவெறுப்பு, கம்யூனிச எதிர்ப்பு ஆகியவற்றின் மொத்த உருவமே நாஸிசமாகும்.

வெர்சாய் ஏற்பாட்டினால் அவமானமுற்று, போருக்குப் பின் வந்த ஜெர்மன் ஜனநாயக ஆட்சியில் வெறுப்பு கொண்

டிருந்த ஜெர்மானியர் ஹிட்லரின் திட்டத்தை வரவேற்றனர். மேலும் ஹிட்லரின் துணைவரும், பிற்காலத்தில் நாஸி ஜெர்மனியில் பிரச்சார அமைச்சராகத் திகழ்ந்தவருமான **கோயபல்ஸ்** (Goebbels) தமது பிரச்சார பலத்தால் நாஸி திட்டத்தை நாட்டு மக்கள் ஏற்குமாறு செய்தார். 1933ஆம் ஆண்டு ஜனவரியில் ஜெர்மன் சட்டமன்றத்தில் (Reichstag) தனிப்பெருங் கட்சியாக விளங்கியது. ஹிட்லர் சான்சலர் பதவி ஏற்றார். 1934-ல் ஜெர்மன் குடியரசுத் தலைவராயிருந்த **ஹிண்டன்பர்க்** (Hindenbeg) இறந்ததும் ஹிட்லர் குடியரசுத் தலைவராகவும் சான்சலராகவும் (தலைமை அமைச்சர்) விளங்கலானார். அதன் பின்னர் அவர் '**நாட்டின் தலைவர்**' (Dee Fuehrer) எனத் தம்மை அழைத்துக் கொள்ளத் தொடங்கினார். அவரது நாஸி கட்சியும் ஜெர்மனியில் ஆளுங் கட்சியாகியது. இவ்வாறாக, வெர்சாயி அமைதித் திட்டம், போருக்குப்பின் எழுந்த பிரச்சினைகளை ஜனநாயக அரசால் சமாளிக்க முடியாத நிலை, யூதர்கள் மீதான வெறுப்பு, ஹிட்லரின் திறமை ஆகிய அனைத்தும் நாஸி சர்வாதிகார ஆட்சி அமையக் காரணங்களாக இருந்தன.

### (2) நாஸி எதேச்சாதிகார ஆட்சியின் சாதனைகள்

லெனினும் முசோலினியும் அமைத்ததைப் போல ஹிட்லரும் ஒரு வலிமை மிக்க சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். தமது பகைவர்களை யெல்லாம் **ஹிம்லரின்** (Himmler) தலைமையின் கீழிருந்த **கெஸ்டபோ** (Gestapo) எனும் இரகசியக் காவற் படையின் துணையுடன் ஹிட்லர் அழித்தார். சிந்தனைச் சுதந்திரத்தையும் பேச்சுரிமையையும் ஒடுக்கினார். **காப்டன் ரோஹெம்** (Captain Roehm) என்பவரும் வேறு பலரும் தமக்கு எதிராகச் சதி செய்தபோது 1934ஆம் ஆண்டு 30ஆம் தேதியன்று அவர்களைச் சுட்டுக் கொன்று **இரத்தக் குளியல்** (Blood Bath) நடத்தினார். நாஸி கட்சியை எதிர்த்தவரெல்லாம் ஒன்று திரட்டப்பட்ட **பாசறைகளுக்கு** (Concentration Camps) அனுப்பப் பெற்றுக் கொடுமையாகப் பழிவாங்கப்பட்டனர். நாட்டுமக்களின் நலனை வளர்ப்பதே ஜனநாயகத்தின் குறிக்கோளாக இருந்தது என்றால் ஜெர்மனியின் பொருள் சார்ந்த சக்தியை உச்சநிலைக்குக் கொண்டு செல்வதே நாஸி எதேச்சாதிகாரத்தின் நோக்கமாக விருந்தது. ஹிட்லரின் தேசிய சோஷலிசத்தை விளக்கவந்த டாக்டர் **கூச்** (Dr. Gooch), அது தாராளத் தன்மையில்லாத தேசிய சர்வதேசப் பண்பற்ற சமதர்மம்; ஜனநாயகப் பண்பில்லாத தேசீய சமதர்மம்' எனக் கூறியுள்ளார்.

மேலே குறிப்பிட்ட பல குறைபாடுகள் இருந்தபோதிலும் ஜெர்மனியில் பொருள் சார்ந்த வளங்களைப் பெருக்குவதில் நாஸி எதேச்சாதிகாரம் வெற்றி பெற்றது. டாக்டர் **சாச்சட் (Dr. Schacht)** எனும் பொருளாதார மேதையின் துணையுடன் ஹிட்லர், ஜெர்மனியின் நிதிநிலையைச் சீர்படுத்தினார். மேலும் உணவுப் பொருள்கள், மூலவளங்கள், உற்பத்திப்பொருள்கள் ஆகியவற்றில் ஜெர்மனியைத் தன்னிறைவுகொண்ட நாடாக்கினார். வேளாண்மையில் அறிவியலைப் புகுத்தி அமோக வெற்றி பெற்றார். ஜெர்மானிய அறிவியல் வித்தகர்கள் செயற்கைப் பொருள்களை உற்பத்தி செய்யலாயினர். படைப் பெருக்கத் திட்டத்தால் வேலை வாய்ப்புகள் பல்கிப் பெருகின.

பெண்களைப் பொறுத்தவரை, நாஸிக் கட்சியினர் பிள்ளை பெறுதல், வீட்டைக் காத்தல், கோவிலுக்குச் செல்லல் என்ற அளவிலேதான் எண்ணினர். அதாவது பெண்கள் பல பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டுமென்றும், அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும், நல்ல கிறிஸ்தவர்களாக விளங்க வேண்டுமென்றும் ஹிட்லர் விரும்பினார். ஜெர்மனியின் பாதுகாப்புப் படையை வலுவுள்ளதாகச் செய்ய மக்கள் பெருகுவதை அவர் பெரிதும் வரவேற்றார்.

அவரது வெளிநாட்டுக் கொள்கையில்தான் பிரிட்டனும் பிரான்சும் அவரை எதிர்த்தன. முதலில் அவர் வெர்சாயி அமைதி ஏற்பாட்டை உடைத்தெறிந்தார். ஜெர்மனியில் கட்டாய இராணுவ சேவையைப் புகுத்தியதுடன், படைவீரர்களுக்கு இரகசியமாக நவீனப்படைக் கருவிகளைத் தந்து, படை பலத்தைப் பெருக்கினார். படைகளே இருத்தலாகாது என்றிருந்த ரைன் லாந்தில் மீண்டும் 1936-ல் படைகளைக் கொண்டு நிறுத்தினார். லொகார்னோ ஒப்பந்தத்தைக் கண்டித்து ஒதுக்கினார். ஆஸ்திரியா ஒரு ஜெர்மன் நாடு எனக் கூறி 1938-ல் அதனை இணைத்துக் கொண்டார். அதே ஆண்டில் ஜெர்மானியர் பெரும்பான்மையாக வாழ்ந்துவந்த **சுடேட்டன்லாந்து** மீதும் **(Sudeten Land)** செக்கோஸ்லவாக்கியாவின் ஒரு பகுதி மீதும் உரிமை கொண்டாடினார். இதைக் கண்டு அஞ்சிய செக்கோஸ்லவாக்கியா குடியரசின் அதிபரான **டாக்டர் பென்ஸ் (Dr. Benes)** என்பார் பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் உதவியை நாடினார். ஆனால் அந்நாடுகள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தன. 1938-ல் **மியூனிச்சில் (Munich)** கூடிய மாநாட்டில் செக்கோஸ்லவாக்கியா துண்டாடப்பட்டு சுடேட்டன்லாந்து ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டது. இறுதியாக,

1939-ல் ஹிட்லரின் கவனம் போலந்தின் பக்கம் திரும்பியது. கிழக்கு பிரஷ்யாவை ஜெர்மனியுடன் தொடர்புகொள்ளச் செய்வதற்காக **டான்சிக்கையும்** (Danzig), போலந்து **இடை நிலத்தையும்** (Polish Corridor) திருப்பித் தந்துவிடுமாறு வற்புறுத்தத் தொடங்கினார்.

ஹிட்லரின் மேலே குறிப்பிட்ட வலுவந்தச் செய்கையால் (aggressive) பிரிட்டன், பிரான்ஸ் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஹிட்லர்மீது போர் அறிவிக்கும் அவசியம் ஏற்பட்டது. இரண்டாவது உலகப் போரிலும் ஜெர்மனிக்கே ஆரம்ப காலத்தில் வெற்றி கிடைத்தது. ஆனால் இறுதியில் ஜெர்மனி அழிக்கப்பட்டது. ஐரோப்பாவையே கதிகலங்க வைத்த ஹிட்லர் தலைநகரான பெர்லினில் காலமானார். அவருடன் நாஸிசமும் முடிவுக்கு வந்தது.

### (3) கம்யூனிசம், பாசிஸம், நாஸிசம் — ஓர் ஒப்புமை

பொதுவுடைமைக் கொள்கை எனப்படும் கம்யூனிசம், பாசிஸம், நாஸிசம் ஆகியவற்றிற்கிடையே சில நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுவதைப்போல தீவிர வேற்றுமைகளும் மண்டிக் கிடக்கின்றன. இம்மூன்றிலும் எதேச்சாதிகார அரசுகளே வலியுறுத்தப்படுகின்றன. தனிமனித உரிமை தடுமாறி நிற்கின்றது. இந்த மூன்று வகையான அரசுகளிலும் சட்டமன்றத்திற்குச் சிறப்பில்லை. நிர்வாகத்துறையே எதேச்சாதிகாரம் கொண்டு இலங்குகிறது. பேச்சுரிமைக்கோ எழுத்துரிமைக்கோ அங்கே இடமில்லை. ஒரு கட்சி வாழும் உரிமை கொண்டது. கம்யூனிச, பாசிஸ, நாஸிச நாடுகளில் அரசின் **கருத்துப் பாங்கினை** (Ideology) இளைஞர் மனத்தில் பதியுமாறு செய்வதற்கேற்றவகையில் கல்வி முறை அமைக்கப்பட்டிருக்கும்.

கம்யூனிசம், பாசிஸம், நாஸிசம் ஆகியவைகளுக்கிடையே தீவிர வேற்றுமைகளைக் காணமுடிகின்றது. முதலாளி, தொழிலாளி வர்க்கங்களுக்கிடையேயான வேற்றுமைகளைப் பாதுகாக்கவே இத்தாலியில் பாசிஸ ஏகாதிபத்தியமும் ஜெர்மனியில் நாஸி சர்வாதிகாரமும் எழுந்தன. ஆனால் அத்தகைய வர்க்க வேற்றுமைகளை வேரறுக்கவே ரஷ்யாவில் கம்யூனிசம் உதயமானது. பாசிஸ இத்தாலியிலும் நாஸி ஜெர்மனியிலும் தொழில்களெல்லாம் தனிப்பட்ட முதலாளிகளின் கையில் இருந்தன. அவைகளின்மீது அரசாங்கத்தின் கட்டுப்பாடு இருந்தபோதிலும் அவை தனியுடைமைகளாகவே இருந்தன. ஆனால் கம்யூனிச ரஷ்யாவில் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் அரசின் உடைமை

யாளர்துடன், அவை அரசாங்கத்தின் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. அழிந்துவரும் ஆபத்திலிருந்த பழம்பெரும் அமைப்புகளையெல்லாம் பேணிக்காப்பது பாசிஸத்தின், நாஸிசத்தின் நோக்கமாக இருந்தது. ஆனால் கம்யூனிசமோ புத்தம் புதிய பண்புக் கூறுகளை நிலைநாட்ட முன்வந்துள்ளது.

## (இ) துருக்கியில் சர்வாதிகார ஆட்சி முஸ்தபா கமால் பாஷாவின் தலைமையில் துருக்கியின் வளர்ச்சி

### 1. கமால் பாஷாவின் சர்வாதிகார ஆட்சி தோன்றுவதற்கான சூழ்நிலைகள்

முதல் உலகப் போருக்கு முன்னால் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பெரும் பரப்பு கொண்ட பேரரசாக விளங்கியது **துருக்கி (Turkey)**. கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகரமாகக் கொண்டிருந்த இத்துருக்கியப் பேரரசில் அரேபியா, சிரியா, பாலஸ்தீனம், ஈராக், ஆசியா மைனர் (Asia Minor) ஆகியவையும், ஐரோப்பாவில் பால்கன் தீபகற்பத்தில் (Balkans) ஒரு பகுதியும் இணைந்திருந்தன. இப்பரந்த பேரரசில் துருக்கியரும் அரேபியரும் ஐரோப்பிய கிறிஸ்தவரும் வாழ்ந்து வந்தனர். பல்வேறு இன மக்கள் வாழ்ந்த துருக்கியப் பேரரசை கான்ஸ்டான்டிநோபிளின் சுல்தான் ஆண்டு வந்தார். அவர் எதேச்சாதிகாரியாக இருந்த போதிலும் ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கியில் தலையிடவும் ஆதிக்கம் செலுத்தவும் இடங்கொடுத்து விட்டார். இதற்கிடையில் சுல்தானின் பேரரசில் வாழ்ந்த **இளந்துருக்கியர்கள் (Young Turks)** சட்டவரம்பிற்குட்பட்ட ஆட்சி வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தனர். தாராளத் தன்மைகொண்ட சீர்திருத்தங்கள் வேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தனர். ஆனால் துருக்கி சுல்தான் தமது அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார்.

1914-ல் முதல் உலகப் போர் வெடித்தபோது துருக்கி ஜெர்மனியுடனும் ஆஸ்திரியாவுடனும் சேர்ந்து கொண்டது. 1915-ல் **டார்டனல்ஸைக் (Dardanelles)** கைப்பற்ற பிரிட்டன் பெரும் கடற்படை ஒன்றை அனுப்பியது. ஆனால் **முஸ்தபா கமால் பாஷா** எனும் இளம் துருக்கிய படை அதிகாரி தமது சாகசத்தால் பிரிட்டிஷ் படைவீரர்கள் பால்கன் தீபகற்பத்தில் இறங்க முடியாதவாறு தடுத்துவிட்டார். அப்போதிருந்து கமால் பாஷாவின் புகழ் துருக்கி மக்களிடையே வளரத் தொடங்கியது. உலகப்போரில் நேச நாடுகள் வெற்றிபெற்றவுடன் 1920-ல் **செவ்ர்ஸ் உடன்படிக்கையைத் (Treaty of Sevres)** துருக்கி மீது

திணித்தன. இவ்வுடன்படிக்கையின் விளைவாகத் துருக்கி சுல்தான் பெரும் பகுதிகளை இழக்க நேரிட்டது. துருக்கிக்குச் சொந்தமான டார்டனல்ஸ், பாஸ்பரஸ் நீர்சந்திப்புகளும், கான்ஸ்டாண்டி நோபிளும் சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஆசியா மைனரில் இருந்த **ஸ்மர்னா (Smyrna)** கிரீஸுக்கு அளிக்கப்பட்டது. சுல்தானின் ஆசியப்பகுதிகளான சிரியா, பாலஸ்தீனம், ஈராக் ஆகியவை பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் பாதுகாப்பின் (Mandate) கீழ் வந்தன. சவூதி அரேபியா சுதந்திர நாடாகியது.

செவ்ர்ஸ் உடன்படிக்கையின் இழிவு தரும் நிபந்தனைகளை, கமால் பாஷாவின் தலைமையிலான துருக்கிய தேசியவாதிகள் ஏற்க மறுத்தனர். உடன்படிக்கையின் நிபந்தனையை நிறை வேற்றும் வகையில் ஆசியா மைனரிலுள்ள ஸ்மர்னாவைக் கைப் பற்ற கிரேக்கப் படைக்கு நேசநாடுகள் அனுமதி வழங்கின. கமால் பாஷா செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. சுல்தானால் படைத் தலைவராக நியமிக்கப்பட்ட கமால் பாஷா ஆசியா மைனருக்கு அணிவகுத்துச் சென்றார். கிரேக்கப் படை களை முறியடித்து, அவர்களை ஆசியா மைனரிலிருந்து துரத்தி யடித்தார். அதை அடுத்து **அங்கோரா**வில் (Angora) தனி அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டார். கான்ஸ்டாண்டி நோபிளிலிருந்த துருக்கிய சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்க மறுத்தார். இவ்வாறு ஆசியா மைனரில் புரட்சி அரசாங்கத்தை அமைத்த கமால் பாஷா, அன்னிய ஆதிக்கத்திலிருந்து துருக்கியை விடுவிக்க வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டிருந்தார். பழைய துருக்கிய மண்ணில் கலப்பற்ற துருக்கிய அரசை அமைக்க வேண்டுமென்றும் உள்நாட்டில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்றும் கமால் பாஷா விரும்பினார். துருக்கியரில் பெரும்பாலானோர் அவரை ஆதரித்தனர். இந்நிலையில் சுல்தான் முடிதுறந்ததால் துருக்கியில் முடியாட்சி மறைந்தது. கமால் பாஷாவின் தலைமையில் அங்கோராவில் துருக்கிய குடி யரசு உதயமானது. கமால் பாஷா சர்வாதிகாரியானார். அங்கோராவில் இருந்த தேசிய சபை அவர் எடுத்த முடிவுகளை ஆமோதிக்கும் அவையாகவே இருந்தது. இவ்வாறு கமால் பாஷாவின் எதேச்சாதிகார ஆட்சி துருக்கியில் அமைக்கப்பட்டது.

## 2. கமால் பாஷாவின் சாதனைகள்

முதலாவதாக, செவ்ர்ஸ் உடன்படிக்கையை மாற்றியமைக் கும்படி நேசநாடுகளை வற்புறுத்தி அதில் வெற்றியும் பெற்றார் கமால் பாஷா. **லாசேன்** (Lausanne) என்னுமிடத்தில் 1923-ல்

புதிய உடன்படிக்கை செய்து கொண்டார். அப்புதிய உடன் படிக்கையின் விளைவாக சிரியா, பாலஸ்தீனம், ஈராக், சவூதி அரேபியா ஆகிய பகுதிகளைத் துருக்கி இழந்தபோதிலும் கான்ஸ் டான்டிநோபிள் நகரமும், அதைச் சுற்றியுள்ள சிறு பகுதியை யும் மீண்டும் துருக்கியின் வசம் வந்தன.

இரண்டாவதாக, துருக்கியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் குறிப்பாக ஆசியா மைனரில் வாழ்ந்த கிரேக்கர்களை வெளி யேற்றிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக கிரேக்கத் தீவுகளில் வாழ்ந்து வந்த துருக்கியரைத் தம் நாட்டிற்கு அழைத்துக் கொண் டார் கமால் பாஷா. இத்தகைய மக்கள் பரிவர்த்தனை **(Exchange)** யின் விளைவாக புதிய துருக்கி ஒரே இன மக்களைக் கொண்டு ஒருங்கிணைந்த நாடாகியது. சிறுபான்மையினர் பிரச்சினை இன்றி அமைதியுடன் வாழும் நாடாகியது.

மூன்றாவதாக, துருக்கி வாழ் மேலை நாட்டவர் நிதி, நீதி ஆகிய துறைகளில் அனுபவித்துவந்த சிறப்புச் சலுகைகளை கமால் பாஷா ஒழித்தார்.

நான்காவதாக, அவர் பல சீர்திருத்தங்களைப் புகுத்தியதன் மூலமாகத் துருக்கியைப் புதுப்பொலிவு பெற்ற நவீன துருக்கியாக மாற்றினார். கலிபாவின் ஆதிக்கத்தை நீக்கினார். பெண்கள் பர்தா அணிவதைத் தடைசெய்தார். பள்ளிகளைத் திருத்தி அமைத்து, அவை சமயம் சாராக் கல்வியை அளிக்குமாறு செய் தார். திருக்குரானைத் துருக்கியில் மொழி பெயர்த்து எழுது மாறு செய்தார். துருக்கியக் குடியரசில் இஸ்லாம் அரசாங்கச் சமயமாக இருக்கவில்லை. துருக்கியர் பழங்காலத்து **பெஸ் (Fez)** எனும் குல்லாய்களை அணிவதற்குப் பதிலாக ஐரோப்பியத் தொப்பிகளை அணியுமாறு கமால் பாஷா கட்டாயப்படுத்தினார். பலதார மணத்திற்குத் **(Polygamy)** தடைவிதித்தார். மேலை நாட்டு லத்தீன் எழுத்துகளைப் புகுத்தியதுடன், மேற்கத்திய சட்டத் தொகுதிகளைத் தமது குடியரசில் பயன்படுத்தத் தொடங்கினார்.

இங்ஙனம் மேற்கத்திய வல்லரசுகள் மதித்துப் போற்று கின்ற நல்லரசை, அவை அச்சங்கொள்ளத்தக்க வகையில், புதிய துருக்கியை உருவாக்கிய பெருமை கமால் பாஷாவையே சாரும். உலகில் முன்னேற்ற நாடுகளின் வரிசையில் ஒருசேர வைத்து எண்ணக்கூடிய புதிய துருக்கியைப் படைத்துச் சென்ற கமால் பாஷாவை **அட்டாடர்க் (Ataturk)** அல்லது 'துருக்கியரின் தந்தை' என அன்புடன் அழைக்கலாயினர்.

அத்தியாயம் 15

# இரண்டாம் உலகப் போர் (1939—1945)

## (அ) போருக்கான காரணங்கள்

**அடிப்படைக் காரணங்கள்: 1. உலகப் பொருளாதார மந்தத்தினால் விளைந்த கேடுகள்**

முதல் உலகப் போருக்கான காரணங்களைப் போலவே இரண்டாம் உலகப் போரின் அடிப்படைக் காரணமும் பொருளாதாரப் பிரச்சினையாகவே அமைந்துவிட்டது. 1929-32ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தம் என்ற பொருளாதாரப் பிரச்சினை உலக நாடுகள் அனைத்தையும் பாதித்தது. அதிலும் சிறப்பாக முதல் உலகப் போரில் தோல்வியுற்றிருந்த ஜெர்மனியை மிகவும் அதிகமாகப் பாதித்தது. ஐரோப்பிய நாடுகளுக்குப் பெருந் தொகைகளைக் கடனாக வழங்கிவந்த செல்வம் கொழிக்கும் அமெரிக்க நாட்டில்தான் முதன்முதலில் பொருளாதார மந்தம் தொடங்கியது. 1929-ல் பண முதலீடு உச்சநிலையை அடைந்தது. அதன் விளைவாகப் பங்குகளின் விலை மிக அதிகமாக உயர்ந்தது. பங்குகளின் விலைகள் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே செல்வதைக் கண்ட பங்குதாரர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. பங்கு வர்த்தகச் சந்தையின் மீது இருந்த நம்பிக்கை தகர்ந்தது. பங்கு வியாபாரம் சரியத் தொடங்கியது. ஒவ்வொருவரும் தங்களிடமிருந்த பங்குகளைப் பணமாக மாற்றிக்கொள்ள வங்கிகளை நாடினர். பெருந்திரளான மக்கள் பணம் நாடி வங்கிகளைச் சூழ்ந்துகொண்டதால் வங்கிகள் தடுமாறின. அதன் விளைவாக அமெரிக்க வங்கிகள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தாங்கள் கொடுத்திருந்த கடன்களை உடனடியாகத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தின. இதன் விளைவாகப் பல ஐரோப்பிய நாடுகளின் வங்கிகள் மூடப்பட்டன. அமெரிக்காவிலும் வங்கிகள் மூடப்பட்டன. கடன் தொகை தேவையான ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா தயங்காமல் கொடுத்து வந்தது. அத்தகைய கடன் வழங்குதல் திடீரென நிறுத்தப்பட்டது. அமெரிக்க மூலதனத்தை நம்பியிருந்த தொழிலகங்கள் மூடப்பட்டன. அமெரிக்கக் கடனுதவியால்

பொருளாதார வளர்ச்சியடைய முயன்றுகொண்டிருந்த ஜெர்மனியை அந்நிலை மிகவும் கடுமையாகப் பாதித்தது. முதல் உலகப் போரின் முடிவில் வெற்றி பெற்ற நாடுகள் ஜெர்மனியின் மீது சுமத்தியிருந்த போர் இழப்பீட்டினை ஜெர்மனி கொடுக்க மறுக்கவேண்டிய இயலாத நிலை 1931ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இத்தகைய பொருளாதார வளர்ச்சி தடைப்பட்ட நெருக்கடி நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஹிட்லர், மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றார். இரண்டாம் உலகப்போரின் காரணகர்த்தாவும் அவரே ஆவார்.

1930ஆம் ஆண்டுவாக்கில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் அமெரிக்காவை மிகமிக அதிகமாகப் பாதித்தது. பொருள்களின் விலைகள் மிகவும் சரிந்து விட்டன. பொருள்களின் விலைச் சரிவினைத் தடுத்து நிறுத்தும் வகையில் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருந்த தானியங்களைக் கடலில் கொட்டி அழித்தனர். அதே தானியங்கள் கிடைக்காததனால் ஐரோப்பிய மக்கள் பட்டினியால் வாடும் நிலை இருந்தது. இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீதான இறக்குமதி வரியைப் பன் மடங்கு உயர்த்தி, பொருள்கள் இறக்குமதியாவதைத் தடை செய்ய முயன்றது. இங்கிலாந்தும் அமெரிக்காவைப் பின்பற்றி, சுங்கவரி என்ற வலிவுள்ள தடைச்சுவரை எழுப்பி, அயல்நாட்டுப் பொருள்கள் இங்கிலாந்தில் நுழையா வண்ணம் தடை செய்ய முயன்றது. தங்கத்தினை அடிப்படையாகக் கொண்ட நிதி முறையையும், தடையற்ற வர்த்தக உரிமையையும் தடைசெய்தது. இத்தகு செயல்கள் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகத்தினையும் பாதித்தது. ஒவ்வொரு நாடும் கடுமையான இறக்குமதி வரி விதிப்பின்மூலம் அயல்நாட்டுப் பொருள்கள் தன்னுடைய நாட்டில் நுழையா வண்ணம் தடுக்கவும், தங்களது சுயதேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்ளவும் முயன்றன. இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் தங்களது சுய தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ள போட்டியிட்டுக் கொண்டிருந்த போது, ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் அவ்வாறு செய்ய இயலவில்லை. எனவே, தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வலிந்து தாக்கும் முறையினைக் கையாளத் தொடங்கின.

## 2. வர்த்தகம் மற்றும் குடியேற்றங்களுக்கான போட்டிகள்

'ஒரு போர் மற்றொரு போரை உருவாக்குகின்றது' என்ற கூற்று உண்மையென்பதை முதலிரண்டு உலகப் போர்களும் நிரூபிக்கின்றன. இரண்டாம் உலகப்போர் முதல் உலகப் போரிலிருந்தே ஆரம்பமானது என்பதைப் பல காரணங்கள் விளக்கு

கின்றன. முதல் உலகப் போரில் தோற்றுப்போன ஜெர்மனி, தனது குடியேற்றங்கள் அனைத்தையும் இழந்தது. இத்தாலி, நேசநாடுகளுடன் சேர்ந்து, போரில் வெற்றிபெற்ற நாடுகளின் வரிசையில் நின்றாலும் தான் எதிர்பார்த்த குடியேற்றங்கள் அனைத்தையும் பெற இயலவில்லை. உலகப் பெரும் வல்லரசு களில் ஒன்றாக வளர்ந்துவிட்ட ஜப்பான் பொருளாதாரப் பெருக் கத்தின் காரணமாக, குடியேற்றங்களின் தேவையை மிகவும் உணர்ந்தது. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுக ளுடன் அவைகளை ஒப்பிடும்போது மூலப் பொருள்கள், விற்பனைச் சந்தைகள், குடியேற்றங்கள் ஆகியவைகளில் மிகவும் குறைந்தே காணப்பட்டன. அந்நாடுகள் பொருளாதாரத் துறை யில் வளர்ச்சி குன்றியிருந்த நிலையை 1930ஆம் ஆண்டுவாக்கில் உலகை அலைக்கழித்த பொருளாதார மந்தம் தெளிவாக்கியது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளின் வெளி உலகச் சந்தைகள் மூடப்பட்டன அல்லது மிகவும் உயர்த்தப்பட்ட இறக்குமதி வரிகள் அந்நாட்டுப் பொருள்களுக்குப் பெருந்தடை யாகக் காணப்பட்டன. தங்களுடைய வெளி உலக வர்த்தகம் மற்றும் வணிகத் தொடர்புகள் தடைப்பட்டதனால், தங் களுடைய தொழிலகங்களுக்குத் தேவையான மூலப் பொருள் களை வாங்கக் கடன் வசதிகள் பெற இயலாது போயிற்று. தங்களுடைய உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளில் விற்பனை செய்ய இயலாமலும், அதே நேரத்தில் தேவையான மூலப் பொருள்களை வாங்கவும் முடியாத நிலை ஏற்பட்டதனால் அந் நாட்டுப் பொருளாதார நிலை மிகவும் ஆபத்தான நிலையை அடைந்தது. அத்தகைய இக்கட்டான நிலையினின்றும் மீள வேண்டுமானால், தாங்கள் தீவிர பேரரசுக் கொள்கையைப் பின் பற்றுவதன்மூலம், வளம் மிக்க நாடுகளின் குடியேற்றங்களைக் கைப்பற்றியாக வேண்டும் என முடிவு செய்தன. வளம் பெற்ற நாடுகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை அளித்து, உற் பத்திப் பொருள்களை வாங்கி, அவைகளை வளம்பெறச் செய் கின்ற வற்றாத நதிகளாக விளங்குபவை; அந்நாடுகள் முற்றுரிமை பெற்றிருக்கின்ற குடியேற்றங்களே ஆகும் என இந்த நாடுகளும் உணர்ந்தன; பொறாமையடைந்தன. இவ்வாறாகப் பொருளா தார ஏற்றம் பெற்ற நாடுகளுக்கும், ஏற்றம் பெற முயலும் நாடு களுக்குமிடையே ஏற்பட்ட போட்டி இரண்டாம் உலகப் போரின் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

### 3. வெர்சாய் உடன்படிக்கையின் கடினத்தன்மை

முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட வெர்சாய் உடன் படிக்கை இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டது. இவ்வுடன்

படிக்கை தோற்றுவிட்ட ஜெர்மனியை மிகவும் கொடூரமாகத் தண்டித்துவிட்டது. கெய்சரின் தவறுகளுக்கு ஜெர்மனியின் ஒன்றுமறியா பாமர மக்கள் பலியாக்கப்பட்டனர். 6,600 மில்லியன் பவுன்களை போர் இழப்பீடாக 60 தவணைகளில் ஜெர்மனி செலுத்தியாக வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஜெர்மனியின் கப்பற்படை முழுவதுமாகக் கலைக்கப்பட்டது. கப்பல்கள் மற்றும் போர்ப் பொருள்களை இங்கிலாந்து எடுத்துக்கொண்டது. தரைப்படையே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு மிகவும் குறைந்த அளவினதாக்கப்பட்டது. ஜெர்மனியின் குடியேற்றங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. பால்டிக் கடற்கரையில் அமைந்திருந்த ஜெர்மனியின் ஒரே துறைமுகமான **டான்சிக்கும்** (Danzig) எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனால் பால்டிக் கடற்பகுதி நாடுகளுடன் ஜெர்மனியின் வர்த்தகம் தடைப்பட்டுவிட்டது. போலந்து நாடு பால்டிக் கடற்கரையை அடைவதற்கு ஜெர்மனியின் குறுக்காக வழிவிடப்பட்டது (Polish Corridor). போலந்திற்குக் கொடுத்த வழி ஜெர்மனியையும் கிழக்கு பிரஷ்யாவையும் பிரித்தது. மேலும் போர்க்குற்றம் ஜெர்மனியின் மீதே சுமத்தப்பட்டது. ஜெர்மனியின் பிரதிநிதிகள் சமாதான மாநாட்டிற்குள் அனுமதிக்கப்படவில்லை. ஜெர்மனியின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளாமலே அத்தகு முடிவுகள் எடுக்கப்பட்டன. தங்களைக் கலக்காமலே இத்தகு கொடுமையான தண்டனைகளை வழங்கியதால், ஜெர்மன் மக்களிடையே பழிவாங்க வேண்டும் என்ற வெறியுணர்வு தோன்றியது. ஜெர்மனியில் பயங்கரமான பணவீக்கம் ஏற்பட்டு சொல்லொணாத் துயரங்களை விளைவித்தது. ஒரு வண்டி நிறைய ஜெர்மன் காகித நாணயங்களை அள்ளிச் சென்று ஒரு கை நிறைய பொருளை வாங்கிக் கொண்டு மறு கையை வீசிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர் என ஜெர்மனியின் பணவீக்கத்தினைப்பற்றிக் கூறப்படுவதுண்டு. அத்தகைய கடுமையான பணவீக்கத்தினைத் தடுத்து பொருளாதார வளர்ச்சியை நோக்கிநடைபோட்ட போதுதான் பேரிடியென, பொருளாதாரப் பெருமந்தம் ஜெர்மானியரை எதிர்பாராத நேரத்தில் தாக்கித் திணறடித்தது. அச்சமயத்தில் வெர்சாய் மாநாட்டின் தேவையற்ற கொடுமைகளைச் சாடி, அதனை உதறியெறிந்துவிட வேண்டும் என ஹிட்லர் முழக்கமிட்டபோது, அம்முழக்கம் ஒவ்வொரு ஜெர்மானியரின் உள்ளத்திலும் எதிரொலித்தது. ஜெர்மானியரின் உள்ளத்து ஒருமித்த எதிரொலியாகவே காணப்பட்டது. ஜெர்மானியரின் தொல்லைகள் அகற்றப்படும், வளமான வாழ்வு அமைக்கப்படும் என ஹிட்லர் முழங்கியபோது காந்தத்தை நாடி ஓடி ஒட்டிக்

தொள்கின்ற இரும்புத் துண்டங்களென ஜெர்மானியர் அனை வரும் அவரை நாடி நின்றனர்.

**4. சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தோல்வி**

சிறுபான்மையினரின் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க வெர் சாய் மாநாட்டுத் தலைவர்கள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. அது அவர்கள் செய்த தவறுகளிலேயே மிகவும் பெரிய தவறாகக் கருதப்படுகின்றது. வில்சன் உருவாக்கித் தந்த **சுயநிர்ணய உரிமைக் கொள்கையை** (Principle of Self Determination) ஐரோப்பிய நாடுகளில் முறையாகப் பயன்படுத்தவில்லை. ஒரு சில சிறுபான்மையினத்தினரின் மீது பெரும் பான்மையினர் அரசியல், இராணுவ, பொருளாதாரத் தடைகளைத் திணித்து, தொல்லைகளை விளைவித்தனர். சிலபகுதிகளில் சிறுபான்மையி னரைத் தனியாகப் பிரித்து அறிய முடியாதவாறு குழப்பமான சூழ்நிலை காணப்பட்டது. அப்பகுதிகளில் 'சுயநிர்ணய உரிமைக் கொள்கையைச்' செயல்படுத்த இயலாது போயிற்று. இருப்பினும் ஆஸ்திரியா, போலந்து, செக்கோஸ்லாவாகியா போன்ற நாடுகளில் சிறுபான்மையினமாக இருந்த ஜெர்மானியர்கள், ஜெர்மனியுடன் இணைந்துகொள்ள விழைந்தனர். அத்தகைய விருப்பங்களைத் தூண்டிவிட்டு உரிமைகள் கோரி கலகத்தில் ஈடுபடும்படி அம்மக்களை ஹிட்லர் ஊக்குவித்தார். அத்தகைய இனக் கலவரங்களைக் காரணமாகக் காட்டி ஹிட்லர் அந்த நாடுகளின் மீது படையெடுத்தார்.

**5. தீவிர தேசியத்தின் வளர்ச்சி**

முதல் உலகப்போரின் பின்னர் ஒவ்வொரு நாட்டிலும் தேசிய உணர்வும், நாட்டுப் பற்றும் மிகையாக வளர்ந்தன. ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் அத்தகைய தேசிய உணர்வு மிகவும் தீவிரமான நிலையை அடைந்தது. 'சரியோ, தவறோ, அதைப்பற்றி அக்கறையில்லை, அது எனது நாடு' என்ற எண்ணம் பல நாடுகளிலும் வேகமாகப் பரவி வளர ஆரம்பித்தது. 1930ஆம் ஆண்டுவாக்கில் ஏற்பட்ட பெருமந்தத்தின் பின்னர் ஒரு சில நாடுகளில் பொருளாதாரக் கோட்பாடுகளினடிப் படையிலும் தேசிய உணர்வுகள் தோன்றி வளர்ந்தன. அதனைத் தொடர்ந்து ஒருசில நாடுகளில் தாங்கள்தாம் மற்ற அனைத்து நாட்டு மக்களையும்விட உயர்ந்தவர்கள் என்ற பண்பாட்டு தேசியமும் தோன்றி வளரலாயிற்று. ஜெர்மானிய இனம்தான் மக்களிடத்திலேயே மிகச்சிறந்தது என்ற கருத்தினை ஜெர்மானிய மக்களிடையே ஹிட்லர் மிகவும் தீவிரமாகப் பரப்பினார். ஜெர்

மானியர்கள் **நார்திக் இனத்தைச்** (Nordic Race) சார்ந்த வர்களென்றும் அவர்களே மிகச்சிறந்த இனத்தவர்களென்றும், உலகாளப் பிறந்தவர்கள்-தகுதி படைத்தவர்கள் என்றும் ஹிட்லர் வலிந்துரைத்தார். உலகம் முழுவதையுமே ஜெர்மானியரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொணர்ந்து, உலக மக்களுக்கு நாகரிகத் தினைக் கற்றுக்கொடுப்பது உலகில் தலைசிறந்த ஜெர்மானிய இனத்தின் தலையாய கடமையாகும் என ஹிட்லர் முழங்கினார். இத்தகைய தீவிர தேசியத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் ஜெர்மனியில் நாஸிசக் கொள்கையும், இத்தாலி யில் பாசிஸக் கொள்கையுமாகும். அவ்விரு நாடுகளும் 'நாடு, அரசு, ஆட்சித்தலைவர் ஆகிய மூன்றையும் இறைவனுக்கு இணையாகவே கருதவேண்டும். ஒவ்வொரு குடிமகனும் நாட்டிற் கான அனைத்தையும் தியாகம் செய்யக் கடமைப்பட்டவன் என் பது போன்ற கொள்கைகளை மக்களிடையே பரப்பி' அத்தகைய கொள்கைகள்தான் ஹிட்லர், முசோலினி போன்ற வல்லாட்சி யாளர்கள் தோன்றக் காரணங்களாக இருந்தன. அவர்கள் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டி, அயல் நாட்டுப் போர்களைத் தொடங்கி, மக்களைத் திசைதிருப்பி விட்டனர். அவர்கள் மக்களிடையே போர் வெறியைத் தூண்டி விட்டனர். வீரம், தியாகம் போன்ற மனித இனத்தின் உன்னத மாண்புகள் போர்களத்தில்தான் முழுமையடைந்து வெளியாகும். எனவே, அத்தகைய தன்மைகளை வெளிக்கொணர்ந்து பெருமை சேர்க்க, வீரதீரச்செயல்களும், அவைகளுக்கு அதிக வாய்ப்பளிக் கும் போர்களும் தேவையென வல்லாட்சியாளர்கள் மக்களை நம்பவைத்தனர்.

**6. ஆயுதப் போட்டி**

தங்களுடைய கொடிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள் ளும் பேராசையால் உந்தப் பெற்ற ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற வல்லரசுகள் போட்டியிட்டுக் கொண்டு படைக்கலன் களை உருவாக்கிக் குவித்தன. அம்மூன்று வல்லரசுகளும் தங்களது தேவைக்கும் அதிகமான கடற்படை, விமானப்படை, தரைப் படைகளை உருவாக்கிக் கொண்டன. படைகளையும், படைக் கலன் உற்பத்தியையும் கட்டுப்படுத்திக் குறைக்கின்ற பன்னாட்டுக் கழகத்தின் கூறுபாடு மதிக்கப்படவில்லை. ஒவ்வொரு நாடும் இரகசியமாக படைகளைப் பெருக்கி, படைக் கலன்களின் உற் பத்தியையும் பன்மடங்காகப் பெருக்கிக் கொண்டிருந்தன. இவ் வாறு உற்பத்தி செய்துகொண்ட புதுவித படைக்கலன்களையும் படைகளையும் உண்மையான போரில் பயன்படுத்தித் திறமையைச் சோதனை செய்யும் ஆர்வம் கொண்டிருந்தன.

## 7. பன்னாட்டுக் கழகத்தின் திறமையற்ற நிலை

முதல் உலகப் போரின்போது ஏற்பட்ட அளவற்ற அழிவு களையும் போர்க்காலக் கொடுமைகளையும், துயரங்களையும் கண்டு அதிர்ச்சியடைந்த உலகம், இனியும் அத்தகைய போர் உலகை அலைக்கழிப்பதினின்றும் காப்பாற்றப்பட்டேயாக வேண்டும், மனித இனம் காப்பற்றப்படவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் உருவாக்கப்பட்ட பன்னாட்டுக் கழகம் தனது கொள்கைகளைச் செயலாக்கும் வலிவில்லாமல், வெறும் வெட்டிப்பேச்சு மன்ற மாகவே காட்சியளித்தது. ஆரம்ப காலத்தில் உலகில் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஓரளவிற்கேனும் பன்னாட்டுக்கழகம் திறமையுடனும் ஆர்வத்துடனும் செயலாற்றியது. 1925ஆம் ஆண்டில் ஏற்பட்ட **லொகார்னோ ஒப்பந்தம்** (Locarno Pact of 1925) ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளுக்கிடையே சமரச நிலையை ஏற்படுத்தியது. இவ்வொப்பந்தம் பன்னாட்டுக் கழ கத்தின் ஒரு சில ஆரம்பகால வெற்றிகளுக்கு எடுத்துக்காட்டாகும். 1926ஆம் ஆண்டில் ஜெர்மனியும் பன்னாட்டுக் கழகத்தின் உறுப்பு நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1928ஆம் ஆண் டில் அமெரிக்காவின் வெளியுறவுச் செயலரான **கெல்லக்** (Kellogg) என்பவரும் பிரான்சின் வெளியுறவு அமைச்சரான **பிரையன்** (Briand) என்பவரும், புகழ்மிக்க **கெல்லக் - பிரையன் ஒப்பந்தத்தில்** (Kellogg - Briand Pact) கையொப்பமிட்டனர். அதன்மூலமாகப் பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளப் 'போர்' என்ற பயங்கர வழியைப் பின்பற்றுவதில்லை என உறுதியளித்தன.

பன்னாட்டுக் கழகத்தின் ஆரம்பகால வெற்றிகளும் திறமை களும் காலப்போக்கில் குறைவுபட்டன. ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் ஏற்பட்ட ஆயுதக் குவிப்பினைக் கட்டுப்படுத்த இயலவில்லை. 1931ஆம் ஆண்டில் ஜப்பான், மஞ்சூரியா மீது வலிந்து படையெடுத்தது. அதனை எதிர்த்து சீனா பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. ஜப்பானின் வலிந்து தாக்கிய தன் மையை வற்புறுத்தி, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுப்பு நாடுகள் எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஜப்பான் மஞ்சூரியா முழுவதையும் பிடித்துக் கொண்டது. ஜப் பான் வலுத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளது என பன்னாட்டுக் கழ கம் கடிந்துரைத்து, ஜப்பான், மஞ்சூரியாவினின்றும் வெளியேற வேண்டுமென அறிவித்தது. மஞ்சூரியாவினின்றும் வெளியேற வேண்டிய ஜப்பான், பன்னாட்டுக் கழகத்தினின்றே வெளியேறி யது. 1935ஆம் ஆண்டிற்குப் பின்னர் பன்னாட்டுக் கழகத் தின் தடையை உடைத்தெறிந்துவிட்டு ஹிட்லர் தன்னுடைய


கடற்படை, தரைப் படைகளைப் பன்மடங்காகப் பெருக்கிக் கொண்டு, வலுத்தாக்குதல்களில் ஈடுபட்டு, ரைன் பகுதிகளைப் பிடித்துக்கொண்டார். இத்தகைய தடையை மீறிய ஹிட்லரின் செயல்களைத் தடை செய்யவோ, கட்டுப்படுத்தவோ வகையறி யாத பன்னாட்டுக் கழகம் செயலிழந்து நின்றது. 1933ஆம் ஆண்டிலேயே ஜெர்மனி பன்னாட்டுக் கழகத்தினின்றும் வெளி யேறியிருந்தது. அதே போல இத்தாலி 1936-ல் அபிசீனி யாவை விழுங்கியது. அதனையும் பன்னாட்டுக்கழகம் தடுக்க இயலவில்லை. இத்தாலிக்கு எதிராகப் பன்னாட்டுக்கழகம் 'பொரு ளாதாரத் தடை' என்ற தன்னுடைய ஒரே ஆயுதத்தைப் பயன் படுத்தியபோது, உறுப்பு நாடுகள் அத்தடையை மதிக்கவில்லை. அத்தகைய செயல்களின் விளைவாகப் பன்னாட்டுக்கழகம் வெறும் வெட்டிப்பேச்சு மன்றமாகக் காணப்பட்டதே தவிர, செயல்திறமை கொண்டதாகக் காணப்படவில்லை. இத்தகைய நிலை, உலக வல்லாட்சியாளர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. அவை கள் மேலும் மேலும் துணிந்து வலுத்தாக்குதல்களில் ஈடுபட்டன.

**8. 'அச்சு' நாடுகளின் (Axis) ஒப்பந்தம் ஏற்படல்**

பன்னாட்டுக் கழகத்தினின்றும் வெளியேறிய நாடுகள் மூன் றும் தங்களது எண்ணங்களில் ஒற்றுமை இருப்பதை உணர்ந்தன. அவைகள் மூன்றும் சுயநலமிக்க வலுத்தாக்குதல்களில் ஈடுபடு வதில் ஒற்றுமை கொண்டிருந்தன. 1936ஆம் ஆண்டில் ஜெர் மனியும் இத்தாலியும் நட்புறவு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டன. அவ்வொப்பந்தம் 'அச்சு நாடுகளின் ஒப்பந்தம்' என அழைக்கப்பட்டது. அதற்கு அடுத்த திங்களில் ஜெர்மனி ஜப்பானுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டது. இத்தாலியும் 1937ஆம் ஆண்டில் அவ்வொப்பந்தத்தினை ஏற்றுக் கொண்டு இணைந்தது. இவ்வாறாக மூன்று வல்லரசு நாடுகளும் ஒன்றுக் கொன்று உதவி செய்துகொள்ளும் வகையில் ஒப்பந்தம் செய்து கொண்டன.

## (ஆ) உடனடிக் காரணங்கள்

**ஹிட்லரின் வலுத்தாக்குதல்கள் :** ஜெர்மனியின் வல்லாட்சி யாளரான ஹிட்லரின் காரணமற்ற வலுத்தாக்குதல்களே போர் ஏற்பட முக்கியமான காரணமாக அமைந்துவிட்டது. எந் நாட்டுப் படைகளும் ரைன்லாந்து பகுதியில் நிறுத்தப்படக் கூடாது என வெர்சாய் ஒப்பந்தம் தடை விதித்திருந்தாலும் முன்னரே கூறியவாறு 1936ஆம் ஆண்டில் ஹிட்லர், வெர்சாய் விதித்திருந்த தடைகளை மீறி ரைன்லாந்தைக் கைப்பற்றினார். பின்னர் ஆஸ்திரியா, சுடட்டன்லாந்து (Sudeten Land)




படம் 15.1 இரண்டாவது உலகப் போர் (1939—1945)

ஆகிய பகுதிகளின் மீது தனது பார்வையைத் திருப்பினார். அதன் காரணமாகவே சிறுபான்மையினரான ஜெர்மானியர் செக் கோஸ்லாவேகியாவில் கொடுமைப்படுத்தப்படுவதாக ஹிட்லர் குறை கூறினார். அத்தகைய கொடுமைகளிலிருந்து தனது இன மக்களைக் காப்பாற்றுவதாகப் பறைசாற்றிக் கொண்டு ஹிட்லர் 1938ஆம் ஆண்டு ஆஸ்திரியாமீது படையெடுத்து இணைத்துக் கொண்டார். பின்னர் சுடட்டன்லாந்தின்மீது படையெடுக்கத் திட்டமிட்டார். அதனைக் கண்ட செக்கோஸ்லாவேகியா ஹிட்லருக்கு எதிராக உதவும்படி இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளை வேண்டியது. இங்கிலாந்தின் பிரதமரான **நெவில் சேம்பர்லின் (Neville Chamberline)** அப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் முடிவு காண முயன்றார். ஆனால், ஹிட்லரின் பிடிவாதத்தை மாற்ற அவரால் இயலவில்லை. பிரான்சின் பிரதமர் **தலாதிர் (Daladier)** சுடட்டன்லாந்துப் பகுதியை செக்கோஸ்லாவேகியா, ஜெர்மனிக்குக் கொடுத்துவிடுவது நலம் எனக் கூறி ஹிட்லரின் திட்டத்தினை ஆதரித்தார். ஆனால் அமைதி வழியைவிட்டு, படைகளை அனுப்பி சுடட்டன்லாந்து பகுதியைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதில் ஹிட்லர் பிடிவாதமாக இருந்தார். எனவே இங்கிலாந்தும் பிரான்சும் தமது படைகளைப் போருக்கு ஆயத்தமாக்கின. அதனைக் கண்ட ஹிட்லர் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்த இணங்கினார். அச்சமாதான மாநாடு 1938ஆம் ஆண்டில் **மியூனிச் (Munich)** நகரில் நடந்தது. அம்மாநாட்டில் ஹிட்லர், முசோலினி, சேம்பர்லின், தலாதிர் ஆகியோர் கலந்து கொண்டனர். அம்மாநாடு ஐந்து நிலைகளில் ஜெர்மனி சுடட்டன்லாந்து பகுதியை இணைத்துக் கொள்ள அனுமதியளித்தது. ஹிட்லர் அம்மாநாட்டின் முடிவை ஏற்றுக் கொண்டது போல நடித்தார். கவுரவத்துடன் அமைதியை ஏற்படுத்தி விட்டோம் என தற்பெருமை கொண்டார். ஆனால், ஹிட்லரின் உண்மையான நோக்கம் விரைவிலேயே வெளிப்பட்டது. 1939ஆம் ஆண்டில் சுடட்டன்லாந்து பகுதியை மட்டுமன்றி, செக்கோஸ்லாவேகியா முழுவதையும் இணைத்துக் கொண்டார். கிழக்குப் பிரஷ்யாவை ஜெர்மனியுடன் இணைக்கும் வகையில் ஓர் இரயில் பாதையை அமைக்கவும், அப்பாதையை போலந்து நாட்டிற்கு வழங்கியிருந்த பகுதியின் (Polish Corridor) வழியாக அமைக்கவும் அனுமதி கோரினார். பின்னர் **டான்சிக் (Donzig)** துறைமுகம் மீண்டும் ஜெர்மனிக்குக் கொடுக்கப்படவேண்டும் என ஹிட்லர் வற்புறுத்தினார். 1939ஆம் ஆண்டில் ஹிட்லர், முசோலினியுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றினையும் ஏற்படுத்திக் கொண்டார். அதே ஆண்டில் ஹிட்லர் ருஷியாவுடன் போர்தொடுப்பதில்லை

என்ற ஒப்பந்தம் ஒன்றினையும் செய்துகொண்டு, உலகை வியப் படையச் செய்தார். அத்தகைய முன்நடவடிக்கைகளை மேற் கொண்டு தன்னைத் தயார் செய்துகொண்ட பின்னர், ஹிட்லர் 1939ஆம் ஆண்டில் போலந்து நாட்டின்மீது போர் தொடுத் தார். போலந்து நாட்டின் கொடுமைகளிலிருந்து சிறுபான்மையின மாகிய ஜெர்மனியர்களைக் காப்பதற்காகவே இப்போர் என ஹிட்லர் காரணம் கூறினார். அந்நிகழ்ச்சியைக் கண்ட இங்கி லாந்தும் பிரான்சும் இனியும் அமைதியாக இருக்கமுடியவில்லை. போலந்தின் நடுநிலையைக் காப்பாற்றும் உறுதிகொண்ட இங்கி லாந்தும் பிரான்சும், ஹிட்லர் தனது படைகளை போலந்தி லிருந்து விலக்கிக்கொள்ள வேண்டும் என இறுதி எச்சரிக்கை செய் தன. அந்த இறுதி எச்சரிக்கையைப்பற்றி ஹிட்லர் கவலைப் படவில்லை. எனவே, 1939ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் நாள் இங்கிலாந்தும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் தொடுத்தன. 1940 ஜூன் திங்களில் இத்தாலி, ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரிலிறங்கியது. ஏற்கெனவே ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அம்மூன்று நாடுகளும் முக்கூட்டு உடன்படிக் கையை ஏற்படுத்திக் கொண்டு **அச்சு** (Axis) நாடுகளாயின. 1941ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அமெரிக்கா ஜப்பானுக் கெதிராகப் போர் தொடுத்தது.

## போரின் போக்கு

அப்போர் விரைவில் உலகம் முழுவதையும் ஆட்கொண் டது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும், கடலிலும் விண்ணி லும் நடந்த இப்போர் அளவிடற்கரிய அழிவுகளையும், நாசத் தையும் விளைவித்தது. உயிரிழந்தோரின், ஊனமுற்றோரின் எண்ணிக்கையும் கணக்கிலடங்காது. இப்போரில் படையினர் மட்டுமன்றி, சாதாரண குடிமக்களும் பெருமளவில் உயிரிழந் தனர். எனவே, இது உலகமக்கள் அனைவரையும் ஆட்கொண்ட பெரும்போர் என வருணிக்கப்படுகின்றது.

ஜெர்மனியுடன் ருஷியாவும் இணைந்து போலந்தை வெகு எளிதாக வெற்றிகொண்டு, அதனைப் பங்கிட்டுக் கொண்டன. அந்த நல்வாய்ப்பினைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது ருஷியா. **லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா, பின்லாந்தின் ஒரு பகுதி** (Latvia, Lithuania, Esthonia and Part of Finland) ஆகிய பகுதிகளையும் ருஷியா வென்று தனதாக்கிக் கொண்டது. 1940ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்றே மாதங்களில் டென்மார்க், நார்வே, லக்சம்பர்க், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு ஆகிய நாடுகளனைத்தையுட்

ஹிட்லர் வென்று அடிமைப்படுத்திக்கொண்டார். 'விரைந்து, முப்படைகளையும் ஒருங்கிணைத்து, படைக்கலன்களை வேண்டிய அளவு பயன்படுத்தி முனைந்து தாக்குதல்' (Blitzkrieg) என்ற புதிய போர் முறையைப் பயன்படுத்தி ஹிட்லர் அந்நாடுகள் அனைத்தையும் அடிபணியச் செய்திருந்தார்.

1940 - 41ஆம் ஆண்டுகளில் விமானம்மூலம் விண்ணிலிருந்து குண்டுமாரி பொழியச்செய்து, இங்கிலாந்து மக்களின் மனத்திண்மையை அழிக்கும் முயற்சியில் ஹிட்லர் ஈடுபட்டார். அந்தப் பயங்கரமான தாக்குதல் **இங்கிலாந்துப் போர் (Battle of Britain)** என வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. **லுப்ஃப்ட் வாஃப் (Luftwaffe)** என்றழைக்கப்பட்ட ஜெர்மானிய விமானப் படையும் **U-படகுகள் (U-Boats)** என அழைக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களும் இங்கிலாந்தின் நகரங்களுக்கும் கப்பல்களுக்கும் பயங்கர நாசம் விளைவித்தன. ஆனால் எத்தகைய பயங்கரமான தாக்குதல்களும் இங்கிலாந்து மக்களின் மன உறுதியை அழிக்க முடியவில்லை. இதற்கிடையில் செயல் திறம்மிக்க, உறுதி கொண்ட ஒருவர் இங்கிலாந்தின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர்தான் **வின்ஸ்டன் சர்ச்சில்** என்பவராவார். திறமையற்ற சேம்பர்லினுக்குப் பின்னர் அவர் தலைமையமைச்சரானார். அவரது சீரிய தலைமையில் இங்கிலாந்து முனைந்து போரில் ஈடுபட்டது. இங்கிலாந்தின் விமானப் படைகள் (R.A.F.) பதிலுக்குப் பதில் ஜெர்மானிய நகரங்கள் மீதும், ஆயுதத் தொழிற்சாலைகள், கிடங்குகள் மீதும் விண்ணிலிருந்து குண்டுமாரி பொழிந்தன. பெரும் நாசத்தினை விளைவித்தன. ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் 2,40,000 டன் எடையுள்ள இங்கிலாந்தின் கப்பல்களை மூழ்கடித்திருந்தாலும் சர்ச்சில் மன உறுதியிழக்காது, போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவரான பிராங்கிளின் ரூஸ்வெல்டைச் சந்தித்து **அட்லாண்டிக் அறிக்கையை (Atlantic Charter)** வெளியிட்டார். சுயநிர்ணய உரிமைக் காப் போராடும் அனைத்து உலக நாடுகளுக்கும், இந்தியா உட்பட அவ்விரு நாடுகளும் உதவியளிக்கும் என அறிவித்தார். **கடனளித்தல் - குத்தகைக்கு விடல் (Lend - Lease Act)** என்ற சட்டத்தின் அடிப்படையில் அமெரிக்கா போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், மற்றும் படைக்கலன்கள் ஆகியவைகளைப் பெருமளவில் இங்கிலாந்திற்குக் கொடுத்தது.

இதற்கிடையில் ஹிட்லருடன் படையொப்பந்தம் செய்து கொண்டிருந்த முசோலினி ஆப்பிரிக்காவில் இங்கிலாந்துக்குச் சொந்தமான சோமாலிலாந்தினைத் தாக்கிப் பிடித்துக்

கொண்டார் ஆனால் நேசநாடுகளின் **படைத்தளபதியான வேவல் (General Wavell)** பல இடங்களில் இத்தாலியப் படைகளைப் புறங்கண்டார். அவர் **லிபியாவில் (Libya)** பெற்ற வெற்றிகளைக் கண்டு அச்சமடைந்த ஹிட்லர் தனது பெரும் படையொன்றினை **தளபதி ரோமல் (General Rommel)** என்பாரின் தலைமையில் வட ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார். இருப்பினும், கிழக்காப்பிரிக்கா விலிருந்த இத்தாலியப் படைகளை வேவல் விரட்டியடித்தார். அதேபோல கிரீஸ், அல்பேனியா ஆகியநாடுகளைக் கைப்பற்ற இத்தாலி எடுத்த முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன.

1941 ஏப்ரல், மே மாதங்களில் ஹிட்லர் **கிரீஸ், கிரீட் (Greece, Crete)** ஆகிய பகுதிகளையும் வென்றார். அதன் பின்னர் ஹிட்லர் தனது தலை விதியையே நிர்ணயித்த ருஷியப் படையெடுப்பினை 1941ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தொடங்கினார். அதை ஹிட்லரின் மாபெரும் தவறாகக் கொள்ளலாம். முதலாம் நெப்போலியனைப்போலவே ஹிட்லரும் ருஷியப் படையெடுப்பினை மேற்கொண்டு அழிந்தார் எனக் கூறுவது மிகவும் பொருந்தும். விரைந்து, முனைந்து தாக்கும் தனது போர் யுக்தியின்மூலம் லெனின்கிராடு, மாஸ்கோ ஆகிய நகரங்களைக் கைப்பற்றும் அளவிற்கு ஜெர்மானியப் படைகள் முன்னேறின. அப்படையெடுப்பின், **அழித்துவிட்டுப் பின்வாங்குதல் (Scorched Earth Policy)** என்ற தங்களது பரம்பரை யுக்தியைக் கையாளுவதன்மூலம் தொழிலகங்கள், பாலங்கள், ரயில் பாதைகள், பயிர் வகைகள் உட்பட அனைத்தையும் அழித்துக்கொண்டே ருஷியப்படைகள் பின்வாங்கின. மாஸ்கோ நகர் வரையிலும் வெற்றியுடன் முன்னேறிய ஜெர்மானியப் படைகள், ருஷியாவின் 'அழித்துப் பின் செல்லல்' கொள்கையின் காரணமாக, எவ்வித நன்மையையும் அடைய முடியவில்லை. எதையும் அடைய முடியாது, சோர்வுடன் திரும்பிய ஜெர்மானியப் படைகளை ருஷியாவின் மாபெரும் இரண்டு படைகள் தாக்கின. ஒன்று ருஷியக் குளிர்காலம்., மனிதனின் எலும்பினைக்கூட உறையவைக்கும் ருஷியக் கடுங்குளிர் ஜெர்மானியப் படையினரிடையே பெரும் நரகத்தினை ஏற்படுத்தியது. குளிரினால் தாக்குண்டு தவித்த படையினை, ருஷியப் படைகள் பயங்கரத் தாக்குதல்கள் மூலம் எதிர் கொண்டன. ஸ்டாலின்கிராடு நகரப் போரில் மட்டும் 3,18,000 போர் வீரர்களை இழந்து, ஹிட்லர் மாபெரும் தோல்வியடைந்தார். அந்தப் போர் ஹிட்லரின் தோல்விக்கு கட்டியம் கூறியது.

1942-43ஆம் ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் நேசநாட்டுப் படைகள் மாபெரும் வெற்றிகளைக் குவித்தன. ஜெர்மானியத்

தளபதி ரோமல் 1942ஆம் ஆண்டு ஜூன் திங்களில் **தப்ருக்** நகரப்போரில் (Battle of Tobruk) வென்று, எகிப்தில் நுழைய முயன்றார். நேசநாடுகளின் படையின் தளபதி **மாண்ட் கோமரி** (General Montgomery) பல போர்க்களங்களில் வென்று, தளபதி ரோமலை **திரிபோலிக்கு** (Tripoli) விரட்டியடித்தார். லிபியா, பிரெஞ்சு, ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளையும் நேச நாட்டுப் படைகள் விடுவித்தன. 1943ஆம் ஆண்டில் திரிபோலியி லிருந்தும் ஜெர்மானியப் படைகள் வெளியேற்றப்பட்டன. அத்துடன் இத்தாலிய ஜெர்மானியப் படைகள் ஆப்பிரிக்காவி னின்றும் முழுவதுமாக வெளியேற்றப்பட்டன.

ஆப்பிரிக்க வெற்றியைத் தொடர்ந்து நேசப்படைகள் சிசிலி தீவினையும் வென்று இத்தாலியில் நுழைந்தன. தோல்விமேல் தோல்வியடைந்த முசோலினி பதவி விலகும்படி வற்புறுததப்பட்டார். அவருக்குப் பின்னர் தலைமையேற்ற மார்ஷல் **படோக்லியோ** (Marshall Badoglio) என்பார் நேசப்படைகளிடம் சரணடைந்தார். தளபதி ஐசன்ஹவரின் தலைமையிலான நேச நாட்டுப்படைகள் 1944ஆம் ஆண்டில் **நார்மண்டி** (Normandy) கடற்கரையில் வெற்றியுடன் இறங்கி, பிரான்சில் நுழைந்தன. 1945ஆம் ஆண்டு **சீக்பிரீடு** (Seigfried Defences) தடுப்பரண்களைத் தகர்த்துக்கொண்டு, நேசநாட்டுப் படைகள் ஜெர்மனியில் புயலென நுழைந்தன. கிழக்கிலிருந்து ருஷியப்படைகள் வியன்னாவை வீழ்த்திவிட்டு, பெர்லின் நகருக்குள்ளேயே கடல் அலைகளென நுழைந்தனர் (April 1945). அதே ஆண்டில் முசோலினி இத்தாலியில் சுட்டுக்கொல்லப்பட்டார். பெர்லின் நகரினை எதிரிகள் சூழ்ந்துகொண்டதைக் கண்டு, மனந்தளர்ந்த ஹிட்லர் தன்னைத் தானே அழித்துக் கொண்டார். 1945ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் ஜெர்மனி சரணடைந்தது.

கிழக்குப் பகுதியில் ஜப்பான் பயங்கரமான வலுத்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது. 1941ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7ஆம் நாள் பசிபிக் பெருங்கடல் பகுதியில் ஹவாய் தீவில் இருந்த, அமெரிக்காவின் பசிபிக்கடல் பகுதி கப்பல் படைத்தளமான பெர்ல் துறைமுகத்தின்மீது (Pearl Harbour) குண்டுமாரி பொழிந்து ஜப்பான் போரில் இறங்கியது. தகுந்த காரணமேதுமின்றி வலுத்தாக்குதலுக்குட்பட்ட அமெரிக்கா போரில் முழு மூச்சுடன் ஈடுபட்டது. உலகமே வியந்துநின்ற அளவில் ஜப்பான் குவாம் தீவுகள், வேக் தீவுகள், ஹாங்காங், சிங்கப்பூர், ஜாவா, பர்மா, பிலிப்பைன் தீவுகள் ஆகிய அனைத்தையும் கைப்பற்றி, இந்திய மேற்கெல்லையான மணிப்பூர் நகரை

அடைந்து இந்தியாவினைக் கலங்கவைத்தனர். அதனை வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொண்ட இந்திய விடுதலை வீரர்களில் ஒருவ ரான **சுபாஷ் சந்திரபோஸ்** இந்திய தேசியப் படையினை உரு வாக்கிக் கொண்டு, ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை விடுவிக் கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால், 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து அமெரிக்கா தனது எதிர்த்தாக்குதல் களைத் தொடங்கியது. தளபதி **மெக் ஆர்தரின்** சீரிய தலைமை யில் அமெரிக்கப் படைகள் சாலமன், மார்ஷல் தீவுகளைக் கைப் பற்றின. 1945ஆம் ஆண்டு ஜூலை திங்களில் பிலிப்பைன் தீவுகளையும் அமெரிக்கா விடுவித்தது. அதே ஆண்டு ஜூலைத் திங்கள் 26ஆம் நாள் நேசப்படைகள் ஜப்பானை சரணடையக் கோரி இறுதி எச்சரிக்கை விடுத்தனர். ஜப்பான் அந்த இறுதி எச்சரிக்கையை ஏற்று சரணடைய மறுத்ததால் அமெரிக்கா ஹிரோஷிமா, நாகசாகி என்ற இரு நகரங்களின்மீது அணுகுண்டு களை வீசி அவ்விரண்டு நகரங்களையும் அடியோடு அழித்தது. அப்பேரழிவினைக் கண்ட ஜப்பானியர் 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14ஆம் நாள் சரணடைந்தனர். செப்டம்பர் 2ஆம் நாள் சரணடையும் விதி முறைகளை ஏற்றுக் கையொப்பமிட்ட னர். ஜெர்மனி, ஜப்பான் ஆகிய இருபெரும் வல்லரசுகளும் சரணடைந்தவுடன் இரண்டாம் உலகப்போரும் முடிவுற்றது.

**சமாதான உடன்படிக்கைகள்**

இத்தாலியுடனும், அச்சு நாடுகளின் கூட்டணியில் இருந்த ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நான்கு சிறு நாடுகளுடனும் சமாதான உடன்படிக்கைகள் 1947ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. அவ்வைந்து உடன்படிக்கைகளும் மக்களின் உரிமைகளை உறுதி செய்தன. அந்நாடுகளின் படைக் குறைப்பினையும் உறுதி செய்தன. ஆப்பிரிக்காவிலிருந்த இத்தா லியப் பேரரசுப் பகுதிகள் அனைத்தையும் இத்தாலி இழந்தது. அத்துடன் ஒரு மாபெரும் தொகையினை இழப்பீடாகக் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஜெர்மனி மூன்று பெரும் பிரிவுகளாகவும், ஒரு சிறு பிரிவாக வும் பிரிக்கப்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா போன்ற நாடுகள் மூன்று பெரும் பிரிவுகளையும், பிரான்சு சிறிய பிரிவையும் எடுத்துக்கொண்டன. ஜெர்மானியப் படைகள் முழுவதும் கலைக் கப்பட்டு மிகவும் வலிமையற்ற நாடாக்கப்பட்டது. போருக்குக் காரணமான ஜெர்மானியத் தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்டு, **நியூரம்பர்க் (Nuremberg)** நகரில் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றத்தில் குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

மெக் ஆர்தரின் தலைமையில் அமெரிக்கா ஜப்பானை ஆட்கொண்டு படைக்கலைப்பினை மேற்கொண்டது. மெக் ஆர்தர் ஜப்பானில் பாராளுமன்ற ஆட்சி முறையையும் புகுத்தினார். ஜப்பானில் இருந்த குழப்பங்களைக் களைந்து, அமைதியை நிலைநாட்டி, நல்லாட்சி நிலவ வகைசெய்யும் பொருட்டுப் போர் முடிவுற்ற பின்னரும் ஜப்பானிலேயே சில ஆண்டுகள் தங்கியிருந்தார்.

## போரின் விளைவுகள்

சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டின் அடிப்படையில் நடந்த இரண்டாம் உலகப்போரின் பின்னர் பல நாடுகளில் விடுதலை இயக்கங்கள் தீவிரமாயின. இந்தியா, பர்மா, எகிப்து, இந்தோனேஷியா, இந்தோ-சீனா, சிலோன், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் தேசிய இயக்கங்கள் வெற்றிபெற்று, அந்நாடுகள் சுதந்திரமடைந்தன. ஆசிய நாடுகளின் வழியைப் பின்பற்றிய ஆப்பிரிக்க நாடுகளும் போராட்டங்களில் இறங்கி, ஒன்றன்பின் ஒன்றாகச் சுதந்திரமடைந்தன.

இப்போரில் வல்லாட்சி முறை அடியோடு மறைந்தது. மக்களாட்சிக் கொளகைகளும் முறைகளும் நிலையான வெற்றியைப் பெற்றன.

போரின் வெற்றியில் முக்கியப் பங்கினைப் பெற்றிருந்த ருஷியாவும் அமெரிக்காவும் போரின் முடிவில் உயர்தனி இடத்தைப் பெற்று மாபெரும் அரசுகளாக உயர்ந்தன. அவ்விரு அரசுகளும் தங்களுடைய செல்வாக்கினை ஏற்றுக்கொண்ட சிறு நாடுகளை ஏற்படுத்திக்கொண்டு, உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் அரசியல், பொருளாதாரத் துறைகளில் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துகின்றன. **கெடுபிடிப்போர்** (Cold War) என்ற மறைமுகப் போர் ஒன்று இவ்விரு மாபெரும் அரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது.

'ஐக்கிய நாடுகளின் அவை' என்ற உலகப் பொது நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டதையே, போரின் மிகவும் முக்கியமான விளைவாகக் குறிப்பிட வேண்டும். நீதி, நேர்மை, சம உரிமை என்ற சீரிய கோட்பாடுகளினடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிறுவனம் இடையறாது உலக அமைதியை நிலைநாட்டவும், மனித குலத்தின் மேன்மைக்கும் பாடுபட்டு வருகின்றது. அவ்வவையின் பல்வேறு சிறப்பு நிறுவனங்கள் மனிதகுலத்தின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் சீரிய பணியாற்றி வருகின்றன.

## அத்தியாயம் 16

# ஐக்கிய நாடுகள் அவை

### தோற்றம்

போரின் அழிவுகளையும், கொடுமைகளையும், அமைதியின் ஆனந்த நிலையினையும், முதல் உலகப் போரினைவிட இரண்டாம் உலகப்போர் அதிகமாக எடுத்துக்காட்டியிருக்கின்றது. நல்ல உள்ளம் படைத்த உலக அரசியல்வாதிகள் அனைவருமே உலக நாடுகளின் அமைதிக்கும், மனித குலத்தின் உன்னத வாழ்விற்கும் வகை செய்யும் தகுதி படைத்த ஓர் உலகப் பொது நிறுவனத்தின் தேவையை உணர்ந்தனர். போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்தபோதே நேச நாடுகளின் தலைவர்கள் 'அட்லாண்டிக் அறிக்கையினைத்' தொடர்ந்து **மாஸ்கோ** *(1943)*, **டம்பர்டன் ஓக்ஸ்** (Dumbarton Oaks - 1944), **யால்டா** *(1945)* போன்ற பல இடங்களிலும் மாநாடுகள் கூட்டி, அத்தகைய உலகப் பொது அமைப்பிற்கான அடிப்படை விதிகளை உருவாக்கினர். இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் **வின்ஸ்டன் சர்ச்சில்**, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் **பிராங்கிளின் ரூஸ்வெல்ட்**, ருஷிய அதிபர் **ஜோசப் ஸ்டாலின்** போன்றோரே அத்தகைய மாநாடுகளையும், கருத்துகளையும், உருவாக்கித் தந்தவர்களில் தலையாய நிலையிலிருந்தவர்களாவர். அத்தகைய தொடர் மாநாடுகளின் முத்தாய்ப்பாக 1945ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சான் பிரான்சிஸ்கோ நகரில் கூடிய மாநாடு அமைந்தது. அம் மாநாட்டில் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் கூடி உலகப் பொது அவை அமைப்பின் விதிமுறைகளை ஆய்ந்து முடிவெடுத்தனர். அம்மாநாட்டின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைக் குறிக்கோள்கள், அமைப்பு, செயல்முறைக் கோட்பாடுகள் ஆகிய அனைத்தும் கொண்ட **பட்டயம்** (Charter) உருவாக்கப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தப் பட்டயத்தினைப் பின்னர் ஐம்பது உறுப்பு' நாட்டு அரசுகளும் ஏற்றுக்கொண்ட பின்னர் 1945ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ஆம் நாள் ஐக்கிய நாடுகள் அவை தோன்றியது.

**குறிக்கோள்கள்**

''போர்களின் அழிவினின்றும் வருங்கால உலகின் மக்களைக் காப்பாற்றுதல்; மனிதனின் அடிப்படை உரிமைகளை ஏற்று நம்பிக்கைகொண்டு உறுதியளித்தல்; நீதியின் அடிப்படையில் நேர்மையான முறையில் உலக நாடுகளிடையே உறவினையும், உலக நாடுகளின் பொதுக் கட்டுப்பாட்டு விதிகளையும் ஏற்றுக் கொள்ளுதல்; சமுதாய, பொருளாதார மேன்மைக்குப் பாடுபடு வதன்மூலம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தப் பாடுபடுதல்'' என்பன போன்ற மனித இனத்தின் உயர் நோக்கங்களை ஐக்கிய நாடுகள் அவையின் பட்டயத்தின் ஆரம்ப வரிகள் குறிப்பிடு கின்றன. அவைகளே அச்சபையின் நோக்கங்களாகும். அந்த உயரிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், பிரச்சினைகள் ஏற்படும்போது பொறுமையைக் கடைப்பிடித்தல், அண்டை நாடுகளோடு அமைதியின் அடிப்படையில் நல்லுறவு கொள்ளுதல், உலகப் பொதுத் தேவையன்றி ஏனைய பிரச்சினைகளில் படை யினைப் பயன்படுத்தாமல் தவிர்த்தல், உலகின் மொத்த சமுதாய பொருளாதார ஏற்றம் காண உலகப் பொது நிறுவனத்தின் சிறப்பு அமைப்புகளின் உதவியைப் பயன்படுத்துதல் போன்ற வழிகளையும், பட்டயத்தின் ஆரம்பப் பகுதி விளக்கிச் சொல்லு கின்றது.

அடுத்து ஐக்கிய நாடுகள் அவையின் கோட்பாடுகளையும் அதன் தன்மைகளையும் விளக்குகின்றது. ஐ.நா.வின் நான்கு முக்கிய கோட்பாடுகளாவன: (1) உலக அமைதிக்கும் பாதுகாப் பிற்கும் பாடுபடுதல். (2) நாடுகளுக்கிடையே நட்புறவு, நல்லுறவு ஏற்பட வழிவகுத்தல். (3) உலக நாடுகளில் காணப்படுகின்ற சமுதாய, பொருளாதார, பண்பாட்டு முறைகளில் காணப்படு கின்ற ஏற்றத்தாழ்வினைக் களைய அனைத்து நாடுகளும் ஒத் துழைத்தல், மற்றும் மனிதனின் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் காப்பாற்றுதல். (4) அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தையும் முறைப்படுத்தி, திட்டமிட்டுச் செயல்படுத்த அனைத்து நாடுகளையும் ஒருங்கிணைத்து ஆற்றுப்படுத்துதல் என்பனவாகும்.

ஐ.நா.வின் ஏழு அடிப்படைக் கொள்கைகள் வருமாறு: (1) அனைத்து உறுப்பினர்களுக்கும் சம உரிமை. (2) ஐ.நா.வின் கோட்பாடுகளையும் சட்ட திட்டங்களையும் நேர்மையாக ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்ற உறுதி. (3) உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை அமைதி வழியில் முடிவு செய்தல். (4) உறுப்பு நாடுகள் வேறு எந்த நாட்டிற்கும்

எதிராகப் படையெடுத்தலோ அல்லது அச்சுறுத்தலோ தவிர்க்கப் படவேண்டும். (5) ஐ.நா.வின் தடுப்பு நடவடிக்கைகளை மீறி எந்த உறுப்பு நாடும் மற்றெந்த நாட்டிற்கும் உதவியளித்தல் கூடாது. (6) உறுப்பினரல்லாத நாடுகளும் உலக அமைதிக் காகவும் வளர்ச்சிக்காகவும் பாடுபடும் என்பதை ஐ.நா. அவை உறுதி செய்யும். (7) ஒரு நாட்டின் சொந்த உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஐ.நா. ஒருபோதும் தலையிடாது.

## ஐ. நா. வின் அமைப்பு

உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஐ.நா.வின் உறுப்பினர் களாக இருப்பர். ஆரம்பத்தில் 50 நாடுகள் உறுப்பினராக இருந்தன. தற்போது 152 நாடுகள் ஐ.நா.வின் உறுப்பினராக உள்ளன. உறுப்பு நாடுகள் வழங்குகின்ற தொகையைக்கொண்டு ஐ.நா. செயல்படுகின்றது. பொது அவை, பாதுகாப்புக் குழு, சமுதாய பொருளாதார நலக் குழு, அறங்காவலர் குழு, உலக நாடுகளின் நீதிமன்றம், தலைமைச் செயலகம் (General Assembly, Security Council, Economic & Social Council, Trusteeship Council, International Court of Justice & International Secretariat) ஆகிய ஆறு முக்கிய உறுப்புகளைக் கொண்டிருக்கிறது. ஆங்கிலம், சீன மொழி, பிரெஞ்சு, ருஷியன், ஸ்பானிஷ் ஆகியவை ஐ.நா.வின் பொது மொழிகளாக இருக்கின்றன இந்த மொழிகளில் உடனடி மொழி பெயர்ப்புக்கு வசதி செய்யப்பட் டிருக்கின்றது. நியூயார்க் நகரின் அருகிலுள்ள **மன்ஹாட்டன்** (Manhattan) என்ற சிறு தீவில் ஐ.நா.வின் அலுவலகங்கள் உள்ளன. வெளிர் நீல நிறக்கொடியின் நடுவில் வெள்ளை நிறத்தில் ஐ.நா. வின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே ஐ.நா.வின் கொடியாகும். துருவ அமைப்புடன் கூடிய உலகினைச் சுற்றிலும் அமைதியை அறிவுறுத்துகின்ற இரு ஆலிவ் மரக் கிளைகளைக் கொண்டு, ஐ.நா.வின் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

### பொது அவை

ஒவ்வோர் உறுப்பு நாட்டினின்றும் ஐந்து பிரதிநிதிகள் ஐ.நா.விற்கு அனுப்பப்படுவர். ஐ.நா.வின் மொத்தப் பிரதி நிதிகள் அனைவரும் பொது அவையில் கூடுவர். ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்கு உண்டு. ஆண்டுக்கு ஒருமுறை பொது அவை கூடவேண்டும் என்பது பொது நியதி. இருப்பினும் பாதுகாப்புக் குழு அல்லது பெரும்பான்மையான உறுப்பினர்கள் விரும்பினால் பொது அவையின் சிறப்புக் கூட்டத்தினைக் கூட்ட லாம். நாடுகளின் பாதுகாப்புப் பிரச்சினைகளைத் தவிர மற்ற அனைத்துப் பிரச்சினைகளையும் பொது அவை விவாதித்து

ஆலோசனை வழங்கும். உலக நாடுகளின் பொதுச் சட்டங்களை உருவாக்கியும், ஐ.நா.வின் பட்டயத்தைத் திருத்தவும் பொது அவைக்கு உரிமை உண்டு. பொது அவை பெரும்பாலும் ஐ.நா. வின் ஏனைய நிறுவனங்களின் செயல்களைத் திறனாய்வு செய்யவும், அவைகள் குறிப்பிடுகின்ற பிரச்சினைகளை விவாதித்து முடிவு செய்யவும், நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடி, விவாதிக்கின்ற மன்றமாகப் பொது அவை விளங்குகின்றது. ஐ.நா. வின் ஆண்டறிக்கைகளையும், மற்றும் சிறப்பு நிறுவனங்களின் தனி அறிக்கைகளையும் ஆய்வு செய்து ஆலோசனை வழங்குகின்றது. ஒவ்வோர் உறுப்பினரும் குறைகளை எடுத்தியம்பவும், தீர்மானங்கள் கொண்டுவரவும் உரிமை பெற்றுள்ளனர். தீர்மானங்கள் சாதாரணப் பெரும்பான்மை வாக்குகள்மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உலக நாடுகள் தங்களது பொதுப் பிரச்சினைகளையும், உலகினை அலைக்கழிக்கின்ற பிரச்சினைகளையும் விவாதிக்கும் மாபெரும் உலக மன்றமாக ஐ.நா.வின் பொது அவை விளங்குகின்றது. **டென்னிசன்** என்ற ஆங்கிலக் கவிஞன் கனவு கண்ட **மனித இனத்தின் பாராளுமன்றம்** என்பதற்குச் சற்று இணையாக ஐ.நா.வின் பொது அவையைக் கருதலாம்.

ஐ.நா.வின் ஏனைய உறுப்புகள் அனைத்தும், பொது அவையினின்றும் தோன்றியவையேயாகும். பாதுகாப்பு அவையின் பத்து தற்காலிக உறுப்பினர்களும், அறங்காவலர் குழுவின் பதினெட்டு உறுப்பினர்களும் பொது அவையிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாதுகாப்பு அவையின் பரிந்துரையைப் பெற்றுப் புதிய நாடுகளை உறுப்பினராக ஏற்றுக்கொள்ளவும், ஐ.நா.வின் தலைமை நிர்வாக அதிகாரியான பொதுச் செயலாளரை (Secretary General) நியமிக்கும் அதிகாரமும் பொது அவையிடம் குவிந்திருக்கின்றது. ஐ.நா.வின் வரவு-செலவுத் திட்டத்தினை விவாதித்து ஏற்றுக்கொள்வதும், ஒவ்வோர் உறுப்பு நாடும் கொடுக்க வேண்டிய தொகையின் அளவினை நிர்ணயம் செய்கின்ற பொறுப்பும் பொது அவையிடம் உள்ளது.

**பாதுகாப்புக் குழு** (Security Council)

உலகின் எப்பகுதியிலும் போர் அல்லது வலுத்தாக்குதல் ஏற்படாமல் தடைசெய்யும் அதிகாரம் கொண்ட ஐ.நா.வின் மிகவும் முக்கியம் வாய்ந்த உறுப்பாக இந்தப் பாதுகாப்புக் குழு விளங்குகின்றது. இதில் அமெரிக்கா, ருஷியா, இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகிய ஐந்து வல்லரசுகளும் நிலையான உறுப்பினர்களாகவும், இரண்டாண்டுகளுக்கு, பொது அவையால் தேர்ந்

தெடுக்கப்பட்ட தாற்காலிக உறுப்பினர்கள் பத்து பேரும் என மொத்தம் பதினைந்து உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு.

இக்குழுவிற்கு மிகுந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய பிரச்சினை எது, அப் பிரச்சினையைத் தடுக்கும் வழிகள் யாவை என்பதை முடிவு செய்யும் அதிகாரம் அக்குழுவிடம் உள்ளன. அமைதியான முறையில் பேச்சு வார்த்தைகளின்மூலம் பிரச்சினைகளுக்கு முடிவு காண இக்குழு ஆரம்பத்தில் முயற்சி எடுக்கும். அம்முயற்சி தோல்வியடைந்தால் வேறு சில கடுமையான நடவடிக்கைகளை அக்குழு பரிந்துரை செய்யும். பொருளாதாரத் தடை, தூதுவர் பரிமாறிக்கொள்வதைத் தடைசெய்தல், படையனுப்புதல் ஆகியவை ஒரு சில அத்தகைய கடுமையான நடவடிக்கைகளாகும். தேவையானபோது உறுப்பு நாடுகளிடமிருந்து தேவையான அளவு படைகளைப் பெற்று பாதுகாப்புக் குழு, வலுத்தாக்குதல் களைத் தடைசெய்யும். ஐ.நா.விற்குச் சொந்தமான படை ஏதுமில்லை. தேவையான படையளவினை ஐ.நா.வின் படை அதிகாரிகளைக்கொண்ட இராணுவக் குழு நிர்ணயம் செய்யும்.

செயல் திட்டங்களை வரையறுக்கும்போது இக்குழுவின் எட்டு உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. எட்டு உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்ற பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மிக முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி முடிவெடுக்கும்போது ஐந்து நிலையான உறுப்பினர்களின் ஒருமித்த வாக்குகளுடன் மொத்தம் எட்டு உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. அதில் ஒரு நிலையான உறுப்பினர் மறுத்து வாக்களித்தால்கூட தீர்மானம் தோல்வியடையும். அது **மறுப்பாணை அதிகாரம் (Veto Power)** எனக் குறிப்பிடப்படுகின்றது. அந்த மறுப்பாணை அதிகாரத்தினை அமெரிக்கா, ருஷியா போன்ற வல்லரசுகள் பல முறை தவறாகப் பயன்படுத்தியிருக்கின்றன. இருப்பினும் இரு குழுக்களாகப் பிரிந்துவிட்ட எதிரி நாடுகளை ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்த இவ்வாணை பயன்படுகின்றது.

பாதுகாப்புக் குழு பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை தொடர்ந்து கூடி, உலகின் அமைதியை அச்சுறுத்தும் பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்கின்றது.

**சமுதாய, பொருளாதாரக் குழு**

பொது அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டு

உறுப்பினர்கள் சமுதாய, பொருளாதாரக் குழுவில் இருப்பார்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஓர் உறுப்பினர்மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுடைய பதவிக் காலம் ஒன்பது ஆண்டுகளாகும். அதில் ஒவ்வோர் ஆண்டும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பதவி விலக, அவர்களுக்குப் பதிலாக வேறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை உணர்ந்து, அவற்றை அறவே நீக்க வேண்டுமென்பதே அக்குழுவின் தலையாய நோக்கமாகும். ஒவ்வொரு நாட்டின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு, கல்வி, சுகாதாரம் மற்றும் அனைத்துத் துறைகளைப் பற்றியும் அந்தந்தத் துறையின் விற்பன்னர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி, குறைபாடுகளைக் குறிப்பிட்டு அவைகளை நிறைவு செய்யும் வழிகளையும் அறிவுறுத்திப் பொது அவையிடம் அறிக்கைகளை பணிந்தளிக்க வேண்டியது அக்குழுவின் முக்கிய பணியாகும். அதேபோலச் சிறப்புக் குழுக்களை அமைத்து மக்கள் பெருக்கம், போதையூட்டும் மருந்துகளின்.-பொருள்களின் நடமாட்டம் ஆகியவை போன்ற பிரச்சினைகளைப்பற்றி ஆய்வு நடத்தி அறிக்கைகளைப் பொது அவையிடம் பணிந்தளிக்க வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் ஐ.நா.வின் சமுதாய, பொருளாதார நலக்குழுவின் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்திருக்கின்றார் என்பது நமக்குப் பெருமையளிக்கும் செய்திகளில் ஒன்றாகும்.

**அறங்காவலர் குழு (Trusteeship Council)**

ஐ.நா.வின் பொறுப்பிலிருக்கும் சுய-ஆட்சியுரிமை பெறாத நாடுகளின் வளர்ச்சி, நலன்களைக் கவனிப்பதற்காக உருவாக்கப்பட்டதே அறங்காவலர் குழுவாகும். தங்களுடைய ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற ஆட்சியுரிமை பெறாத நாடுகளை (குடியேற்றங்கள்) நிர்வாகம் செய்கின்ற நாடுகளின் உறுப்பினர்களும், அவ்வாறு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாத ஐந்து வல்லரசுகளின் உறுப்பினர்களும், பொது அவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அறங்காவலர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். ஆட்சித் துறையில் சிறந்த அனுபவம் பெற்ற ஒருவரை உறுப்பு நாடுகள் அக்குழுவின் உறுப்பினராக அனுப்பும். ஆட்சியுரிமை பெறாத குடியேற்ற வளர்ச்சிக்கும், நாகரிக, பண்பாட்டு மேம்பாட்டிற்கும் இக்குழு பாடுபடுவதுடன், ஆட்சித் துறையிலும் அந்நாடுகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பின்னர் அந்நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டும். பன்னாட்டுக் கழகத்தின்

'கட்டளை உரிமை'யைப் போன்றே, இந்த அறங்காவலர் குழுவும் செயல்படுகின்றது.

**உலக நீதிமன்றம்**

பொது அவையும், பாதுகாப்புக் குழுவும் ஐ.நா.வின் சட்டமியற்றும் மன்றமாகவும், நிர்வாகத் துறையாகவும் ஏற்றுக் கொள்ளப்படுமேயானால், உலக நீதிமன்றம், ஐ.நா.வின் நீதித் துறையாகச் செயல்படுகின்றது எனக் குறிப்பிட வேண்டும். **தி ஹேக் (The Hague)** நகரில் இருந்த பன்னாட்டுக் கழகத்தின் உலக நீதிமன்றத்தினைப் பின்தொடர்ந்து உருவாக்கப்பட்டதே ஐ.நா.வின் அந்த உலக நீதிமன்றமாகும். அதில் ஐ.நா.வின் பொது அவையாலும் பாதுகாப்புக் குழுவினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட பதினைந்து நீதிபதிகள் உள்ளனர். வழக்கில் சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் உலக நீதிமன்றத்தின் உதவியை நாடினால், அப்படிப்பட்ட வழக்குகளை ஆய்ந்து, முடிவு செய்ய உலக நீதிமன்றம் எடுத்துக் கொள்ளும். நாடுகளுக்கிடையே ஏற்படும் எல்லைத் தகராறுகள், உடன்படிக்கைகளைப்பற்றிய வழக்குகள், மற்றும் பன்னாட்டுச் சட்டங்கள் ஆகியவைகளைப்பற்றிய பிரச்சினைகளில் உலக நீதிமன்றம் தனது ஆலோசனையை வழங்குகின்றது. ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் அனைத்தும் உலக நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகளாகவும் இருக்கின்றன. வழக்கில் தொடர்புகொண்ட நாடாக இருந்தால் உலக நீதிமன்றத்தின் தீர்ப்புகளை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற நியதி உள்ளது.

**தலைமைச் செயலகம்**

பன்னாடுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏராளமான அலுவலர்களையும், தலைமை தாங்கி நடத்தப் பொதுச் செயலாளரையும் கொண்டு செயலாற்றுகின்றது தலைமைச் செயலகம். ஐ.நா.வின் அனைத்துத் துறைகளையும், சிறப்புக் குழுக்களின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து, கட்டுப்படுத்தி, செயல்முறைகளை உருவாக்கித் தந்து, செயல்படுத்தச் செய்யும் மையமாக இந்தச் செயலகம் விளங்குகின்றது. தேவையான புள்ளி விபரங்களையும், செய்திகளையும் உலகின் பல பாகங்களிலிருந்தும் சேகரித்து, ஏனைய உறுப்பு குழுக்களுக்கு அனுப்பி வைக்கின்றது. உலகின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சிகள் உலகின் எந்தப் பகுதியில் ஏற்பட்டாலும், அதை உடனடியாக பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றது.

**சிறப்பு நிறுவனங்கள்**

ஐ.நா.வின் பட்டயத்தை 55ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளவாறு, உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், அனைவருக்கும் வேலை வாய்ப்பளித்தல், சமுதாய, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற மிகவும் உண்மையான குறிக்கோள்களை நனவாக்கி நிறைவேற்றும் முயற்சியில் பல சிறப்பு நிறுவனங்களை ஐ.நா. உருவாக்கியுள்ளது. அத்தகைய சிறப்புக் நிறுவனங்கள் உருவாக்கப்படுவதைப்பற்றி 57ஆவது பிரிவு குறிப்பிடுகின்றது. அத்தகைய சிறப்பு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு, அவைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஐ.நா.வின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயலாக்க வேண்டிய பொறுப்பு சமுதாய, பொருளாதார நலக் குழு விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளின் ஒத்துழைப்பாலும் ஒப்பந்தங்களாலும் ஒரு சில சிறப்பு நிறுவனங்கள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்தன. அத்தகைய சிறப்பு நிறுவனங்கள் ஐ.நா.வின் மேற்பார்வையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. பன்னாடுகளின் செய்தித் தொடர்பு ஒன்றியம் (International Telecommunication Union of 1865), உலக நாடுகளின் கடிதப் போக்குவரத்து ஐக்கியம் (Universal Postal Union of 1875), உலக வானிலை ஆராய்ச்சி நிறுவனம் (World Meteorological Organisation of 1875), உலக தொழிலாளர் நல நிறுவனம் (International Labour Organisation of 1919), உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் (Food and Agricultural Organisation of 1945), ஐ.நா.வின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (United Nations Educational, Scientific and Cultural Organisation—UNESCO—of 1945), உலக நிதி நிறுவனம் (International Monetary Fund of 1945), உலக வங்கி (Internatioal Bank for Reconstruction & Development—World Bank—of 1945)— ஆகிய அனைத்துப் பொது நிறுவனங்களும் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்களாக மாறி உலக மக்களின் உன்னத வாழ்விற்காக அரும்பணியாற்றி வருகின்றன. ஐ.நா.வின் தனி முயற்சியால் வேறு பல சிறப்பு நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உலக சுகாதார நிறுவனம் 1946ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுத்தல், சத்துணவு வழங்குதல், சுற்றுப்புறச் சுகாதாரத்தினை வலியுறுத்தல், குடியிருப்பு வசதிகளைப் பேணுதல், தொழிலாளர் நிலைமை, மகப்பேறு, குழந்தைகள் நலனைப் பேணுதல் போன்ற இன்றியமையாத பணிகளை அந்நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. உலக விமானப் போக்குவரத்து நிறுவனம் 1947ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

விமானப் போக்குவரத்து வசதிகளையும் தொடர்புகளையும் நிறுவி, கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. உலக அகதிகள் நல நிறுவனம் (International Refugee Organization—IRO), பன்னாடு களின் வர்த்தக நிறுவனம் (International Trade Organization), உலக நாடுகள் குழந்தைகள் நல நிதி (International Children's Emergency Fund), உலக குழந்தைகள் நல நிதியின் மூலம் ஐரோப்பா ஆசியப் பெருநிலப் பரப்பில் உள்ள ஐந்து மில்லியன் குழந்தைகளுக்குப் சத்துணவு வழங்கும் திட்டத்தினைச் செயல் படுத்தி வருகின்றது. ஐ.நா.வின் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் கல்வி, பண்பாட்டு வளர்ச்சிக்கும், உலக மக்களிடையே நல்லுணர்வு, நல்லெண்ணம் வளரவும் பாடுபட்டு வருகின்றது.

அத்தகு சிறப்பு நிறுவனங்கள் அனைத்தும் அந்தந்தத் துறைகளில் உள்ள நிறை குறைகளை ஆய்ந்து, மேலும் சிறப் பாகப் பணியாற்றித் தகுந்த ஆலோசனைகளை வழங்கியும், நாடு களின் வேண்டுகோள்களுக்கேற்ற உதவிகளையும் நல்கி வருகின் றன. ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் அனைத்துமே அந்த நாட்டு அரசுகளின் அனுமதி பெற்ற பின்னரே பணியாற்றுகின்றன என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும். இருப்பினும் மனித இனத்திற்கு மாபெரும் சேவை செய்து வரும் அத்தகு சிறப்பு நிறுவனங்களால் உலகின் பல நாடுகளும் பயன் பெற்று சிறப் படைகின்றன. அறியாமை, வறுமை, வறட்சி, பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய்கள் போன்ற அனைத்துவிதத் தீமை களினாலும் பீடிக்கப்பட்டு வாடுகின்ற மக்கள், உலகின் எந்த மூலை முடுக்குகளில் இருந்தாலும் அவர்களை அரவணைத்து, ஆதரவோடு கவனித்து, அவர்களுக்கு நேசக்கரம் நீட்டி பணி யாற்றுவதில், ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் மனித இனத் திற்கே மிகச் சிறந்த பணியாற்றி வருகின்றன. போர்க்கால நடவடிக்கைகளைவிட ஐ.நா.வின் அமைதிக்காலப் பணி போற்றத்தக்கதாக உள்ளது.

**ஐ.நா.வின் சாதனைகள்**

உலகில் ஏற்படவிருந்த பல வலுத் தாக்குதல்களைத் தடுத்தும், மீறித் தாக்குதல்கள் ஏற்பட்டபோது அவைகளைத் தனித்து மற்ற நாடுகளில் பரவாமலும் அல்லது மற்ற நாடுகளின் தலையீட்டினைத் தடுத்தும் உலகின் அமைதியைக் காப்பதில் ஐ.நா. ஓரளவிற்கு வெற்றி கண்டுள்ளது. வட கொரியா, தென் கொரியா இவைகளுக்கிடையே ஏற்பட்ட போரினை, வல்லரசு களின் தலையீடு இருந்தபோதிலும், ஓரளவிற்குத் தனித்து அமைதி காண ஐ.நா. உதவியிருக்கின்றது. யூதர்களுக்கும்

அரேபியர்களுக்கும், பின்னர் யூதர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் ஏற்பட்ட மோதலைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றது. சூயஸ் கால்வாயைத் தேசியமாக்கியதனால் வெகுண்டெழுந்த பிரான்சும் இங்கிலாந்தும் 1956-ல் எகிப்தின்மீது படையெடுத்தபோது, ஐ.நா. தலையிட்டு, பிரான்சு இங்கிலாந்தின் படைகளை வெளியேற்றி, அமைதி நிலவச் செய்திருக்கின்றது. காங்கோ, சைப்பிரஸ் போன்ற நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரிலும் ஐ.நா. தலையிட்டு, அப்பகுதிகளுக்குப் பன்னாட்டுப் படைகளை அனுப்பி போரைத் தடுத்திருக்கின்றது. இரானிலிருந்து ருஷியா தனது படைகளை விலக்கிக் கொள்ளவும், லெபனான், சிரியா நாடுகளின்மீது ஏவப்பட்ட ஆங்கில பிரெஞ்சு படைகள் திரும்ப அழைக்கப்படுவதற்கும் ஐ.நா. காரணமாக இருந்திருக்கின்றது. இந்தியா-பாகிஸ்தான் போரையும் தடுத்து நிறுத்தியிருக்கின்றது. இஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபு நாடுகளுக்குமிடையே நடந்த போரிலும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட ஐ.நா. அரும்பாடு பட்டிருக்கின்றது. இவ்வாறாக ஐ.நா.வின் சாதனை முத்துகளென, பட்டியலை நீட்டிக்கொண்டே சென்றாலும் பெரும்பாலான பிரச்சினைகளில் ஐ.நா. முழுமையான தீர்வு காண முடியவில்லை. தற்காலிகப் போர் நிறுத்தங்களை ஏற்படுத்த முடிந்ததே தவிர, முடிந்த முடிவு காண இயலவில்லை. அதற்குக் காஷ்மீரப் பிரச்சினை, மத்தியக் கிழக்கில் குமுறிக்கொண்டிருக்கும் பிரச்சினை ஆகியவைகளை ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

பொருளாதாரத் துறையில் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் ஆற்றியிருக்கின்ற பணி மகத்தானதாகும். உலக நாடுகளின் உற்பத்தி பெருகவும், உணவுப் பொருள்கள் வழங்குவதிலும், வளரும் நாடுகளின் வளர்ச்சிக்குத் தேவையான கடன் வசதிகளை உருவாக்கித் தருவதிலும் நாடுகளிடையேயான வர்த்தகம் மற்றும் வணிகத் தொடர்புகள் பெருகவும், தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு முடிவு கண்டு, அவர்களது வாழ்க்கைத்தரம் உயரவும், உற்பத்திப் பொருள்களின் தரம் உயரவும், உலக நாடுகளிடையேயான கடிதப் போக்குவரத்து, மற்றும் தொலைபேசித் தொடர்புகள், செய்தித் தொடர்புகள் பெருகவும், விமான, கப்பல் போக்குவரத்துகளின் பாதுகாப்பு வசதிகள் அதிகமாகவும், மேலும் பல்லாற்றானும் உலகப் பொருளாதாரம் வளரவும் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. ஐரோப்பா, ஆசியா, தூர கிழக்கு நாடுகள், லத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள ஐ.நா.வின் வட்டாரப் பொருளாதாரக் கழகங்கள் (Regional Commissions)

அப்பகுதிகள் அனைத்தும் பொருளாதார வளர்ச்சியடையப் பேருதவி புரிந்து வருகின்றன. ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைத் தேவைகளான நிதி உதவியையும், அறிவியல் தொழில் நுணுக்க உதவியையும் ஐ.நா.வின் நிறுவனங்கள் தாராளமாக அளித்து வருகின்றன. எந்தப் போருக்குமே அடிப்படையாக இருப்பது பொருளாதார காரணங்களே எனவே 'போர்' என்பது உலகினின்றே நீக்கப்பட வேண்டுமாயின் அனைத்து நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சியும் மேம்பாடும் ஏற்படவேண்டும். இந்த எண்ணத்தினைச் செயலாக்கும் வகையில் ஐ.நா. நிறுவனம் அரும்பணியாற்றி வருகின்றது.

பெண்கள், குழந்தைகள் ஆகியோர் நெறியற்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுத்தல், போதை மருந்துகளில் நடக்கும் கள்ள வாணிபத்தைத் தடுத்தல், தொற்று நோய்கள் கொள்ளை நோய்கள் பரவாமல் தடுத்தல் ஆகிய சமுதாய நலம் பேணும் தடுப்புப் பணிகளையும் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. மேலும் கோடிக்கணக்கான குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குதல், அகதிகளைப் பாதுகாப்பாக வேற்று நாடுகளுக்குக் கொண்டு சென்று, அவர்கள் நல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழிசெய்தல்; நிதியுதவி வழங்குதல் மூலமும் கருத்தரங்குகள் உலகெங்கினும் நடத்துவதன்மூலமும் கல்வி, பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஐ.நா.வின் நிறுவனங்கள் ஈடுபட்டு மனித குலத்துக்கே ஆக்கமளித்து வருகின்றன.

அறங்காவலர் முறையில் ஐ.நா. உலகின் பல நாடுகள் ஆட்சி நடத்தும் அனுபவம் பெற்று, சுய ஆட்சியுரிமை காண உதவி வருகின்றது. பொது அவை, உலக நீதிமன்றம் ஆகியவைகளின் வழியாக உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுச் செயல்படுத்தும் அளவிற்குப் பன்னாட்டுச் சட்டங்களையும், நடைமுறை விதிகளையும் உருவாக்கித் தந்திருக்கின்றது. ஐ.நா. வெளியிட்டுள்ள 'மனிதனின் அடிப்படை உரிமைகள் பற்றிய பட்டயம்' இதுகாறும் அடிமைத் தளையில் கட்டுண்டு, அறியாமை இருளில் மூழ்கி, பொருளாதாரச் சுரண்டல்களுக்கு ஆட்படுத்தப்பட்டு பஞ்சம், பட்டினி, அறியாமை, கொள்ளை நோய்கள் ஆகியவைகளேயே கண்டு அல்லலுற்ற மக்களுக்குக் கலங்கரை விளக்கமாக வழிகாட்டியாக நின்று, அத்தகைய மக்களைச் சுயசார்புடன் நாகரிக வளர்ச்சி பெற்றுத் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்கக் கட்டியம் கூறி நிற்கின்றது.

இத்தகைய சிறப்புத் தன்மைகள் பலவற்றினை உள்ளடக்கி இருக்கும் ஐ.நா. பன்னாட்டுக் கழகத்தினைக் காட்டிலும் சிறப்பு

வாய்ந்ததாகும். அமெரிக்கா, ருஷியா போன்ற பெரும் வல்லரசுகள் பன்னாட்டுக் கழகத்தில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆனால் அந்நாடுகள் ஐ.நா.வில் முதன்மையான இடத்தினைப் பெற்றிருக்கின்றன. பல ஆண்டுகாலமாக செஞ்சீனாவுக்கு ஐ.நா.வில் இடமளிக்கப்படாமலிருந்தது. தற்போது செஞ் சீனாவும் ஐ.நா.வின் உறுப்பு நாடாக இடம் பெற்றுவிட்டது. தற்போது 152-க்கும் அதிகமான நாடுகள் ஐ.நா.வில் இடம் பெற்றுள்ளன. இதனால் உலக நாடுகள் பெரும்பாலானவை களை உறுப்பினராகப் பெற்று ஐ.நா. பன்னாட்டுக் கழகத்தினை விட உயர்ந்து காணப்படுகின்றது. ஐ.நா.வின் பாதுகாப்புக் குழு பன்னாட்டுக் கழகத்தின் கவுன்சிலைவிட மிகவும் வலிமை பெற்றுக் காணப்படுகின்றது. பாதுகாப்புக் குழுவின்மூலம் வலுத்தாக்கு தல்களைத் தடைசெய்ய நிச்சயமான, உறுதியான நட வடிக்கைகள் மேற்கொள்ள முடியும். ஆனால் வல்லரசுகளில் ஒன்று வலுத்தாக்குதலில் ஈடுபட்டால், மறுப்பாணையைப் பயன் படுத்துவதன்மூலம் அந்தப் பாதுகாப்புக் குழுவினையும் செயலிழக் கச் செய்ய முடியும். பாதுகாப்புக் குழு செயலிழந்து நின்றா லும் பொது அவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று வல்லரசுகளின் வலுத்தாக்குதல்களையும் தடைசெய்ய முடியும். பன்னாட்டுக்கழகம் வெறும் வார்த்தைகளால்மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிலையிலிருந்து மாறி ஐ.நா. வலுத்தாக்கு தல்களில் ஈடுபடும் நாடுகளுக்கெதிராக உண்மையிலேயே செயல் படத்தக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. நிதி வசதி களில்கூட ஐ.நா. பன்னாட்டுக் கழகத்தினைவிட பன்மடங்கு உயர்ந்து காணப்படுகின்றது. ஐ.நா.வின் சிறப்புக் குழுக்கள் மேற்கொண்டுள்ள அமைதிக்கால ஆக்கப்பணிகளுக்கு இணையாகக் கூறுமளவிற்குப் பன்னாட்டுக் கழகத்தின் பணிகள் இருக்கவில்லை. ஆசிய, ஆப்பிரிக்கப் பகுதிகளிலிருந்து ஏராளமான நாடுகள் ஐ.நா. உறுப்பினர்களாக உள்ளன. எனவே ஐ.நா. பன்னாட்டுக் கழகத் தினையும்விட அதிகமான புதிய சக்தியையும் பெற்றிருக்கின்றது. உண்மையிலேயும் செயலளவிலும் ஐ.நா. பன்னாட்டுக் கழகத் தினைவிட மிகவும் பெரிய சிறந்த நிறுவனமாகும்.

அத்தகைய சிறப்புகளைப் பட்டியல் போட்டுக் காட்டிய போதும், ஐ.நா. தனது கொள்கைகளில் சிலவற்றில் தோல்வியைத் தழுவியுள்ளது என்பதையும் மறுக்க இயலாது. ஏராளமான மாநாடுகள் நடத்தப்பட்ட பின்னரும் 'ஆயுதக் குறைப்பு' என்பது இன்னமும் நடைமுறைக்கு எட்டாத தொலைவிலேயே உள்ளது. ஆவேசமான வாக்குவாதங்களுக்குப் பின்னரும்கூட, ரொடிசியாவிலும் தென் ஆப்பிரிக்காவிலும்

காணப்படுகின்ற பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட பின்னரும் **நிறவெறிக்கொள்கை** (Apartheid) முழுவதுமாக தடைசெய்யப்படவில்லை. ஹங்கேரியில் ருஷியா தலையிட்டு மனிதனின் அடிப்படை உரிமைகளை நசுக்கியது போன்ற வல்லரசுகள் சம்பந்தப்பட்ட அத்துமீறல்கள் நடக்கும்போது, ஐ.நா. செயலிழந்து காணப்படுகின்றது. இது போன்ற நிலைகளில் தடுக்கும் வகையறியாது ஐ.நா. நிற்கின்ற நிலையைக் காண முடிகின்றது. இத்தகைய நிலைகள் காணப்பட்ட போதும் ஐ.நா. ஒரு மிகச் சிறந்த சக்தி வாய்ந்த மனிதகுலத்தின் அமைதிக்கும், தடையற்ற வளர்ச்சிக்கும் உதவும் ஓர் உலகப் பொது நிறுவனம் என்பதை மறுக்க இயலாது. உலகின் அமைதியை நிலைநாட்டும் மகத்தான பணியில் மனித இனத்திற்கு உதவும் வலிமை பெற்ற ஒரே நிறுவனம் ஐ.நா.தான் என்பதை மறுக்கவோ மறக்கவோ இயலாது.

மேலட்டை அச்சிட்டோர் :
பிரின்ட் ஹவுஸ் (மக்கள் குரல்), சென்னை-24